உ

திருவப்பனூரான் முனைவர்

உ

DIGITIZED

...ாலிம் முலவர்.

இயற்றியது

023:38.211TV
N11
11 540

252
1—1911

சிவமயம்.

# திருவாப்பனூர்ப் புராணம்.

திருப்பூவணம்

## கந்தசாமிப்புலவர்

இயற்றியது.

---

இது
காசிவாசி சுவாமிகள் என்னும்
ஸ்ரீ ஆவுடையப்ப தம்பிரான் சுவாமிகள்
வேண்டுகோளின் பேரில்

---

துறையூர்
ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் ஆதீனம்
ஸ்ரீ சொக்கலிங்க சிவப்பிரகாச
பண்டாரசந்நிதி அவர்கள்
அடியார் கூட்டத்துள் ஒருவராகிய
சிதம்பரம்
மகா-௱-௱-ஸ்ரீ
**ப. வசவலிங்க பௌராணிகர்**
அவர்கள் செய்த உரையுடன்

மதுரை
விவேகபாநு அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.
ஸௌமிய௵

---

டா. ............ [illegible]
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
செப்டம்பர்
மாதம் வருடம் 83

செப்பனிட்டு முடித்த
செப்டம்பர்
மாதம் வருடம் 83

ஆராய்ச்சி அதிகாரியின்
கையொப்பம் [illegible]

O23:38.2ll TV
NII


# சருக்க அகராதி.

| பக்கம். | சருக்க அகராதி. | பாட ளை |
|---|---|---|
| க | கடவுள் வணக்கம் பாயிரம் | உஉ |
| கஎ | அவையடக்கம் | க |
| கஅ | நைமிசாரணிய வருணனை | கO |
| உக | சூதரை வினயாதை | கஉ |
| உரு | மூர்த்தி மகிமை | உO |
| ருரு | ஆப்பனூர்ச் சருக்கம் | கOஉ |
| எரு | இடவபுரச் சருக்கம் | சக |
| அஎ | அன்ன விநோதச் சருக்கம் | ருக |
| கOரு | சந்திரசேனச் சருக்கம் | கரு |
| கருக | பாட்களச் சருக்கம் | சக |
| கருக | குபேரச் சருக்கம் | சரு |
| கஎஅ | சுதரிசனச் சருக்கம் | ருO |
| உஅக | அரிச்சந்திரன் தீர்த்தயாத்திரைச் சருக்கம் | சக |

உ

சிவமயம்.

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்

மு. ரா. அருணாசலக்கவிராயரவர்களியற்றிய

# சிறப்புப்பாயிரம்.

செந்தமிழே யேற்றமெனத் திகழ்வையைச் செழும்புனலே
யந்தமுற முன்காட்டி யதற்பினருட் சைவமே
யெந்தவுல கத்தினினு மேற்றமா மெனக்காட்டு
நந்தமில்சீர் வளர்கோங்கு நற்பாண்டி நாட்டினிடை. (க)

உரைக்குயர்ந்த வையைநதி யுதக்கினின்முன் னொருநாளுத்
தரைக்குமனுத் தமிழ்மாறன் றன்பொருட்டோர் தறியினிடை
யிரைக்குநீ ரணிவேணி யெந்தையா ரெழுந்தருளி
நிரைக்குமெங்கு மிருப்பமெனு நிலைகாட்டு நீர்மையினால். (உ)

திருவாப்ப னூரென்னச் செப்புமுயர் சிவதலத்தி
னொருவாப்பன் மான்மியமு முயர்ந்தவெனச் சுரைப்பமென்று
குருவாக்கும் பிடிமறையோன் குறையறிந்து கொண்டருளே
யுருவாப்போந் தெம்பிரா னவ்வனைய பொன்மனையே. (ங)

சமையஞ்செய்தெறு கருத்தினீ சாப்பிடெனச் சாற்றவவ
னமையுமவ்வா றின்னடிமை லாக்கியுள்ளுண் டகமகிழ்ந்தான்
றமையுணர்வா ரிவ்வருமை தனைத்தெரிவார் தமிழறியா
வெமைநிகர்வா ரோதெரிவா ரிவையெலா மெளிதுணர்ந்து. (ச)

பொன்னனையா ரன்பெவர்க்கும் புகழ்க்குதிருப் பூவணம்வாழ்
தன்னனையார் புகழ்ந்தக சாமிப்பேர்த் தமிழ்ப்புலவன்
சொன்னவப் புராணத்தின் சொற்பொருளின் சுவைபெரிதீர்
மின்னனைய வென்பவர்க் கெடுப்பப் பெற்றமருந்தாம். (ரு)

இனையபுரா ணத்தருமை யாவருமுள் ளினிதறியத்
தனையுணரா வுடையப்ப தம்பிரான் சாமியுளம்
புனையுமன்பி னுவிதற்குப் பொழிப்புரைநீ புகலென்ன
வனையவன்கட் டளையுமெம்மா னருளுமொத்த தாலன்றே. (௬)

இருட்டிமுத லைந்துமிறை செயுநடனத் திறங்காட்டும்
அருட்டிறமார் சிதம்பரத்தி னமர்ந்துமே லாங்கலைநாற்
பொருட்டிறந்தேர் வசவலிங்க புராணிகனன் புடனெழுதி
யிருட்டிறந்தி ரச்சினிலிட் டிங்கெவர்க்கு மீந்தனனால். (௭)

பிறங்குமிவன் றிருத்துறையூர்ப் பெரியசிவப் பிரகாச
ரறங்குலவு மாதினந் தருந்தமிழ்வே தாகமங்கள்
கறங்குசொக்க லிங்ககுரு கழற்றொண்டு காதலிக்குந்
திறங்குலவு மெய்யடியார் சிகாமணியாஞ் சிறப்பினனே. (௮)

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JAN 1911
MADRAS.

# திருவாப்பனூர்த் தேவாரப்பதிகம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

முற்றுஞ்சடைமுடிமேன்முதிராவிளம்பிறைய
னொற்றைப்படவரவமதுகொண்டரைக்கணிந்தான்
செற்றமில்சீரானைத்திருவாப்பனூரானைப்
பற்றுமனமுடையார்வினைப்பற்றறுப்பாரே. (௧)

குரவங்கமழ்குழலாள்குடிகொண்டுநின்றுவிண்ணோர்
விரவுந்திருமேனிவிளங்கும்வளையெயிற்றி
னரவமணிந்தானையணியாப்பனூரானைப்
பரவுமனமுடையார்வினைப்பற்றறுப்பாரே. (௨)

முருகுவிரிகுழலார்மனங்கொளநங்கனைமுன்
பெரிதுமுனிந்துகந்தான்பெருமான்பெருங்காட்டி
னரவமணிந்தானையணியாப்பனூரானைப்
பரவுமனமுடையார்வினைப்பற்றறுப்பாரே (௩)

பிணியும்பிறப்பறுப்பான்பெருமான்பெருங்காட்டிற்
றுணியினுடைதாழச்சுடரேந்தியாடுவா
னணியும்புனலானையணியாப்பனூரானைப்
பணியுமனமுடையார்வினைப்பற்றறுப்பாரே. (௪)

தகரமணியருவித்தடமால்வரைசிலையா
நகரமொருமூன்றுநலங்குன்றவென்றுகந்தா
னகரமுதலானையணியாப்பனூரானைப்
பகருமனமுடையார்வினைப்பற்றறுப்பாரே. (௫)

ஓடுந்திரிபுரங்களுடனேயுலந்தவியக்
காட்டிடமாகக்கனல்கொண்டுநின்றிரவி
லாடுந்தொழிலானையணியாப்பனூரானைப்
பாடுமனமுடையார்வினைப்பற்றறுப்பாரே. (௬)

இயலும்விடையேறியெரிகொண்மழுவீசிக்
கயல்வரிணைக்கண்ணாளொருபால்கலந்தாட
வியலுமிசையானையெழிலாப்பனூரானைப்
பயிலுமனமுடையார்வினைப்பற்றறுப்பாரே. (௭)

கருக்குமணிமிடறன்கதநாகக்கச்சையினா
னுருக்குமடியவரையொளிவெண்பிறைசூடி
யரக்கன்றிறலழித்தானணியாப்பனூரானைப்
பருக்குமனமுடையார்வினைப்பற்றறுப்பாரே. (௮)

கண்ணன்கடிக்கமலமலர்மேலினிதுறையு
மண்ணற்களப்பரிதாய்நின்றங்கடியார்மே
லெண்ணில்வினைகளைவானெழிலாப்பனூரானைப்
பண்ணினிசைபகர்வார்வினைப்பற்றறுப்பாரே. (௯)

செய்யகலிங்கத்தார்சிறுதட்டுடையார்கள்
பொய்யர்புறங்கூறப்புரிந்தவடியாரை
யையமகற்றுவானணியாப்பனூரானைப்
பையநினைந்தெழுவார்வினைப்பற்றறுப்பாரே. (௧௦)

அந்தண்புனல்வைகையணியாப்பனூர்மேய
சந்தமலர்க்கொன்றைசடைமேலுடையானை
நந்தியடிபரவுநலஞானசம்பந்தன்
சந்தமிவைவல்லார்தடுமாற்றறுப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

# திருவாப்பனூர்ப்புராணம்.

## மூலமும் உரையும்.

OFFICE OF THE REGISTRAR OF B...
REGISTERED
26 JAN 1911
MADRAS.

### பாயிரம்.

காப்பு.

கலிவிருத்தம்.

திருத்தன் மாக்கடன் மேனியஞ் செய்பலா
பருத்தன் மாக்கம லந்திக ழாப்பனூர்
திருத்தன் மாக்கதை நானிரம் பும்பொருட்
டொருத்தன் மாக்கழ லுன்னுமென் னுள்ளமே.

(இ-ள்) இலக்குமியைத் தமது கருங் கடல்போலுந் திருமேனியிற் கொண்ட விட்டுணு மூர்த்தியை ஓர்பாதியாக உடையவரும், வண்டுகள் செறியப்பெற்ற தாமரைகள் அலர்ந்த (தடாகங்கள்) சூழ்ந்த திருவாப்பனூரென்னுந் திவ்விய ஸ்தலத்தி லெழுந்தருளி (பஞ்ச கிருத்திய பரமானந்த) திருவிருத்தஞ் செய்தருள்பவருமாகிய திருவாப்புடையீசரது பெருமையைக் கூறும் இப்புராணமானது இடையூறின்றி யினிது முடிதற்பொருட்டு யானைமுகம் வாய்ந்த விநாயகக் கடவுளது மகத்துவம்பொருந்திய (உபய) திருவடிகளையும் அடியேனது மனம் (சதா) தியானியா நிற்கும். எ - று.

ஏ - அசை. ஒருத்தல்=யானை.

நூலியற்றப்புகுவோர் முதற்கண் மங்கலக்கிளவி தொடங்கி யியற்றல் ஆன்றோர் துணிபாதலானும், இலக்குமிகரம் பெற்றாலன்றி என்றும் பொன்றாது நிலவுதலியலாதாகலானும் "திரு" என்றும், விட்டுணு தேவரது திருமேனி இயற்கையில், வெள்ளைவர்ணமாயிருந்து மத்தியில் இக்கருநிறம் பெற்றாரென்பதை விளக்கினாராதலால், "மாக்கடன் மேனி" என்றும், சிவபிரானதருட்சத்திமார்களுள் விட்டுணு மூர்த்தியாரும் ஒருவரென்பதைக்

குறிப்பிப்பான் "மேனியஞ் செம்மலா ருத்தன்" என்றும், எவ்வகை மேம்பாட்டோரும் அடையும் சௌக்கியங்கள் யாவற்றுள்ளும், ஜல சௌக்கியம் முதலில் வேண்டப்படுதலின் அந்நீர்வள முதலிய வளங்களனைத்தும் பொருந்திய தென்பார் "மாக்கமலந்திகழ்காப்பலூர்" என்றும், ஆநந்தமே சருகரிய திருவாய்புடையீசனே பஞ்சகிருத்தியபரமானந்தத்தாண்டவமூர்த்தி யென்பார் "கிருத்தன்" என்றும் எவையவற்றும் பொழுது போக்கும்புல்லியகாதை போலாது சிவபெருமானது திவ்விய சரிதம் நிறைந்துள்ள தென்பார் 'கிருத்தன் மாக்கதை' என்றும் விக்கின நிவிர்த்திக்குரிய விநாயகரை வழிபட்டாலன்றி, நூல் முடிவுறாதாதலின் "நானிரம்பும் பொருட்டொருத்தன் மாக்கழ லொன்றுமென் னுள்ளமே" என்றுங் கூறினார்.

சிவபிரானருட்சத்திமாருள் விட்டுணுவும் ஓர் சத்தி என்பதற்கு (உ-ம்) கந்தபுராணம், மகாசாத்தாப்படலம், "நால்வகைப்பட நண்ணிய சத்தியுள் மாலுமாதலின் மற்றது காட்டுவான் ஆலகண்டத் தனைச்சுதனைச்சுறும் கோலமெய்திக் குறுகினனவ்விடை" என்பதாம்.

இனி கிருத்தன் அருத்தன் என்பதற்கு இலக்குமியை யுடையவரும், கரிய கடல்போலும் அழகிய திருமேனியை யுடையவருமாகிய விட்டுணுமூர்த்தியை ஓர் பாகத்திலுடையவரும் என்பதும் ஆம். அன்றிக் கிருத்தன் என்பதை கிர்த்தன்என்னும் வடமொழித் திரிபாகக்கொண்டு சிவபெருமானைச் சுட்டியதெனினும் அமையும். இங்ஙனமே கிருத்தன், செம்மல் என விட்டுணு மூர்த்தியைச் சுட்டியதெனினும் பொருந்தும். அவ்வாறு கொள்ளுமிடத்து ஆர்அருத்தன் என்பது இறந்தகாலவினைத்தொகையாம். இதுபொருட் சிறப்பின்மை தெளிக.

"பெருங்காப்பியநிலை பேசுங்காலை வாழ்த்து வணக்கம் வருபொருளிவற்றி னொன்றேற்புடைத்தாகி" என்றபடி வாழ்த்தல், வணங்கல், பொருளியல்புரைத்தலென்னும் மூவகை மங்கல வாழ்த்துள் இஃது வணங்கலின் பாற்படும். திரிகரணங்களுள் மனம் ஒன்றைக் கூறினரேனும் உபலக்கணத்தால் வாயாற் றுதித்தலும் காயத்தால் வழிபடுதலும் இனம்பற்றிக் கொள்க, என்னை தியானஞ் செய்யும் வழி அதன் மெய்ப்பாடாகிய துதித்தலும் வணங்கலும் தாமேநிகழுமாகலினென்க.

கிருத்தன் மாக்கடன் மேனியஞ் செம்மலா ருத்தன் என்பதனை சங்கரநாராயண சொரூபமாகக் கொள்வது மொன்று. "பூர்வத்தில் வாசுகி அனந்தன் பாற் பேறுபெற்ற சங்கன்பதுமன் என்னும் நாகாதிப ரிருவரும் முறையே பெருமானையும் திருமாலையும் பரம்பொருளென மலைவுபட்டு அது



பாதலத்தூர்த் திரோதாகப் பூவுலகிற் காசியபதியடைந்து ஆங்குறுந் தவத்தர் பாற் றத்தங் கொள்கையை நவில அவர் நால்வரானுமறி வாறுய்த்து சிவபெருமானை பரம்பொருள் திருமால் அவருள் ஏயிக்கியமாயுள்ள பொருளாமென்று ஐய விபரீதங்களறக் கூறவும் தேறாது பதுமனிருந்தமையின் நுந்தம் வழுத்திர்வுகாண விட்புலத் தேருவீர் என்று விடுக்க நாகர் விண்ணுலகடைந்து இந்திரற்குரைப்ப அவன் பிரகற்பதியை நோக்க, பிரகற்பதி மொழிவார், முன்னர் கைலையில் உமாதேவியார் திருமாலொடுகூடிய தின்னுருவங்காண விழைந்தேன் என்றபோது தென்றிசைக்கண் புன்னைவனம் புண்ணியதலமாதலால் ஆண்டு தவமியற்றின் நின் விழைவு முடிவாகும் என்ன அவ்வாறருந்தவமியற்றி இறைவரைச் சங்கரநாராயணராகத் தெரிசித் தின்புற்றனள். நீவிரும் அப்புன்னையங்கானமென்னும் திருத்தலஞ்சேர்ந்து அருந்தவம் புரிந்து அத்திருவுருவ தரிசனம் பெறின் உமது வழுவொழியுமெனக் குரு கூறியவாறே புன்னையங்கானில் தவத்தால் பரமனை சங்கரநாராயணராகத் தெரிசித்துய்ந்தனர். என்பது புராண சரிதம். தேவிற்றிருமாலென்பவாகலின் "செம்மல்" என்றார்.

வேறுபட்ட வடிவத்து உத்தமாங்கம் யானைமுகமாமாகலின் யானை என்றே கூறினார். யானைமுகமுடைய கடவுளை யானை யென்றது ஆகுபெயர்; ஒருத்தன் எனக்கொண்டு ஒப்பற்ற பரம்பொருளாகிய விநாயகர் எனினும், ஆம். என்னை? சச்சிதானந்த சொரூபமாகிய வஸ்துவே யானைமுகமுடைமையான். (உ-ம்) விநாயகபுராணம். மூவருபாசித்த படலம். "இகலறு மறைகளுயிருளி லிங்கிய, தகவுறு பெரியவர் தாமு மெங்கணுந், தோகலறத் தோற்றிய தூய மூர்த்தியைத்; துகளறு வக்கிர துண்ட னென்பரே; அரனரி யயனென வான யாக்கையும், பிரமமின் னதுவெனப் பேசலிக் காணிய, விரவிய நெறுவெளி விரிவுமுற்றுறப், பரவினம் தேடினம்" என்றார்.

விக்கின விநாயகராகிய தாம் திருவுள்ளம் பேதிப்பின் அக்கணமே இடையூறுறும். ஆகலின், எக்கடவுளரால் எத்தகைய அநுக்கிரகம் பெறுதற்கும் அவ்விநாயகரதனுமதி ஆவசியகம் வேண்டற்பாலது. (உ-ம்.) கூர்மபுராணம், "மற்றைய கடவுட்போற்றி வரம்பெறவிடையூறெய்தா — தொற்றை வெண்கோட்டு வேழமுகப்ப முன்வழுத்துகின்றோர் — முற்றுமக்களிற்றையேத்தி முன்னியயாவும்வாளா, பெற்றிடாதயலார்ப்போற்றும்பேதைமையென்றுநின் — முன்னரேயுளதானமுடியுறப்பணிவரேல், அன்னார்தஞ் சிந்தைபோலாக்குமியலதினை — யுன்னலார் செய்கையையூறுசெய்திடுகிற்." எனவும், விநாயகபுராணம் "என்னரேயாயினும் யாவதொன்றினை — முன்னரேயுனதாண் முடியுறப்பணிவரேல், அன்னார்தஞ்" எனவும், முராரியாதியதேவர்கள்முதலியமுழுதுலகினி லுள்ளோர் — விநாய

யாதொரு காரியமாயினும்விநாயகரைச்செய்கென்றே—பரவியுன்னருச்சனை செய்வோர்காரியம்பழுதாகாதருளுவன்—பிறாருசெய்பவர் காரியமுறுசெய்திடேல்" எனச் சிவபிரான் திருவாய் மலர்ந்தருளினர். ஆதலின் தேவர் முதலிய யாவர்க்கும் விநாயக வணக்கம் இன்றியமையாமை கூறுதே வேண்டப்படும். அவ்வாறுவழிபடின் "எண்ணியவெண்ணியாங்கெய்துப எண்ணுதற்பவளமால்வரையாத்தகவாயாளையின்கழல்பணிவோர்க்கே!" என்றசெய்யுளின்படி எண்ணிய கருமம் யாவும் முடியும் என்பது தெள்ளிதிற் றுணியப்படும். கழலென்பதீண்டு ஆகுபெயராய் வீரக்கழலையணிந்த திருவடியின் மேற்று. கமலம் என்பதும், அவ்வாறே தடாகத்தை யுணர்த்தி நின்றது.

"செய்யுளென்பவைதெரியுறவிரிப்பின் -முத்தகம் குளகம் தொகை தொடர்நிலையெனத்திறத்தனவுமீரிரண்டாகும்" அவற்றுள் "முத்தகச்செய்யுள் தனிநின்றுமுடியும்" என்றும், தண்டியலங்காரவிலக்கண விதிப்படி இச்செய்யுள் தனித்து முடிதலால் முத்தகச் செய்யுளெனப்படும். வணக்கஞ் செய்யும் யாவும் இத்திறத்தனவே.

இவ்வணக்கம் ஏற்புடைக் கடவுள் வணக்கமெனவறிக.

---

## நூற்பயன்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஒருமையினேர்ந் துபநிடத முணர்த்தும்பரம் பரனப்ப னூர்ப்புராண
மருமையினோ தினர்கேட்போ ரன்னாதி சயனாந்த மாமெண் போகம்
பருகுவர்வா ணாளளவுங் குறைதவிர்ந்து பிணியொழிந்து பகைவென்
றேங்கி,கருமலர்மா னத்திவர்ந்து வானுலக முழுவதுஞ்சஞ் சரிப்பர்
மாதோ.

(இ - ள்) வேதசிரசாகிய உபநிஷத்துக்களால் உணர்த்தப்படுகின்ற சிவபெருமான் வீற்றிருக்கும் திருவாப்பனூர்ப்புராணத்தை மனமொருமையோடுணர்ந்து அருமையாகச் சொல்பவர்களும் அதனைக் கேட்பவர்களும் அன்னமுதல் அனந்தலீருக்கூறும்எண்வகைப்போகங்களையும் அனுபவிப்பர். அன்றியும் வாணாட்கும் வறுமையில் லிகந்த செல்வமுடையவர்களாய், ஆரோக திடகாத்திர முள்ளவர்களாய்ப் பகைவரைச் சயித்து மேம்பட்டு வாழ்ந்து பின் புஷ்பவிமானத் திவர்ந்துகொண்டு தேவலோக முழுவதும் உலாவித்திரிவர். (எ-று) மா, ஓ - அசைகள்.



மனம் ஒருமைப்படாத விடத்து விஷயங்களை யுள்ளவாறே யுணர்த்தவியலாதாகலான் "ஒருமையினேர்ந்து" என்றும், வேதங்களின் உண்மையாயுள்ள அதிரகசியங்களை யெல்லாம் வடித்தெடுத்துக் கூறுவதாயுள்ளது வேத சிரசாகிய உபநிஷத்துக்களே என்பார் "உபநிடதம்" என்றும் அவ்வுபநிடதங்கள் எவற்றாலும் பிரதிபாதிக்கப்படும் பொருள் பரமசிவனேயாதலால், "உபநிடதமுணர்த்தும் பரம்பரன்" என்றும் அப்பரமசிவன் இவ்வூரப்பனூரிலெழுந்தருளியவரே யென்பார். "பரம்பரனப்பனூர்" என்றும். அவரது தொன்றுதொட்டுள்ள சரிதங்களையும்,கூறும்நூலிதுவேயென்பார். "புராணம்" என்றும்,அதனை யோதுபவர்களே மக்கட்பேற்றாலெய்தும் பயனைப்பெறுவர்என்பார், அருமையினோதினர் என்றும்,அவ்வாறுதாம் ஓதுதல் மாத்திரம் அமையாது அதினுங் கேட்டலே விசேஷமுடைத்து என்பார், "கேட்போர்" என்றும், அவ்வாறோதல் கேட்டல்களாலாகிய பயன் அன்ன முதலிய *எண்வகைப் போகங்களுமாம் என்பார். "கேட்பாரன்னாதி சயனாந்தமா மெண்போகம் பருகுவர்." என்றும், அத்தகைய போகங்களை இடையறாது அநுபவிப்பார் என்பார், "வாணாளளவும்" குறைதவிர்ந்து, என்றும், ஆரோக திடகாத்திரமாயிருந்தாலன்றி மேற்கூறிய பயன்களை யநுபவித்த லியலாதாதலால், "பிணியொழிந்து" என்றும்பிணியின்றியிருந்தாலும், பகைவர்களுடைய உபாதியிருக்குமாயின்,மனம்அமைதிபெறாது,கலங்கிக் கொண்டேயிருக்குமென்பார் "பகைவென்றேங்கி" என்றும், இத்தகைய பிரயோஜனங்களை இம்மைக்கண் அநுபவித்தல்மாத்திரமல்ல, மறுமைக்கண் சொர்க்காதி போகங்களையும், பெறுவர் என்பார். "கருமலர் மானத்திவர்ந்து வானுலக முழுவதுஞ் சஞ்சரிப்பர்" என்றும் இப்புராணத்தை ஓதல் கேட்டல்களாற் பெறுவன இம்மை மறுமைப்பயன்கள் தாமோ எனின், அற்றன்று வானுலகமுழுவதும். என்ற முற்றும்மையால், சிவலோகப் பிராப்தியும் சித்திக்கப்பெற்று இன்பமநுபவிப்பர் என்றும் கூறினார்.

## திருவாப்புடையார். ௧

நீர்பூத்த கடற்கணிலே இலிங்கநகர புற்புகத்தி னெறிபோலெண்ணில், பார்பூத்த வகிலாண்ட முதித்தொடுங்குங் கருப்பொருளைப் பரந்தா மப்போர்க், கார்பூத்த திருவுருவத் தரிபிரமா தியர்கருத்துங் கடந்து நின்ற, சீர்பூத்த திருவாப்ப னூருடைய தனிமுதலைச் சிந்தை செய்வாம்.

---

* எண் போகமாவன:—போஜனம், பெண், ஆடை, அணிகலன், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி என்பனவாம்.

(இ-ள்) புனல் நிரம்பிய சமுத்திரத்தில் அலை திவலை நுரை குமிழி என்னும் இவைகள் தோன்றி, மீட்டும் அதில் ஒடுங்குதல் போலப் பூமியையுடைய அளவிறந்த அண்டங்களும், (அவற்றிலடங்கிய சராசரங்களும்) உற்பவித்து, இலயமாதற்கிடமாகிய, நிமித்த காரணப் பொருளாயும், பரந்தாமனென்னும் பெயரையுடையவரும், மேகம்போலுந் திருமேனியையுடையவருமாகிய, விட்டுணுமூர்த்தி பிரமதேவர் முதலியோ ரறிவிற்கு மப்பாற்பட்டு விளங்குபவராயுமுள்ள, சிறப்புப்பொருந்திய, திருவாப்பனூரை யிடமாகக் கொண்டமர்ந்தருளிய ஒப்பற்ற முதற்பொருளாகிய, திருவாப்புடையீசரைத் தியானிப்பாம். (எ-று.)

பிரபஞ்சமாகிய காரியத்திற்குத் திருவாப்புடையீசர் நிமித்த காரணம் என்றவழி, முதற்காரணம் மாயையும், துணைக்காரணம் சிவசத்தியுமென்றறிக.

"அலைகடலி னுரைதிவலை யுதித்தொடுங்கு மாபோ லகிலாண்ட முதித்தொடுங்கு மதன்மூலப் பொருளே" என்ற ஆன்றோர் வாக்கியப்படியே "அலைமுதலியன உற்பத்தியாய் மீண்டும், ஒடுங்கும் கருப்பொருளென்றார்."

வியாபகமாகிய சிவத்திற் சத்தியும், சத்தியில் நாதமும், நாதத்தில் விந்துவும், விந்துவில் சதாசிவமும், சதாசிவத்தில் மகேசுரனும், மகேச்சுரனில் உருத்திரனும், உருத்திரனில் விட்டுணுவும், விட்டுணுவில், பிரமனும், பிரமனில் ஆகாசமும், ஆகாசத்தில் வாயுவும், வாயுவில் அக்கினியும், அக்கினியில் அப்புவும், அப்புவில் பிருதிவியும, பிருதிவியில் அன்னமும், அன்னத்தில் சரமிருகாதி தாவர சங்கமாதிகளும் தோன்றி, தோன்றிய முறையே தத்தங் காரணங்களில் ஒடுங்குதற்குத் திருவாப்புடையீசர் நிமித்த காரணமாகலின், "அகிலாண்ட முதித்தொடுங்குங் கருப்பொரு" ளென்றார்.

இதுவுமது.

கார்ப்புடையா ரமரர்மணி மகுடகோ டிகளுரிஞ்சிக் கழற்கால்
சேக்குஞ், சேப்புடையார் கனகவரைச் சிலைபுடையா ரணிசருமந்
திருத்தார் மூன்றாம், பாப்புடையா ரெனக்கரிக்கும் பண்புடையார்
வைகைவட பான்மிக் சேர்ந்து, ஆப்புடையார் திருவடித்தா மரை
யைபருட் டேன்றதும்ப வகத்துள் வைப்பாம்.

(இ-ள்) கற்பகச் சோலையினருகில் வசிக்குந் தேவர்கள் சிரத்திற் றரித்திருக்கும் இரத்தினங்கள் பதித்த பலகோடி கிரீடங்கள் உராய்ந்து அதனால் தழும்பேறிச் சிவந்த வீரக்கழலை யணிந்த திருவடியை யுடையவரும்; மேரு



வை வில்லாக வுடையவரும், ஆபரணத்தைப் பாம்பாகவும், தோலை வஸ்திரமாகவும், மாலையை ஆத்தியாகவு முடையவரும், வேகவதியின் உத்தர தீரத்தில் எழுந்தருளி விளங்குபவருமாகிய திருவாப்புடையீசரது அழகிய பாதபத்மங்களை கிருபையாகிய தேன் ததும்பும்படி மனத்தில் தியானிப்பாம். (எ-று.)

அணி சருமம், திருத்தார் மூன்றம் பாப்பு, உடை, ஆர் என்பது நிரனிறைப்பொருள் கோள். பாப்பு - வலித்தல் விகாரம்.

## குரவங்கமழ்குழலம்மை.

கானேறு தீருநிழல்வின் மகளிர்குழற் காரிருட்குங் கணவர் சூடும்
வானேறு மிளிர்தருவெண் மதியினுக்குங் குவியாது மலர்ந்து ஞானந்
தானேறு மன்பருளத் தடந்தோன்றித் தண்ணளிரும் தருநீள் வாசத்
தேனேறுமலர்க்குரவங்கமழ்குழலாளடிக்கமலஞ்சிரமேல்வைப்பாம்.

(இ-ள்) வாசனை பொருந்திய கற்பக விருக்ஷத்தின் நிழலில் வசிக்கும் தெய்வப்பெண்களின் கூந்தலாகிய இருளுக்கும், தமது கொழுநராகிய சிவபெருமான் சடைமுடியிற் றரித்திருக்கின்ற ஆகாயத்திற் சஞ்சரிக்கும் பிரகாசத்தையுடைய வெள்ளிய சந்திரனுக்கும் குவியாமல் விகசிதமடைந்து, சிவஞானம்பொருந்திய மெய்யன்பர்களுடைய உள்ளமாகிய தடாகத்திலுண்டாகித் தண்ணிய கிருபையையுடைய நீண்ட பரிமளங் கமழுந்தேனிறைந்த மலர்களைத் தரித்த குரவங்கமழ்குழலம்மை என்னும் அம்பிகையினது திருவடித் தாமரைகளைச் சிரசின் மேற் சூடிக்கொள்வாம். (எ-று) தான்-அசை.

தெய்வப்பெண்கள் அம்பிகையின் திருவடிகளில் காலந்தோறும் வழுவாது சென்று நமஸ்கரித்தலின் "குழற்குக் குவியா" தென்றும், சிவபெருமான் தம்மிடத்துண்டான பிணக்கு நிவிர்த்தி யாதற்பொருட்டு, அம்பிகையின்பாதத்திற் பணியுங்கால்முடியிலுள்ளசந்திரனும் படிதலின், "கணவர்சூடும் மதிக்குக் குவியா" தென்றுங் கூறினார். கணவர்பணிதலை "ஆதிபகவன்றனதுடறணிப்பரன்பணியவல்லிறைவன்—பாதமிறைஞ்சமதற்குவெற்றிப்பகையுமல்குற்பகையுமாஞ்—சேதமதியுமரவும்வீழுஞ்செயற்குமுவகைசெயாமலைமாதுபணியுமதற்குமனமகிழுமமையைவணங்குவாம்." என்னும்பிரபலிங்கலீலைச் செய்யுண் முதலியவற்றா லுணர்க.

மலர்ந்து, தோன்றி, தண்ணளிரும்தரும் நீள்வாச அடிக்கமலம் எனக் கூட்டுக.

## சபாபதி.

விரிசடையின் னொளிவிரிப்பப் பகீரதிவெண் டிரைபுரட்ட
மிளிர்பூங் கொன்றை, சொரிநறுஞ்செந் தேன்றுளிப்ப மலைமகள்
கண் டுளங்களிப்பச் சுடர்க்கண் மூன்றும், புரிபவுரி யினிற்சுலவத்
தமருகநா தங்கறங்கப் புவனம் வாழப், பரிபுரவே தஞ்சிலம்பப்
பொதுநடஞ்செய் பரம்பொருளைப் பணிந்து வாழ்வாம்.

(இ-ள்) மின்னற்பிரகாசத்தைப் போல் விரிந்த சடைகள் ஒளியைப் பரப்பவும், கங்கையானது வெள்ளிய அலைகளை வீசவும், அழகு விளங்கும் கொன்றைமாலை ஒழுக்காநின்ற நறிய செவ்விய தேனைச் சிந்தவும், பார்வதி தேவியார்கண்டு உள்ளத்தி லானந்தமடையவும், சந்திரன், சூரியன், அக்கினி என்னும் மூன்று நேத்திரங்களும், தாம்செய்தருளும் ஆனந்தத் தாண்டவத்தின் வழியே சுழலவும், திருக்கரத்துள்ள தமருகம் முழங்கவும், புவனவாசிகளெல்லாம் பெருவாழ்வை யடையவும், வேதச்சிலம்புகள் ஒலிக்கவும் கனகசபையின்கண் பஞ்சகிருத்தியத் திருநடனஞ் செய்தருளும், மேலான உண்மைப் பொருளாகிய சபாநாயகரை வணங்கி வாழ்வாம். (எ-று)

பகீரத மன்னன் தவம் காரணமாக வந்ததனால் கங்கைக்குப் பகீரதி எனவும், பெருமான் நடனம்புரியுங்கால், அப்பெருமானது சடாமகுடத்துக் குள்ளிருக்கும் கங்கை அலைவீசுதலால், "பகீரதிவெண்டிரைபுரட்ட" எனவும் காணுதலும், களித்தலும், கண் உள்ளம் என்னும் இரண்டின் தொழிலாதலால் முகக்கண்ணாற்கண்டு. அகக்கண்ணாற் களித்தல் என்பதாம். ஆகவே, இறைவி இறைவனது நடனத்தைத் தெரிசித்து, நேத்திரானந்தமெய்தலே யன்றிச், சிற்றம்பலத்தில் அப்பெருமான் ஊன்றிய பாதத்தையும், தூக்கிய பாதத்தையும், காணுந்தோறும், ஆன்மாக்கள் வினைப்பயனுகர்தலினிமித்தம் அமைக்கப்பட்ட, தநு கரண புவன போகங்களாகக் கருவுட்படவும், அதை அநுபவித்தபின் அவ்வினைப்பு நீங்க முத்தியடைந்து, அருட்படவும், திருவிளையாட்டியற்றவல்லது என்றுள்ளத்துணர்ந்து மகிழ்தலால் "மலைமகள் கண்டுளங்களிப்ப" எனவும், நடனஞ்செய்வார்க்கு, அபிநயத்தின் வழியே கட்பார்வை செல்லவேண்டுதலின், "சுடர்க்கண்மூன்றும்புரி*பவுரியினிற்சுலவ" என்றும், ஆன்மவர்க்கங்களெல்லாம் நாதத்தினின்று உற்பத்தியாகுங் கிரமத்தை வெளிப்படுப்பான் "தமருகநாதங்கறங்க" எனவும், கூறினார்.

* பவுரி - கூத்தின் விகற்பம்.



## துர்க்காதேவி.

### வேறு.

ஒருநடங் கழிக்கு மீசன் கடுமுய லகன்மேற் றூன்செய்
திருநட மிதற்கொவ் வாதென் செய்துமென் றிருக்க வெற்பி
னுருநடந் தனைய மேதி யுயர்சிர நெரிய நின்று
பெருநடஞ் செய்யுந் தெய்வப் பிராட்டியை வணக்கஞ் செய்வாம்.

(இ-ள்) ஆன்மாக்கள் பிறவியின்கண் உழலுதலை நீக்கியருளும் சிவபெருமானது கொடிய முயலகன் என்னும் இராக்கதன் முதுகின்மீது நின்று நாம் புரியும் தாண்டவம் இதற்கு நிகராகாதே என்செய்வோமென்று சிந்திக்கும்படி மலைநடந்து வந்தாற்போல் வந்த மகிடாசுரனது உயர்ந்த தலை சிதையும்படி நின்று பெருமைபொருந்திய திருநடனத்தைச் செய்தருளும் துர்க்காதேவியை வணங்குவாம். (எ-று.)

இருக்க நடஞ் செயும் எனக் கூட்டுக.

## விநாயகர்.

### கலிநிலைத்துறை.

திருநான் மறைச்சங் கிலிக்கொண்டு நில்லாது செகமேழு லாய்
வருஞான மதமூற மணியாக வுதயாத்த மனவெற்பை யே
யிருபாலு மணியாப்ப தூராவென யானாக மிடையன் பொடு
மொருநாளின் யாப்பின்க ணிற்கின்ற திதுபோது முனதியா தரோ.

(இ-ள்) அழகிய நான்கு வேதங்களாகிய சங்கிலிகளிற் றடையுண்டு நில்லாது (அவற்றைத்தங் கைவசமாக்கிக் கொண்டு) ஏழுலகங்களிலும் ஞானமென்னும், தான நீரொழுகப் பெய்து திரிந்து, உதயகிரி, அத்தகிரி, என்னும் இரண்டையுமே இருபக்கங்களிலும் மணிகளாகத் தரித்த ஆப்பனூரி லெழுந்தருளியிருக்கும் விநாயகராகிய யானையானது, அடிமையாகவுடைய நம்மிடத்தில் அன்போடும் இப்புராணத்திலுள்ள இச்செய்யுளில் (கட்டுண்) நிற்கின்றது. ஆதலால் இதுபோலும் ஆச்சரியம் வேறென்ன இருக்கிறது (எ-று) அரோ — அசை.

இதுவழிபடு கடவுள் வணக்கம்.

சங்கிலியிற் கட்டுப்படாது அதனைக் கைவசமாக்கிக்கொண்டு செகமேழுலாவுகின்ற தொருயானை ஒருநாளிற் கட்டுண்டு நிற்பது வியப்பாகலின் "இதுபோது முனதியாது" என்றார்.

## சுப்பிரமணியர் துதி.

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

கருமாவை யரிவிழிப்பங் கயமாவைப் புணர்திருமால் கமல
நாபிப், பெருமாவை யகம்படைக்கும் பிரமாவை யுற்றுணராப்
பிரண வத்தின், குருமாவை நுகர்வதுவே குணமாவை கனும்புனஞ்
செல் கோட்டு மாவைப், பொருமாவை வேற்குமரன் புதுவிரைத்தா
மரைமலர்த்தாள் போற்றல் செய்வாம்.

(இ-ள்) கரியவண்டுபோலும் அழகிய செவ்வரிபரந்த கண்களையுடைய இலக்குமியைப்புணரும் விஷ்ணு மூர்த்தியினது உந்திக்கமலத்தினின்றும் உதித்து மிகப்பெரிய இப்பூமி முதலிய எவற்றையும் சிருட்டிக்கும் பிரமதேவர் சந்தேகித்துணராத பிரணவப்பொருளை உபதேசிக்கவல்ல ஞானாசிரியரும், தினைமாவை உண்பதையே உரிமையாகக் கொண்டு நாடோறுந் தினைப் புனத்திற் சென்றவராய்ப்பின் கொம்புகளையுடைய மாமரவடிவுகொண்ட சூரபன்மனை யழித்த பெருமை பொருந்திய கூரிய வேலாயுதத்தைத் தரித்தருளிய வருமாகிய முருகக்கடவுளது அன்றலர்ந்த வாசனை பொருந்திய சரணாரவிந்தங்களைத் துதிப்பாம். (எ-று)

புனஞ்செல் குமரன் என இயைக்க.

## திருநந்திதேவர்

கரியமணி கண்டனைச்செங் கண்ணுதல்வா னவனை முனிக்
கணஞ்சூழ் வெள்ளித், திருவரையிற் றனிமுதலைப் பசியநறுங்
கொடியினொடுந் தெரிசித் தேத்து, மரியயனிந் திரனமரர் தமையு
மடி யாரெனத்தன் னடிக்கு ளாக்குங், குருமணிவேத் திரத்தடக்கை
நந்திதிரு வடிமுடிமேற் கொண்டு வாழ்வாம்.

(இ-ள்) கருமைபெற்ற நீலமணிபோலும் கண்டத்தையுடையவரும் செவ்விய நெற்றி நேத்திரத்தையுடைய கடவுளும் முனிவர்கூட்டஞ் சூழ்ந்திருக்கும் அழகிய கைலையங்கிரியில் எழுந்தருளிவிளங்கும் ஒப்பற்ற முதற்பொருளாகிய சிவபெருமானைப் பசுமை நிறம்வாய்ந்த மணம்பெற்ற கொடி போன்ற உமாதேவியாரோடும் தெரிசனஞ்செய்து துதிக்கின்ற விட்டுணு மூர்த்தி பிரமதேவர் தேவேந்திரன் முதலிய மற்றைத்தேவர்கள் யாவரையும் அடியரென்று சொல்லும்படி தமது பிரம்படிக்குட்படுவோராக்கும் நிறம்பெற்ற இரத்தினங்கள்பதித்த பிரம்பைத்தரித்த திருக்கரத்தையுடைய திருநந்திதேவர் திருவடிகளைச்சிரசில் ஆபரணமாகச் சூட்டிவாழ்வாம். (எ-று)



திருநந்திதேவர் இரண்டாஞ் சம்புவாதல்பற்றிப் பெருமானை வணங்கப் பெற்றோர் பலரும் தம்முடைய திருவடிகளையும் வணங்கப் பெறுகின்றாராகலின் "அடியரெனத் தன்னடிக்குளாக்குங் குருமணி வேத்திரத்தடக்கை நந்தி" என்றார் என்னலும் ஆம்.

## கலைமகள்

### வேறு

உரைத்தமிழ் மூவர் நாவி னூற்றெழு மமுதைச் சங்கத்
திருக்குமவெண் முத்தைக் கற்றோ ரென்னுமீக் கூட்டுந் தேனை
வரைத்தமிழ் முனிவ னெஞ்ச மலர்க்கம லப்பூஞ் சேக்கைத்
திருத்தகு மரச வன்னப் பேட்டினைச் சிந்தை செய்வாம்.

(இ-ள்) கீர்த்திபெற்ற இயல் இசை நாடகமென்னும் முத்தமிழிலும் வல்ல திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகளென்னும் மூவரது நாவினின்றும் ஊற்றெடுத்துப் பொங்கிவழியும்) அமிர்தம் போல்வாளாகியும், தலை, இடை, கடையென்னும் மூன்று சங்கங்களிலும் நிலைபெற்றிருந்த வெள்ளிய முத்துப்போல்வாளாகியும், கல்வியுடைய அறிஞர்களாகிய ஈக்களால் தொகுக்கப்படும் தேன்போல்வாளாகியும், பொதியமலையிலமரும் தென்மொழித் தலைவராகிய அகத்தியமுனிவரது இருதயகமலத்தில் வீற்றிருக்கும் அழகிய பெண்ணரசவன்னம்போல்வாளாகியும், உள்ள சரஸ்வதியைச் சிந்திப்பாம். (எ-று)

அமுது ஊற்றெழுவதும், முத்து சங்கத்திருப்பதும், தேன் ஈக்களால் தொகுக்கப்படுவதும், அன்னம் கமலச்சேக்கையிலமர்வதும் உடைமைபற்றி இங்ஙனம் உருவகித்தார். (௧௧)

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

### கொச்சகக்கலிப்பா.

பெருமுலைப்பா லகன்பிரமன் கண்டறியாப் பெருந்தகைமேற்
பொருமுலைப்பரன் மெழுகினுளம் புரைந்துருகத் தமிழ்பாடு
மருமுலைப்பா லருந்தினைய மணிமுறுவன் மலைமகளார்
திருமுலைப்பான் மணங்கமழ்வாய்ச் செல்வனையாம் பரவுவாம்.

(இ-ள்) பெரிய முல்லைநிலத்தைக் காப்பவராகிய விட்டுணு மூர்த்தியும் பிரமதேவரும் காணாத மேன்மையுடைய சிவபெருமான்மீது உலைவாக

ப்பட்ட மெழுகுபோல உள்ளங் கரைந்துருகத் தேவாரப் பாமாலை பாடியருளிய வாசனைவீசுகின்ற வெள்ளிய முல்லை யரும்பையொத்த அழகிய தந்தங்களையுடைய உமாதேவியார் தமது திருத்த தனங்களினின்றுஞ் சுரந்து கொடுத்தருளிய பால் மணம்வீசுகின்ற வாயினையுடைய திருஞானசம்பந்தசுவாமிகளை யாம் துதிப்பாம். (எ - று). பாடும் செல்வன் எனக் கூட்டுக.

## திருநாவுக்கரசுநாயனார்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை மனத்தாசை யறவெ திர்ந்தா னந்த நீர்பாய்ந் தண்ணாசை சிவபெருமான் காட்சிக் காக்கிக் கருத்தாசை யவனருட்கே கைம்மா றாக்கி, புண்ணாசை மருந்தனையார் புகலூர் மன்னு முழவாரப் படையாளி யருளிப் பாடும், பண்ணாசைத் திருநாவுக் கரையன் பாதம் பத்தியுறத் தொழுதெஞ்சிற் பதித்து வாழ்வாம்.

(இ - ள்) மண், பொன், பெண் என்னும் இம்மூன்றிலும் நிகழும் ஆசையையும், மனத்திலுண்டாகும் மற்றும்பல வேறுவகையான இச்சைகளையும் முற்றும் நீக்கி, ஆனந்தபாஷ்பம் பொழியும் கண்களின் ஆசையைச் சிவபெருமானது திருக்கோலத்தைத் தெரிசனஞ்செய்வதற்கேயாக்கிக், கருத்திலுண்டாகும் ஆசைகளை அவரது திருவருளுக்கேகைம்மாறாகக்கொடுத்து சந்தோஷமாயுண்ணத்தக்க தேவாமிர்தம்போல்வாராகிய அச்சிவபெருமானமரும் திருப்புகலூரென்னும் பதியில் உழவாரப் பணிவிடை செய்பவராய் வீற்றிருந்துகொண்டு, பேரானந்தத்தால் மனமுருகி யிசைபொருந்திய தேவாரத்தைப்பாடியருளிய திருநாவுக்கரசு சுவாமிகளது திருவடிகளை அன்புமுதிர்ந்து பெருக எமது மனத்தில் வைத்து வாழ்வாம். (எ - று)

## சுந்தரமூர்த்திநாயனார்.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏற்றுயர் கொடிநந் திருமுது குன்றத் திறைவரைப் பொருள் குறித் தேத்திச், சாற்றிய பதிக விலையெனத் தனக்குத் தரும்பொருள் முழுவது மணிமுத், தாற்றினில் விடுத்திக் குளத்தினி லெடுத்துப் பரவையி லன்றுயுக் களித்தோன், சேற்றினில் விளையாச் செழுமலர்க் கமலச் சேவடி சென்னிசேர்த் துதுமே.



(இ - ள்) பெருமை பொருந்திய இடபக்கொடியினையுடைய விருத்தாசலத்தில் வதியும் பழமலைநாதரைப் பொன்னுக்காகப்பாடியருளி அங்ஙனம்பாடிய தேவாரத் திருப்பதிகத்தின் விலைபோன்று அப்பெருமான் தமக்குக் கொடுத்த பொருள்கள் யாவற்றையும் அவ்விருத்தாசலத்திலுள்ள திருமணிமுத்தாநதியிலேயிட்டு, திருவாரூரில் கமலாலயமென்னுஞ் சிவதீர்த்தத்தில் எடுத்துப் பரவைநாச்சியார் திருகத்தில்முன் கொண்டுபோய்க் கொடுத்த சுந்தரமூர்த்தி சுவாமிகளது சேற்றினின்றும் உண்டாகாத செழிய தாமரைமலர்போன்ற சிவந்த திருவடிகளைச் சிரசிலணிந்துகொள்வாம். (எ - று) ஏ—அசை. அளித்தோன் சேவடி என இயையும்.

## மாணிக்கவாசக சுவாமிகள்.

### நேரிசைக்கலிப்பா.

வார்மாலை முலையுமைமாரன் மணவாளன் மலர்க்கழற்கீழ்த்
தார்மாலை யெனஞானத் தமிழ்மாலை தரும்பியக்
கார்மாலை யுடன்சாத்தி நெகிழ்வாத வூரடிகள்
சீர்மாலை பாடுமவர் சேவடியென் சிரமீதால்.

(இ - ள்) கச்சையும் மாலையையும் அணிந்தஸ்தனங்களையுடைய உமாதேவி நாயகராகிய சிவபெருமானது சாரணரவிந்தங்களின் கீழ் பூமாலையணிவதுபோலத் தமிழ்வேதமாகிய திருவாசகமென்னும் பாமாலையைக் கண்களினின்றும் பொங்கிவழியும் ஆனந்தபாஷ்பமாகிய மாலையுடன் அணிந்து விளங்கிய மாணிக்கவாசக சுவாமிகளுடைய சிறப்பைக் கிரமமாகப் புகழ்ந்துபாடுகின்ற மெய்யன்பர்களுடைய பாதங்கள் அடியேனது சிரசின்மேலன. (எ - று)

## சோமாந்தகபாண்டியன்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தெண்ணிலவின் வழித்தோன்றிச் சயம்புதெரி சனவிரத சீலமேந்கோன், டெண்ணின்மறை வித்தினையோர் முனையிடங்கண்டிட்டபுரத் திறையோன் கோயி, லுண்ணிலவு மானமுதற் திருப்பணிசெய் சுருணையின் றுலகங்காத்த, தண்ணளிவெண் குடைச்செங்கோல் வழுதிசோ மாந்தகன்று டலைமேற் கொள்வாம்.

(இ - ள்) ஒளிவாகிய சந்திரவமிசத்திற்பிறந்து சுயம்புலிங்கமூர்த்த தெரிசனஞ்செய்தன்றிப் போசனஞ் செய்கிறதில்லையென்னும் வைராக்கிய

மாகிய நல்லொழுக்கத்தை புறநியாகக்கொண்டு அளவில்லாத வேதங்கட்கெல்லா மாதாரமான சிவலிங்கப்பெருமானை ஓர் ஆப்பினிடத் துதிக்கும்படிசெய்து தெரிசித்து இடபபுரமென்னும் இத்தலத்தில் தலைவராகிய சிவபெருமான் வீற்றிருப்பதற்கு ஆலயமும், உள்ளே விளங்கும் விமானமுதலிய அனேகத் திருப்பணிகளையுஞ் செய்த சுகுணபாண்டியனைப் புத்திரனாகப்பெற்று உயிர்களை மனுநீதியின்படி காத்த, குளிர்ந்த வெள்ளிய சந்திரவட்டக் குடையையும் செங்கோலையும் உடைய சோழாந்தகபாண்டிய மன்னரதுபாதங்களைச் சிரசிலணிவாம். (எ - று)

## சைவவேதியன்.

### கோச்சகக்கலிப்பா.

சோதியனைப் பொன்னிதழித் தொடையானை நிலவெறிக்கும்
பூதியனை யாப்பனூர்ப் புண்ணியனைப் பெண்ணுருவும்
பாதியனை யருத்தமனாற் பாகச்சோ றடுஞ்சைவ
வேதியனைப் பணிமலர்தூய் மெல்லடிப்போ திறைஞ்சுவாம்.

(இ-ள்) ஒளிவடிவானவரும், பொன்போலுங் கொன்றைமாலையைத் தரித்தவரும், சந்திரிகையை வீசும் விபூதியையுடையவரும், திருவாப்பனூரில் விளங்கும் தரும சொரூபரும் உமாதேவி பொருந்திய பாதித் திருவுருவத்தையுடையவரும், ஆகிய திருவாப்புடையீசரைத் திருவமுதுசெய்வித்தற்பொருட்டு, வைகையாற்று மணலையே பக்குவமான அன்னமாகச் சமைத்த ஆதிசைவப் பிராமணரது மெல்லிய தாமரை மலர்போலுந் திருவடிகளைக் குளிர்ந்த புஷ்பங்களா லருச்சித்து வணங்குவாம். (எ - று)

## சூதமுனிவர்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மூப்பழுக் கருஞ்சொல் வேத முனிக்குழாந் தொழுது கேட்பத்
தீப்பழுத் தனைய வேணித் திகம்பரன் சிவபு ராணங்
காப்பழுத் தமிழுந் தெய்வக் கனித்திரள் சிவணு வாய்மை
நாப்பழுத் தமிழுஞ் சூத நற்றவ முனிதாள் போற்றி.

(இ - ள்) முதிர்ச்சிபெற்ற பொருளமைதியோடுகூடிய அரியசொற்களையுடைய வேத பாரகர்களாகிய நைமிசாரணிய முனிவர்கள் வணங்கிக்கேட்க, தீயின் றிரட்சிபோன்ற சடைமுடியையும், திக்குக்களாகிய வஸ்திரத்தையுமுடைய சிவபெருமானுக்குரிய புராணங்களைக் கற்பகதருவானது தன்



னிடத்துள்ள முதிர்ந்த பழத்தை வேண்டியவர்வு விரும்பினவர்கட்குக் கொடுக்குந் தன்மைபோல் உள்ளபடி நாவினால் மிகவும் உபதேசிக்கும் தவசிரேட்டராகிய சூதமுனிவருடைய திருவடிகளை வணங்குவாம். (எ - று) சிவபுராணம் உமிழும் சூதமுனியெனக் கூட்டுக.

## சண்டேசர்.

### ஷை வேறு.

புரிசடைமேன் முடிக்கிடந்த கொன்றையந்தார் முடித்தசிரம்
போற்றி யீசன், றிருவுடைநன் குடுத்தமல னுண்டபரி கலத்திறுண்டூ
னுந் திருவாய் போற்றி, கருவிடைப்புக் குழலுமெனை யெடுத்தா
ண்ட சண்டேசக் கடவுள் சோதி, மருவுமழுக் கரம்போற்றி யருணி
றைசெஞ் சரணமலர் வனசம் போற்றி.

(இ - ள்) பரமசிவனது சடாபாரத்திற் றரித்த அழகிய கொன்றைமாலையை யணிந்த சிரசு நம்மால் வணங்கப்படுவது; அச்சிவபெருமான் திருவரையிற் சாத்தியருளிய வஸ்திரத்தைத்தரித்து, திருமலர்கிய அப்பெருமான் திருவமுது செய்தருளிய பரிகலத்திலுண்ணத்தக்க அழகிய வாய் வணங்கப்படுவது. கருப்பையிற் கட்டுண்டுழலும் அடியேனை மீண்டும் அதிற் புகாமலெடுத்துத் தடுத்தாட்கொண்டருளிய சண்டேச மூர்த்தியின் பிரகாசம்பொருந்திய மழுவாயுதத்தையுடைய கரம் வணங்கப்படுவது. கிருபைநிறைந்த திருவடிகளாகிய செந்தாமரை மலர்கள் வணங்கப்படுவன. (எ - று.)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் கக.

---

# பாயிரம்.

---

மறைமுழுது மளப்பரிய வாப்பனூ ருடையபிரான் மான்மி
யஞ்சிற், றறிவுடைய யானளக்குந் தரத்ததோ வத்தலத்தி னதி
சைவ, ரிறைகுலசே கரவழுதி நாமநம்பி மரபுதித்தோ ரின்னா றென்
றார், றுறைமுறையி னியற்றெனவச் சொன்மறுக்க மாட்டாமைத்
தொடங்கினேனால்.

(இ - ள்) வேதமுற்றும் அளவிட் டறிதற்கரிய திருவாப்பனூரென்னும் பதியை (தமக்குரிய இடமாக) வுடைய பெருமானது மான்மியமானது அற்பவறிவையுடையவனாகிய அடியேன் சொல்லத்தக்கதன்று. (ஆயி

னும்) அந்நகரத்துள்ள சிறப்புவாய்ந்த ஆதிசைவராகிய குலசேகரபாண்டிப் பட்டர் மரபிற்றோன்றிய பெரியோர் (வடமொழியிலுள்ள) இப்புராணத்தை (யாவரும் எளிதிலறியும்பொருட்டு) தென்மொழியிற் சொல்வாயென்று கட்டளையிட அதைத் தடுத்துச் சொல்லக்கூடாமையாற் சொல்ல ஆரம்பித்தேன். (எ - று) ஆல்—அசை.

பேரறிவுடைய பெருமான் திருவாய்மலர்ந்தருளிய அவ்வேதங்களுக்கும் அப்பாற்பட்டவரென்பார் "மறைமுழுது மளப்பரிய வாப்பனூருடையபிரான்" என்றும், அத்தகைய முழுமுதற்கடவுளது மான்மியம் ஒருசிறிதும் அறியாதயான் சொல்லத்தக்கதன்றென்பார் "மான்மியஞ்சிற்றறிவுடைய யானுமிக்குந் தரத்ததோ" என்றும், அம்மான்மியம் யாவரும் எளிதிலுணரும்படி செய்யவேண்டுமென்பார் "தென்றமிழ்த்துறைமுறையி னியற்றென" என்றும் அவ்வாறு சொல்லத்தக்க அறிவின்றேனும் அப்பெரியோர்களுக்கிரகத்தாற் கூறலுற்றேன் என்பார் "அச்சொன் மறுக்கமாட்டாமை த்தொடங்கினேன்" என்றும் கூறினர்.

"தரத்ததோ" என்பதன் ஓகாரம் ஈண்டு எதிர்மறைப்பொருட்டு.

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

நற்கடவுள் வணக்கம்பா யிரஞ்சொலவை யடக்க நைமிச மணி
யவரு ணைனருதர் கதை, பொற்கமலச் சடைமூர்த்தி யாப்பனூ
ரிடப்புரமன்னி லேதகஞ்சந் திரசேன னுமிந், தற்கமுனை பாட்க
ளன்மெய்க் குபேரனொடு சுதரி சனனரிச்சந் திரனீறாச் சருக்கமோ
ரெட்டாய்ச், கற்கநிறை விருத்தயாப் பைஞ்ஞாற்று ரேழிற் கவிஞர
னைவருமுவப்பக் கழறுகதுற் றேனால்.

(இ - ள்) நல்ல கடவுள் வணக்கமும், பாயிரமும், சொல்லுகின்ற அவையடக்கமும், நைமிசாரணிய வருணனையும், சூதரை வினையாதலையும், கங்கையைத்தரித்த பொன்மயமாகிய சடைமுடியையுடைய மூர்த்திமகிமையும் (ஆகிய இவற்றோடு) ஆப்பனூர்ச் சருக்கமும், இடபபுரச் சருக்கமும், அன்னவிநோதச்சருக்கமும், சந்திரசேனச் சருக்கமும், தருக்க முதலிய சாத்திரங்களையறிந்த பாட்களச்சருக்கமும், உண்மையாகிய குபேரச்சருக்கமும், சுதரிசனச் சருக்கமும், அரிச்சந்திரன் தீர்த்தயாத்திரைச் சருக்கமுமாகிய இவற்றையிறுதியாகக்கொண்டுள்ள எட்டுச் சருக்கங்களாக (யாவரும் எளிதிற்) கற்றுணரும் வண்ணம் ஐஞ்ஞூற்றுப்பதினொன்கு திருவிருத்தங்களில் கற்றோர்கள் புன்முறுவல் செய்யும்படி (இப்புராணத்தைச்) சொன்னேன். (எ - று) ஆல்—அசை.



## அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கனியினைப் பிழிந்து செந்தேன் கலந்தென வாப்ப னூர்ச்ம்
பனிமதி மிலைந்த நாதன் பன்னரும் புராணந் தன்னைப்
புனிதன்மெய்க் கந்த சாமிக் கவிஞன்பூ வரைத்தான் பார்மே
லினிதெனப் புலவர் கூற வின்றமிழ்ப் புணர்த்தி னானே.

(இ - ள்) பல பழங்களை யொன்றாகச்சேர்த்துப் பிழிந்து அதினிரத்தைத் தொகுத்தாற்போலத் திருவாப்பனூரில் வீற்றிருக்கும் குளிர்ந்த பிறையையணிந்த நமது சிவபிரானது சொல்லற்கரிய இப்புராணத்தைத் திருப்பூவணமெனனும் தலத்தில் வசிக்கும் சத்தியசீலராகிய கந்தசாமிப் புலவர் இவ்வுலகிலுள்ள அறிஞர்கள் இது தகுதியுடையதென்று கூறும்படி இனிய தமிழில் மொழிபெயர்த்தார். (எ - று) ஏ—அசை.

### பாயிரம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் உஉ.

## அவையடக்கம்.

வாடி தமிழ்க் கவிஞர் யார்க்கும் விண்ணப்ப மனைற்சோ ரெப்ப
தடியனேன் கவியின் குற்றம பார்ப்பது மழகோ வேணி
யுடுபதி முடிக்கு மாப்ப னூருடை யவரும் வையைக்
குடிநைப மனைற்சோ றன்றுட் கொண்டருள் வழக்கான் மன்னோ.

(இ - ள்) தெளிந்த தமிழில் வல்லவர்களாகிய வித்துவான்கள் யாவர்க்கும் செய்துகொள்ளும் விண்ணப்பம் யாதெனின், (அறிஞர்களே) சடைமுடியிலே சந்திரனைத் தரிக்கும் திருவாப்புடையீசரும் வையையாற்றிலுள்ள மனைவாற் சமைக்கப்பட்ட திருவமுதை முற்காலத்திற் கொண்டருளிய முறைமையிருத்தலால் (அதுபோலவே, மனைற்சோறொப்பதாகிய அடியேனுடைய செய்யுட்களை நீவிர் அங்கீகரிப்பது முறைமையன்றி அவற்றிற் குற்றநோக்குவது முறைமையன்று. (எ - று)

மன் ஓ - அசைகள். "அழகோ" என்பதன் ஓகாரம் எதிர்மறையாய் இல்லையென்னும் பொருள் பயந்தது.

குற்றநோக்கின் மனைற்சோற்றில் கல்லாராய்தல்போலுமாகலின் இவ்வாறு கூறினர்.

ஆகத் திருவிருத்தம் உக.

## நைமிசாரணிய வருணனை.

### கலிநிலைத்துறை.

புன்னை பாடலந் தாடிம மரவம்பூங் குரவங்
குன்னி காரமந் தாரமாப் பழுமரங் கடுக்கை
நன்ன ரும்பல வருச்சுனம் வகுளம்வெண் ணாவல்
வன்னி கூவிளஞ் செறிநிழ னைமிச வனமே.

(இ - ள்) புன்னைமரங்களும், பாதிரிமரங்களும், தாது மாதுளைமரங்களும், குங்கும மரங்களும், பூக்களையுடைய குராமரங்களும், கோங்குமரங்களும், மந்தாரமரங்களும், மாமரங்களும், ஆலமரங்களும், கொன்றைமரங்களும், நல்ல பலாமரங்களும், மருதமரங்களும், மகிழமரங்களும், வெண்ணாவல் மரங்களும், வன்னிமரங்களும், வில்வமரங்களும் ஆகிய இவைகள் நெருங்கியிருப்பதாலுண்டாகிய நிழலையுடையது நைமிசாரணியம். (எ - று) உ-ம் ஏ சாரியைகள். (க)

வேத வித்தெனு மருந்தவ வுழவர்கண் மிடைந்து
தீத கற்றுநன் காலமோர்ந் தைம்புலன் றிருத்தி
யாதி பத்திமெய் வித்திய னந்தநீர் பாய்ச்ச
மாத வப்பயிர் விளைநில நைமிச வனமே.

(இ - ள்) வேதங்களுக்கு வித்தென்று சொல்லும் அரிய தவசிகளாகிய உழுநர்கள் நெருங்கிக் குற்றத்தைப் போக்குகின்ற நல்ல பக்குவகாலத்தையறிந்து பஞ்சப் புலன்களாகிய வயல்களிலுள்ள விருப்பு வெறுப்பாகிய மேடுபள்ளங்களைச் சமஞ்செய்து (அதில்) சிவபத்தி யென்னும் விதையை விதைத்து ஆனந்தமென்னும் கண்ணீரை உள்ளே செலுத்த அதனால் தவமென்னும் சிறந்த பயிர்கள் விளையும் விளைநிலமாகவு மிருக்கின்றது அந்நைமிசாரணியம். (எ - று) ஏ—அசை. வேள்விசெய்யுமுனிவரிடத்து வேதங்களெழுந்து விளங்குதலால் அம்முனிவர்களை வேதவித்தென்றார். (உ)

விதிமு னிக்கணம் புரிமகத் தவிநனை விண்ணோர்க்
கதிக முற்றமு தனையவர்த் தனுதின முறலா
லெதிரில் கற்பக நறுநிழ லெக்கற வெய்த
வதியு நன்னிழ லளிப்பது நைமிச வனமே.

(இ-ள்) முனிவர்கள் வேதவிதிப்படி செய்யும் யாகத்திற் கொடுக்கிற அவிர்ப்பாகம் அதிக சுவையுற்றிருப்பதால் தேவர்கள் தாங்கள் உண்ணும்



அமிர்தத்தில் வெறுப்புற்று இவ்விடத்திலேயே எப்பொழுதுந் தங்கியிருத்தலால் நிகரற்ற கற்பகவிருக்ஷங்களின் நிழல் ஏக்கமடையும்படி அவர் தங்குதற்குரிய நல்ல நிழலைக் கொடுப்பது நைமிசாரணியம். (எ - று) ஏ—அசை.

உரிய வேள்விவா யவிவிழைந் தயன்வர வுடன்செல்
பிரிவி லோதிம நெடும்பணை வதிந்துநாற் பெருநூ
றெரிய வோதுவ தடையுறிற் றடையறத் திருத்தும்
வரிகொள் பூம்பொழிற் கிளிகள்சூழ் நைமிச வனமே.

(இ - ள்) முனிவர்கள் செய்யும் யாகத்திற் கொடுக்கிற அவிர்ப்பாகத்தை யிச்சித்துப் பிரமதேவர் வர அவர் ஏறிவந்த நீக்கமில்லாத வாகனமாகிய அன்னமானது நீண்ட கிளைகளிலிருந்துகொண்டு பெருமைதங்கிய நான்கு வேதங்களையும் ஓதும். (அவ்வாறோதுங்கால்) அதிற்றவறுநேரின் அத்தவறு நீங்கத்திருத்துந் திறமைவாய்ந்த கிளிகளோடு வண்டுகளையுங் கொண்டுள்ள மலர்ச்சோலைகள் சூழப்பெற்றது நைமிசாரணியம். (எ - று) ஏ-அசை.

நைமிசவனம் கிளிகளால் திருத்தும் என்பார் கிளிகள்சூழ் நைமிசவனம் திருத்தும் என்றார். (ச)

கரிய வண்டெனுங் கண்டிபூண் டலர்முகங் கண்ணீர்
வரக ளைந்துமா கமண்டலங் கையுற வாய்ந்து
பரவு பூம்பொடி யணிந்தொரு தாணின்று பன்னாண்
மரனு மெய்த்தவம் புரிவது நைமிச வனமே.

(இ - ள்) கருநிறமுடைய வண்டுகளாகிய உருத்திராக்கமாலையைத்தரித்துப் புஷ்பங்களாகிய முகங்களினின்றும் தேனாகிய ஜலம் ஒழுக அலைந்து கிளைகளாகிய கைகள் ஆகாயப் பரப்பில் அளாவப் பொருந்தி யாவராலும் பரவத்தக்க போதுகளிலுள்ள மகரந்தப்பொடியை விபூதியாக வணிந்து ஒற்றைக்காலிலேயே நின்றுகொண்டு அனேககாலம் தருக்களும் உண்மையாகத் தவஞ்செய்கின்றசிறப்பையுடையது அந்நைமிசாரணியம். (எ - று) ஏ-அசை.

மாகமண்டலம் கையுற என்பது தவத்திற் கியைந்தபடி பெருமைபொருந்திய கமண்டலம் கையிற் பொருந்த எனவும் பொருள்பட்டு நின்றது. (ரு)

கடிகை யைந்தெனத் துயிலொரீஇக் கடிப்புன லாடிப்
பொடிய ணிந்தெழுத் தஞ்செணிப் புராணிகர் பாற்போய்
நெடிய வேணியன் சிவகதை கேட்டுநெக் குருகி
வடிக ணீரினி ருப்பது நைமிச வனமே.

(இ-ள்) விடியற் காலத்திலே எழுந்து சூரியனுதயமளவில் நித்திரைவிட்டெழுந்து விளக்கம்பெற்ற தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விபூதியை யணிந்து பஞ்சாக்கரஜெபம்செய்து பௌராணிகரிடஞ் சென்று நீண்ட ஜடாபாரத்தையுடைய சிவபெருமானது திவ்விய சரித்திரங்களைக்கேட்டு நெஞ்சநெக்குருகிக் கண்களினின்றும் ஆனந்தபாஷ்பஞ் சொரிகின்றவர்களாகிய சனியையாளர்களிருப்பதும் அந்நைமிசாரணியமே. எ-று. (௬)

வேத வாகம விதிவழிச் சுத்தியை விதஞ்செய்
தாத ரத்தினாற் சிவனையர்ச் சித்ததன் பயனைப்
பூத நாயகன் கரமிசைப் புனலொடு வழங்கு
மாத போதனர் சரிப்பது நைமிச வனமே.

(இ-ள்) வேதாகமங்களிற் கூறிய முறைப்படி, திரவியசுத்தி, பூதசுத்தி, ஆத்துமசுத்தி, இலிங்கசுத்தி, மந்திரசுத்தி என்னும் பஞ்சசுத்தியையுஞ்செய்து, மெய்யன்புடன் சிவபெருமானைப் பூசித்து அதனாலுண்டாகும் பிரயோசனத்தைப் பூதகணங்களுக் கிறைவராகிய பெருமானது அஸ்தத்திலே ஜலத்தோடு தத்தஞ்செய்யும் நிஷ்காமிய தவத்தையுடையவர்களாகிய கிரியையாளர்களிருப்பதும் அந்நைமிசாரணியமே. எ-று. (௭)

பூதம்—ஆன்மாக்களுமாம்.

அடைவி லாண்டொன்று பத்தநூ றயிரமாந்தம்
அடைசெ லச்செல வோருயிர்ப் புயிர்த்தவன் கழறுட்
படையி னார்சிவ யோகமெய் யசைவறப் பயிலு
நடையி னாரிட மாகயது நைமிச வனமே.

(இ-ள்) ஒருவருடம், பத்துவருடம், நூறுவருடம், ஆயிரவருடம், பதினாயிரவருடம் என்னும் இவ்வருடங்களின் முடிவில் முறையே அதுவரையிற் பந்தனஞ்செய்திருந்த சுவாசத்தை ஒருதரம் விடுத்தலுடையராய், வலிய சூலாயுதத்தையுடைய சிவபெருமானைத் தியானித்தற்குரிய யோகத்தைச் சரீரத்திற் சலனமின்றிச்செய்யும் ஒழுக்கமுடையராகிய சிவயோகிகள் வசிக்கும் பற்பல இடங்களையுடையதும் அந்நைமிசாரணியமே. எ-று.

சிவயோகிகள் பற்பல வருடங்களின் கழிவில் ஒருமுறை சுவாசம் விடுபவராய் நெடுங்காலம் நிலைபெற்று அசலயோகத்திருப்பவரென்பார் இவ்வாறு கூறினார். நடை—ஒழுக்கம். (௮)

வான மேன்மண்ணி னவனவ னதுவெனும் வழக்கற்
றான மில்லவ வழிந்தறி வாய்நிறைந் தொளிரும்



மேனை வேதத்தின் முடிவையோர்ந் திரண்டறவிருக்கு
ஞான சாதனர் பயில்விட நைமிச வனமே.

(இ-ள்) தேவலோகம் பூலோகம் என்னும் இரண்டிலும் அவன் அவள் அதுவென்றுண்டாகும் முன்னிலையை யொழித்துக் குன்றுதலில்லாத பலவுயிர்க்குமுயிராய்விளங்கி (ஊட்டி உறக்கி உணர்த்துவிக்கும்) சோதி சொரூபமாகியும், மற்றை வேதமுடிவாகியும் உள்ள சிவத்தை (சுவானுபூதியால்) உணர்ந்து அவிதபாவனையறக்கலந்து சிவானந்தானுபவ முடையராகிய மெய்ஞ்ஞானிகள் வாசஞ்செய்யும் இடமாயுள்ளதும் அந்நைமிசாரணியமே. எ-று.
மேல்—ஏழாம்வேற்றுமையுருபு. (௯)

கலிவிருத்தம்.

பாத வந்தனைக் கற்பகம் பார்த்தபின்
பாத வந்தனைக் கற்பகம் பற்றுற
மாத வந்தினஞ் செய்யுமவன் றேர்விடை
மாத வந்தினஞ் செய்யும்வில் வேள்வரில்.

(இ-ள்) (இத்தனைப் பெருஞ்சிறப்பினையுடைய இந்நைமிசாரணியத்திலுள்ள) விருக்ஷங்களை (தேவலோகத்திலுள்ள) கற்பகத்தருக்கள் பார்க்குமாயின், அவற்றினடியில் நமஸ்கரித்தற்கு உள்ளத்தி லன்புகொள்ளும். வைகாசி மாதத்திலுண்டாகும் தென்றற்காற்றாகிய வலிய தேரிலேறிக்கொண்டு பஞ்சபாணங்களைத் தொடுக்கும் கருப்பு வில்லையுடைய மன்மதன் இந்நைமிசாரணியத்துக்கு வருவானாயின் மிக்க தவத்தையே தினந்தோறுஞ் செய்வன். எ-று.

பாதவம்—விருக்ஷம். அற்பு—வலித்தல்விகாரம். வந்து—காற்று.

பஞ்சபாணங்களாவன—தாமரை, மா, அசோகு, முல்லை, குவளை ஆகிய இவற்றின் மலர்கள். (௰)

நைமிசாரணியவருணனை முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௩௩.

## சூதரைவினவியகாதை.

கலிவிருத்தம்.

அவ்வருந் தவவனத் துறைபு மாதவர்
மைவரும் பன்னிருபா பாவரை நோக்கித்தங்

னைவருஞ் சுருதியின் கருமங் காமுறு
மெய்வருஞ் சத்திர வேள்வி செய்கின்றார்.

(இ-ள்) அந்த அரிய தபோவனத்தில் வசிக்கும் அழகிய தண்ணளியையுடைய முனிவர்கள் படத்தைக்கொண்ட சர்ப்பங்களைத் தரித்த சடைமுடியையுடைய சிவபெருமானைக் குறித்துத் தாம் கைதேர்ந்த வேதத்திற் கூறிய யாகஞ்செய்தலை விரும்பி உண்மைவளரும் சத்திரயாகத்தைச் செய்கின்றார்கள். எ-று.

சத்திரயாகம் - பொதுயாகம்; அஃதாவது அநேகர்கூடிப் பயனைப் பாகித்துக்கொள்ளச் செய்யப்படுவது. (க)

அவ்விடைக் கனறவிர்த் தனைய வேணியன்
வெவ்விடைக் கடவுணீ றணிந்த மெய்யினன்
வெளவிடைக் கசைத்தவற் கலையன் மாதவங்
குவ்விடைத் தனியுருக் கொண்ட கோலத்தான்.

(இ-ள்) அவ்விடத்தில் அக்கினிக் கொழுந்துவிட்டாற்போன்ற சடாமகுடத்தையுடையவரும், வெவ்விய இடபாரூடராகிய கடவுளது திருவெண்ணீற்றை அணிந்த திருமேனியையுடையவரும், சுருங்கிய இடையிற்கட்டிய மரவுரியை யுடையவரும், இவ்வுலகத்தில் பெரிய தவமே திரண்டு ஒரு வடிவெடுத்தாற்போன்ற திருக்கோலத்தையுடையவரும். எ-று.

"அவ்விடை என்னுஞ்சொல் ௫-வது செய்யுளில் "வந்தனன்" என்பதனோடு இயையும். வெளவுதல் ஈண்டுச் சுருங்குதலையுணர்த்திநின்றது. இடைக்கு—வேற்றுமைமயக்கம். கு—பூமி. (உ)

நிரைசெய் நீர்க்கமண் டலன்சிவ புராணமென்
றுரைசெய் மமுதமூற் றூறு நாவினன்
கரதலஞ் செபவடங் கிடந்த காட்சியன்
புரையறு சிவத்தியா னஞ்செய் புந்தியான்.

(இ-ள்) அலைகளை மோதுகின்ற தண்ணீர் நிரம்பிய கமண்டலத்தையுடையவரும், சிவபுராணமென்று சொல்லுகின்ற அமிர்தமாகிய ஊற்றுச் சுரக்கின்ற நாவையுடையவரும், திருக்கரத்திற் செபமாலை பொருந்திய தோற்றமுடையவரும், குற்றமற்ற சிவத்தியானம்புரிகின்ற கருத்துடையவரும். எ-று.

நண்ணிய மறையெலா நான்கெ னப்பகுத்
தெண்ணிய வியாதன்மா ணாக்க ரேறனான்
புண்ணியத் தவழ்முந்நூல் புரளு மார்பினன்
மண்ணுறு மபனிகர் சூத மாதவன்.



(இ-ள்) தலைதடுமாறியிருந்த வேதங்களையெல்லாம் இருக்கு யசுர் சாமம் அதர்வம்மென நான்குவகையாக்கி யளவிட்ட வியாசமுனிவரது மாணவர்களுட் சிறந்தவரும், புண்ணியவடிவமாகிய யக்ஞோபவீதம் புரண்டுகொண்டிருக்கும் மார்பினையுடையவரும், பூமியிற் பொருந்திய பிரமதேவரை நிகர்த்த மிக்க தவத்தையுடையவருமாகிய சூதமுனிவர். எ-று. (௪)

வந்தனன் வருதலக்கண் டெழுந்து மாதவர்
சிந்தைமுந் ததிர்கொளச் சென்று தாழ்ந்துதின்
றந்தமின் முகமனோ டாச னங்கொடுத்
தெந்தைநீ யிருத்தியென் றிருத்தி னாரரோ.

(இ-ள்) எழுந்தருளினார். அவ்வாறெழுந்தருளுவதை முனிவர்கள் பார்த்து இருக்கைவிட்டெழுந்து மனம் முன்பற்றிச்செல்லப் பின்னேசென்று நமஸ்கரித்து நின்று அனேக உபசாரவார்த்தைகளைச்சொல்லி ஓர் ஆசனமிட்டு எமதையனே இதில் எழுந்தருளுமென்று இருக்கச்செய்தனர். எ-று. (ரு)

அருக்கிய முதலிய திருத்தி யன்பகம்
பெருக்கிய பூசனை முடித்த பின்னவர்
திருக்கிளர் பதமிசைத் தானுஞ் சென்னிதாழ்த்
துருக்கிய மொழிசில வுவந்து கூறுவான்.

(இ-ள்) பின்பு அர்க்கிய பாத்தியாசமனாதிகள் கொடுத்து உள்ளத்தில் அன்பை விர்த்திக்கச்செய்து பூசையை முடித்தபின் இவ்வாறு வழிபட்ட அம்முனிவர்கள் பாதத்தில் தானும் சிரம் வணங்கி உருக்கமான சில வசனங்களைச் (சூதமுனிவர்) செப்புவாராயினர். எ-று.

அர்க்கியம் சிரசைக்குறித்தும், ஆசமனம் முகத்தைக்குறித்தும், பாத்தியம் பாதத்தைக்குறித்தும் நீராற்செய்யும் உபசாரம். (சு)

சந்திவந் தனைசெபந் தவந்தி யானநன்
மந்திர மறைமுதல் வலிய வேயெனா
நந்திய நிலையென நவின்று வாக்கொடு
புந்தியு மொருவழி பொருந்தக் கூறுவார்.

(இ-ள்) சந்தியாவந்தனம், செபம், தவம், தியானம், நன்மையைத்தரும் மந்திரம், வேதாத்தியயனம் முதலியயாவும் சிறப்பாய் நடந்துவருகின்றனவா என்று வினவ, அவர்கள் மேற்கூறிய யாவும் தேவரீரது அநுக்கிரகத்

தால் செப்பிதாய் நடத்துவருகின்றன என்று சொல்லி மனமும் வாக்கும் ஒற்றுமைப்பட இவ் வார்த்தை விண்ணப்பஞ்செய்வார்கள். எ-று. (௭)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மருங்கொளி பரப்புஞ் சைவ மணிச்சுடர் விளக்கே வேத
பொருங்குண ருணர்வே கேள்வி புறம்பதி னெண்பு ராணப்
பெருங்கடற் கரையே ஞானப் பிரளய வடிவே யெங்கட்
கருங்கதித் துணையே சூத முனிவருந் தவமே கேட்டி.

(இ-ள்) சைவசமயமாகிய பிரகாசத்தைப் பல இடங்களிலும் பரவச் செய்கின்ற விளக்கமான மாணிக்கதீபமே, வேதங்களையெல்லாம் நன்கு ணர்ந்த அறிவு சொரூபமானவரே, கேட்டற்குரிய பதினெண்புராணங்க ளாகிய பெரிய சமுத்திரத்திற்குக் கரையாயுள்ளவரே, சிவஞான வெள்ள மே திரண்டு ஓர் வடிவாகியவரே, அடியேங்களுடைய மோக்ஷகதிக்குத் துணையாயுள்ளவரே, அரியதவசிரேட்டராகிய சூதமுனிவரே எங்கள் விண் ணப்பத்தைத் திருவுள்ளத்திற் கொண்டருளவேண்டும். எ-று. (௮)

பண்டுநீ யெமக்கு முக்கட் பரனுறை தலங்கண் மேன்மை
விண்டுமற் றவற்றுள் யாதோ விசிட்டமென் றகத்துள் மோகங்
கொண்டுழல் கின்றே மோகக் குறையிருள் புலரச் சோதி
யுண்டுமிழ் கதிர்போ லின்னு மொருதல முரைக்க வேண்டும்.

(இ-ள்) முன்னம் தேவரீர் அடியேங்களுக்குத் திரிநேத்திரதாரியா கிய பரமசிவன் எழுந்தருளி விளங்கும் தலங்களின் மகிமையைத் திருவாய் மலர்ந்தருளியும் அவற்றுள் எது சிறந்ததோவென்று சந்தேகித் துழல்கின் றோம். ஆதலால் அவ்வஞ்ஞானாந்தகாரமானது விடியக் காந்தியைப் பரப்பு கின்ற சூரியனைப் போல்வதாகிய ஒரு தலமகிமையை இன்னும் அநுக்கிரகி க்கவேண்டும். எ-று. (௯)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்னவுஞ் சூத முனிவர னிதயத் திருந்தமி ழாப்பனூர் விம லன், றன்னையுங் குரவங் கமழ்குழ லமையாந் தாயையுந் தலைமை நினையா, நன்னறுங் கமல நயனநீ ரருவி நனைப்பமெய்ம் மயிர்ப்புள குதிப்ப, மன்னுநன் பதுமா சனத்தினி னெடும்போ திருந்துள நெ கிழ்ந்துவாய் மலர்ந்தான்.

(இ-ள்) என்று பிரார்த்தித்தலும் சூதமுனிவர் தம்மனத்தில் பெரு மை பொருந்திய ... மலர்ந்தருளிய திருவாப்புடையீசரை



யும் குரவங்கமழ்குழலம்மையையும் இவர்களருமை திருவாப்பனூரையும் நினைத்து நறுமணங் கமழுந் தாமரை மலர்போன்ற கண்களினின்றும் சொரி கின்ற ஆனந்தபாஷ்பமானது சரீரத்தை நனையும்படி செய்யவும் உரோமா ஞ்சங்கொள்ளவும் நிலைபெற்ற நல்ல பத்மாசனத்தில் நெடுநேரமிருந்து மன முருகிக் கூறினார். எ-று. (௧௦)

அந்தணிர் நீவிர் வினாயதில் வுலக வனுக்கிர சத்தினை, அனாமம், ன்று, நந்தலில் குருவாம் வியாதனைப் புகழ்ந்தை நாதனைக் குந்தி யாப் புடையை, மைந்தனைக் குரவங் கமழ்குழ லமையை வணங்கினு ன் வணங்கிச் சொல்லுவான்.

(இ-ள்) முனிவர்களே நீங்கள் கேட்டது இவ்வுலகத்தைக் காப்பாற் றும் பாசத்தாலுண்டாகும் இருவினைகளை நீக்கித் திருவருளின் மார்க்கத் தைக் காட்டுவதற்கும் எதுவாயிருக்கின்றது. ஆதலால் சொல்லுகிறேனென் ன்று அழிவற்ற தமது குருவாகிய வேதவியாச முனிவரையும் விநாயகக் கட வுளையும் முருகக்கடவுளையும் திருவாப்புடையீசரையும் குரவங்கமழ்குழலம் மையையும் வணங்கினவராய் இதனைச் சொல்வாராயினர். எ-று. (௧௧)

சாற்றிய புராணம் பேரா றுமூன்றாட் சைவத்திற் சேத்திர காண் டத், தேற்றிய வேகா தசவுருத் திரசங் கிதையினி லீறிலா வரு ளாற், றோற்றிய விடப புரியின்மான் மியத்தைச் சொற்கனை பொ ருட்கலை தோன்ற, வாற்றிய தவத்திர் சொல்லுகே னலக மறம் பொரு ளின்பம்வீ டடைய.

(இ-ள்) செய்துமுடித்த தவசிரேட்டர்களே சொல்லப்பட்ட பதினெ ண்புராணங்களுள் ஒன்றாகிய சைவபுராணத்திலே ஏகாதச ருத்திர சங்கி தையினுட் பிரிவாகிய க்ஷேத்திரகாண்டத்திலே அழிவில்லாதவராகிய சிவ பெருமானது திருவருளாலுண்டாகிய இடபபுரி நகரத்தின் பெருமையை சொன்னயம் பொருணயந் தோன்றவும், தருமார்த்த காமமோக்ஷமென்னும் புருஷார்த்தங்களையடையவும் சொல்லுகின்றேன். எ-று. (௧௨)

சூதரை வினைய காதை முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௩௰.

கலித்துறை.

இந்த மாக்கதை முன்னைநாட் கைலையி னிடத்திற்
சந்த மேவுநந்தி நாதனுக் குரைப்பவக் கதைகேட்
டெந்தை யென்குரு வியாதன்மற் றெனக்குரை செய்தா
னந்த வாறுரை செய்துநீ ரனைவருங் கேண்மின்.

(இ-ள்) பூர்வத்தில் பெருமைபொருந்திய இச்சரித்திரத்தைத் திருக் கைலாயமலையிலே முருகக்கடவுள் திருநந்திதேவருக் கனுக்கிரகிக்க, அவர் வேதவியாசமுனிவருக்குக் கூற, என் தந்தையாயும் பரமாசாரியராயுமுள்ள அவ்வியாசபகவான் அதை அடியேனுக் குபதேசித்தார். அவ்வண்ணமே நாம் சொல்லுகின்றோம். நீங்களும் சித்தசலனமின்றிக் கேளுங்கள். எ-று.

தேனி லங்குசோலை குலவிப் பயன்செறி சோலைக் கூர்மந்
தானி லம்புகு மிடமெலாந் தமிழ்மணங் கமழக்
கானி லஞ்சுதன் மதிவழி மன்னவ ரிருந்து
வானி லம்புரந் தாள்வது மதுரையந் நகரே.

(இ-ள்) மதுரசம் நிலைபெற்ற அழகிய கருப்புவில்லையுடைய மன்மதன் புத்தியிலைக்கு சார்ந்து செல்லுந் தோரிய தென்றற்காற்றுச் செல்லுமிடங்களிலெல்லாம் தமிழ்மணம் வீசம்படி, ஆகாயத்திற் பிரகாசிக்கும் குளிர்ந்த சந்திரவம்சத்தவர்களாகிய பாண்டிமன்னர்கள் வீற்றிருந்து, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகைப்பட்ட நிலங்களையுடைய உலகத்தை ஆள்வதற்குச் சிறந்த இராஜதானியாயிருப்பது மதுராபுரியாம். அந்நகரத்தில். எ-று.

தமிழ்க்க ஆள்வது எனக்கூட்டிக்கொள்க.

காற்றுலவும் இடம் முற்றும் என்பார் "மந்தானிலம் புகுமிடமெலாம்" என்றார். (உ)

முத்த ருக்கரு ளாலவாய்ச் சுந்தர மூர்த்தித்
சித்த முத்தொரு கூவிளி வெல்லையின் விடைப்
பத்தி ரிக்குமோர் யோசனை திருத்திக் ககன்று
தக்க தீர்த்தமய வடகரை யிருக்குமோர் தானம்.

(இ-ள்) ஜீவன் முத்தர்களுக்குத் திருவருள் பாலிக்கும் சோமசுந்தரப் பெருமான் எழுந்தருளி விளங்கும் திருஆலவாய்க்கு வடதிசையில் ஒரு கூப்பிடு தூரத்தாயும், இடபமலைக்குத் தென் மேற்றிசையில் காதவழி தூர



த்ததாயும், அலைகளை மோதுகின்ற நீர்நிரம்பிய வைகையாற்றின் உத்தரதீரத்தில் சிவஸ்தலம் ஒன்றிருக்கின்றது. (எ-று) (ங)

கொன்றை பாதிரி கூவிளம் பிப்பிலங் குரவங்
குன்று மேழிலம் பாலைசந் தனமகில் குருந்
தின்ற பூந்த மரம்பையா சினியொடு நெருங்கு
மன்றன் மல்லிகை முல்லைமா தவிகடி மயிலை.

(இ-ள்) கொன்றை, பாதிரி, வில்வம், அரசு, குரா, நெருங்கிய ஏழிலைப்பாலை, சந்தனம், அகில், மா, நிலைபெற்றசமுகு, வாழை, சுரப்பலாதன்றும் மரங்களோடு, வாசனைபொருந்திய மல்லிகை, முல்லை, குருக்கத்தி, இருவாட்சி என்னும் இவைகளும் நெருங்கியுள்ளன. (எ-று) (ச)

மற்று மென்னினிப் பகர்வது மாமெலா மகளா
ரற்று மென்மலர்க் குழ்கொடித் தொகையெலா மலர
பற்று நான்மலர் தவிபுகு வமரர்வைத் தருவுங்
குற்ற மில்லவல்லி சாதமென் கொடியுமே யிலாத.

(இ-ள்) வேறு தனித்தனி கூறுவதென்னை. பலவேறு வகைத்தருக்களும், அங்கிருக்கின்றன; நெருக்கமான மெல்லிய புஷ்பங்கள் நிறைந்த பலவேறு வகைக் கொடிகளெல்லாம் அங்கிருக்கின்றன. ஆனால் விருப்பமான பசிய கற்பகமுதலிய விருட்சங்களும், குற்றமில்லாத மெல்லிய வல்லிசாதமென்னுங் கொடியுமே இல்லையாம். (எ-று) (ரு)

ஓல நான்மறைப் பொருள்வெளிப் பட்டென வாகின்
மேல தாகுமத் தலத்தினில் விரிந்தசம்மா ஆனா
மூல காரண விலிங்கமென் றருளினுஞ் முனிந்தாங்
சால நீளொளி யுருவமா யங்ஙனந் தயங்கும்.

(இ-ள்) உதர்த்தமுதலிய சாங்கங்களோடுகூடிய நால்வேதங்களின் உண்மைப்பொருள் வெளிப்பட்டுத் தோன்றினாற்போல இருவுலகில் மேலானமையையுடையதாய் விளங்கும் அந்தத் திருக்கரத்தில் பிரமதேவரும் விஷ்ணுவும் மூர்த்தியும் அறியப்படாத ஆதிகாரணப்பொருளாகிய ஓர் சிவலிங்கமூர்த்தம் தன்னருளினால் தோன்றி மிக்க பேரொளிசொருபமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும். (எ-று)

அந்த லிங்கக் கொழுந்தினை [illegible]
னெய்த்த வாக்கருதி [illegible] ரோசம் (சு)

மெய்த்த வர்க்கருள் வடிவமா மன்னவிநோதன்
வித்த கத்திரு நாமமீ தலமிசைமேல் விளங்கும்.

(இ-ள்) அந்த ஒப்பற்ற சிவலிங்கப் பெருமானுக்குத் திருவாப்புடையீச ரென்றும், தரித்திரத்தால் மெலிந்தவர்களுக்குக் கிடைத்தற்கரிய திரவிய மென்றுசொல்லும் இடபுரேசரென்றும், உண்மையாகிய தவசிரேஷ்டர்களுக்குத் திருவருள்வடிவாய் விளக்கும் அன்னவிநோதரென்றும், இவ்வுலகில் மேம்பாடாகிய இத்திருநாமங்கள் விளங்கிக்கொண்டிருக்கும். (எ-று)

வையை நீடணி யாப்பனூ ரிறைவனை வணங்கப்
பொய்யி லன்புகொண் டெழுந்திருந் திறப்புறம் போந்தா
லைய மில்லையோ ரடிக்கொரு பரிமகக் கருப்பே
நெய்து மேபோய்த்தெரி சிக்கிலெண் சித்தியு மெய்தும்.

(இ-ள்) வைகைநதி சூழ்ந்த அலங்காரமான திருவாப்பனூரில் விளங்கும் சிவலிங்கப் பெருமானைத் தரிசிக்க மெய்யன்புடன் புறப்பட்டு வீட்டினின்று வெளியே வந்தால் நடக்கும் ஒவ்வோரடிக்கும் ஒவ்வோரசுவமேதயாகப்பலன் கிடைக்கும். சந்நிதானத்திற்சென்று தரிசித்தால் அஷ்டமாசித்திகளுங் கிடைக்கும். இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. (எ-று)

அஷ்டமாசித்திகளாவன— அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாம். (அ)

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அண்டர்திருவாப்பனூ ரடிகளைக்கண்டிடப்பெற்றோர்க் கினைக ணாட்சின், றொடர்ந்தபழ வினைபுதிய வினையிரண்டுங் கனல்குளிரச் சுடுந்தி வெய்யோன், மிடைந்தகடுங் கதிர்பரப்பக் கடல்சுவற நிலம்வெடிக்கும் வேனிற் காலத், தடைந்தசிறு குளநீரோ டுலர்ந்துபடுமை யறவறக்கு முண்மை மாதோ.

(இ-ள்) திருவாப்பனூரென்னுந் தலத்தையடைந்து அங்கெழுந்தருளி விளங்கும் சிவபெருமானைத் தரிசித்தவர்களுக்கு நெடுங்காலமாய் விடாமற்றொடர்ந்துவந்த சஞ்சிதவினைகளும், இச்சென்மத்தில் விட்டிய புதியவினைகளுமாகிய இவ்விரண்டும் தன்னிடத்திற் செறிந்த அக்கினியுங்குளிர்ந்ததென்று சொல்லும்படி தகிக்கின்ற வெப்பத்தையுடைய சூரியன் தன் கொடிய கிரணங்களாலீக அதனால் சமுத்திரமும் வறண்டு பூமியும் பிளக்கத்தக்க கோடைக்காலத்தில் கிடைத்த ஒரு சிறியகுளத்தின் ஜலமானது அவ்வெம்மையால் இரிக்கப்பட்டு எப்படிக்காய்ந்துபோகுமோ அதுபோலப் பற்றில்லாமல் ஒழியும். இதுசத்தியம் (எ-று) மாது ஓ! அசைகள். இரவைப் பகலெனக்கும் எனக்கூட்டிக்கொள்க. (௯)



பணியாப்ப னூரவ மணிந்தபிரான் கொன்றைவனப் பரமன் வையை, யணியாப்ப னூருடையா னவணியதனம் பட்டுவிலை யளந்து கூறிற், றணியாப்ப னூற்கலிங்க மளித்தவர்புத் திரபௌத்ர சம்பத் தோங்கிக், குணியாப்ப னூறுபொறிப் படஞ்சுமக்கும் புவியில் வளங் குலவ வாழ்வார்.

(இ-ள்) புகழ்பெற்ற ஊர்தற்றொழிலையுடைய சர்ப்பங்களை ஆபரணமாகத் தரித்தவரும், கொன்றைவனத்திலமரும் மேலானவரும், வைகைநதி சூழ்ந்த திருவாப்பனூரை யிடமாக உடையவருமாகிய அத்திருவாப்புடையீசருக்குத் தரிக்கும்படி நல்ல பட்டுவஸ்திரத்தின் கிரயத்தை இவ்வளவு என்றுகூறினால் அவர்களடையும் பிரயோசனம் சொல்லி முடியாதாயின் பலநூலால் செய்யப்பெற்ற வஸ்திரத்தைத் தரிக்கக்கொடுத்தவர்கள் புத்திரபௌத்திரசம்பத்துடன், பல நச்சுப்புள்ளிகள் பொருந்திய ஆயிரம் படமுடைய ஆதிசேடனாற் சுமக்கப்பெறும் இவ்வுலகில் பலவளங்களும் ஓங்கச்சுகமாய் வாழ்ந்திருப்பார். (எ-று) (௧0)

உயரிடப புரியீசர்க் காகநறா புதல்பதிநைந் தொருபூ வேனும், பயறுறவெண் மதிமுடிபிற் றரிப்பித்தோ ருடன்முழுதும் பாரிசாத, நயனுறுவா சந்திகழக் கயிலாயத் திருப்பர்நந்தி நகர நாதற், கியலுநறுந் தூபக்கால் கொடுத்தவரு மப்பயன்பெற் றிருப்பர் மாதோ.

(இ-ள்) மேன்மைபொருந்திய இடபுரேசருக்கு நல்ல திருநந்தனவனம்வைத்து அதினின்றும் ஒருபூவாயினும் கொய்து வெண்ணிறமுள்ள அமிர்தம் நிறைந்த சந்திரனைத்தரித்த சடாமகுடத்தையுடைய திருவாப்புடையீசரது திருமுடியிலணியச்செய்தவர்கள் தங்கள் சரீரமுழுதும் பாரிஜாதமலர்மணநகமழத் திருக்கைலாசத்திலிருப்பர். அன்றியும் அவ்விடபுரேசருக்குத் தூபக்கால் கொடுத்தவர்களும் மேற்கூறிய பயனைப்பெற்று வாழ்ந்திருப்பர். (எ-று) மாது ஓ— அசைகள். (௧௧)

பொருகிலைக்கப் புரங்கலந்த நறுந்தேய்வை குறிகுளிரப் பெய்விப் போர்மெய்ச், சுருதிசொலா யிரவாச பேயபல னடைவரொரு துளிநெய்த் தீபம், பருவரையிற் குழகனுப் புடையநா யகன்முன்னர்ப் பார்ப்போர் தங்க, ளருவினைப்பற் றொழியவா யிரங்கபிலைத் தானப்பே றடைவர் மன்றே.

(இ-ள்) அதிகவிலையுள்ள பச்சைக்கர்ப்பூரமுதலியனகலந்த நறியமணங்கமழுஞ் சந்தனக்குழம்பினால் சிவலிங்கக்குளிர அபிஷேகஞ் செய்விப்பவ

மெய்த்த வர்க்கருள் வடிவமா மன்னவி னோதன்
வித்த கத்திரு நாமமீ தவனிமேல் விளங்கும்.

(இ-ள்) அந்த ஒப்பற்ற சிவலிங்கப் பெருமானுக்குத் திருவாப்புடையீச ரென்றும், தரிசித்தால் மெலிந்தவர்களுக்குக் கிடைத்தற்கரிய இஷ்டப ரென்றும் சொல்லும் இடபபுரேசரென்றும், உண்மையாகிய தவசிரேஷ்டர் களுக்குத் திருவருள்வடிவாய் விளங்கும் அன்னவிநோதரென்றும், இவ்வுல கின் மேம்பாடாகிய இத்திருநாமங்கள் விளங்கிக்கொண்டிருக்கும். (எ-று)

வையை நீடலை யாப்பனூ ரிறைவனை வணங்கப்
பெய்யி லன்புகொள் டெழுந்திருந் திருப்புறம் போக்கா
லொரு மிவ்வியோ ரடிக்கொரு பரிமகத் தருப்பே
றைய றாம் போய்த்தெரி சிக்கிலெண் சித்தியு மெய்யும்.

(இ-ள்) வைகைசூழ்ந்த அலங்காரமான திருவாப்பனூரில் விள ங்கும் சிவலிங்கப் பெருமானைத் தரிசிக்க மெய்யன்புடன் புறப்பட்டு வீட் டிற்கு வெளியே வந்தால் நடக்கும் ஒவ்வோரடிக்கும் ஒவ்வோரசுவமேத யாகபலன் கிடைக்கும். சந்நிதானத்திற்சென்று தரிசித்தால் அஷ்டமா சித்திகளும் கிடைக்கும். இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. (எ-று)

அஷ்டமாசித்திகளாவன— அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிரா ப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாம். (அ)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அணைந்துதிரு வாப்பனூ ரடிகளைக்கண் டிடப்பெற்றோர்க் கனேக நாட்கின், றொடர்ந்தபழ வினைபுதிய வினையிரண்டுங் கனல்
குளிர்ச் சுடுந்தீ வெய்யோன், மிடைந்தகதிர் பரப்பக் கடல்
வற்றி நிலம்வெடிக்கும் வேனிற் காலத், தடைந்தசிறு குளநீரொத்
தவேர்த்தடனை யறவுறக்கு முன்னைமாதோ.

(இ-ள்) திருவாப்பனூரென்னுந் தலத்தையடைந்து அங்கெழுந்தருளி விளங்கும் சிவபெருமானைத் தரிசித்தவர்களுக்கு நெடுங்காலமாய் விடா மற்றொடர்ந்துவரும் அந்த சஞ்சிதவினைகளும், இச்சென்மத்தி லீட்டிய புதியவி னைகளுமாகிய இவ்விரண்டும் தன்னிடத்திற் செறிந்த அக்கினியுங்குளிர் ந்ததென்று சொல்லும்படி தகிக்கின்ற வெப்பத்தையுடைய சூரியன் தன் கொடிய கிரணங்களைவீச அதனால் சமுத்திரமும் வறண்டு பூமியும் பிளக்கத் தக்க கோடைக்காலத்தில் உடைந்த ஒரு சிறியகுளத்தின் ஜலமானது அவ்வெம்மையால் கிரகிக்கப்பட்டு எப்படிக்காய்ந்துபோகுமோ அதுபோ லப் பற்றில்லாமல் ஒழியும். இதுசத்தியம் (எ-று) மாது ஓ அசைகள். இர வைப் பற்றிய வறக்கும் எனக்கூட்டிக்கொள்க. (கூ)



பணியாப்ப னூரரவ மணிந்தபிரான் கொன்றைவனப் பரமன்
வையை, யணியாப்ப னூருடையா னணிபதமும் பட்டுவிலை யளந்து
கூறிற், றனியாப்ப னூரிற்கலிங்க மணிந்தவர்புத் திரபௌத்ர சம்ப
த்தோங்கிக், குணியாப்ப னூறுபொறிப் படஞ்சுமக்கும் புவியில
வாங் குலவ வாழ்வார்.

(இ-ள்) புகழ்பெற்ற ஊர்தற்கொழிலையுடைய சர்ப்பங்களை ஆபரணமா கத் தரித்தவரும், கொன்றைமலர்த்திவமரும் மேலானவரும், வையைசூ ழ்ந்த திருவாப்பனூரை யிடமாக வுடையவருமாகிய அத்திருவாப்புடையீ சருக்குத் தரிக்கும்படி நல்ல பட்டுவஸ்திரத்தின் கிரயத்தை இவ்வளவு என் றுகூறினால் அவர்களடையும் பிரயோசனம் சொல்லி முடியாதாயின் பல நூலால் செய்யப்பெற்ற வஸ்திரத்தைத் தரிக்கக்கொடுத்தவர்கள் புத்திர பௌத்திரசம்பத்துடன், பல நூறுபுள்ளிகள் பொருந்திய ஆயிரம் படமகு டங்களையுடைய ஆதிசேடனாற் சுமக்கப்பெறும் இவ்வுலகில் பலவளங்களும் ஓங்கச்சுகமாய் வாழ்ந்திருப்பார். (எ-று) (கய)

வரிடப புரியீசர்க் காகத்தா புகல்பதினைந் தொருபூ வேனும், பயத்துறவென் மதிமுடியிற் றரிப்பித்தோ ருடன்முழுதும் பாரி சாத, நயனுறவா சந்திகழுக் கயிலாயத் திருப்பார்நந் திநகர நாதற், கிபவூர்தந் தூபக்கால் கொடுத்தவரு மப்பயன்பெற் றிருப்பர் மா தோ.

(இ-ள்) மேன்மைபொருந்திய இடபபுரேசருக்கு நல்ல திருநந்தன வனம்வைத்து அதினின்றும் ஒருபூவாயினும் கொய்து வெண்ணிறமுள்ள அமிர்தம் நிறைந்த சந்திரனைத்தரித்த சடாமகுடத்தையுடைய திருவாப்பு டையீசரது திருமுடியிலணியச்செய்தவர்கள் தங்கள் சரீரமுழுதும் பாரிஜாத மலர்மணங்கமழத் திருக்கைலாசத்திலிருப்பர். அன்றியும் அவ்விடபபு ரேசருக்குத் தூபக்கால் கொடுத்தவர்களும் மேற்கூறிய பயனைப்பெற்று வாழ்ந்திருப்பர். (எ-று) மாது ஓ— அசைகள். (கக)

பெருகிலைக்கப் புரங்கலந்த நறுந்தேய்வை குறிகுளிரப் பெய் விப்போர்மெய்ச், சுருதிசொலா யிரவாச பேயபல னடைவரொரு வளிநெய்த் தீபம், பருவவைகிற் குழகனுப் புடையானா யகன்முன் னர்ப் பார்ப்போர் தங்க, ளருவினைப்பற் றொழியவா யிரங்கபிலைத் தானப்பய னடைவர் மன்னோ.

(இ-ன்) அதிகவிலையுள்ள பச்சைக்கர்ப்பூரமுதலியனவைகலந்த நறியமண முள்ள சந்தனக்குழம்பினால் லிங்கக்குளிர அபிஷேகஞ் செய்விப்பவ

ர்கள் உண்மையாகிய வேதங்களிற்கூறிய ஆயிரம் வாசபேயயாகங்களைச் செய்ததனலடையும் பிரயோசனத்தையடைவார்கள். அன்றியும் பருத்த மேருவை வில்லாகவுடைய பேரழகுவாய்ந்த அத்திருவாப்புடையீசர் சந்நிதியில் ஒரு அளிக்கைப்யையுடைய தீபம் வைத்தும் தரிசிப்பவர்கள் தங்கள் வினைப்போகமெல்லாம் நீங்க ஆயிரம் யாகங்களைத்தானஞ் செய்ததனலாகிய பலனை அடைவார்கள். (எ-று)— மன் ஓ—அசைகள்.

வாசபேயமாவது அந்தணர்கள், ௧௨ தினத்தில் ௨௩ மேடங்களாற் சிவபெருமானுக்குப் பிரீதியுண்டாகச்செய்யும் ஓர்யாகம். (௧௨)

பான்முடிமே விளநீரொன் றாட்டுவா ரயமேத பலன்கைக்
கொள்வா, ரதன்முடியா ரயிராட்டி னவனுலகி னுடனிளையாட
டயர்வா ரானத், திருமருவு மஞ்சளிறை தனக்கன்ன வபிடேக
ஞ் செய்விப் போரிக், கருமநிலத் தெவ்வெவன்கொள் காணியோ
ரு பிரமகற்பங் கைலை பாமால்.

(இ-ள்) மேன்மையான திருவாப்புடையீசர் திருமுடியில் ஒரு இளநீர் அபிஷேகஞ் செய்வார்களாயின் நாலு அசுவ மேதயாகபலனை யடைவார்கள் அக்கடவுள் திருமுடியில் பால் தயிர் என்னும் இவைகளை அபிஷேகஞ்செய்தால் அச்சிவனுலகில் அவருடன் திருவிளையாடல் செய்துகொண்டிருப்பர். ஞானசொரூபராகிய சிறந்த அவ்வன்ன விநோதமூர்த்திக்கு இவ்வுலகின்கண் அன்னாபிஷேகஞ் செய்விப்பவர் யாவரோ அவர் பிரம கற்பகாலம் வரையில் கைலாயத்தை யிடமாகக்கொண்டு வாழ்வார். (எ-று) ஆல்— அசை. (௧௩)

கருப்பஞ்சா றன்னவிநோ தனுக்காட்டி னவனுலகங் கதிபிற்
சேர்வன், விருப்பஞ்சா முதமாட்டி விசித்திரபோ னகமுதிவே
திக்தார் கோயில், விருப்பஞ்சார் பணிபுரக்கி னேர்பலத்தைச்
சன்னுமுனி விளக்கும் வேள்வி, செருப்பஞ்சா றணிகடவுளாதிக்
அரைப்ப னலதெவரே யிதற்குத் தபாவார்.

(இ-ள்) அன்னவிநோத நாதனைக் கருப்பஞ்சாற்றா லபிஷேகித்தவர்கள் சாயுச்சியபதவியையடைவார். செவ்வியபஞ்சாமிர்தத்தால் அபிஷேகித்துச சித்திரான்னஞ்செய்து நைவேத்தியஞ் செய்தவரும், அன்புடன் ஆலயத்தில் ஜீர்ணோத்தாரணஞ் செய்தல் முதலிய திருப்பணிகளைச் செய்தவரும் ஆகியஇவ்விருவர் பலனைச் சன்னுமுனிவர்செய்த யாகாக்கினியும் அஞ்சத்த



க்க கங்கையைத்தரித்த சிவபெருமான் தெரிந்து சொல்ல வல்லவரன்றி வேறு யார் சொல்லவல்லவர். (எ-று) எவரே என்பதன் ஏகாரம் இல்லை யென்னும்பொருட்டு. (௧௪)

இப்பொழுதின் னமுரைத்த பணிபியற்றற் கேலாவிலா ரெனி
னுஞ் சார்ந்து, முப்பொழுதி னொருபொழுதா யினுமாப்ப னூர
டைய முதலேபாகர், செப்பெழுது முலையுமையைச் சூழ்ந்துபணி
ந் தன்றருகித் தெரிசிப் பாரே, லப்பொழுதின் வினைநீக்கி யழியா
த பதமளிப்ப னருளின் மூர்த்தி.

(இ-ள்) இப்பொழுது கூறிய திருப்பணிகளை யிவ்வாறு புரிய முடியாதவர்களாயினும், திருவாப்புடையாரையும், அவரது வாமபாகத்தில் வீற்றிருக்கும் சிமிழ்போலும் ஸ்தனங்களையுடைய குரவங்கமழ் குழலம்மையாரையு ...ன்றுகாலங்களில் ஒருகாலமாயினும் அடைந்து வலம்வந்து வணங்கி ...ருக்கத்துடன் தெரிசனஞ் செய்வார்களானல் கிருபாநிதியாகிய அக் ...வுள் அந்தக்ஷணத்திலேயே எல்லாவினைகளையும் நீக்கி என்றும் அழியா மோக்ஷத்தைக்கொடுத்தருளுவார். (எ-று) (௧௫)

கலி நிலைத்துறை.

பரக்க வென்பல பகர்வது பத்தியோ டமைந்து
புரக்கு மாப்புடை நாதனுக் கீந்ததைப் பொருடா
னருப்ப மென்னினு மனந்தமாக் கொண்டரும் பவங்கள்
முருக்கி யிம்மையும் புரந்துபின் தரும்பர முத்தி.

(இ-ள்) பலவாக இன்னும் விரித்துச் சொல்லவேண்டியது யாது. ...வ்வுயிரையும் காக்கும் அத்திருவாப்புடையீசருக்கு மனத்திலன்புகூர்ந்து ...கொடுத்தபொருள் அற்பமாயிருந்தாலும் அதை அளவில்லாததாக ஏற்றுக் ...காண்டு அரியபாவங்களைப்போக்கி இச்சென்மத்திலும் காப்பாற்றி மறு ...மையிலும் மேலான மோக்ஷத்தைக்கொடுப்பார். (எ-று) (௧௬)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வரைகளிற் சுடர்சூழ் வரைசுர பிகளின் வானிலா னுடுக்களின்
...யங், கரையில வொளியிற் பருதிகா தலிற் கரும்புயல் பறவை
... கருழன், றரைவிலங் கினத்தின் மடங்கலார் திதிற்குஞ் சரமி
... காவிழு துயர்ந்தோர், புரையினற் காவிற் பசுவியக் கரிநூர்
புட்பகம் புருடரிற் றிருமால்.

(இ-ள்) மலைகளுக்குள் சந்திர சூரியர்கள் வலம்வரும் மேருமலைப்போலவும், பசுக்களுள் தேவருலகத்துள்ள காமதேனுவைப்போலவும், நக்ஷத்திரங்களுள் சந்திரனைப்போலவும், எண்ணிறந்த பிரகாசமுள்ள பொருள்களுள் சூரியனைப்போலவும், கொடையாளிகளுள் மேகத்தைப்போலவும், பக்ஷிகளுள் கருடனைப்போலவும், பூமியிலுள்ள மிருகங்களுள் சிங்கத்தைப்போலவும், வாகனங்களுள் யானையைப்போலவும், மனிதர்களுள் அரசனைப்போலவும், குற்றமில்லாத நான்கு காலுள்ளவைகளுள் பசுவைப்போலவும், இயக்கர்களுள் புஷ்பகவிமானத்திலூர்ந்து செல்லும் குபேரனைப்போலவும், புருடர்களுள் விஷ்ணுவைப்போலவும். (எ-று) (௧௭)

மாதரிற் கௌரி மனுவினிற் பிரண வம்பெனா மரத்தினா சுவத்தம், யாதவர் குலத்திற் கண்ணனா மற்றின்ன வெவ்வகை யதிகாரவகைபோற், றாதவிழ் கழி வனத்தினாப் புடைய சயம்புவெனு லிங்கவாதிக, மாதலின் வழிபட் டவர்பிற பதிபு வருத்தனைப் பலனெலா மடைவார்.

(இ-ள்) பெண்களுள் கௌரியைப்போலவும், மந்திரங்களுள் பிரணவத்தைப்போலவும், இலைகளையுடையமரங்களுள் அரசமரத்தைப்போலவும், யாதுகுலத்தவருட் கிருட்டிணனைப்போலவும், இவ்வாறு மற்றவைகளில் எவ்வைகள் அதிகமோ அவைபோல மகரந்தப்பொடிகளையுடைய மலர்கள் விரிந்தகொன்றைவனத்தில் வசிக்கின்ற திருவாப்புடையாரென்னும் சுயம்புலிங்கமூர்த்தியே மற்றைத்தலங்களிலுள்ள சுயம்புமூர்த்திகளுள் விசேஷமாகும். ஆதலின் இம்மூர்த்தியை வணங்கினவர்கள் மற்றைத்தலங்களின் மூர்த்திகளுக்குச்செய்கின்ற அருச்சனைகளால் வரும் பிரயோசனங்களையெல்லாம் அடைவார். (எ-று) (௧௮)

ஆப்புடை யமலன் மகிமையை யனந்தற் கனந்தம்வாய் படைபினு நவிற்ற, காப்புடை பெயரா வெனிலொரு வாயா னவிற்றல், கொண்ணுமோ தவத்தின், மூப்புடை யறத்தி ரென்றனன் கேட்ட முனிவரர் குழங்களிற் சிறுகட், டூப்புடை யருவி பெருகவா னந்த புணரியங் கடலிடைப் புக்கார்.

(இ-ள்) தவத்தால் முதிர்ச்சிபெற்ற முனிவர்களே மகாகிதராகிய அத்திருவாப்புடையீசரது மேன்மையை ஆதிசேடன் தனக்குள்ள ஆயிரம் வாய்களோடு இன்னும் பலவாய்களையுடையவனாகியும் சொல்லுதற்கு அருமையாகும் என்றால், என்று ஒரு வாயாற்சொல்லக்கூடுமோ? என்று சூத



முனிவர்கூறினர். அதைக்கேட்ட நைமிசாரணியவாசிகள் மனமகிழ்ந்து இரண்டுகண்களிலும் அரும்புகின்ற ஆனந்த பரவசமாய்நிரம்பிய ஆனந்தசாகரத்தில் மூழ்கினார்கள். (எ-று) (௧௯)

பின்னரு முனிவர் செவிச்சுவை நிரப்பும் பெருங்கதைச் சூதனை நோக்கி, முன்னராப் புடையா னிடபபு ரேசன் முதலனைநாமங் கொண்டவை மூன்று மெய்திய ததனை, பின்னரி விரிந்த முறையினாற் கூறென் றிறைஞ்ச அருச்சனை செய்வா மெனவுஞ் சிவபெருமான்.

(இ-ள்) மீண்டும் அந்நைமிசாரணியவாசிகள் செவிகளுக்கின்பத்தை நிறையச்செய்யும் பெரிய சிவபுராணங்களை யுபதேசிக்கின்ற சூதமுனிவரைப்பார்த்து ஐய! முன்னரே திருவாப்புடையாரென்றும், இடபபுரேசரென்றும் அன்னவிநோதரென்றும் அவருடைய திருநாமங்களை யருளிச்செய்தீர். அம்மூன்று பெயர்களும் எவ்வாறுவந்தன? அவ்வரலாற்றை இன்னமும் நீவிர் விரிவாக முறைப்படி உரைத்தருளவேண்டுமென்று கூறிவணங்கவும் சூதமுனிவர்மொழிவாராயினர். (எ-று) (௨௦)

மூர்த்திமகிமை முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௨௰.

# ஆப்பனூர்ச் சருக்கம்.

## கலி நிலைத்துறை

அனைத்து மோதிய புராணநூற் பொருள்முழு தாய்ந்தாய்ந்
தெனைத்து மோர்ந்துயர் சிவகதை முழுதறி யெனக்கு
நினைத்த போதெலா மற்புதங் கருங்கதை நியமந்
தனைத்த டாதுநீர் சாற்றுவன் கேண்மெனச் சமைந்தான்.

(இ-ள்) நித்திய கர்மானுஷ்டான நியமங்களைத் தவறாது கொண்டுள்ள முனிவர்களே! சகலபுராணங்களும் கூறியபொருள் முழுவதையும் ஆராய்ந்து யாவற்றையுமறிந்து உயர்ச்சிபெற்றசிவசரித்திரங்களை முற்றுமுணர்ந்த அடியேனுக்கும் நினைக்குந்தோறும் ஆச்சரியத்தை விளைக்கும் திவ்விய சரித்திரமொன்றுளது. அதைக்கேட்பீர்களாக என்று சொல்லத்தொடங்கினார். (எ-று) (௧)

வாம மீனவன் மதிக்குல மடந்தையை மணந்து
தாம வண்மலர் முடிகவித் திருந்தரசு சடைமேற்

சோம நாயகன் சுந்தர நாயகன் சுருதி
நாம நாயகன் புரந்தது மதுரைமா நகரம்.

(இ-ள்) சிவந்த சடைமுடியின்மீது சந்திரனைத்தரித்தவரும், கட்டழகினையுடையவரும், வேதங்களினாலே புகழப்படுகின்ற திருநாமங்களையுடைய தலைவருமாகிய சிவபிரான், அழகிய சந்திரகுலத்திற்றோன்றிய மலையத்துவச பாண்டியனது புத்திரியாராகிய தடாதகைப் பிராட்டியாரைத் திருமணஞ்செய்துகொண்டு புதியமலர்களாற் றொடுக்கப்பட்ட மாலையையணிந்த கிரீடத்தைப்புனைந்துகொண்டு அமர்ந்து செங்கோல் செலுத்திய பெரிய இராஜதானியாயுள்ளது மதுராபுரியாம். (எ-று)

நாயகன், மணந்து, இருந்து, புரந்தது மதுரை என இயையும். (௨)

உடுத்த நீரகழ் புரிசைகோ புரநிலை யுயர்வா
னடுத்த சூளிகை மாளிகை யுபரிகை யரங்கந்
தொடுத்த சாளரம் பித்திகை மண்டபந் தொகைகள்
டெடுத்த வானவர் தச்சனு மிசைப்பரி தின்னும்.

(இ-ள்) நீர்நிறைந்த அகழிசூழ்ந்த மதில்கள், நிலைகளையுடைய கோபுரங்கள், ஆகாயத்தையளாவிய சூளிகைகள், மாளிகைகள், உபரிகைகள், சபைகள், பல்கணிகள், சுவர்கள், மண்டபங்கள் ஆகியஇவற்றின் அளவைகளை யாராய்ந்தறிந்த தேவதச்சனாலும் சொல்லற்கரிய சிறப்பினையுடையது. இஃதன்றியும். (எ-று) (௩)

சால நீள்சுடர் மணிகளிற் றனித்தனி சமைத்த
கோல மாளிகை மீச்செலு மீச்செலுஞ் சூளைத்தா
னீல மாய்ச்சிலர் செம்மையாய் வெண்மையாய் நிறம்பொன்
போல வாயுருத் திரிந்திடும் பகலவன் புரவி.

(இ-ள்) மிகவும் ஒளிவீசுகின்ற நீலம், மாணிக்கம், வைரம், கோமேதகம் முதலிய இரத்தினங்கள் பதித்திருக்கும் அழகிய மாளிகைகளின் மேல் அவ்வவற்றின் மீதும் செல்லுந்தன்மையால் சூரியனிரதத்திற் பூட்டிய குதிரைகள் நீலநிறமுடையனவாயும், செந்நிறமுடையனவாயும், வெண்ணிறமுடையனவாயும், பொன்னிறமுடையனவாயும் தம்முடைய நிறங்கள் வேறுபடும். (எ-று) (௪)

பருமணிச்சுடர் மேனிலை வதிந்துறைந் தொடியார்
கருமு கிற்குழற் கூட்டின வகிற்புகை கமழ்ந்



சுரந திப்புனல் குடைபவர் கூந்தலோ நுகிலு
மருமலர்த்திரு மேனியுங் கமழுமவ் வாசம்.

(இ-ள்) பருத்த இரத்தினங்களின் பிரகாசம்பொருந்திய மேல்வீடுகளிலிருந்துகொண்டு பசியவளையல்களைத்தரித்த பெண்கள் தங்களுடைய கரியமேகம்போன்ற கூந்தல்களுக்கு ஏற்றும் அகிற்புகைபடிந்த தேவகங்கையிலே மூழ்கும் அத்தேவமங்கையர் கூந்தல்மட்டுமோ, வஸ்திரங்களும், வாசனைபொருந்திய மலர்போலும் அழகிய சரீரமும் அவ்வகிற்புகையின் மணம் பரிமளிக்கும். (எ-று) (௫)

பழுதில் வெற்பெனப் பணைத்தெழு முலைகொண்கர் பருங்கை
மெழுகெ னக்குழை யுறப்புணர் மின்னனா ரிமையா
தெழுது சித்திர மனைவயி னொளித்திடி னிளைஞர்
முழுது மெய்ப்பட நோக்கினு மறிந்திட முடியா.

(இ-ள்) குற்றமில்லாத மலைகளைப்போலப்பருத்து எழுந்த ஸ்தனங்கள் தம்முடைய கணவர்களுடைய விசாலமாகியகைகளால் மெழுகைப்போற் குழையும்படி கலக்கின்ற மின்போலும் மங்கையர் கண்ணிமையாதபடி எழுதப்பட்டுள்ள சித்திரங்களையுடைய வீடுகளில் ஒளித்துக்கொள்வரேல் அவர்களுடைய நாயகர்கள் முற்றும் உள்ளபடியே தேடினாலும் கண்டுபிடிக்க முடியாவாம். (எ-று) (௬)

அனைய தாவளை போதிகை யன்னதுக் கிரமே
வினைய பொற்றலா மெனவிதக் துரைப்பவ ரெவரே
கனைக டற்படி கதிர்க்குழம் மனைகளிற் கைசெய்
வினைமி கத்திகழ் விழிபொளி மணியொளி விழுங்க.

(இ-ள்) அவைஅணைகளென்றும் அவைபோதிகைகளென்றும் அவை உத்திரங்களென்றும், மேல்வைத்திருக்கும் இவைகள் அழகிய துலாக்கட்டையென்றும் தனித்தனி விகந்து சொல்பவர் ஒருவருமில்லை. ஏனெனில் கண்ணொளியை அவ்வீடுகளில் பதித்திருக்கின்ற இரத்தின ஒளியானது கீழ்ப்படுத்துவதால், அவ்வீட்டிற் செய்திருக்கும் விசித்திரவேலைகளை ஒலிக்கின்றகடலில் உதயமாகும் சூரியனுக்கும் விளக்குதல் முடியாதனவாம். (எ-று) எவரே, என்பதன் ஏகாரம் இல்லையென்னும் பொருட்டு. (௭)

மிகிழ்வி னொல்லெலைத் தேயமாக் கருங்கொள வரிதும்
புகலு மோசிற விலைபொருள் முதலபொன் கோடி

தரும் விலைப்பொரு ளாயினுங் கொளக்கொளக் குறையா
மிகவ ளம்பழுத் தமிழ்வன வாவண வீதி.

(இ-ள்) மனமகிழ்ச்சியுடனே எவ்வெத்தேசத்து மனிதர்களும் எந்த வஸ்துக்களை வாங்க வந்தாலும் அற்பவிலையுள்ளனவாகச் சொல்லப்பட்ட வஸ்துக்கள்முதல் கோடிபொன் விலையாகப்பெறும் வஸ்துக்களாயினும் வாங்கவாங்கக்குறையாமல் மிகவும் கொழித்துக்கொண்டிருக்கும் பெருமையையுடையது அக்கடைவீதி. (எ-று) (௮)

கோதி லாதசெஞ் சூட்டுடை வாரணங் கூவ
வோத ஞாலத்து மற்றைய தலத்துளார் விழிப்ப
ஈத லேற்றலோ டறுதொழி லிருபிறப் பாளர்
வேத நாதத்தின் விழிப்பதவ் வியனகர் மாக்கள்.

(இ-ள்) குற்றமற்ற செவ்விய உச்சிக்கொண்டையையுடைய கோழி கூவாநிற்க, அதனால் சமுத்திரஞ்சூழ்ந்த இப்பூமியில் மற்றைய இடங்களிலுள்ளவர்கள் கண்விழிப்பார். இம்மதுராபுரியிலுள்ளவர்களோ எனின். கொடுத்தல் வாங்குதல் முதலிய ஆறுதொழில்களையுடைய பிராமணர்கள் அத்தியயனஞ்செய்யும் வேதஒலியைக்கேட்டு நித்திரை தெளிவார். (எ-று)

பிராமணர் அறுதொழிலாவன,— வேதமோதல், வேதமோதுவித்தல், யாகஞ்செய்தல், யாகஞ்செய்வித்தல், தானங்கொடுத்தல், தானம்வாங்கல் என்பனவாம். (௯)

வேத பாரகர் வேந்தர்க ளூருவர் வினைஞ
ராதி யாயபல் வருணருட் சமயிக ளளவில்
பூத நாயகன் கணத்தவர் புனர்மது ரேசன
பாத சேவையர் சீவன்முத் தரிற்பயில் பதியால்.

(இ-ள்) வேதங்களைக் கரைகண்டபிராமணர்களும், க்ஷத்திரியர்களும், வைசியர்களும், வேளாளர்களும் முதலாகிய பலவருணத்தார்களும், உட்சமயிகளானவர்களும், அளவில்லாத பூதகணக்கட்குத்தலைவரும், மீனாக்ஷியம்மையோடுகூடிய மதுராபுரித்தலைவருமாகிய சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளைச் சேவிப்பவர்களும், ஆகிய அனைவரும், ஜீவன்முத்தர்களைப்போலச் சஞ்சரிக்கும் பெருமையையுடையது அம்மதுராபுரி. (எ-று)
ஆல் அசை. (௧௦)



அந்த கர்க்கிறை யரும்புகார் நகர்க்கிறை யாதி
யெந்த கர்க்கிறை யேனும்வந் திணையடி யிறைஞ்சப்
பொன்ன கர்க்கிறை மணிமுடி தகர்த்தநீள் புயத்திற்
பன்ன கர்க்கிறை பரித்தபார் முழுவதும் பரிப்போன்.

(இ-ள்) இத்தனைப் பெருஞ்சிறப்பினதாகிய அம்மதுராபுரிக்கு அரசன் யாரெனின், அரிய காவிரிப்பூம் பட்டினத்திற் கரசனாகிய சோழன் முதலிய எத்தேசத்தரசர்களும் வந்து இரண்டுபாதங்களிலும் வணங்க, தேவலோகத்திற்கரசனாகிய இந்திரனது கிரீடத்தைச் சிதறும்படி செய்து, நாகலோகாதிபதியாகிய ஆதிசேஷன் சுமக்கும் இப்பூபாரத்தைத்தனது நீண்ட தோளில் தாங்குபவன். (எ-று)

இறை இறைஞ்சப் பரிப்போன் என இயையும். (௧௧)

மொழிந்த நற்கலை முழுநிறை முறைமையி னமுதம்
வழிந்த பார்வையிற் குவலய முவகைகூர் வகையிற்
கழிந்த திக்குறும் பகையிரு டுணிக்கும்வாட் கரத்திற்
பொழிந்த தன்புகழ்க் குலமுதற் றலைவனைப் போல்வான்.

(இ-ள்) எங்கும் பரம்பிய கீர்த்தியையுடைய தமது குல முதற்றலைவனாகிய சந்திரன், யாவராலும் புகழ்ந்து சொல்லப்பட்ட நல்ல கலைமுழுதும் அடைந்திருத்தல்போலத், தாமும் கலைகள்முழுமையும் அறிந்திருக்குந் தன்மையினாலும், அவன் அமுதப்பெருக்கோடிருத்தல்போலத் தாமும் அமுதப்பெருக்கோடுகூடிய பார்வையையுடைமையாலும், அவன் குவலயங்கள் சந்தோஷிக்கச்செய்தல்போலத் தாமும் உலகத்திலுள்ள உயிர்கள் சந்தோஷிக்கும்படி செய்யுந் தன்மையினாலும், அவன் திக்காந்தத்திலுள்ள பகையிருளையும் அழிக்கும்ஒளிபெற்ற கிரணங்களைப்பெற்றிருத்தல்போலத் தாமும் திக்காந்தத்திலுள்ள பகைவர்களாகிய இருளை அழிக்கும் வாளையேந்திய கையையுடைமையாலும், அச்சந்திரனையே ஒப்பான். (எ-று)

கலைகள் சந்திரனுக்குப் பதினாறும், பாண்டியனுக்கு அறுபத்துநான்குமாகவும், முறையேகொள்க.

குவலயம் - குவளையும் இவ்வுலகமுமாக முறையேகொள்க. (௧௨)

அளவில் பாற்கடற் றன்குல மதிமுளைத் தாங்குத்
தளர்வி றீஞ்சுவைத் தமிழ்க்கடன் முளைத்ததன் மதியோன்
கிளர்செ ழுந்திசை விளக்குதண் சுடர்க்குநாட் கெழுமி
வளர்வு றீஇயவுமைத் துறப்புணர்த் திடப்புகழ் வளர்த்தோன்.

(இ-ள்) அளவுபடாத பாற்கடலிலே தன் குலமுதல்வனாகிய சந்திரன் உதித்தாற்போலக், குறைதலில்லாத இனிய மதுரம்பெற்ற தமிழென்னுங் கடலிலேயுதித்த குளிர்ந்த சந்திரனாகியுள்ளவன், விளங்குகின்ற நெடிய திக்குகளை விளக்குகின்ற அச்சந்திரனுக்குச் சுக்கிலபக்ஷத்திதிகளின் கலப்பால் வளர்தலும், கிருஷ்ணபக்ஷத்திதிகளின் கலப்பால் தேய்தலும், அச்சந்திரனுடைய வலிய உறுப்பு விளக்கத் தன்புகழ் அவ்வாறு வளர்தலுந் தேய்தலுமில்லாதிருக்கும்படி வளரச்செய்தவன். (எ-று) (௧௫)

கடைத விர்ந்தற முதற்றிரி வருக்கமுங் கலப்பத்
தடையில் சாமமு மைந்தனர் வருக்கமுஞ் சார்ந்தோ
னுடைய தாள்நமர் பகைஞர்வன் கள்வரூர் விலங்கா
லடையு மைம்பய வருக்கமுந் துடைத்தர சாள்வோன்.

(இ-ள்) மனிதர்களா லடைதற் பாலனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னு நான்கனுள், நான்காவதாகிய வீடு ஒன்றுதவிர, மற்றையு அறமுதலிய மூன்றும்பொருந்தத், தடையில்லாத சாம பேத தான தண்டமாகிய சதுர்விதவுபாயங்களையு முடையவன். எப்பொருள்களையுமுடையதன்னாலும், சுற்றத்தாலும், சத்துருக்களாலும், திருடர்களாலும், மிருகங்களாலும் உண்டாகும் ஐந்துவகையான பயங்களையு நீக்கி அரசுபுரிபவன். (எ-று)
தவிர என்பது - தவிர்ந்து எனத்திரிந்து நின்றது. (௧௬)

திறம்பு காமமுன் னுமறு பகைவர்க்கந் தீர்ந்தோ
னறம்ப டைகுடி கூழமைச் சுநட்பர ணுடனே
பெருந்த வாமிய மென்னுமேழ் வருக்கமும் பிறங்க
வுறங்கி டாதுசெ ன்னேமியோன் றுருட்டிமண் புரப்போன்.

(இ-ள்) மாறுபட்ட காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியமென்னும் ஆறுகுற்றங்களினின்று நீங்கினவன். மிக்க படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறு இயல்புகளோடும், பெற்றுள்ள தலைமையாந் தன்மையுமாகிய எழுவகைகளும் விளங்கச், சோர்வில்லாமற்செல்லத்தக்க ஆஞ்ஞாசக்கரத்தை எங்குஞ் செலுத்திக் குடிகளை யிரக்ஷிப்பவன். (எ-று)
சுவாமியம் - தலைமைத்தன்மை. (௧௭)

இரத ஞாயிறெங் கெழினுமீ றுயிர்க்குறு மேனும்
வரத பூரண சச்சிதா னந்தசின் மயமாஞ்
சரத நீள்குறிச் சயம்புநற் றெரிசனந் தவிரா
விரத சீலனென் றெவ்வுல கும்புகழ் மேலோன்.



(இ-ள்) இரதத்திற் சஞ்சரிக்கும் சூரியன் எத்திக்கிலுதிப்பினும், தன்னுயிருக்காபத்துவரினும், வரத்தைத் தருவதாயும், பரிபூரணமாயும், சத்துச்சித் தானந்த சின்மயமாயும் உள்ள உண்மைமிக்க சுயம்புலிங்கதெரிசனஞ் செய்தலில் தவறுதலில்லாத விரதவொழுக்கம் உடையவன் என்று எவ்வுலகத்தாரும் துதிக்கும் பெருந்தன்மையை யுடையவன். (எ-று)
சயம்புக்குறி என மாற்றுக. (௧௮)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தேனேர் தியமல ராள்தாந் தனைநிகர் சீர்வாய்ந் தவனெதிர்
பொருநேரா ருனேந் தியவடி வேலேந் தவின்மயி லூர்சேந் தனில்
வரு முயர்கோமான், மீனேந் தியகொடி யால்வேந் தரினிவன் வேள்
வேந் தெனவெழி லுடையோனீள், வானோந் திசைதிகழ் சோழாந்
தகனென வாழ்பாண் டியன்முன முளனேர்நாள்.

(இ-ள்) தேனைக்கொண்ட செந்தாமரைமலரில் அமரும் இலக்குமி நாயகராகிய திருமாலுக்குச் சமமான சிறப்புடையவன். எதிர்த்துப்போர் புரியும் சத்துருக்களுடைய நிணமுறைந்த கூரிய வேலாயுதத்தைத் தாங்குதலாயுங் மயில்வாகனத்திலாரோகணித்துச் செல்லும் முருகக்கடவுள் போலும் உயர்ந்த தலைவன். மீனக்கொடியைத் தரித்திருப்பதால் அரசர்களுள் இவன் மன்மதன் என்று சொல்லத்தக்க அழகையுடையவன். தேவலோகத்திலும் பரவிய புகழ்விளங்குகின்ற சோழாந்தகன் என்னும் அபிதானமுடையவனாகிய ஓர்பாண்டியன் இருந்தான். அவன் ஒருதினத்தில், (எ-று) (௧௯)

மருவேட் டம்புயன் மதியாற் கண்டன வகைகாட் டுங்கவி
னிறைதேருந், தருவேட் டங்கையின் மிசைநீட் டுங்கரி தருகோட்
டும்பலும் வயமாவு, முருவேட் டங்கச னுழல்வாட் செங்கைய ருவே
யாச் சங்கமு முடன்மேவத், திருவேட் டஞ்செயும் வினைவேட்
டிந்திர திசைமேற் சென்றனன் விரைவாயால்.

(இ-ள்) வாசனைபொருந்திய தாமரை மலரில்வீற்றிருக்கும் பிரமதேவர் தமது புத்திநுட்பத்தாற்செய்ததைப்போலப் பார்ப்பவர்களுக்குத்தோற்றும் அழகு செறிந்த தேர்களும், (தேவலோகத்துள்ள) கற்பகத்தளிரை விரும்பி அழகிய துதிக்கையை ஆகாயத்தில் உயர்த்தும் களிப்பைக்கொண்ட கொம்புகளையுடைய யானைகளும், வெற்றிபெற்ற குதிரைகளும், உருவத்தினழகை விரும்பி மன்மதனும் பின்திரிகின்ற வாளையேந்திய செவ்விய கைகளையுடைய காலாட்களது கெடாத கூட்டமும், ஆகிய நால்வகைச் சேனைகளுஞ்

சூழ்ந்துவரச் சிறந்த வேட்டையாடுந் தொழிலை விரும்பிக் கீழ்த்திசையை நோக்கித் துரிதமாய் நடந்தனன். (எ-று) ஆல்- அசை. (௧௮)

கண்குடை சோதிபு மிழ்ந்தொளி நீண்முடி கண்டவ ராதவ னென்றோத, வெண்குடை யேமதி தண்கதிர் சாமரை விண்டிடி வேரென வெஞ்சேனை, மண்குடை நாளிக ருங்கடன் மேடுற வந்திகர் மாகதர் கொண்டாடப், பண்குடை யாவரி வண்டுகள் பாடுது ழைபைந்தொடை மார்பன டந்தானால்.

(இ-ள்) கண்களையும் குடையும் வண்ணம் கிரணக்கற்றைகளை வீசிப் பிரகாசிக்கின்ற பெரிய கிரீடத்தைப் பார்ப்பவர்கள் சூரியனேயென்று சொல்லவும், சொல்லுமிடத்து வெண்குடை சந்திரனை யொப்பதாம், சாமரைகள் குளிர்ந்த கிரணங்களை யொப்பனவாம் என்று கூறவும், வெவ்விய சைனியங்கள் பூமியிலேநடப்பதால்எழுகின்ற புழுதிகளால் கரிய சமுத்திரம் மேடாகவும், மங்கலப்பாடகரும், சங்கீத வித்துவான்களும் புகழ்ந்துபாடவும், வரிகளையுடையவண்டுகள் குடைந்து இசைபாடத்தக்க மலர்களாற் றொடுக்கப்பட்ட பசிய மாலையைத்தரித்த மார்பினனாகிய அச்சோழாந்தகன் சென்றனன். (எ-று) ஆல் - அசை.

கண்டவர்கள் ஓதவும், என்னவும், கூறவும், கொண்டாடவும் நடந்தான் என இயையும். (௧௯)

வானு றழ்கயல் போன்மீ னுறுகொடி வார்சே னைதர வடல்வீரர், சேனை பதிமுத லானோர் குழுவொடு சேரா வுழையமை யழையாவன், கானுடு நெறிமு னேவி ரெனமலர் கான்மே லணிதரு கழலோய்முன், போனா ரெனவும்வெள் வேன்மீ னவனெறி போதா வனமெதிர் புகும்வேலை.

(இ-ள்) ஆகாயகங்கையிற் சஞ்சரிக்கின்ற மச்சங்களைப்போல், மீனக்கொடிகள் நீண்ட ஆகாயத்தில் அசைய, வலிமையையுடைய வீரர்கள், சேனாதிபதிகள் முதலாயினவர் கூட்டங்களுடனேசென்று, தூதர்களை யழைத்து, வலியகாட்டில் மிருகங்கள் சஞ்சரிக்குமிடங்களைப் பார்த்து வந்துரைக்கும் வேட்டைக்காரர்களை முன்னே பார்த்துவர அனுப்பும் என்று அரசன்கழற, வீரக்கழலைத்தரித்த மலர்போலுங் கால்களையுடைய கொற்றவனே அவ்வேட்டைக்காரர்கள் முன்னமே சென்றார்களென்று மொழியவும், வெள்ளிய வேற்படையையுடைய அவ்வழுதி வழியேசென்று காட்டிற்கு நேரே செல்லும் பொழுதில், (எ-று) (௨௦)



தொடுதோ லுயில்புரி யிருகான் மறவர்கள் சுருள்வான் மடிசெவி நெடுநாய்க ளொடுவார் வலையொடு படர்பார் வையினொடு முழன்மான் மரைகலை வனமேதி, கடுவா யுழுவைபன் முயல்சூ கரமொடு களிறூ டுளியமின் னவைசூழப், படுகா னிடையோடி யெறியா வலைகொடு வளையா வுடனெதிர் பலர்மீளா.

(இ-ள்) பாதரட்சைதங்கிய இரண்டுகால்களையுடைய வேடர்கள், சுருண்டவாலையும், தொங்குகின்ற காதுகளையுமுடைய வேட்டைநாய்களோடும், நீண்டவலையோடும், பரவியபார்வை மிருகங்களோடும், சஞ்சரிக்கின்றமான், மரை, ஆண்மான், காட்டெருமை, கடுவாயென்னும் ஓர்வகைப்புலி, புலி, பலமுயல், பன்றி, யானை, கரடி என்னுமிவைகள் சூழப்பட்டுள்ள, காடுகளை வெட்டி, வலைகளைக்கொண்டு நாற்பக்கமுங்கட்டி உடனே வேடர்கள்பலரும் அக்காட்டினின்றும் திரும்பி யெதிரே வந்து. (எ-று)

பார்வை மிருகமாவன, மிருகங்களைப்பிடிப்பதற்கு அவற்றைப்போல வஞ்சனையாகச் செய்தனவும், அவ்வவ்வினங்களிலே சுவாதீனப்படுத்திக் கைக்கொண்டனவு மாம்.

மறவர்கள் பலர், நாய்களொடும், வலையொடும், பார்வையோடும்—மீளா என இயையும். (௨௧)

அரையன்முன் வந்தடி தொழுதுவி லங்கின மளவில விங்குள வலைவாரால், விரையவ ளைந்தன மெனவுரை தந்தனர் விருதர்க ளம்புடை புடைசூழ, வரைபுரை பஞ்சவன் வரிசிலை செங்கையில் வளையந டந்துழை வருவோரைக், கரையில்ப யங்கொடு விருகம்வெ ருண்டெழல் கருதுமி னென்றன னனைவோரும்.

(இ-ள்) அரசன் சமுகத்தில் வந்து பாதங்களில் வணங்கி, இவ்விடத்தில் அநேகமிருகங்களிருக்கின்றன. வலையிலுள்ள வார்களால் சீக்கிரம் சூழக்கட்டினோம் என்று கூறினார். அப்போது வீரர்கள்பக்கங்களிலெல்லாம் சூழ்ந்துவர, மேருவையொத்தஅப்பாண்டியன் வில்லைக்கைகளிலேவளைத்துக்கொண்டு சென்று (வேட்டையெல்லையைச் சமீபித்தவுடன்) பக்கத்தில் வருவோரைப்பார்த்து, அளவில்லாத பயத்தைக்கொண்டு மிருகங்கள் மருண்டு எழுதலைச்செய்யுங்கள்என் றுரைத்தனன். உரைத்தவுடன் (எ-று) (௨௨)

கூவிளி பம்பைத டாரிபெ ரும்பறை கோடுவ லம்புரி துடியோசை, மேவலி னண்டக டாகமு டைந்தென வீறிய கம்பலை யதுகேளா, பாவலி லங்கினம் யாவும்வெ ருண்டெதிர் பாய்வது கண்டு

சிலைவீரர், தூவிய வன்கணை மாரிசொரிந்தனர் சோரியாந்தன நதியே போல்.

(இ-ள்) மிருகங்களைப்போல் அழைக்கும் ஓசையும், பம்பை, மத்தளம், பெரியபறை, சதுரகொம்பு, வலம்புரிச்சங்கு, உடுக்கை ஆகிய இவைகளினுடைய முழக்கம் உண்டாதலால், அண்டகடாகம் வெடித்தாற்போல அதிகரித்த அம்முழக்கத்தைக்கேட்டு, பலபடி மிருகங்களெல்லாம் மருண்டு எதிரே பாய்வதை, வெற்றி பெற்ற வில்லையேந்திய வீரர்கள் பார்த்துத் தாவிவிட்டனவாகிய வலிய கணைமழைகளைச் சொரிந்தார்கள். நதியைப் போல இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடின. (எ-று) (உங)

வாய்கிழி வனசில காலுளி வனசில வால்று வனசில குழிநாரம்
போயபர் வனசில கூய்விழு வனசில போம்வழி தெரிகில சிலவானி
பாயுட லினசில விற்குட லினசில பார்ந்கர் வனசில வெளியோடி
நாய்தொடர் வனசில வேலுறை வனசில நாள்குழி வனசிலவனமாவே.

(இ-ள்) அப்பொழுது காட்டிலுள்ள மிருகங்களில் சில வாய்கிழிந்தன. சிலகால்முறிபட்டன. சிலவால் துண்டுபட்டன, சில கெடுக்காயப்பட்டுச்சோர்ந்தன. சில கூவி விழுந்தன. சில ஓடித்தப்பிப்போகும் வழிதெரியாமல் மயங்கின. சில அம்புபாய்ந்த உடலையுடையவாயின. சில குடர்சிந்தின. சிலஓடச் சக்தியில்லாமல் நகர்வன. சிலவெளியே ஓடி நாய்களால் தடுக்கப்படுவன. சில வேல்நுழையப்பெற்றன. சில இறந்தன. (எ-று) ஏ அசை. (உச)

வசையறு நிதிதமிழ் மதுரைக் கதிபதி வரிவிற் கணைசில வருகேழ, நசையுற் நிடுபுலி கரடிக் குலமிவர் தசையுற் றுருவிய வவைமேதி, யசைவுற் றிடுசெவி மதவெம் புருவியு மருவிப் புனலென வழிசோரி, பசையற் றிலப்படர் விசையற் றிலவிசை பகர்தற் கரிதரிதெவரானும்.

(இ-ள்) (இகன்றியும்) குற்றமற்ற தமிழ்வளரும் மதுராபுரிக்குத்தலைவனாகிய பாண்டியன் வரிந்த வில்லினின்றும் விடுக்கப்பட்ட பாணங்கள் சிலசீறிவருகின்ற பன்றி, மான்செறிந்தபுலி, கரடி ஆகியஇவற்றின்கூட்டங்களையுற்று உருவியனவாய், மேலும் காட்டெருமை, அசைதலோடுகூடிய செவிகளையும், மத அருவியையுமுடைய யானைகளைப் பிளந்துசென்றும், அருவிப் புனல்போல வழிகின்ற இரத்தத்தினுடைய பசை நீங்காதனவாய்ச், செல்லும் வேகந்தணியாதனவாய்ச் சென்றன. அவ்வம்பின் வேகம் எவராலும் பேசற்கரிது அரிது. (எ-று) (உரு)



நசைமயிர் துற்றிய கவரிய ரற்றிட ஞமலிய லைத்திடு மதநேரிற், பசையறு தூர்க்குண வறிவிலி கைப்படு பதுமினி யொத்திடுமுடல்பீறித், திசைதிசை யுற்றிரி பலவிரு கத்தின சிறுகுடர் சுற்றிய வரிஞாடு, விசைகொடு புக்குழி முயல்வலை யுற்றுழல் விதமென வெய்த்துரு டருமாதோ.

(இ-ள்) தன் சரீரத்திலுள்ள உரோமத்தில் மிகவும் விருப்புள்ள கவரிமான்கள் கூச்சலிடும்படி, நாய்கள் அவைகளை வருத்தும். அதனையாராயின், இரக்கம் சிறிதுமில்லாத தூர்க்குணமுள்ள மூடன் கையிலகப்பட்ட பதுமினி ஜாதிப் பெண்ணையொக்கும். சரீரம் பிளந்து திக்குகள் தோறும் அடைந்து ஓடுகின்ற பலமிருகங்களின் குடர்கள் சுற்றிக்கொண்ட புதல்களின் மத்தியில், வேகத்தோடு ஓடும்போது முயலானது, வலையிற்சிக்கியுழலுந் தன்மை போலச், சிக்குண்டு இளைத்து உருளாநிற்கும். (எ-று)

மாதுஓ-அசைகள். (உசு)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அவ்வழி வேட்டஞ் செய்யு மளவையி லொருமான் வீரர்
கைவரி சிலையோட் டம்பின் கதியையும் பிழைத்து வாரும்
பெய்வலைத் தொடக்குந் தாண்டிப் பின்றொடர் நாயுந் தாழ்ப்ப
வெவ்வழி மரனுந் தாவி யெய்ப்பற வோடிற் றன்றே.

(இ-ள்) அவ்விடத்தில் வேட்டையாடும்போது ஒருமானனது, அப்படைவீரர்கள் கையிலேந்திய வில்லினாற் செலுத்தப்படுகின்ற அம்பின்வேகத்தையும் பிற்படச்செய்து, கட்டப்பட்டுள்ள வார்களையும், பிணிக்கப்பட்ட வலையின் பிணிப்பையும் தாவித் தன்னைத்தொடர்ந்து தாக்குகின்ற வேட்டைநாய்களும் களைத்துப் பிற்பட, வழியிலுள்ள எப்படிப்பட்டஉன்னதமான மரங்களையுந் தாண்டிக்கொண்டு களைப்பில்லாமல் ஓடியது (எ-று) அன்று-ஏ அசைகள். (உஎ)

ஒண்கதி காட்டு மான்பி னுறுபடைத் துணையின் னிற்ப
வெண்கதிர் விலங்கின் கூட்ட மியல்வனந் தொருவ னொக்
கண்கவர் வனப்பின் வாய்ந்த சிலையொடுங் காலிற் சென்றான்
வெண்கதிர் மருமான் முன்போம் வெஞ்சுடர் மருமான் போலும்.

(இ-ள்) அதிவேகமாய்ச்செல்லும் அம்மானின் பின் தமக்குச்சேனையாகப்பொருந்திய படைவீரர்கள் யாவரும் பின்னே களைத்து நிற்க, எண்

ணத்தக்க பிரகாசம்பெற்ற பலமிருகங்களும் சஞ்சரிக்கின்ற அக்காட்டில் தான் தனியாய்க் கண்களைப் பிணிக்கும் அழகோடு பொருந்திய வில்லோடும் காற்றைப்போல நடந்தனன். செல்லும் சந்திரனுடையவழித்தோன்றலாகிய அப்பாண்டியன், முன்னே ஓர் மானைத்துரத்திச்சென்ற சூரியன் வழித் தோன்றலாகிய இராமமூர்த்தியை யொப்பான். (எ-று)

இராவணன் சீதாபிராட்டியாரைக் கவர்ந்துகொண்டு போவதற்காக மாரீசனையேவ, அவன், மாயமானாகி வந்தாடிக்க, அதைநோக்கிய பிராட்டியார் இம்மானைப் பிடித்துத் தரவேண்டுமென இராமமூர்த்தியை வேண்ட அவரும் அதனைப்பிடிப்பதற்காக பின்தொடர்ந்தார் என்பது. (௨௮)

மங்குலந் தரமேற் பாய்ந்து மண்ணிடைக் குதிக்கு மானைக்
கங்குலங் குறையுங் கானிற் காவத மரையிற் கூடித்
தங்குல மதிக்கு வந்த தனிமறுத் துடைப்பா னென்ன
வெங்குல வரைபோற் றோளான் கணையொன்றால் வீட்டி-
[னானே.

(இ-ள்) மேகங்கள் சஞ்சரிக்கும் ஆகாயத்தில் துள்ளிக் கீழே குதித்து ஓடுகின்ற அம்மானை, மரநெருக்கத்தாலிருண்ட அக்காட்டில் அரைக்காத வழிதூரம் ஓடிச்சமீபித்துத் தங்குல முதல்வராகிய சந்திரனிடத்துப்பொருந்தியகளங்கமாகிய மானை நீக்குபவனைப்போல, வெவ்வியகுலமலையை நிகர்த்த புயங்களையுடைய அப்பாண்டியன் ஒரு சரத்தால் கீழே வீழ்த்தினான். (எ-று) வ - திசை.

களங்கம் மான்போறுதலால் இம்மானையழித்தல் அக்களங்கத்தை நிவர்த்திப்பது போன்றதென்பது. (௨௯)

சீதவம் புயநேர் பார்க்கச் செங்கதிர் செல்லு மேல்லை
தாதவிழ் நறுந்தேன் வேப்பந் தார்முடிச் செழியர் செய்த
மாதவ மனையா னெய்த்த வருத்தமும் பசியு மூளப்
பாதவ நிழலிற் போகி யசமுறத் தயர்ந்தான் பார்மேல்.

(இ-ள்) முறுக்கவிழ்ந்த நல்லதேன் பொருந்திய வேப்பமாலையைத் தரித்த முடியையுடைய பாண்டி மன்னர்கள் செய்த தவமே இரண்டு ஒரு வடிவெடுத்தாற்போன்ற அச்சோமாந்தக பாண்டியன், குளிர்ச்சியுள்ள தாமரைகள் மிமிர்ந்துநேராய்ப்பார்க்கும்படி சூரியன் உச்சியிலடையும்வேளையில், தான் ஓடிவந்ததனாலாகிய வருத்தமும் பசியும் அதிகரிக்க அதனால் ஓர் மாநிழலிற்சேர்ந்து பூமியில் தன்வசமிழந்து விழுந்தனன். (எ-று) (௩௰)



மந்திரத் தலைவர் சேனை மள்ளர்மற் றியாருங் கூட
விந்திரத் திருவன் கானி லெங்குற்று னென்னா வோடி
வந்திரைத் தீண்டி வெந்நீப் பசியினால் வரைபோற் சாய்ந்த
சுந்தரத் தமிழ்நர் கோனைக் கண்டனுந் துணுக்க முற்றார்.

(இ-ள்) மந்திரிகளும், சேனைவீரர்களும், மற்றையவர்களும், இக்கூடலம்பதியை ஆளும் இந்திரனது ஐசுவரியத்தையுடைய நமது தலைவர் காட்டில் எங்கிருக்கின்றாரோ என்று ஓடிவந்து கதறிக்கொண்டு நெருங்கிப், பசிகாரணமாக மெலிந்து மலைபோற் சோர்ந்துகிடக்கும், அழகிய தமிழ் நாட்டுக் கதிபனாகிய அப்பாண்டியனைப் பார்த்தவளவில் மனந்திடுக்கிட்டார்கள். (எ-று) (௩௧)

தென்னருக் கரசே வேத நானெறி திறம்புந் தேய
மன்னருக் கடியே றன்ன மதிக்குல மணியே யெங்க
ளின்னுயிர்க் குயிரே யார்க்குங் களைகணே யுணரா யென்ன
மன்னுயிர்க் கிறைவன் வாளா கிடந்தல்கண் டயர்ந்து மாழ்கி.

(இ-ள்) பாண்டியர்களுக்குத் தலைவரே, வேதநெறியினின்றுந் தவறிய மற்றைய தேசத்தரசர்களுக்கு ஆணியடியையொத்த சந்திரகுலத்திற்றோன்றிய மாணிக்கம் போன்றவரே, எங்களுடைய இனிய உயிர்க்குயிரானவரே, யாவர்க்கும் புகலிடமாயுள்ளவரே, துயிலினின்றும் எழுந்திருப்பீராக என்று முறையிடவும், நிலைபெற்ற உயிர்கட்குத் தலைவனாகிய அப்பாண்டியன் அசைவற்றுக் கிடப்பதைப்பார்த்து மனந்தளர்ந்து மயங்கி, (எ-று) (௩௨)

அமைச்சியற் பாரம் பூண்ட வறிஞர்கள் விரைந்து சீதஞ்
சமைச்சலர் வாச நீர்தூந் துருத்தியார் தமைக்கூ யுள்ளக்
கமைச்சின வேலான் கொண்ட விடாய்தணித் திடலுங் கண்க
ளிமைச்செதிர் விழித்துச் சோம சுந்தரக் கடவு ளென்றான்.

(இ-ள்) மந்திரித்துவமாகிய பாரத்தை மேற்கொண்ட தந்திரோபாயங்களில் வல்ல அம்மந்திரிகள் துரிதமாய்க் குளிர்ச்சிய புண்டுபண்ணிப் பலபுஷ்பங்கள் பெய்துள்ள வாசனையையுடைய ஜலத்தைத் தூவுந்துருத்தியை ஏந்திய தொழிலாளர்களைக் கூப்பிட்டு, அவர்களிடத்திலுள்ள துருத்தியால் மெல்ல முகத்தில்வீசச்செய்து மனத்திற்பொறுமையையும், புறத்தே சினத்தையும் படைத்த வேலையேந்திய அப்பாண்டியன் அடைந்திருந்த களைப்பை நிவிர்த்திசெய்யவும், இருகண்களையும் இமைத்து நேரே விழித்

அப்பார்த்துச் சோமசுந்தரக் கடவுளென்னும் நாமத்தை யுச்சரித்தான். (எ-று) (க-ங)

செம்புலம் படர்வெண் வேலான் சிறிதுயர் வுயிர்த்த லோடு
மம்புவி யரசே மானை யடும்விளை யாட்டி னெய்தி
வெம்புகா னிடையித் தூரம் போந்தமெய் மெலிவை யின்னே
யும்பரி னமுத மன்ன வுணவுகொண் டொழித்தி யென்றார்.

(இ-ள்) யுத்தகளத்திற் சென்று வெற்றி கொள்ளும் வெள்ளிய வேற்படையைத் தரித்த அம்மன்னன் சற்றே களைநீங்கியிருத்தலைப் பார்த்து மந்திரிகள் அழகிய இவ்வுலகையாளுந் தலைவரே, மான்வேட்டையாடுகின்ற விளையாட்டினால் அடைந்து, கொடிய இக்காட்டில் இவ்வளவு தூரம் வந்ததினாலுண்டான சரீரப்பிரயாசத்தை, தேவாமிர்தம்போன்ற உணவையுண்டு இப்பொழுதே நீக்குவீராக என்றுரைத்தார்கள். (எ-று) (க-ச)

இருந்தவாய் மலர்த்து மெல்ல வியம்புவான் வேந்தன் மூலந்
திருந்திய சயம்பு லிங்க தெரிசனஞ் செய்தா லன்றி
யருந்துதற் கடுசி லேயன் றகங்கையி னமைந்த சாவா
மருந்தாகி லேனு மாயின் விடமென மதிப்பே னென்றான்.

(இ-ள்) அவ்வரசன் சற்றே சாந்தித்திருந்து மெல்ல வாய்திறந்து கூறுவானாய், மூலஸ்தானமாய்ச் சிறப்புற்ற சுயம்புலிங்க தெரிசனஞ் செய்தாலல்லது, உண்ணுதற்கு இவ்வுலக உணவுமாத்திரமேயல்ல, தகுதிபெற்ற தேவாமிர்தமே உள்ளங்கையில் வந்தாலும், முன்னர்ப் பாற்கடலிற் றோன்றிய விஷமெனவே மதித்து நீக்குவேன் என்றான். (எ-று) (க-ரு)

ஆனிவ்வா றுரைத்த மொழிகேட் டுள்ளஞ் சோர்ந்தபின் றொழுது
இசைப்பார் புண்ணியப் பொருட்கும் வீயாப் புகழ்க்குஞ் சாதனமா
யிந்த மன்னுயிருந் திருமான் பூண்ட மங்கலவணிபோற் றோன்று
மன்னவநின் மேனிக் கந்தோ வபாயம்வந் தடுமே யென்றார்.

(இ-ள்) இங்ஙனஞ் சொன்ன அம்மொழியைக் கேட்டு மனந்தளர்ந்து, பின் தொழுது மந்திரிகள் கூறுவாராய், புண்ணியப் பொருளுக்கும் கெடாத புகழுக்குஞ் சாதனமாக, இந்தப்பூமிதேவி தரித்திருக்கும் ஆபரணங்களுட் சிறந்த திருமங்கலியத்தைப் போலச் சிறந்து விளங்கும் தலைவரே, போசனஞ் செய்யாவிடின் உமது தேகத்துக்கு அபத்து வருமே யென்று தெரிவித்தார்கள். (எ-று) (க-சு)



...ICE OF ... JAN 1911 ... MADRAS

இணைப்பா வகைத்துப் பின்னும் பார்த்திபன் பகர்வான் யாக்கை
பொய்யுமா திம்மைக் கென்மே லன்பினு லுரைத்தீர் நீவி
ரையமின் மறுமை நோக்கி யளந்துரைத் தீர லீரிம்
மெய்யதாம் பொய்யை நம்பி விரதத்தை விடுகி லேன்யான்.

(இ-ள்) இவ்வார்த்தையைக் கேட்டு அப்பார் வேந்தர் மெல்லென நாவைப்புடைபெயர்ச்செய்து கூறுவாராய், மந்திரிகளே, நீவிர் என்மேல் வைத்த அன்பினால் இம்மைப்பயனையநுபவித்தற்குரிய இவ்வுடம்பு பிழைக்கும் விதத்தைச் சொன்னீர்கள். அன்றிச் சந்தேகமின்றி யுள்ளபடி யடைதற்குரிய மறுமைப்பயனைநாடி ஆராய்ந்து கூறினீரில்லை. ஆதலால் அநித்தியமாகிய மெய்யென்னும் பெயருடைய இச்சரீரத்தை உறுதியாக நம்பி, எடுத்த விரதத்தைக் கைவிடேன் என்று கரைந்தார். (எ-று) (க-எ)

புன்னுனிப் பனியைக் கானற் புனலினைப் புனைந்த கோலத்தை
யன்ன நீர்க் குமிழி யைக் கருக்கிய மேகந் தன்னை
மின்னவா னகத்தி னின்று மிந்திர சிலையை யேய்
மின்னுடற் பொறையை நம்பி விரதத்தை விடுகி லேன்யான்.

(இ-ள்) புல்லின் நுனியிலிருக்கும் பனிநீரையும், கானற்சலத்தையும், கையினாலெழுதப்பட்ட கோலத்தையும், அவ்விதத்திலுண்டாகும் புற்புதத்தையும், கடல்நீரையுண்டு பூரணமான கருவைக்கொண்ட மேகத்தையும், இத்தன்மைய மேகத்திற்றோன்றும் இந்திரவில்லையும், மின்னலையும் போன்று, தோன்றின உடனே அழியுந்தன்மையுள்ள இத்தேகமாகிய சுமையை மெய்ப்பொருளாக நம்பி நானெடுத்துக் கொண்டிருந்த விரதத்தை விடேன். (எ-று) (க-அ)

தோன்மயிர் தசைந ரம்பு நிணமெலும் புதிர மூளை
படர்குடர் லீருள் விழுநீர் மலம்பொதிந் திருந்த புன்க
ணிடுமுட லகத்தொட் டொக்கி லிருந்தவிவ் வுயிரை யின்னே
விடுவதே யன்றிப் பூண்ட விரதத்தை விடுகி லேன்யான்.

(இ-ள்) தோல் உரோமம், மாமிசம், நரம்பு, கொழுப்பு, அஸ்தி, சுக்கிலம், மூளை, பரவியகுடல், ஈரல், மூத்திரம், அமேத்தியம் என்னும் இவைகள் செறிந்து துன்பத்தையே விளைக்கின்ற இவ்வுடம்பினுள் ஒதுக்குக்குடியிருந்த இவ்வுயிரை இக்கணமே விட்டுவிடுதலேயல்லாமல் கொண்ட விரதத்தை நான் விடமாட்டேன். (எ-று) (க-கூ)

என்றலுஞ் சூட்சி வல்லா ரிவ்வனத் தனித்துஞ் செய்துஞ்
சென்றியாருஞ் சுயம்பு லிங்கந் தேடுது மென்னப் போகி
வென்றிவேற் செழியன் வீர விரதத்தி னுறுதி நோக்கி
ஊன்றிய துயரி னங்கோர் சூழலி னிருந்து சூழ்வார்.

(இ-ள்) என்று அரசன் கூறுதலும், மந்திரிமார்கள் இக்காட்டில் சமீபத்திலும் தூரத்திலும் போய் யாங்கள் சுயம்புலிங்கமூர்த்தியைத் தேடிப் பார்க்கின்றோமென்று சொல்லிவிட்டுச் சென்று, வெற்றிபொருந்திய வேற்படையைத்தரித்த அப்பாண்டியனுடைய வைராக்கியமான இவ்விரதத்தின் மனவுறுதியைப்பார்த்து மிக்கவருத்தத்தோடும், அங்கேயொரு தனியிடத்தில் யாவருங்கூடியிருந்து ஆலோசனை செய்வார்கள். (எ-று) (சo)

சிறுமைகண் டறியாச் செல்வத் திருமது ரையர்கோ னெய்து
மறுமையை நோக்கி வாளா விருந்திடின் மரபிற் பின்னர்ப்
பொறுமைகூர் புவனந் தாங்கப் புதல்வரும் பிறரு மில்லை
வெறுமையாந் தேயம் யாமும் வெளிற்றறி வுடைய மாவேம்.

(இ-ள்) தரித்திரமடைந்து துன்புறுவதை ஒருநாளுமனுபவித்தறியாத செல்வமிக்க நமது மதுராபுரித்தலைவர் இனியடையப்படும் மறுமைப் பயனைக் குறித்து நாம் முயற்சியின்றி வீணேயிருப்பமாயின், இப்பாண்டிய வமிசத்தில் இவருக்குப்பின் பொறுமைமிக்க இப்பூபாரத்தைத் தாங்குவதற்கு புத்திரனாவது அன்றி உரிமைபூண்ட உறவினர்களாவது இல்லை. நமது நகரம் அரசனில்லாததாகும். நாமும் வருங்காரியமறிந்து நடவாமையால் மூடமதியினையுடையவர்கள் ஆவோம். (எ-று) (சக)

நாமுயிர் துறப்ப வேந்த னலியினு நலிக வின்று
போமுயிர் மீட்குஞ் சூட்சி யீதெனப் புணர்ப்பி னெண்ணித்
தேமுயிர்த் தலர்ந்த கொன்றைச் செழுந்தரு வடியிற் றென்ற
லாமுயிர்ப் பசைய நீழல் வாலுகப் பரப்பி னங்கண்.

(இ-ள்) நாமெல்லாம் உயிரிழக்கும்படி வேந்தர் நம்மை வருத்தினும் வருத்தக்கடவர். இப்போது அவருடம்பினின்று பிரிந்துபோகும் உயிரைப் போகாமலிருக்கச் செய்யும் உபாயம் இதுவேயாமென்று தந்திரமாக யோசித்து தேன் சொரிந்துகொண்டு மலர்ந்துள்ள வனம் பெற்ற ஓர் கொன்றை விருக்ஷத்தினடியில் தென்றற்காற்று வீசுகின்ற நிழலிலே வெண்மணல் பரவியிருக்கும் அவ்விடத்தில். (எ-று) (சஉ)



நிவந்தவா னான மன்னு பெருமுளை நிறுவி நன்னூற்
சிவந்தபட் டாடை சாத்தித் தேய்வைமட் டித்துத் தாம
முவந்தணிந் தாரம் பூட்டி யுற்றவர் கண்டோ ருள்ளங்
கவர்ந்தெழி றெறிப்பக் கைசெய் சிவலிங் கங்கண் டார்.

(இ-ள்) மேலே உயர்ந்த ஓர் கட்டுத்தறியைப் போன்ற பெரிய ஆப்பை நட்டு நடுப்பாகமாய செந்நிறமுள்ள பட்டினால் நெய்தபட்டுவஸ்திரத்தைத் தரித்துப் பரிமளம் பொருந்திய சந்தனத்தை யணிந்து, மனமகிழ்ந்து மலர்மாலைகளைச் சாத்தி, இரத்தினாபரணங்களாலும் அலங்கரித்துப், பார்த்தவர்களுடைய மனத்தைக் கவர்ந்து அழகுவீசத், தம் கைத்தொழிலால் ஓர் சிவலிங்கத்தையுண்டாக்கினார்கள். (எ-று) (சந)

ஒருவர்பின் னொருவ ராயங் கோடிவந் தரசே தேடு
மிருவர்மற் றெவருந் தேறாச் சுயம்புவந் தெளிதி னித்தப்
பெருவனந் தன்னி னின்று பிடியுண்டு பொன்பூங் கொன்றைத்
தருநிழ லிருப்பக் கண்டேந் தம்பிரா னருளி தென்று.

(இ-ள்) ஒருவர் பின் ஒருவராய் ஓடிவந்து மகாராஜனே! தேடுகின்ற பிரமதேவர் திருமால் என்னும் இருவரும், மற்ற யாவரும், இவ்வண்ணமென் றறியாதசிவபிரான் தமது கருணையால் தோன்றி, இலேசாய், இந்தப் பெரிய காட்டில், தேவரீர் துயத்தி வலையிற் கட்டுண்டு, பொன்போன்ற பூக்களையுடைய ஓர் கொன்றை மரநிழலில் எழுந்தருளியிருக்க நாங்கள் பார்த்து வந்தோம். இது சிவபெருமான் திருவருளேயாம் என்று. (எ-று) (சச)

ஆடுவா ரயலி னோரைத் தழுவுவா ரங்கு மிங்கு
மோடுவா ரானந் தம்போ லுரைமொழி குழறிக் காட்டிப்
பாடுவார் பாண்டி வேந்தைப் பரவுவார் புளகப் போர்வை
மூடுவார் நயன நீருண் மூழ்குவா ராகி மொய்த்தார்.

(இ-ள்) கூத்தாடுவார், பக்கத்தில் நின்றவர்களைக் கட்டித் தழுவிக் கொள்வார், பல இடங்களிலும் ஓடுவார், ஆனந்தானுபூதியைப் பெற்றவர்கள் போலப் பேசும் வார்த்தைகள் தடுமாறும்படி காட்டிப் பாடுவார், அப் பாண்டிமன்னனைத் துதிப்பார், மயிர்சிலிர்த்தலாகிய போர்வையால் மூடப் பெறுவார், கண்களிலிருந்து ஒழுகும்புனலினுள் அமிழ்வார், இவ்வாறாகி நெருங்கினார்கள். (எ-று) (சரு)

எழுதரு முவகை யீர்ப்பச் சுயம்புவை வணங்க வென்னும்
பொழுதிரு கரமுந் தேர்ச்சித் துணைவர்கைப் பொருந்தப் பற்றப்
பழுதில்வெற் பசைந்தா லென்னப் பையப்பைய நடந்து வண்டின்
குழுமிருஞ் சடையி லிங்கஞ் சேணிடைத் தோன்ற லோடும்.

(இ-ள்) அப்பாண்டியன் சுயம்புலிங்க தெரிசனஞ் செய்யவேண்டுமென்னும் விருப்பமானது தனதுள்ளத்தையிழுத்தலால், சென்று வணங்கவேண்டுமென்று நினைக்குந் தருணத்தில், அக்குறிப்பறிந்து மந்திரிகள் தம்முடைய கைகளால் அவ்வேந்தன் கரங்களைப் பிடித்துக் கொள்ளவும், குற்றமற்ற ஓர் மலையானது மெல்ல நடந்தாற் போல நடந்து, வண்டின் கூட்டங்கள் மொய்க்கின்ற சடைமுடியையுடைய சிவலிங்கப்பெருமான் தூரத்திலே விளங்கவும் (எ-று) (சசு)

பெரும்பெருக் கமுதை ஞானப் பேரொளிப் பிழம்பை வேதச்
சுரும்புசூழ்ந் தரற்றுந் தேனைத் தூநறுங் கனியை யெய்ப்பில்
விரும்பினர்க் குதவும் வைப்பை வித்திலா முளையை முக்கட்
கரும்பினை வேம்பின் வேந்தே காண்கெனக் காட்டி னாரே.

(இ-ள்) மிகவும் பெருகிய அமிர்தவெள்ளம் போல்பவராகியும், திரண்ட பெரிய ஞானப்பிரகாச சொரூபராகியும், வேதங்களாகிய வண்டுகள் மொய்த்து இசைபாடுகின்ற ஆனந்தத்தேனாகியும், பரிசுத்தமாகிய நறிய கனிபோல்பவராகியும், வறுமையாலிளைத்த காலத்தில் விரும்பினவர்களுக்குக் குறைவறக் கொடுக்கும் பொக்கிஷம் போன்றவராகியும், வித்தையில்லாத முளையாகியும், மூன்று கண்களையுடைய கரும்புபோல்பவராகியும், உள்ள சிவலிங்கப்பெருமானை, வேப்பமாலையைத்தரித்த அரசனே! தெரிசிப்பீராக என்று காட்டினார்கள். (எ-று) (சஎ)

காண்டலுங் கண்ணீர் வாரி கரைபுரண் டோடக் காவி
னீண்டகை குவித்துப் பூண்ட நியதியை முடித்துப் பின்ன
ராண்டகை முகைவெண் முரலருந்திநீர் பருகி யன்பு
மாண்டமெய் வருத்த நீங்கி மந்திரர்க் குரைப்ப தானான்.

(இ-ள்) ஆண் தன்மையையுடைய அம்மன்னவன் தெரிசனஞ் செய்தலும், கண்களினின்று ஆனந்தத்தாற் பெருகும் வெள்ளமானது அளவுகடந்து பெருக, கற்பகச்சோலையினும் கொடுக்குந்தன்மையில் நீட்சிபெற்ற கைகளைக்கூப்பி வணங்கித் தான் கொண்டிருந்த விரதத்தை முடித்து, அதன்பின், முல்லையரும்பையொத்த வெண்மையான அன்னத்தையுண்டு, ஜலபா



னஞ்செய்து, அன்பினால் மாட்சிமைப்பட்ட தனது சரீர வருத்தம் நீங்கி, மந்திரிகளுக்குக் கூறுவானாயினன். (எ-று) (சஅ)

வாட்டிருங் கொடிய கூற்றின் வாய்ப்படு முயிரை யின்னே
மீட்டிருந் தென்னை யாண்ட மெய்ப்பரஞ் சுடர்தா னித்தக்
காட்டிருந் துறையக் கண்டுங் கண்ணிலான் போல வேகி
நாட்டிருந் துயிரை யோம்பி நாட்கழிப் பதுவு நன்றே.

(இ-ள்) வருத்தஞ்செய்கின்ற வன்கண்மையையுடைய இயமனிடம் செல்லுதற்குரிய என்னுயிரை இப்போதே மீளும்படிசெய்து, இங்கிருந்தென்னைத் தடுத்தாட்கொண்டருளிய உண்மையான பரஞ்சோதி சொரூபராகிய சிவலிங்கப்பெருமான் இவ்வனத்தில் தனியே யெழுந்தருளியிருக்க நாம் பார்த்தும் கட்பொறியில்லாத குருடனைப்போலப் போய், நாட்டிலிருந்து உயிரைக்காத்து நாளை வீணே போக்குவதும் நல்லதாமோ? (எ-று) (சகூ)

ஷை வேறு.

ஆதலினிச் செறிந்தபெருங் காடெறிந்து திருநகர்கண் டரன்
பொற் கோயில், காதலிற்கண் டிவணுறையச் சயம்புதிரு வுளக்குறி
ப்புக் காண்பே னென்றுப், போதலுந்தம் பெருமான்பின் போவார்
போன் றெழுந்துமுகம் புலர்ந்து சாம்பி, நீதியமைச் சர்கணடுங்கி
நின்றுநின்றங் கொளித்தாரந் நெடிய கானுள்.

(இ-ள்) ஆதலினால் மரங்கள் நெருங்கிய பெரிய இக்காட்டைவெட்டி அழகிய நகரம் உண்டாக்கி, அதில் சிவபெருமான் எழுந்தருளுவதற்குப் பொன்மயமான ஆலயத்தை விருப்புடனியற்றி, நாமும் இவ்விடத்திலேயே வசிப்பதற்குச்சிவபெருமானது திருவுள்ளக்குறிப்பு எப்படியிருக்கிறது பார்ப்போமென்று அரசனெழுந்துசெல்லுதலும், அதுகண்டு மனுநீதியிற்பிறழா தமந்திரிமார் தாமும் தமது எஜமானன்பின்னே போகிறவர்களைப் போலப் புறப்பட்டு, என்செய்வோமென்று முகம் பொலிவழிந்து ஒடுங்கி, மனநடுக்கமுற்று, ஒவ்வொருவராக நின்று நின்று அந்தப் பெரிய அடவியில் ஒளித்துக்கொண்டார்கள். (எ-று) (ருo)

தனித்தனிபோ யவர்மறையச் சிலர்தொடரப் போயடைந்து
சயம்பு மூர்த்தி, குனித்தகசே வடிதொழுது மாப்புவடி வாயிருந்த
கொள்கை பாராப், பனித்துவள மதிவேந்தன் முன்பிடித்த சிவவிரத

டந்த நோக்கி, மனித்தவுடலெடுத்தபயன் முதலொடும்போய் முடிந் ததெனவருந்தி னானால்.

(இ-ள்) தனித்தனியே ஒவ்வொருவராய்ச் சென்று அம்மந்திரிகள் ஒளித்துக்கொள்ளச் சிலர்மாத்திரம் தன்பின்தொடர்ந்துவர அச்சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருந்த இடத்தையடைந்து, சுயம்புலிங்கமூர்த்தியின் நடனபாதங்களை வணங்கவும், அது ஆப்புருவாயிருந்த நிலைமையைப் பார்த்தும், குளிர்ந்த வெண்ணிறம் வாய்ந்த சந்திரகுலதிலகனான அப்பாண்டியன் தான் இதுவரையுறுதியாகக்கொண்டிருந்த சிவவிரதத்திற்குத்தவறு வந்ததைப்பார்த்து இத்தேகமெடுத்ததனாலாகிய பிரயோசனமானது அடியோடும் வீண்பட்டுப்போயிற்றேயென்று துக்கித்தான். (எ-று) ஆல்-அசை.

என்செய்தார் கற்பனைமீ திருந்தவா றென்னேமற் றிந்தமாய, முன்செய்தார் கதைகளுங்கேட் டிலனந்தோ வென்னமொழி மொழிகே னென்றும், பொன்செய்தா ரவன்வெகுளி மீக்கொளக்கண் சிவந்துவாய்ப் புலிபோற் சீறி, மின்செய்வா ளுறைகழித்து மந்திரர்ப்பார்த் தழுங்காளுன் விராரத் தாழ்ந்தான்.

(இ-ள்) பொன்மாலையையணிந்த அப்பாண்டியன் என்ன கற்பனையைச் செய்தார்கள். இதுஇருந்தபடி என்னென்று சொல்வேன். இப்படிப்பட்ட மாயத்தை முன் செய்தவர்களைக் கதைகளிலும் கேட்டறியேன். ஐயோ என்னவார்த்தை சொல்லக்கடவேன் என்று கோபம் அதிகரிக்கக் கண்களிரண்டும் சிவப்புற்று வாயாலதட்டிப் புலிபோல் கோபித்து, ஒளிசெய்கின்றவாட்படையை உறையினின்றும் நீக்கி மந்திரிகளைப் பார்க்கவுங் காணுதவனாகித் துன்பத்தில் மூழ்கினான். (எ-று) (௫௨)

கொய்யவோ பசிமுளைக்கக் குடரினைப்பின் பிரித்துணர்தல் கூடா நெஞ்சைச், செய்யவோ பிளவுவிழித் திருந்தும்வெறுங் குருடனைந்து தெரியா நாட்டம், வெய்யுவான் முளைத்தொடவோ வென்றுபல நினைந்துடலை வெறுத்து மாழ்கி, யையவோ வினைவலியே தம்மவோ வெனப்பொருமி யரற்றி னானால்.

(இ-ள்) கொடிய பசியுண்டாகிய குடலைப்பிடுங்கிவிடக் கடவேனோ, அவ்வாறு பசியுண்டாயினும் பின்னரதனைப் பகுத்துணர்தல் பெறாதமனத்தைப் பிளந்துவிடக் கடவேனோ, மனந்தெரிந்து கொள்ளாவிடினும் விழி



த்துக்கொண்டிருந்தும் யதார்த்தத்தையறியாது குருடபோன்றிருந்த கண்களை வெவ்வியவாளின் நுனியால் தோண்டிவிடக்கடவேனோ என்றிப்படிப் பலவாறாக எண்ணியெண்ணி இத்தேகத்தை வெறுத்து மயங்கி, யிவ்வாறு நடந்தது என்வினைவலியேயாம். ஐயையோ ஆச்சரியம் என்று கதறியழுதான். (எ-று) ஆல்-அசை. (௫௩)

தரிப்பரே பிடித்தநிய மஞ்சிறிது வழுவினுமெய் தடிந்தவ் வேலை, மரிப்பரே மெய்யடியா ரித்துணைப்போ துடல்சுமந்து வாளா நின்றாற், சிரிப்பரே யிவனடியர் போனடிக்குங் கள்வனெனத் தெளிவரேயா, னரிப்பதே யவர்க்காணி லெனத்துணிந்தான் வாய்மை யொன்று நவில்வ தானான்.

(இ-ள்) வைராக்கியமுடையவர்கள் தாம் கொண்ட நியமம் சிறிது தவறுமேயானாலும் தாமதிப்பரோ? சரீரத்தைச் சேதித்து அக்கணமே இறந்துவிடுவார்களே. விரதபங்கமானது தெரிந்தும் நான் இவ்வளவு நேரம் இச்சரீரத்தை வைத்துக்கொண்டு வீணே நின்றால் மெய்யடியவர்கள் நகைக்கமாட்டார்களா? இவன் அன்பன் போல் நடிக்கும் திருடனென்று நன்கு தெளிந்துகொள்வார்களே. யான் அவர்களைக்கண்டால் நாணி நிற்பதேயாம் என்று நிச்சயித்து, தன்னுள்ளத்திற் கொண்டதொரு பிரதிக்ஞையைச்சொல்வதாயினான். (எ-று) நரித்தல்-பிரமித்தலுமாம். (௫௪)

யானெடுத்த சிவவிரதப் பெரும்பத்தி நெறிபிறழா திந்நாட் காறு, மூனெடுத்த பயனடையச் சயம்புதெரி சனஞ்செய்த துண்டே லிந்தத், தேனெடுத்த மலரிதழி யடிபிணுப் பிதுகுறியாத் திகழ்க வன்றேற், கூனெடுத்த வாள்கொடுநன் மிடறரிந்து மாய்வனெனக் கூறலோடும்.

(இ-ள்) நான் உறுதியாகக்கொண்ட சிவவிரதத்தின் மிக்க பக்தி நெறிதவறாது, இது பரியந்தம் இச்சரீரமெடுத்ததனாலடையவேண்டிய பயனையடையச் சுயம்புலிங்க தரிசனஞ்செய்தது உண்மையாயின், இந்தத் தேன் பொருந்திய மலர்களையுடைய கொன்றை மரத்தடியிலுள்ள இந்த ஆப்புவடிவமே சிவலிங்கமாக விளங்கக்கடவது. அல்லையாயின் வளைந்த வாளாயுதத்தால் நல்ல கழுத்தையறுத்துக்கொண்டு இறப்பேனென்று சொல்லுதலும்()

அவ்வுரைபோய்த் திருச்செவியி னுறுந்துதலுந் தரித்திலர்வந் தானேற் றைய, ரிவ்வுரைவான் மொழியானின் றியம்புவா ரமக்கி

னியா யெம்பா லன்பா, செவ்வியநன் மதிமரபிற் றென்னர்சிகா மணி
யேநற் செங்கோல் வேந்தே, யெளவியந்தீர் விரதநெறி யிழுக்கில்சோ
ழாந்தகனு மரசகேண்மோ.

(இ-ள்) அரசன் வருந்திக்கூறிய அவ்வார்த்தை திருச்செவியிற் சென்றேறுதலும், தாமதியாதவராய், இடபவாகனத்தில் ஆரோகணித்தருளும் பெருமான் அந்தரத்திற்றோன்றி, இவ்வார்த்தையை அசரீரி மொழியினுற் கட்டளையிடுகின்றார்: "எமக்கினியவனே, எம்மிடத்திலன்புள்ளவனே, செப்பமாகிய சந்திரகுலத்திலவதரித்த பாண்டியர்களுள் சிரோரத்தினம் போன்றவனே, மநுநீதியின்படி செங்கோல் செலுத்தும் அரசனே, வஞ்சகத்தினீங்கிய சிவவிரதநெறியிற்றவறுதலில்லாத சோழாந்தகனெனப்பெயர் பெற்ற நராபதியே! கேட்பாயாக." (எ-று) (௧௬)

நின்னுடைய பேரன்பா லியாம்பிடியுங் டலர்நடுக்கை நிழலி
லோரேழ், தொன்னிலங்கீ ழூடுருவி யாப்புடைய யீசனெனத் தோ
ன்றி னேம்பாற், பொன்னனையா டனைநறுங் கமழ்குழலா ளொ
டிருவிப் பூசிப் பாய்நீ, யென்னவுமம் மொழிவானின் றிழியமுத மெ
னச்செவிபுக் கினிப்பக் கேட்டான்.

(இ-ள்) உன்னுடைய பெரிய அன்பென்னும் வலையில் நாம்கட்டுண்டு, மலர்களையுடைய கொன்றை மரநிழலிலே, தொன்றுதொட்டுள்ள பூமிக்குக் கீழே எழுலகங்களையும் மத்தியில் துளைத்துக்கொண்டு, திருவாப்புடையீசனென்னுந் திருநாமம் பூண்டு தோன்றி விளங்கினேம். நமக்குப் பக்கத்திலே பொன்போலும் மேனியையுடைய அம்பிகையைக் குரவங்கமழ்குழலம்மையென்று பிரதிஷ்டைசெய்து நீ பூசிப்பாயாகவென்று கட்டளையிடுதலும், அவ்வார்த்தையானது அந்தரத்தினின்றும் இழிகின்ற அமிர்தம் போலத் தனது காதாகிய வாயிற் புகுந்து மாதுரியத்தை விளைக்கக்கேட்டான். (எ-று) (௧௭)

ஷை வேறு.

நீங்கினான் றுயர மன்பு நீடினான் கரங்கள் சென்னி
தாங்கினான் சிவபி ரானைத் தழுவினான் புயங்க ளோங்கி
வீங்கினா னாடிப் பாடி விம்மினான் விம்மிக் கண்ணீர்
தூங்கினா னோடி யோடி வனமெலாந் துகைத்தான் றுள்ளி.



(இ-ள்) உடனே தானடைந்திருந்த துக்கத்தினின்று நீங்கினான். அன்பு அதிகரிக்கப் பெற்றான். சிரசிலே இரண்டு கைகளையுங் கூப்பினான். ஆப்பினின்றுந் தோன்றிய சிவலிங்கப் பெருமானை ஆராமையால் கைகளாரத்தழுவிக்கொண்டான். இருதோள்களும்வளர்ந்து பூரித்தான். ஆனந்த பாஷ்பஞ் சொரியநின்றான். அக்காடுமுழுதிலும் ஓடியோடித் துள்ளிக்குதித்து உழக்கினான். (எ-று) (௧௮)

பார்த்திபன் சிவன்மேல் வைத்த பத்தியு மவன்மேற் கொன்றைத்
தார்த்தவழ் முதல்வன் வைத்த தாழ்வில்பே ரருளு நோக்கி
யார்த்தனர் வானோ ரைந்து கருவியு மார்ப்ப மென்பூத்
தூர்த்தனர் தென்னன் கீர்த்தி துதித்தன ரிடைவி டாமல்.

(இ-ள்) அவ்வரசன் சிவபெருமான்மீது வைத்திருக்கிறபேரன்பையும், அவன்மீது கொன்றைமாலையைத் தரித்த ஒப்பற்ற சிவபிரான் வைத்திருக்கும் குறைவில்லாத பேரருளையும் பார்த்துத் தேவர்கள் ஹரஹர முழக்கஞ்செய்தவர்களாய், தேவ துந்துபிகளைந்தும் முழங்க, மெல்லிய புஷ்பமாரி பொழிந்து, அப்பாண்டியன் கீர்த்தியை ஓயாமல் துதித்தார்கள். (எ-று) தான்-அசை. (௧௯)

தான்கரைந் துருகி யுள்ளந் ததும்புமா னந்த வாரி
வான்கரை யேறு தங்கன் வழுக்கிவீழ்ந் தெழுந்து மீண்டுங்
கோன்கரை யிவர்ந்து தேவி கொண்கரைப் பரவும் வேத
நான்கரை வணங்கி யிறி னற்றுதி மொழிந்து பின்னும்.

(இ-ள்) இப்பாண்டியன் உள்ளமானது கரைந்துருகிப் பொங்கி வழிகின்ற பேரானந்தக்கடலினது பெரிய கரையை யடையாதவராய், அக்கடலினிடத்தே வழுக்கி வீழ்ந்து கிடந்து, எழுந்திருந்து, மீண்டும் ஒருவாறு கரையேறி, உமாதேவி நாயகரும், துதிக்கின்ற நான்குவேதங்களையுடையவரும் ஆகிய சிவபெருமானைத்தொழுது, அளவிறந்த ஸ்தோத்திரங்களைச் செய்து, பின்னும், (எ-று) (௨௦)

வளைமிசை யணிகைச் சீதை குவித்தமன் மிசைநெல் வேலிக்
கிளைமிசை முளைத்தல் காதிற் கேட்டனங் கண்ணிற் காண
முளைமிசை முளைத்தா யான்செய் முற்றவப் பயனி யாதோ
வளைமிசை யவனுந் தேரு வையனே யன்பர் வாழ்வே.

(இ-ள்) வெண்ணெயையுண்ட விஷ்ணுமூர்த்தியினாலும் அறியப்படாத ஐயனே! மெய்யன்பர்களுடைய பெருவாழ்வாயிருப்பவனே! (சேதுவில் பூர்வத்தில் கைகளில் வளையலையணிந்த சீதாபிராட்டியாரால் குவிக்கப்பெற்ற மண்ணினிடமாகவும், திருநெல்வேலியில் மூங்கிலினிடமாகவும் தேவரீர் உற்பவித்ததைக் காதினாலே மாத்திரம் கேட்டிருந்தோம். இப்போது கண்களினாலும் பார்க்கும்படி இவ்வாப்பினிடமாகத் தோன்றியருளினீர். ஆதலின் யான் பூர்வ சன்மங்களில் என்ன தவஞ்செய்தேனோ. (எ - று.)

இராமர் இராவணசம்மாரஞ்செய்து திரும்புகையில் அதனாலாகிய பிரமஹத்தி தோஷந்தீர இராமேச்சரத்தில் சிவலிங்கப்பிரதிட்டைசெய்து பூசிப்பதற்கு அநுமாரைக் காசிக்குச்சென்று சிவலிங்கங் கொண்டுவரும்படி உத்தரவுகொடுத்தனுப்ப, அவர் சென்றுகொண்டுவருவதற்குள், பிரதிஷ்டைக்காகக்குறித்த இலக்கினம் சமீபித்ததனால் சீதா பிராட்டியார் தன் கைகளால் மணலைச் சிவலிங்கமாகக்குவிக்க, அதில் பூசையாற்றும்படி சாந்நித்தியமாய் விளங்கினார் என்பதும், இராமக்கோன் என்பவன் இராமபாண்டியனது அரண்மனைப் பசுக்களைக் காட்டில் மேய்த்துவருங்கால் போகும் மார்க்கத்திலுள்ள மூங்கிலின் மூளை ஒன்றில் மூன்றுநாள் தடுமாறிப்பாற்குடந் தவறவும், ஒவ்வொருநாளிலும் நாளைத்தினம் இதனை வெட்டவேண்டுமென்று நினைத்து மறந்துபோய், நாலாநாளிலும் அதுபோல் தடுமாறவும், சினந்து கோடாரியால் அம்மூளையை வெட்ட, அதில் இரத்தஞ் சோர்வது கண்டு சென்று இராமபாண்டியனிடம் தெரிவிக்க, அம்மன்னனும் வந்துபார்த்து வேண்ட, முத்துவடிவாய்த் தெரிசனந் தந்தருளிவிளங்கினார் என்பதும் புராண சரிதம். (௬௧)

அடியனே னினைத்த வண்ண மருளுரு வாகி யிந்தக்
கடிகமழ் வனத்தும் வந்து காட்சி கொடுத்த வாற்றாற்
படியினு முளைய வானப் பரப்பினு முளையிக் கொன்றை
யடியினு முளையென் போல்வா ரகத்தினு முளையை யையா.

(இ - ள்) ஐயனே நாயேன் எண்ணியவாறே திருவருளே திருமேனியாகக்கொண்டு, இந்த வாசனைவீசுகின்ற காட்டினிடமாகவும் எழுந்தருளித் தெரிசனங் கொடுத்ததன்மையால், தேவரீர் இப்பூமியிலும் இருக்கின்றீர். அந்த விசாலமான வானுலகத்திலுமிருக்கின்றீர். இக்கொன்றைத் தருவடியிலுமிருக்கின்றீர். என்போலியர் இருதயத்திலுமிருக்கின்றீர். (எ-று) (௬௨)

செறியரா வணையிற் றுஞ்சு நீலமே னியருஞ் செந்தேன்
றுளியருங் கமல நாபித் தோன்றற்கு மமுதுண் வாழ்க்கைக்



களியரு தவர்க்கு நாளுங் கனவினு மரியா யன்பர்க்
கெளியையாய் வருவா யென்ப தென்னள வாயிற் றன்றே.

(இ - ள்.) நெளிக்கின்ற ஆதிசேடனாகிய சயனத்தின்மீது நித்திரை செய்யும் நீலநிறத் திருமேனியையுடைய திருமாலுக்கும், செவ்விய தேன் றுளிநீங்காத உந்திக்கமலத்தினின்றும் உற்பவித்த பிரமதேவருக்கும், அமிர்தத்தை உண்டு வாழ்தலாகிய சந்தோஷத்தையுடைய மற்றைய தேவர்களுக்கும், எப்போதும் சொப்பனத்தினுங் காண்டற்கரியவரே! தேவரீர் மெய்யன்பர்களுக்கு நினைத்தபோதே மிக இலேசாக எழுந்தருளிக் காட்சிகொடுப்பீர் என்று சொல்லுவது இப்போது என்னளவில் விளங்கிற்று. (எ-று.) அன்று, ஏ. அசைகள். (௬௩)

ஒற்றையா யெனையித் தூர மீர்த்திடு முழைக்கும் வெம்மை
யிற்றைநாட் காறுந் தோன்று தின்றுதோன் றியபசிக்கு
முற்றையா நின்னைக் காண முடித்தமந் திரர்க்குஞ் செய்யுங்
கற்றையஞ் சடையாய் கைமா றெவனெனக் கழறி நின்றான்.

(இ - ள்.) கற்றையாகக்கட்டிய அழகிய சடையையுடையவரே! தனியாக என்னை யிவ்வளவு தூரம் இழுத்துக்கொண்டு வந்த மானுக்கும், இற்றையளவும் உண்டாகாமல் இன்றைக்கு நூதனமாக உண்டாகிய கொடிய பசியினுக்கும், எங்கும் வியாபித்தவராகிய தேவரீரைக் கண்டு தெரிசிக்கும்படி இச்சூழ்ச்சிசெய்த மந்திரிகளுக்கும், என்னாற்செய்யக்கூடிய பிரதியுதவி யாது என்று சொல்லிக்கொண்டு நின்றார். (எ - று.) (௬௪)

முற்றை - முற்றுதலையுடைய என்னும் பொருட்டு.

கோச்சகக்கலிப்பா.

ஒழியாத பேருவகை யுள்ளூறி வருமிதனை
யழியாத மதிநூலோர்க் கறிவிப்பா னுழையோரா
கழியாத பெரும்பயந்தீர்த் தழைத்திடலுங் கடிதேகிப்
பழியாத புகழ்வேந்தன் பாதமிசைப் பணிந்தார்கள்.

(இ - ள்.) உள்ளத்தினின்றும் பெருகி வருகின்ற குறைவில்லாத பெரிய இச்சந்தோஷத்தைக் கெடாத புத்திநுட்பத்திற் சிறந்தவாகிய நூலுணர்வுடைய மந்திரிகளுக்குத் தெரிவிக்கும்பொருட்டுப் பக்கத்திலிருந்த ஏவலாளர்களால் அவரது நீங்காத பெரும் பயத்தை நீக்கி அழைக்கச்செய்தலும்,

அம்மந்திரிகளும் விரைவந்து யாவராலும் பழிக்கப்படாத கீர்த்தியையுடைய அவ்வரசன் பாதத்தில் நமஸ்கரித்தார்கள். (எ - று.) (௬௫)

அன்னவரை முகநோக்கி யமைச்சீர்நும் வினையத்தா
லென்னுயிர் மீட்பான்விதி யில்லாத முறையென்முன்
சொன்னபொருள் குறிக்கொண்டு தோன்றியவா பாருமெனத்
தென்னர்பிரான் மொழிந்திடலுஞ் சென்றிறைஞ்சி நோக்கினார்.

(இ - ள்.) அம்மந்திரிமாரைப் பார்த்து, மந்திரிகளே! நீங்கள் செய்த தந்திரத்தால் என துஉயிரை மீட்கும்வண்ணம் விதையில்லாத முறையானது என் முன்னே யான் விண்ணப்பித்துக்கொண்ட முறைப்பாட்டை அங்கீகரித்தருளிச் சுயம்பு மூர்த்தியாய்த் தோன்றிய நிலைமையைப் பாருங்களென்று பாண்டியர்களுட் சிறந்த சோழாந்தகன் சொல்லியவளவில் மந்திரிமாரும் அணுகி வணங்கிப்பார்த்தனர். (எ - று.) (௬௬)

எவ்வுருவி லியாரொருவ ரினைந்துள்ளு வாருளத்தி
லவ்வுருவ தாய்த்தோன்றி யருள்கொடுக்கும் புண்ணியனென்
றெவ்வுலகுந் துணிபொருளை யின்றுவெளி செய்வதற்கோ
வெவ்வினையி னேங்குறித்த வெளிற்றறிவாய் நின்றனையே.

(இ - ள்.) எந்த உருவத்தில் யாவரொருவர் மனதொடு பொருந்திப் பாவிக்கின்றார்களோ, அந்த வுருவமே தமதுருவமாகத் தோன்றித் திருவருள்பாலிக்கும் புண்ணிய சொரூபியென்று எவ்வுலகிலுள்ளவர்களும் நிச்சயித்த நிலைமையை யிப்போது யாவரும் சந்தேகமறத் தெரிந்துகொள்ளும்படி செய்தற்பொருட்டோ, கொடிய வினைகளையுடைய நாயேங்கள் பாவித்த கட்டுத்தறிபோலும் இவ்வாப்பின்கண்ணே நிலைபெற்றருளினீர். (எ - று.) ஏ - அசை-வெளில் - கட்டுத்தறி. (௬௭)

செம்மைநெறி யமைச்சுரிமை செய்வினையோன் றறியாத
வெம்மைவினைப் பழிநின்று மெடுத்தாண்டெம் கோமகற்கு
மும்மையுந்தந் தாய்யக்கொண் முதல்வாமுப் பரம்பொருளே
தம்மையுணர் வார்க்கமுதே சயசயவென் றேத்தினார்.

(இ - ள்.) செவ்விய நன்மார்க்கத்தையுடைய மந்திரிகட்குரிய செய்தொழில்களுள் ஒன்றையேனுந் தெரிந்துகொள்ளாத தீவினையாகிய பழியினின்று நீக்கி எடுத்து ஆட்கொண்டருளி, எமது மன்னருக்கும் இம்மை மறு



மை வீடென்னும் மூவகைப் பயன்களையுந் தந்தருளி உய்யும்படி செய்வித்த முழுமுதற்கடவுளே! திரிமூர்த்தி சொரூபமாய் விளங்கும் பரம்பொருளே! தேவரீருண்மைகளை யுள்ளவாறுணர்பவர்கட்கு அமிர்தம்போல்பவரே! ஜய ஜய என்று துதித்தார்கள். (எ - று.) (௬௮)

பொருமானை முதலடும்போர் வேட்டைபிளிற் புகுந்தமதி
மருமானை முறைமுறைபோய் வணங்கியினி யிவ்வனத்தி
லொருமானைத் தொடர்ந்தேவந் துள்ளன்பின் வலைவளைத்துப்
பெருமானைப் பிடித்தனையே யெனமகிழ்ந்து பேசினார்.

(இ - ள்.) பொருதற்குரிய மான் முதலாகிய மிருகங்களைக் கொல்லுகின்ற யுத்தமாகிய வேட்டைத்தொழிலிற் சென்ற சந்திரவம்சத்திலுதித்த அப்பாண்டியனை முறைப்படி வரிசையாகச்சென்று வணங்கி, இனிதாக இக்காட்டினிடத்து ஒருமானைப் பின்தொடர்ந்தோடிவந்து, உள்ளத்திலுள்ள அன்பாகிய வலையைக்கட்டி, ஒருவராலும் பிடியுண்ணாத சிவபெருமானையும் பிடித்தீரே என்று மனமகிழ்ச்சியுடன் துதித்தார்கள். (எ - று.) (௬௯)

கண்ணுதல்வா னவனடியார் கணத்துளிவ னொருவனென
வெண்ணுதல்செய் திர்மாய மியற்றினீ ரலீரிருமை
நண்ணியதாம் மாலெனக்கு நான்செயுங்கை மாறிலதென்
றண்ணிலவு முகமனுரைத் தொன்றுரைக்கு மனுவேந்தன்.

(இ - ள்.) இவ்வாறு துதித்த மந்திரிகளைப்பார்த்து மனுநீதி தவறாத அவ்வரசன், மந்திரிகளே நீங்கள் நெற்றி நேத்திரத்தையுடைய சிவபெருமானது மெய்யடியார் கூட்டத்துள் இவனும் ஒருவனென்று யாவரும் நினைக்குமாறு செய்தீர்களேயன்றி வஞ்சகமான காரியஞ் செய்தீரல்லீர். உங்களால் எனக்கு இம்மை மறுமைப்பயன்கள் கிடைத்தன. ஆதலால் நான் அதற்காகச் செய்யும் பிரதியுபகாரம் ஒன்றுமில்லையென்று உள்ளபடியே பிரியவசனங்களைக் கூறி, மேலும் ஒரு வார்த்தை சொல்வானாயினான். (எ - று.) (௭௰)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கால்புகத் திகைக்குங் கடுவன மெறிந்து கடிநகர் கண்டுநீர் இறப்ப,
நால்புகச் சிவனா லயம் வகுப்பீர் நுண்மதி யீரென வவருங், கோ
ல்புகத் துளைக்கொள் மாநிகர் பாரைக் கொடும்பணை மாநிரை யிரு

ம்பி, ஞால்வருத் தனைய வாக்கைய மன்ன ராலெறிந் தவன்மிசை திருத்தி.

(இ - ள்.) நுட்பமான புத்தியையுடையமந்திரிகளே! எங்கும் நுழைந்து செல்லுங்காற்றும் சென்றியங்குதற்கு முடியாமல் மயங்குகின்ற நெருங்கிய இக்காடுகளைவெட்டி, அழகியபட்டணமாகச்செய்து, சிறந்த சிற்பசாஸ்திரப் படி சிவாலயம் வகுப்பீராக என்று கட்டளையிட, அம்மந்திரிமாரும் இராஜ பாணம் சென்றவுடன் நிமிர்ந்து துளையுண்ட மராமரத்தையொத்த பருத்த அரையினையும் வளைவான கிளைகளையுமுடைய வரிசையாயுள்ள மரங்களை யெல்லாம் இரும்பாற் செய்தாற்போன்ற சரீரத்தையுடைய வேலையாட்க ளால் வெட்டச்செய்து, அவ்வெட்டிய இடங்களிலுள்ள பள்ளங்களையும், மேடுகளையும் சமஞ்செய்து, (எ - று.)

அவல் - பள்ளம். மிசை - மேடு. (௭௧)

கிடங்கர்சூ ழிஞ்சி கோபுர மறுகு கேழ்கிளர் மனைகள்செய் குன்ற, நடங்குல வரங்கங் கலைபயில் கழக நற்றவ ரிருக்கைநான் மறையோர், இடங்கவி னரசர் வணிகர்பின் னவர்மற் றிழிந்தவ ருயர் ந்தவும் புணர்ந்து, எடங்கிய வருணத் தவரிட வகைசெய் தணிநக ரமைத்தனர் பின்னர்.

(இ - ள்.) அகழியும், நாற்பக்கமுஞ் சூழ்ந்த மதில்களும், கோபுரங்களும், வீதிகளும், நிறம்விளங்கும் வீடுகளும், கட்டுமலைகளும், நடனசாலைகளும், சாஸ்திராப்பியாசஞ்செய்யும் கல்விச்சாலைகளும், நல்ல தவசிகளிருக்கத்தக்க ஆச்சிரமங்களும், நான்குவேதங்களையும் அத்தியயனஞ் செய்யும் பிராமண வீதிகளும், அழகிய க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், இன்னும் உயர்ந்தவ ரும் தாழ்ந்தவரும் கூடியவழிப் பிறந்தவர்களாய் கலப்பு வாய்ந்துள்ள அநு லோமர் முதலியோர் ஆகிய இவருக்குத்தக்க இடங்களும் வகுத்து, அலங் காரமமைந்த நகரமுண்டாக்கினர். அதன் பின்னர். (எ - று.) (௭௨)

அநுலோமர் முதலியோராவார்-உயர்குலத்தானும் இழிகுலப்பெண்ணும் கூடிப்பிறந்தவர் அநுலோமர், உயர்குலப்பெண்ணும் இழிகுலத்தானும் கூடிப்பிறந்தவர் பிரதிலோமர், அநுலோமத்தானும் பிரதிலோமப்பெண் ணும் கூடிப்பிறந்தவர் அந்தராளர், அநுலோமப்பெண்ணும் பிரதிலோமத் தானும் கூடிப்பிறந்தவர் விராத்தியர் என்பவர்.

அங்கணன் பரம னாகம வளவை யாற்சின கரமெடுத் தமைச்சர் சிங்கணன் மரபின் முதலடி தொழுது திருநக ராலயஞ் செய்தே



கங்கணன் புடையா யெனவவ ருடன்போய் நோக்கியுண் மகிழ்ந்துநன் னுதலிற், செங்கணன் பூசை செய்வதற் காதி சைவரை யழைத்த னன் றென்னவன்.

(இ - ள்.) மந்திரிமார், அருட்கண்ணராகிய சிவபெருமான் ஆன்மாக் கள் பொருட்டு அருளிச்செய்த ஆகமப்பிரமாணத்தால் திருக்கோயிலை வகு த்து, நல்ல சந்திரகுலத்திலவதரித்த முதல்வனாகிய பாண்டியனுடைய பாத ங்களில் நமஸ்கரித்து, எங்களிடத்தில் அன்புடைய தலைவரே! அழகிய நகர மும், ஆலயமும் செய்து முடித்தோம் என்று விண்ணப்பஞ் செய்யக்கேட்ட அரசன், மந்திரிமாருடன் சென்று பார்த்து மனதில் மகிழ்ச்சியுற்று, நல்ல நெற்றியில் சிவந்தஅக்கினிநேத்திரத்தையுடைய பரமசிவனைப்பூசிப்பதற்கு ஆதிசைவப்பிராமணர்களையழைத்தார். (எ-று.) (௭௩)

விதிவழிச் சிவனைச் சிவபரம் பரையை விரும்பிநற் பதிட்டை செய் தவிர்செங் கதிர்முதற் சண்ட வரைப்பரி வாரக் கடவுளர்க் குறையுள்சூழ் கண்டு, புதியதேர் விழாக்கொண் மூர்த்தியும் வகுத் துப் பொன்முடி மணிக்குழை யார, நிதிவனை யாதி பலபணி யுதவி நித்தநை மித்திக நடத்தா.

(இ-ள்.) பின் விதிப்படி சிவலிங்கப்பெருமானையும், சிவபெருமா னுக்குரிய பராசத்தியையும், விருப்பத்தோடும் நன்கு பிரதிஷ்டைசெய்து, பிரகாசிக்கின்ற செவ்விய சூரிய மூர்த்திமுதல் சண்டேசுரரிறுதியாகக் கூறி ய பரிவாரதேவதைகளுக்குச் சுற்றிலும் வீற்றிருக்க ஆலயம்வகுத்து, புதிய இரதத்தில் மஹோற்சவங் கொள்ளுகின்ற மூர்த்திகளையும் உண்டாக்கிப், பொன்மயமாகிய கிரீடங்கள், இரத்தின குண்டலங்கள், முத்தாரம், பொற் கங்கணம் முதலிய ஆபரணங்களையுஞ் செய்வித்து, நித்திய, நைமித்திக பூஜைகளையும் நடத்தி, (எ-று.) (௭௪)

காதிகா தலன்முன் றருசட லிதெனுங் காட்சிய தொருபெருங் குளங்கண், டேகமில் சாலி விளைநிலம் பிறவு மியற்றியாப் புடைய நா தர்க்கு, நீதிநூ லறிவின் மறையவர் தமக்கு நேர்பகிர்ந் தளித்த னன் சிவனை, காதிகா ரணப்பேர் கழுவியங் நகரு மாப்பனூ ராயின தன்றே.

(இ-ள்.) முற்காலத்தில் காதியரசன்புத்திரராகியவிசுவாமித்திரமுனி வரால் உண்டாக்கப்பெற்ற சமுத்திரமேயிதுவென்று சொல்லுந்தோற்றமு

டைய ஒரு பெரிய தடாகத்தை உண்டாக்கிக் குற்றமற்ற நெல்விளைகின்ற நன்செய்நிலங்களும் மற்றுஞ்சோலை முதலியவைகளுஞ் செய்து, திருவாப்புடையீசருக்கும், ஸ்திருதியாதி நூலுணர்விற் சிறந்த அந்தணர்களுக்கும் அவ்விளைநில முதலியவற்றை நேர்பாதியாகப் பகுத்துக்கொடுத்தனர். திருவாப்புடையாரென்னும் சிவபிரானது முதன்மைபெற்ற காரணக்குறியைத் தழுவி அந்நகரமும் ஆப்பனூரென்றாயிற்று. (எ-று.) அன்று, வ- அசைகள்.

விசுவாமித்திரமுனிவர் வசிட்டமுனிவரோடு முரணித் தென்றிசையிலிருந்து தவஞ்செய்யுங்கால் திரிசங்கு என்ற அரசன் தன் குருவாகிய வசிட்டமுனிவரிடத்தில் வந்து வணங்கி இச்சரீரத்தோடேயே சுவர்க்கத்திற்குப் போகும்படி கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, முனிவர் பெருமான் அது முடியாதெனமறுக்க, அரசன் வேறு யார்மூலத்திலாவது பெற்றுக்கொள்ளலாமாவென்று கேட்கவும், அவனைச் சண்டாளனாகும்படி சபித்தவாறே நீசத்துவமடைந்து காட்டில்திரியுழி, விசுவாமித்திரரைக்கண்டுவணங்க, முனிவர் நீ யாரென்றுவினவலும், அம்மன்னன் நடந்தனவற்றைமுறையிற்றெரிவிக்க, அவ்வாறேசெய்வோமென்றுரைத்தலும், வசிட்டமுனிவர்புத்திரர்கள், ஒரு க்ஷத்திரியன் புலையனொருவனைச் சரீரத்தோடேயேசுவர்க்கத்திற்கனுப்புகிறானும். இதற்கு நாம் போகிறதா என்றிகழ்ந்தார்கள். அது தெரிந்த விசுவாமித்திரர் அவர்களைவேடராகச் சபித்து யாகத்தைப் பூர்த்திசெய்து திரிசங்குவை விமானத்திலேற்றிச்சுவர்க்கத்திற்கனுப்பும்போது, நீசன் வருதல் தகுதியன்றென்றுதேவர்கள் இகழ்ந்துதள்ளிவிடத்தலைகீழாக வருகிற திரிசங்கு விசுவாமித்திரரே அபயம் என முறையிடக்கேட்டு, அதட்டிக் கையாலமர்த்தி அங்கேயே நிற்கச்செய்து கோபித்துக் கடல்முதலிய யாவும் சிருட்டித்தார் என்பது சரித்திரம். (௭௫)

பூழிய னோரான் டிருந்துழி யொருநாட் புரிசைசூழ் மதுரையம் பதியி, லூழியி னொருவன் றுணையினைத் தொழுதங் கொல்லைபோ யாப்பனூ ருடையார், வாழிய குரவங் கமழ்குழ லுமையாள் மலரடி யஞ்சலித் தேத்தி, யாழிய வன்பி னுற்பிரி வாற்று நயர்ந்துநின் றனுமதி பெற்றே.

(இ-ள்.) பாண்டியன் ஒருவருஷம்வரையில் இருக்குங்கால் ஒருதினம் மதில்களாற் சூழப்பெற்ற மதுரையம்பதியில், ஊழிக்காலத்தும் அழிவின்றி விளங்கும் ஒப்பற்ற சொக்கலிங்கமூர்த்தியினது திருவடிகளைச் சிந்தித்து, அங்கு நின்றும் எழுந்து விரைந்து சென்று, திருவாப்புடையீசனையும், குரவங்கமழ்குழலம்மையையும், தாமரைமலர்போலும் திருவடிகளில் வணங்கித்



துதித்து மனதில் அழுந்திய பேரன்பினால், பிரிய மனம்பொறாமல் சோர்வடைந்து நின்று ஒருவாறு விடைபெற்றுக்கொண்டு, (எ-று.) வாழிய-மங்கல இடைச்சொல். ஏ-அசை. (௭௬)

கலிவிருத்தம்.

அன்படை மனத்தின னரன்றளி கடந்து
வன்படை யெழுச்சிசெறி வார்முர சியம்பத்
தன்படை முதற்றலைவர் தானைசூழ மிக்கார்
மின்படை நெருங்கமிசை வெண்குடை விளங்க.

(இ-ள்.) அன்பு பொருந்திய மனத்தையுடைய பாண்டியவேந்தன் அப்பெருமான் ஆலயத்தினின்று நீங்கி, வலிய சேனைகளுடைய புறப்பாட்டின்கண் வார்கள் நெருங்கிய முரசவாத்தியங்கள் முழங்கவும், தனதுமுதன்மையாகிய சேனைத்தலைவர்களும், கூட்டமாகிய சேனைவீரர்களுமிகுந்து, மின்னுகின்ற பலவகை ஆயுதங்களுடன் சூழவும், மேலே வெள்ளிய சந்திரவட்டக்குடை ஒளி செய்யவும், (எ-று.) (௭௭)

பூமுக மடந்தையர் தனம்புடை குலுங்கச்
சாமரை பணிப்பவரு தண்பவன நிம்பத்
தேமலர் மணத்தினொடு தின்சிகர மென்றோட்
காமரு தமிழ்ப்பொதிய வாரநறை கால.

(இ-ள்.) பொலிவுபெற்ற முகத்தையுடைய பெண்களது ஸ்தனங்கள் குலுங்கும்வண்ணம் சாமரங்களைவீசுதலால்உண்டாகின்றகுளிர்ந்தகாற்றானது தேன்செறிந்தவேப்பமலர் மாலையின் வாசனையுடன், பலம்பெற்ற மலைச்சிகரம்போலும் திருதுவான புயங்களில் அணியப்பெற்ற அழகிய தமிழ்வளரும் பொதியமலையிலுதித்த சந்தனத்தினதுவாசனையானது வீசவும், (எ-று.) மணத்தினொடு ஆரம்நறைகால என இயையும். (௭௮)

மாறுபடு செம்பியர் மடந்தையர் பயோதச்
சேறுபடு கொங்கைகர மென்பன சிவப்ப
வூறுபடு கொண்கருதி ரங்கொடு சிவக்கும்
வீறுபடு செங்கைவடி வாள்புடையின் மின்ன.

(இ-ள்.) தம்மோடு விரோதித்த சோழராஜாக்களின் பத்தினிமார்களுடைய சந்தனச்சாந்தணிந்த ஸ்தனங்களும் கைகளும் தமது கணவர்கள்

போரிலிறந்தமைபற்றி மனம் நொந்து, மார்பின் மோதிக்கொள்வதினால் சிவக்கும்படி, மடிதலையடையும் அந்நாயகர்கள் கடம்பியின்றா ஒழுகும் இரத்தத்தினால் சிவந்திருக்கும் பெருமை பொருந்திய செவ்விய கையினையுள்ள கர்மையர்களை வாளானது பக்கத்திலே ஒளிவீசவும், (எ-று.) (௭௯)

அன்னநடை வஞ்சியர்க ணீலமல ரக்கா
அன்னந நெடுங்குடைபி ரொன்றுநவி ரெல்லோர்ம்
மன்னர்கர பங்கய மலர்க்குல முகிழ்ப்பா
மின்னவிர் மதிக்குலநல் வேந்தெனல் விளங்க.

(இ-ள்.) அன்னம்போன்ற மெல்லியநடையினையுடைய பெண்களது கண்களாகிய நீலோற்பலங்கள் மலரவும், நீண்ட காம்புபொருந்திய விசாலமாகிய குடைகளையுடைய ஐம்பத்தைந்து தேசத்தரசர்களுடைய கைகளாகிய தாமரைமலர்கள் குவியவும் வருதலால், மின்னலைப்போல விளங்குகின்ற சந்திரகுலத்துதித்த அரசனென்பது நன்கு விளங்கவும், (எ-று.)

ஐம்பத்தாறு தேசத்தரசர்களுள் இப்பாண்டியதேசத்தரசனும் ஒருவனாகலின் "ஒன்றுநவிரெல்லோர் மன்னர்" என்றும், சந்திரனைக்கண்டவழிக் குவளைகள் மலர்தலும், தாமரைகள் குவிதலும் இயல்பாதல்போல, இம்மன்னனைக்கண்டவுடன் வஞ்சியர்கண்களாகிய குவளைகள் மலர்தலும், மன்னர் கைத்தாமரைகள் குவிதலும் நிகழ்தலையால் "மதிக்குலவேந்தெனல் விளங்க" எனவும் கூறினர். (௮0)

வருந்தினிடை யிடைப்படு சயம்புமகிழ் தானம்
புகுந்துதொழு தன்பொடு மிருந்தினிது போவா
னிகந்துத னகர்க்குவரு மிந்திரனி னின்ப
மகந்தர நிறைந்தமது ராபுரி யடைந்தான்.

(இ-ள்.) வழியில் இடையிடையே பொருந்திய சுயம்புமூர்த்தி விரும்பி வீற்றிருக்கும் தலங்களையடைந்து அன்புடன் வணங்கி வசித்து இன்போடு செல்லும் அப்பாண்டியன் தன்னகரத்தினீங்கிச்சென்று பின்னரும் தனநகரத்தை நோக்கிவரும் இந்திரனைப்போல யாவர்க்கும் உள்ளக்களிப்பை உண்டாக்கும்படி, சகலவளங்களும் நிறைந்துள்ள மதுரைமாநகரத்தைவந்தடைந்தனன். (எ-று.) (௮௧)

மன்றுமணி யன்னதிரு வீதிவல மாவந்
துன்னிலவு கோபுரம் வணங்கியு ளிணைந்தே



வண்ணநிறை பொற்கமல வாவியிடை மூழ்கி
யெண்ணுமொரு சித்திநத வேழமு னிறைஞ்சா.

(இ-ள்.) கழுவிய சுத்தமான இரத்தினம்போலும் அலங்காரமமைந்த வீதியை வலமாகவந்து, உள்ளே விளங்குகின்ற ஸ்தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கிக்கொண்டு ஆலயத்துட்சென்று, பொன்வர்ணமுள்ள இதழ்களையுடைய பொற்றாமரை என்னுஞ்சிவதீர்த்தத்தில்ஸ்நானஞ்செய்து யாவரும் தியானிக்கின்ற ஒப்பற்ற சித்திவிநாயக மூர்த்தியைத் திருமுன்னே வணங்கி, (எ-று.) ஏ-அசை. (௮௨)

தடம்படி கயற்கணுமை யைத்தொழுது சார்ந்து
படம்படி சுமக்கநிமிர் பாம்பணி புராணக்
கடம்படி முளைத்தமுதல் கான்மலர் வணங்கி
யுடம்படி தொடுத்துமன மொத்துருகி நின்றான்.

(இ-ள்.) தடாகங்களிலே தங்கியகயல்மச்சம்போலும் கண்களையுடைய உமாதேவியாரைவணங்கி, இப்பூமியைத் தாங்குவதற்கு நிர்மிக்கின்ற படத்தையுடைய ஆதிசேடனை ஆபரணமாக அணிந்த, பழமையாயுள்ள கடம்பவிருக்ஷத்தினடியிற்றோன்றிய முழுமுதற் பொருளாகிய சொக்கலிங்கப்பெருமானது திருவடித்தாமரைகளை நமஸ்கரித்து, சரீரத்தில் கால்முதல் சிரசளவும் நெஞ்சம்போல உருகி நின்றான். (எ-று.)

கால்முதல் சிரசளவும் மனம்போல என்பதனைத் திருவாசகம் "வெள்ளந்தாழ் விரிசடையாய்" என்னுஞ் செய்யுளில் "உள்ளந்தாணின்றுச்சியளவு நெஞ்சாயுருகாதால்" என்பதனாலும் அறிக. (௮௩)

நின்றுநுதி செய்துதிரு நீற்றொளி பழுத்த
குன்றுபுரை யண்ணல்விடை கொண்டுமட நல்லார்
மன்றுமுனி மங்கல மெடுத்தெதிர் வரப்போ
யென்றுமுறை கோயினு ளெனைந்தினி திருந்தான்.

(இ-ள்.) சந்நிதானத்தில் நின்று ஸ்தோத்திரஞ்செய்து அழகிய விபூதிப்பிரகாசம் முதிர்ந்த மலைபோன்ற சோமசுந்தரபாண்டியன் விடைபெற்றுக்கொண்டு இளமைவாய்ந்த மங்கையர்கள் மிக்க வாத்தியகோஷத்துடன் அஷ்டமங்கலங்களொடுத்து எதிரேவர, அவைகளோடு சென்று எப்போதும் இயல்பாகவுள்ள அரண்மனையையடைந்து சுகமாயிருந்தான். (எ-று.)

திருநீற்றொளிபழுத்த அண்ணலென்பது சிவபெருமானையுங்குறிக்கும்

அஷ்டமங்கலங்களாவன: சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல் என்பன.

(௮௪)

சந்ததமு மீசனிரு தாண்மலர் சிரங்கொண்
டந்திபகல் மன்னுயிர் தமக்கரு ளகங்கொண்
டெய்ந்தற முளைக்குமொரு கோலுயர் கரங்கொண்
டிந்திரனின் மிக்கர சியற்றிவரு நாளில்.

(இ-ள்.) சிவபெருமானது இரண்டு திருவடிகளாகிய தாமரைமலர்களை எப்போதுஞ் சிரசிலணிந்துகொண்டு, இரவும்பகலும் நிலைபெற்ற வுயிர்களிடத்துக் கிருபையை மனதிலே வைத்துச் சகல தருமங்களும், ஈடேறிநடப்பதற்குக் காரணமாகிய ஒப்பற்ற செங்கோலை உயர்ந்த கையிற்றாங்கியும், இவ்விதமாகத் தேவேந்திரனைப்போல மிகுதியும் இராஜரீகஞ் செய்துகொண்டு வருநாளில், (எ-று.)

(௮௫)

அங்கணர் சிவந்தசடை யாப்புடைய நாதர்
தங்கருணை யானது தனித்தொரு வமைந்த
திங்கிதுகொ லென்னவொரு புத்திரனை யீன்றான்
திங்களி னிளங்குழவி யென்றுலகு செப்ப.

(இ-ள்.) அருட்கண்களையுடையவரும், சிவந்த ஜடாபாரத்தையுடைய திருவாப்புடையீசரும்ஆகிய சிவபெருமானது கிருபையே திரண்டுசிகரற்று இவ்விடத்தில் ஒரு வடிவெடுத்ததோ என்றும், இளமை பொருந்திய பாலசந்திரனோ என்றும், உலகத்தவர் சொல்லத்தக்க ஒரு புத்திரனைப் பெற்றான். (எ-று.)

(௮௬)

உற்பவ மகிழ்ச்சிவினை செய்துல குவப்பச்
சொற்புனையு நாமகர ணஞ்சுகுண னென்றே
பொற்பவனி வித்தகவை யைந்தின்மதி புல்கும்
பற்பல கலைத்தொகுதி கற்பன பயிற்று.

(இ-ள்.) குழந்தை பிறந்ததனாலாகிய சந்தோஷத்தால் ஜாதகன்மமுதலியவற்றைச் செய்து, உலகினர் யாவரும் சந்தோஷிக்கக் கீர்த்திபெற்ற நாமகரணம் சுகுணபாண்டியன் என்று சிறக்கத்தரித்து, ஐந்தாவது வயதில்



அறிவு வளரத்தக்க நானாவிதமான சாஸ்திரங்களைக் கற்பித்து, (எ-று.) வ-அசை.

(௮௭)

வாள்வினையு முற்றிமத மாக்கவன மாவூ
ராள்வினையு முற்றிய தறிந்தவனி தாங்குந்
தோள்வினை குறித்துரிய தொன்முறைமை நல்கு
நாள்வினை யியற்றிமணி நன்முடி கவித்தான்.

(இ-ள்.) இராஜதருமத்துக்குரிய வாள்வித்தையையுங் கற்று, மும்மதங்களையுஞ் சொரியும் யானை, விரைந்துசெல்லுங் குதிரை என்னுமிவைகளை வசமாக்கவல்ல தொழில்களையுங் கற்று வல்லனாயிருப்பதைத் தெரிந்து, இப்பூபாரத்தைத் தோள்களிற்றாங்குஞ்செயலையுத்தேசித்து, தொன்றுதொட்ட தமதுஅரசுரிமையை ஒப்புவித்தற்குரிய சடங்குகளைச்செய்து மகுடாபிஷேகஞ் செய்வித்தான். (எ-று.)

(௮௮)

பின்னரிக போகநனி துய்த்தொழிவு பெற்றுத்
தென்னவன் விரத்தியொடு சித்தமசை வற்றுத்
தன்னையுணர் தத்துவ வுணர்ச்சிநிலை நின்றே
மன்னுதிரு வாப்புடைய வள்ளலை நினைந்தான்.

(இ-ள்.) சோழாந்தகபாண்டியன் தன் புத்திரனுக்கு முடிசூட்டிய பின்னர் இம்மையி லனுபவிக்கவேண்டிய போகங்களை நன்றாயனுபவித்து வெறுப்படைந்து, உள்ளத்துறவுடனே சித்தசலனமின்றி ஆத்மாவாகிய தன்னையறியத்தக்க தத்துவ விசாரணையில் நிலைபெற்று, நிலைபெற்றதிருவாப்புடை யீசரைத் தெரிசிக்கவேண்டுமென்று சிந்தித்தான். (எ-று.) ஏ-அசை.

தார்புரு தடம்புயன் விரைந்தரு டழைக்குஞ்
சீர்புரு கயற்கணுமை சேருமது ரேச
னேர்புரு பதந்தொழு தெழுந்தருளி யாப்ப
னூர்புக நடந்துநிறை யன்பொடவ ணுற்றான்.

(இ-ள்.) மாலையையணிந்த விசாலமாகிய தோள்களையுடைய அப்பாண்டியன் விரைவுற்று, திருவருளானது தழைந்து விளங்குஞ் சிறப்பமைந்த மீனாக்ஷியம்மையோடு கூடிய சொக்கலிங்க மூர்த்தியினது அழகிய திருவடிகளை நமஸ்கரித்து எழுந்து விடைபெற்றுக்கொண்டுபுறப்பட்டு, திருவாப்பனூருக்குப்போக நடந்து மிக்க அன்புடன் அவ்விடத்தை யடைந்தான். (எ-று.)

(௯௦)

கன்னிகுர வங்கமழ் குழற்கவுரி பாக
மன்னிநிறை யாப்புடைய வள்ளறிரு முன்னர்
சென்னிமிசை யஞ்சலி திருத்துபு நடந்தே
வன்னியிழு தொத்துருகி மண்ணிடை பணிந்தான்.

(இ-ள்.) இளமை வாய்ந்த குரவங்கமழ்குழ லம்மையை ஓர் பாகத்திற்கொண்டு வியாபித்து விளங்கும் திருவாப்புடை யீசரது அழகிய சந்நிதானத்தின்முன் சிரசின்மேல் அஞ்சலிசெய்து நடந்து அக்கினியிற்பட்ட நெய்போல மனங்கரைந்து பூமியில் நமஸ்கரித்தான். (எ-று.) ஏ-அசை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உடல்குழைந் துருக மேனி யுரோமங்கள் சிலிர்ப்பக் கண்ணீர்
மடைதிறந் தொழுக நெக்கு மனம்பதை பதைத்து வின்பந்
தடையறப் பெருகச் செந்நாத் தழுதழுப் படைய வேந்த
னிடையறு வன்பி னானின் றிவ்வகை துதிப்ப தானான்.

(இ-ள்.) அவ்வரசன் எழுந்து, சரீரம் குழைவுற்று உருகவும், அச்சரீரத்துள்ள மயிர்க்கூச்செறியவும், மதகின்மடையைத்திறந்தாற்போலக் கண்களினின்றும் ஆனந்தவெள்ளம்பெருக்கெடுத்துப் பாயவும், உள்ளம் கட்டுவிட்டுத் துடிதுடித்து உள்ளே பேரானந்தமானது தடையின்றி அதிகரிக்கவும், செவ்விய நாவானது தழுதழுப்படையவும், நீங்காத பேரன்பினால்நின்றுகொண்டு இவ்வண்ணந் தோத்திரஞ்செய்வான். (எ-று.) (௧௨)

காரணக் கடவுள் போற்றி கடல்வரு மால கால
பாரணப் பரம போற்றி பராபர யோகி போற்றி
பூரணச் சுடரே போற்றி புண்ணிய புராண போற்றி
யாரணப் பொருளே போற்றி யாப்பனூ ருடையாய் போற்றி.

(இ-ள்.) எவைக்கும் மூலகாரணமாகிய தெய்வமே என்னைக்காக்க; திருப்பாற்கடலிற்றோன்றிய ஆலகாலவிஷத்தைத் திருவமுது செய்தருளிய பரமனே என்னைக்காக்க; பராசத்திக்கு அப்பாற்பட்டு விளங்கும் கடவுளே என்னை என்னைக்காக்க; எங்கும் பரிபூரணமாய் நிறைந்த ஞானப்பிரகாசரே என்னைக்காக்க; தருமசொரூபியாயும் பழம்பொருளாயும் விளங்குபவரே என்னைக் காக்க; வேதப்பொருளாய் விளங்குபவரே என்னைக்காக்க; திருவாப்பனூரை யிடமாகவுடையவரே என்னைக்காக்க. (எ-று.)



பராபரயோகி என்பதற்கு பரமும் அபரமும் ஆகிய எப்பொருளினும் கலந்துள்ளவர் எனினும் பொருந்தும்.

போற்றிய என்னும் வியங்கோள் ஈறுகெட்டு போற்றி என நின்றது. போற்றி என்பதற்கு நமஸ்காரம் எனலும் ஆம். (௧௩)

திரிபுர விசய போற்றி தேவர்க டேவ போற்றி
பரிபுர வேத நாத பங்கயத் தாளே போற்றி
யெரிபுர மதனுக் காவி யிரதியா லளித்தாய் போற்றி
யரிபுரந் தரற்கு மெட்டா வாப்பனூ ருடையாய் போற்றி.

(இ-ள்.) திரிபுராதிகளை வெற்றிகொண்டவரே என்னைக்காக்க; தேவாதிபரே என்னைக்காக்க; வேதங்களாகிய சிலம்புகள் ஒலிக்கின்ற திருவடிகளையுடைய தலைவரே என்னைக்காக்க; சாம்பரா யெரிந்துபோன சரீரத்தையுடைய மன்மதனுக்கு அவன் மனைவியாகிய இரதி வேண்டிக்கொள்ள உயிரைக்கொடுத்தவரே என்னைக்காக்க; விஷ்ணுமூர்த்தி தேவேந்திரன் முதலிய தேவர்களுக்கும் காணமுடியாத திருவாப்பனூரை யிடமாக வுடையவரே என்னைக்காக்க. (எ-று.) (௧௪)

உலகெலா நிறைந்தாய் போற்றி யொண்டிறல் படைத்த வெங்கோன், மலருளோன் சாப மன்றி மற்றொரு சாப மேறு,நலனுலாம் புழைக்கை வேழ நாதனைப் பயந்தாய் போற்றி,யலகில்சோ தியனே போற்றி யாப்பனூ ருடையாய் போற்றி.

(இ-ள்.) எல்லாவுலகங்களினும் நிறைந்திருப்பவரே என்னைக்காக்க; மிக்க வலிமைபெற்ற வெவ்விய புஷ்பபாணங்களையுடைய மன்மதனது சாபமேயல்லாமல் வேறே யாதொரு சாபமும் அடையாத நன்மை பொருந்திய துதிக்கையையுடைய யானைமுக விநாயகமூர்த்தியை யீன்றவரே என்னைக் காக்க; அளவில்லாத ஜோதிசொரூபமானவரே என்னைக் காக்க; திருவாப்பனூரை யிடமாகவுடையவரே என்னைக்காக்க. (எ-று.)

விநாயகக்கடவுளுக்கு யானைமுகமுடைமையால் கரும்பில் விருப்பமுண்டென்பதுபற்றி அக்கரும்புருவாயமைந்த மன்மதன் சாபம் அணுகப்பெற்றதென்பார் "வெங்கோன் மலருளோன் சாபமன்றி" என்றும், பிறராற் கொடுக்கப்படும்சாபங்கள் ஏறப்பெறாத நின்மலமூர்த்தி என்பார் "மற்றொரு சாப மேறுவேழநாதன்" என்றுங் கூறினார்.

சாபமென்பது வில்லையும் சாபமொழியையும் முறையேயுணர்த்தி நிற்றலால் சிலேடை. (௯௫)

சுடர்மழுப் படையாய் போற்றி சுருதிசொன் னடையாய் போற்றி
படர்நதிச் சடையாய் போற்றி பாலனப் படையாய் போற்றி
யிடர்மனத் தடையாய் போற்றி யிவர்ந்தவெள் விடையாய் போற்றி
யடர்தலைத் தொடையாய் போற்றி யாப்பனூ ருடையாய் போற்றி.

(இ-ள்.) பிரகாசம் பொருந்திய மழுவாயுதத்தையுடையவரே என்னைக் காக்க; வேதங்களினாற் புகழப்படும் நிலைமையையுடையவரே என்னைக்காக்க; விரிந்த கங்கையையணிந்த சடைமுடியையுடையவரே என்னைக்காக்க; உலகங்களைக்காக்கும் விஷ்ணுவாகிய பாணத்தையுடையவரே என்னைக்காக்க; துக்கத்தில் மூழ்கிக்கிடப்பவரது மனத்தில் நிலைபெறாதவரே என்னைக் காக்க; ஆரோகணித்தருளும் வெள்ளிய இடபவாகனத்தையுடையவரே என்னைக்காக்க; நெருங்கிய தலைமாலையையணிந்தவரே என்னைக்காக்க; திருவாப்பனூரையிடமாகவுடையவரே என்னைக்காக்க; (எ-று.)

"சுருதி சொன்னடையாய்" என்பதற்கு வேதங்களையருளிச்செய்தவொழுக்கமுடையவரே எனவும், (இடர்மனத்தடையாய்) என்பதற்கு திருவுளத்தில் யாதொருகவலையும் இல்லாதவரே எனவுங் கூறினும் அமையும். (௯௬)

மாக்கட லாவ நந்த வனமடைப் பள்ளி மாயோன்
மேக்குபர் விடைகோல் காந்தை விளங்குமர்ச் சகர்மென் மெல்லப்
போக்குயிர்ப் பொருநால் வேத புராணவா கமங்க ளாக
வாக்குமெம் மிறைவ போற்றி யாப்பனூ ருடையாய் போற்றி.

(இ-ள்.) பெரிய சமுத்திரத்தை, அம்பறுத்தூணியாகவும், திருநந்தனவனமாகவும், திருமடைப்பள்ளியாகவும், விட்டுணுமூர்த்தியை, ஆரோகணித்தருளும் இடபவாகனமாகவும், பாணமாகவும், நாயகியாகவும், விளங்குகின்ற அருச்சகருமாகவும், மெல்ல மெல்ல இரேசிக்கின்ற சுவாசங்களை ஒப்பற்ற நான்குவேதங்களாகவும், ஆகமங்களாகவும், புராணங்களாகவும் செய்தருளிய எமது தலைவரே திருவாப்பனூரையிடமாகவுடையவரேஎன்னைக்காக்க (எ-று.) (௯௭)

வேட்டமா தினைக்கு மென்னை மீட்டுயி ரளித்து முன்பு
காட்டகத் தறிவாய் வந்து காட்சிசெய் கருணை போற்றி



நாட்டமூன் றுடைய வெங்க ணாயக போற்றி பைவா
யாட்டர வணிந்த சோதி யாப்பனூ ருடையாய் போற்றி.

(இ-ள்.) வேட்டைத்தொழிலிற்களைத்த அடியேனுக்குமீட்டும் உயிரைக்கொடுத்து, முன்னே காட்டினிடத்துள்ள ஆப்பிற்றோன்றித், தெரிசனந்தந்தருளிய அக்கிருபை என்னைக்காக்க; திரிநேத்திரங்களையுடைய எமதுகடவுளே என்னைக்காக்க; ஆடுகின்ற படம் பொருந்திய சர்ப்பத்தைத் தரித்தருளிய சோதி சொரூபமாயுள்ள திருவாப்பனூரையிடமாகவுடையவரே என்னைக்காக்க. (எ-று.) (௯௮)

என்னநின் றேத்தி யீச னின்னருள் கைக்கொண் டீர்ந்தார்
மன்னனன் றப்ப னூருள் வதிந்தன னாக வந்தத்
தென்னனின் றேத்துந்தெய்வத்திருத்துதியரன்பொற்கோயின்
முன்னர்நின் றேத்து வோர்த முழுவினை யொழிவர் மாதோ.

(இ-ள்.) என்றிவ்வாறு சந்நிதானத்தில் நின்று துதித்து, அத்திருவாப்புடையீசர் திருவருளைப்பெற்றுக்கொண்டுகுளிர்ந்தமாலையையணிந்த அவ்வேந்தன் சுகமாய் அத்திருவாப்பனூரிலேயே வசித்தான். அப்பாண்டியன் துதிசெய்த சிறந்த தோத்திரங்களைச் சிவபெருமானது அழகிய ஆலயத்தின் எதிரில் நின்று துதிசெய்கிறவர்கள் தம்முடைய வினைமுழுதும் நீங்கப்பெறுவார்கள். (எ-று.) ஆக என்பது இடைச்சொல். (௯௯)

வேண்டிமுன் றனையீர்த் தாட்கொள் விமலர்க்குச் சிறந்த பூசை
தூண்டுதேர் விழாவு முள்ளம் பெருங்களி தூங்கச் செய்தோ
ராண்டுறைந் தருளு நாள்வா யாப்பனூ ருடைய வண்ண
னீண்டபே ரருளும் வேந்த னாயுளு நிரம்பிற் றன்றே.

(இ-ள்.) முற்காலத்திலே தன்னைக் காட்டிலடைவித்து விரும்பி ஆட்கொண்டருளிய மலரகிதராகிய அப்பெருமானுக்குச் சிறப்பாகிய நித்திய நைமித்திகங்களையும், செலுத்துகின்ற இரதோற்சவமும் ஆகிய இவைகளை மனதில் மிக்க சந்தோசத்தையடைய நடத்தி, ஒருவருடகாலம் அங்கே வாசஞ்செய்துகொண்டிருக்கும் நாளில் திருவாப்புடையீசரது மிக்க திருவருளும் அப்பாண்டியனது வாழ்நாளும் பூர்த்தியாயின. (எ-று.)
அன்று, ஏ - அசைகள். (௧௦௦)

### வேறு.

கிடைப்பரிய பெருங்கதிக ளொருமூன்றுங் கடந்துபோய்க்
கொளிர்வா னேமிப், படைக்கரிய நிறத்தவற்கு நான்முகற்கு மடைவ
ரிய பதவிமேவி, விடைக்கடவுள் சிவபுரத்தி னவனுருவி னுடன்கல
ந்து வேறற் றொன்றாய்த், துடைத்தவிரு வினைச்சோழாந் தகமாறன்
விளங்கினான் றொன்றான் மன்னோ.

(இ-ள்.) முற்காலத்தில் நல்வினை தீவினை யென்னும் இருவினைகளை யும் அறப்போக்கிய சோழாந்தகபாண்டியன் கிடைத்தற்கரிய சிறந்த சாலோக சாமீப சாரூபமென்னும் மூன்று பதவிகளையுங்கடந்து போய், ஒளிபெற்ற சக்கராயுதத்தைத்தரித்த நீலநிறத்திருமேனியையுடைய விட்டுணு மூர்த்திக்கும், பிரமதேவருக்கும், எய்தற்கரிய சாயுச்சிய பதவியடைந்து, இடபவாகனத்திலமரும் சிவபெருமானது சிவலோகத்தில் அவ்விறைவன் திருவுருவத்தோடு கலப்புற்று, துவிதமற்று அத்துவிதமாய் விளங்கினான். (எ-று.) மன், ஓ-அசைகள். (௧௦௧)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

*மேய வழுதியுயர் சோழாந்தகன் வீடு மருவுகதை யிதாஞ்சொல்
வோர், கேய மொடுசெவியின் வாய்மடுத்தினர் நீடு பொருண்முழுது
மாராய்ந்துளோர், தீய வினையொழிவர் மேலாம்புகழ் சேர்வர் குறை
தவிர வேவாழ்ந்துநீ, ளாயு ளிறுதியினி னுலாம்பத மாவ தடைவரு
ள் கூர்ந்தரோ.

(இ-ள்.) நிலைபெற்ற சோழாந்தகபாண்டியன் சிறந்த மோக்ஷத்தை யடைந்த சரித்திரம் இதுவாகும். பிறர்கேட்கச் சொல்பவர்களும், அதையன்புடன் காதாற்கேட்பவர்களும், அதிலுள்ள பொருள்கள் யாவற்றையும் விசாரித்தறிந்தவர்களும், கொடிய வினைகளினின்றும் நீங்குவார்கள். மேலான கீர்த்தியையடைவார்கள். யாதொரு குறைவுமின்றி வாழ்ந்து நீடித்த தம் வாழ்நாளின் முடிவில் திருவருள் மிகப்பெற்று சாயுச்ய பதவியை யெய்துவார்கள். (எ-று.) ஏ, அரோ-அசைகள். (௧௦௨)

ஆப்பனூர்ச் சருக்கம் முற்றிற்று.

ஆக, திருவிருத்தம். ௧௦௨.

---

# இடவபுரச்சருக்கம்.

## கலிநிலைத்துறை.

இக்காதை யமுதப்பெ ருந்தாரை நனைவித்த விருகாதுளீர்
முக்காலு மும்மையொப்ப ரியாரென்று மகிழ்வுற்ற முனிசூதனை
யக்காலே முனிவோரெ ழுந்தஞ்ச லித்தேத்த வணியாப்பனூர்
மெய்க்கார ணன்பெற்ற நகரீச னுங்காதை விண்டானரோ.

(இ-ள்) இந்தச்சரிதமாகிய பெரிய அமிர்ததாரையினால் நனையும்படி செய்த இரண்டு காதுகளையுடைய முனிவர்களே உங்களை யொப்பவர் யாரிருக்கின்றார்கள் என்று, மும்முறை கூறிச் சந்தோஷமடைந்த சூதமுனிவரை அப்போது அம்முனிவர்கள் எழுந்து, அஞ்சலிசெய்து துதிக்க, அழகிய ஆப்பனூரில் எழுந்தருளிய மூலகாரணமாகிய சிவபிரான் இடபபுரேசராகிய கதையைக் கூறினார். (எ-று) அரோ-அசை.

முக்காலும் என்பதற்கு முக்காலத்திலும் எனப் பொருள் கொள்வதூம் உண்டு. (௧)

சுடர்சூழ நெடுவேணி மிசையிந்து வழிவந்த சோழாந்தகன்,
கடல்சூழ்ந்த ரும்பார்பு ரந்தீச னுடன்மேவு கதிசேர்ந்தபி
னடல்வாகை புனைமீளி சுகுணப்பெ யர்ப்பூழி யன்காமர்வெண்
குடைநீழ லுலகின்க ணுயிர்வாழ முறைசெய்துகோலோச்சுநாள்.

(இ-ள்) பிரகாசம் பொருந்திய நீண்டசடைமுடியிற்றரிக்கப்பட்டுள்ள சந்திரவமிசத்திற்றோன்றிய சோழாந்தக பாண்டியர் சமுத்திரஞ் சூழ்ந்த இப்பூவுலகைக்காத்துச் சிவபெருமானது திருவடிநிழலிற் சேர்ந்தபின், வலிமைபொருந்திய வெற்றிமாலையையணிந்த திண்ணியனாகிய சுகுணபாண்டியன் அழகிய வெண்ணிறமுள்ள சந்திரவட்டக் குடைநிழலில் உலகத்திலுள்ள உயிர்கள் வாழும்படி செங்கோன்முறை செலுத்துநாளில். (எ-று) (௨)

விறுநி லத்தேவர் திரிகால கருமத்தின் விலகாதின்
மாறாத செந்தீவ ளர்த்தெங்கும் விண்மாரி வருவிப்பர்வன்
பாறுமிம்வேன் மன்னர் முதன்மூன்று வருணத்தர்பல்லிப்பெறும்
பேறுன தங்கன்மம் வழுவாத நெறிநிற்பர் பின்றோர்களால்.

(இ-ள்) பெருமைபொருந்திய பூமிக்குத் தேவர்களாயுள்ள பிராமணர்கள் காலை உச்சி மாலை யென்னு மூன்று காலங்களிலும் செய்யும் நித்திய கரு

மங்களில் தவறுதவர்களாகி, மாறுபடாத செவ்விய அக்கினி காரியங்களை விதிப்படி செய்து, அதனால் எங்கும் ஆகாயத்தினின்றும் மழையைப் பெய்விப்பர். வலியபருந்துகள் வந்துசேரும் வேற்படையையுடைய அரசர் முதலிய மூன்று வருணத்தவர்களும் விருத்தியடைந்து பெறத்தக்க பேறுகிய தமது நியமானுஷ்டானங்களில் தவறுதலில்லாத சன்மார்க்கத்தில் நிலைத்திருப்பர். அதிற்பின்னிடையார்கள். (எ-று) ஆல்-அசை. (ரு)

மாரிக்கு வித்தன்ன மடமாதர் கற்போங்கி மல்கும்பெருக்
காரிக்கு முதலான பைங்கூழ்நி லந்தான்சு ரந்தேவளம்
பாரிக்கு நாளும்ப லத்தோடி ருக்கும்ப சுங்காவெலசம்
பூரிக்கு நல்லானி னம்பான்மி குந்தேபொ ழிந்தாயுமால்.

(இ - ள்) உலகத்தில் மழை பெய்வதற்குக் காரணமாயுள்ள இளமைவாய்ந்த பெண்களுடைய கற்பானது விர்த்தித்து நிலைபெறும். பெரிய வேர்களையுடைய கரும்பு முதலிய பலபயிர்களும் நிலங்களில் மிகுந்து வளம் பெற்றிருக்கும். பசிய சோலைகளெல்லாம் எக்காலும் கனிவர்க்கங்களோடு பொலிவடைந்திருக்கும். பூரிப்படைந்த நல்ல பசுக்கூட்டங்கள் யாவும் பால் அதிகரித்துப் பொழிந்துகொண்டு மேலுமேலும் சுரக்கும். (எ - று) ஏ, ஏ, ஆல்-அசைகள். (சு)

தானங்க வங்கல்வி மெய்ஞ்ஞான மின்பந்த மைக்கீ நிலா
வானந்த போகந்த ழம்புந்த மிழ்ப்பாண்டி யனிநாடெலாம்
வானம்பெ ருஞ்சீர்வி ரும்புந்த கைத்தாயில் வன்மாப்பனு
ரானந்த விர்ந்தேபல் லுயிர்வாழ வந்நாளி லோராண்டரோ.

(இ - ள்) தானமும், தவமும், கல்வியும், உண்மை ஞானமும், சுகமும் ஆகிய இவைகள் அதிகரித்து அளவில்லாத ஆனந்தானுபவமானது தழும்புகின்ற தமிழ் வழங்கும் அழகிய பாண்டியதேசமுழுதும், தேவர்களும் பெரிய சிறப்புகளை விரும்பத்தக்க மேம்பாடுடையதா யிவ்வாறு நெடுங்காலம் வரையில் குறைவின்றிப் பல்வுயிர்களும் வாழ்ந்துகொண்டிருக்க, அக்காலத்தில் ஒருவருடத்தில் (எ - று) ஏ, அரோ-அசைகள். (ஏ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மருவு கோளிலே திரிய மாரிவ றப்ப வேரிவ றந்துபோய்ப்
பெருகு கூவலு நீர்சு ருங்குபு பேரு யிர்க்கொகை யெய்த்திடப்

பொருவி லானின மாதி நாத்தலை புற்ற லைப்பட வின்றியே
திரிய நீர்விளை வஃகி வந்தது சிறுவி லைப்படி நாளரோ.

(இ - ள்) பொருந்திய கிரகங்களெல்லாம் தத்தம் நிலைகளினின்றும் தவறிச்செல்லுதலால் மழையின்றி ஏரிகளில் நீர்வற்றிப்போய்ப் பெருகிய கிணறுகளும் குறைந்து அதனால் அநேக உயிர்கள் பசியால் வருந்தி யிளைக்கவும், ஒப்பற்ற பசுக்கூட்ட முதலியவைகள் தம்முடைய நாவின்கண் உண்ணுதற்குப் புற்கள் கிட்டுதலில்லாமல் அலையவும், தண்ணீரும் விளைவும் நாளுக்குநாள் குறைந்து அற்ப விற்பனையையுடைய பஞ்சகாலம் அணுகியது. (எ - று) அரோ - அசை. (அ)

அந்த நாளணி யாப்ப னூர்வரு மந்த ணாளர்க ளெண்ணியே
சந்த வான்மழை யின்மை யால்வரு தங்கள் பங்குநி லக்களை
முந்த நீடுப ருத்தி வித்திமு ளைத்து வான்பயி ராகமு
னந்த வாப்புடை நாதர் பங்குவ யற்க ணங்கவ் ரருளினால்.

(இ - ள்) அந்தப்பஞ்சகாலத்தில் அழகிய திருவாப்பனூரிலிருக்கின்ற மறையவர்கள் யோசித்து அழகிய மேகங்களாற் பொழியப்படும் மழையில்லாமையால் தங்கள் பாகமாகிய நிலங்களிலே செழிப்புள்ள பருத்திகளை முன்னர் விதைத்து அது முளைத்து நல்ல பயிராயிருக்க ஆதியிலேற்பட்ட திருவாப்புடையீசர் பாகமாகிய வயலிலே அக்கடவுளுடைய திருவருளால் (எ - று) ஏ, ஏ-அசைகள். (எ)

உண்ணு மேரியின் மண்டொ டுங்குழி யுள்ள டங்கிய நீரினால்
வெண்ணி றச்சிறு நெற்ப யிர்க்கொள வித்தி நாடொறு மாப்பனூ
ரண்ண லார்திரு மேனி தீண்டுமொ ராதி சைவன்வ ளர்க்குநாட்
புண்ணி யப்பொருள் போல்வ ளர்ந்துபொ லிந்து பைங்கதிர் விட்டதால்.

(இ-ள்) யாவருந் தண்ணீரெடுத்துண்கின்ற ஏரியிலே மண்ணெடுத்திருக்கும் பள்ளத்திலடங்கியிருந்த புனலினால் வெண்ணிறத்தையுடைய சிறிய நெற்களைப் பயிருண்டாக விதைத்து, தினமும் அத்திருவாப்பனூர்ப் பெருமானது திருமேனியைப் பரிசித்துப் பூசிக்கின்ற ஓர் அர்ச்சகர் விருத்திசெய்து வருநாளில், அது புண்ணியத்தா லீட்டப்படும் பொருள் மேலும் மேலும் விருத்தியாதல்போல வளர்ச்சியுற்றுப் பொலிவடைந்து பசிய கதிர்களை வெளி வீசிற்று. (எ-று) ஆல் - அசை. (அ)

செவ்வி லத்துறு சாலி பைங்கதிர் நீட்டல் கண்டு திருந்துநான்
மன்னர் முன்னவ ருன்னி யுன்னி மனம்பொ றுமலின் வேரிநீர்
தன்னுவ பாதிய தன்றி யேமுழு துஞ்சை வசகம் வேதிய
னென்ன வன்மைத னெற்ப யிர்க்களி றைப்ப தென்றகு றாங்கொளா.

(இ-ள்) சொற்ப நிலத்திலேயுள்ள அந்த நெற்பயிர்கள் பசிய கதிர்களை வெளிவீசி யிருப்பதைப்பார்த்து, திருத்தமான நீதிநூலில் வல்ல அரச குலத்திற்கு முற்குலத்தவராகிய வேதியர்கள் நினைத்து நினைத்து மனஞ்சகியாமல், இந்த ஏரியிலுள்ளநீரில் பாதி உபயோகித்துக்கொள்வதன்றி, முழுமையும் சிவாகமங்களைநன்குணர்ந்த அருச்சகன், தான் செய்த நெற்பயிர்க்கு, இறைக்கிறது என்ன சாமர்த்தியமென்று கூட்டங்கூடி. (எ-று) ஏ - அசை (௯)

வீறு சேர்நி லத்தி னீடிய வெண்ப ருத்திக ணீரிலா
தீறு காண்குற வாயி ருப்பதெ னிக்கு ளத்திரு கூறிலோர்
கூறு நீர்நம தேய தற்கொரு கோதி யாதுகவ் வாயிலுட்
சேறு காணவி றைத்து நங்குறை தீர்வ மென்றுரை செப்பினர்.

(இ-ள்) பெருமை பொருந்திய அந்நிலத்திலுள்ள வெண்ணிறமான பருத்திச்செடிகள் தண்ணீரில்லாமற் றளர்ச்சியடைய நாம் வாளாவிருப்பதென்னை. இந்தக்குளத்தில் இரண்டு பாகத்தில் ஒரு பாகத்துத் தண்ணீர் நம்முடையதேயாம். அதற்கு யாதொரு குற்றமுமில்லை. ஆதலின் இவ்வேரியிலுள்ள நீரைச் சேறுகாணும்படி (பருத்திகளுக்கு) இறைத்து நமது குறையை நிவிர்த்திசெய்து கொள்வோமென்று கூறினார்கள். (எ-று) (௧௦)

அன்ன செய்திய றிந்த யர்ந்திடு மாதி சைவரு ளுத்தம
னென்னசெய்வமி தற்கெனநெடி தெண்ணியெண்ணிவருந்தவான்
சொன்ன விப்பிரர் பான டந்துதொ டர்ந்து போரவை யுட்புகுந்
தின்னல் கூரவி ரங்கி வாய்மொழி யின்ன கூறின னாலரோ.

(இ-ள்) அச்செய்தியை யறிந்து தளர்ச்சியடைந்த ஆதிசைவப் பிராமணர்களுள் உத்தமராகிய அவ்வருச்சகர், இதற்கென்ன செய்வோமென்று மிகவும் நினைத்து நினைத்து, வருத்தமடைந்தவராகி, இவ்வாறுரைத்த அப்பிராமணர்களிடத்தில் நடந்து அவர் பின் சென்று, துன்பம் அதிகரிக்க, இரக்கமுற்று, இத்தகைய சொற்களைச் சொன்னார். (எ-று)

ஆல், அரோ - அசைகள். (௧௧)



ஆதி நூலொரு நாலு நாலுட னங்க நான்முத லாகுநூ
னீதி நூலும றிந்துளீர்வி ளைநீள்ப ருத்திய வாயினும்
பாதி நீரத னுக்கி றைப்பது பன்னி னீரெனல் கேட்டன
னீதி யீருமு யுக்த மென்பரெ வர்க்கு மின்னதி சைந்திரா.

(இ-ள்) முதனூலாகிய நான்கு வேதங்களுடனே வேதாங்க முதலிய நூல்களையும், நீதிசாத்திரங்களையுங் கற்றுணர்ந்த பிராமணர்களே! மிகவிளைந்திருக்கிற பருத்திச்செடிகளுக்குத், தண்ணீர் வேண்டுமானாலும், பாதிபாக நீரை (அப்பருத்திக் கிறைத்துவிடுகிறதென்று சொன்னதாகக் கேள்வியுற்றேன்.) இதனை யாவரும் யுக்தமல்லவென்று கூறுவர். எவருக்கும் அங்கீகரிக்கப்பட்டிராது. (எ-று)

அங்கநூல் முதலிய நூல்களாவன:—சிக்ஷை, வியாகரணம், நிருத்தம், ஜோதிடம், கற்பம், சந்தோபிசிதி என்னும் வேதாங்கம் ஆறும், தருக்கம், மீமாஞ்சை, புராணம், ஸ்மிருதி யென்னும் உபாங்கம் நான்குமாம். (௧௨)

அன்றி யாப்புடை நாத னூர்திரு வமுது செய்வத னுக்கிவை
யின்றி யேயமை யாமை யாலரு ளீரெ னக்கொடி ரந்தன
னன்றி லீதவர் நஞ்சு ணத்தகு நாதர் தானமு துண்பரோ
வென்ற சங்கதி யாடி வன்மையி யம்பி யொல்லையெ ழுந்தரோ.

(இ-ள்) இஃதல்லாமலும், அத்திருவாப்புடையீசர் நைவேத்தியத்திற்கு இந்நெல் இன்றியமையாததாதலால் கிருபைசெய்யுங்களென்று பிரார்த்தித்துக்கொண்டனர். நற்குணமில்லாதவர்களாகிய அப்பிராமணர்கள் விஷத்தையுண்ட கடவுள் அன்னத்தையுண்பரோ என்ற சொற்களைக்கூறி, கொடுஞ்சொற்சொல்லி விரைய எழுந்து. (எ-று). அரோ - அசை. (௧௩)

ஷ வேறு

எண்ணீர்மை யற்ற மறையோர்ப ருத்தி யிடையேகு ளத்து
ளருகுந், தெண்ணீரி றைப்ப வதுகண்டு சிந்தை தெருமந்து நின்று
செயல்போய்க், கண்ணீரி றைத்து முறையிட்டி ரந்து கரையாதி சைவன் முடிமேல், விண்ணீர்மு டித்த திருவாப்ப னூரர் மெய்த்தாண்
முன் வீழ்ந்து மொழிவான்.

(இ-ள்) ஆலோசனைத் தன்மையில்லாத பிராமணர்கள் (தங்கள் வயலிலுள்ள) பருத்திச்செடியில், அக்குளத்தில் மிகக் குறைந்திருக்கின்ற, தெளி

ந்த சலத்தை யிறைக்க, அதைப்பார்த்து மனஞ்சுழன்று நின்று, செயலற்றுக், கண்ணீரைச் சொரிந்துகொண்டு, தங்குறையைச் சொல்லி வேண்டியழுத அவ்வர்ச்சகர், சென்னியில் கங்கையைத்தரித்த திருவாப்புடையீசரது உண்மைத் திருவடிகளின்முன் நமஸ்கரித்துக் கூறுவார். (எ-று) (க௪)

தேவாதி தேவ கயிலாய வாஸ திரிசூல நாத முறையோ
மாவாடு தாரு வனவிப்பி ரேசர் வலிபட்ட சம்பு முறையோ
மேவார்பு ரங்க ளனிபாழ்ப டுத்த விறல்வாகை வீர முறையோ
வாவாவி தென்கொன் மறையோர்செய் தீமை யனியாப்ப வூர முறையோ.

(இ-ள்) தேவாதிபரே, திருக்கைலாய மலையில் வீற்றிருந் தருள்பவரே, மூன்று சிரசையுடைய சூலாயுதத்தைத் தரித்த கடவுளே இது முறையாமோ, மிருகங்கள் சஞ்சரிக்கின்ற தாருகவன முனிவர்களுடைய வல்லமையைக் கெடுத்த சம்புவே யிது முறையாமோ, விரோதிகளாகிய திரிபுராதிபர்களுடைய முப்புரங்களையும் தனியே பாழாக்கிய வலிய வெற்றி பொருந்திய வீரமுடையவரே இதுமுறையாமோ, ஆ ஆ இதென்ன வியப்பு. அழகிய திருவாப்புடையீசரே! இப்பிராமணர்கள்செய்கிற தீமைமுறையாமோ? (எ-று) சம்பு - இன்பத்தை விளைவிப்பவர். (கரு)

என்றென்ற ரற்றி மொழிகின்ற சைவ விதயக்க ரிப்பின் வழியாய்
நின்றென்று மன்பர் நினையுங்க ருத்து நிறைவேற்று மாதி மறைநூ
லன்றென்று மற்றி தாமென்று முண்மை யறியாதி ளைப்ப முடிவி
லொன்றென்று நின்றபொருண்மூலலிங்கவுருநின்றும்வந்துபகர்வான்.

(இ-ள்) என் றிவ்வாறழுது முறையிட்ட அர்ச்சகருள்ளக் குறிப்பின் வழியே தாமு நின்று, எப்போதும் அடியார்களெண்ணும் எண்ணத்தைப் பூர்த்திசெய்தருளும், முதற்கடவுளாகிய அப்பெருமான், வேதங்கள் இஃதல்லவென்றும், இஃதாமென்றும் யதார்த்தத்தைத் தெரிந்துகொள்ளாது முறையிட்டு வருந்த, இறுதியில் ஏகமாய்நின்ற அவ்விறைவர் மூலஸ்தான மஹாலிங்கத்தினின்றும் வெளிப்பட்டுத் திருவாய்மலர்ந்தருளுவார். (எ-று) மற்று - அசை. (கசு)

## கலிநிலைத் துறை.

இசைய நந்தமை வழிபடும் வேதிய விவ்வூர்
நசைபொழித்தியா மெலைமக ளுமையொடு நலஞ்சேர்



திசைவ யிற்படர்ந் தளத்தினுக் கிசையிடஞ் செல்வேம்
வசையி லாதநின் குடும்பமு நீயும்பின் வருதி.

(இ-ள்) பொருத்தமாக நம்மை வழிபடும் ஓ அந்தணனே! இவ்வூரிலினி வசிக்கவேண்டுமென்னும் இச்சையை விட்டுவிடு, நாமும் பார்வதிதேவியோடும் வளம் நிரம்பிய திசைகளில் நடந்து நமது திருவுளத்திற் கிசைந்த ஓரிடத்தில் அடைந்தருளுவோம். குற்றமற்ற உனது சுற்றத்தாருடன் நீயும் பின்னே வருவாயாக. (எ-று) (கஎ)

தொழுகு லத்தில்வந் திழிகுலத் தியற்கையைத் தொடர்ந்து
பழுதி யற்றிநீர் பருத்தியுட் பாய்ச்சிய பதக
ரழுத ரற்றநம் மாணையி னுருமினோ டதிர்கன்
மழையி றைப்பவூர் பாழ்படு மாய்ந்தென வழங்க.

(இ-ள்) யாவரும் வணங்கும் பிராமண குலத்திலே பிறந்தும், தாழ்ந்த குலத்தினர் செய்யும் கீழான தொழிலை யனுசரித்துக் குற்றஞ்செய்து தண்ணீரைப் பருத்திச்செடிக் கிறைத்த அப்பாதகர்கள் அழுது முறையிட நம்மாஞ்ஞையால் ஒலிக்கின்ற இடியோடும் கன்மழை பொழிய இவ்வூரும் மாண்டு பாழாய்விடும் என்று திருவாய்மலர்ந்தருள. (எ-று) (கஅ)

தேவ தேவநல் லிலக நாயக தெரிந்த
மூவர் வானவ ருந்தவர் யோகியர் முனிவ
ரேவ ருந்தொட ராவுனை யெங்ஙனந் தொடர்வே
னாவி யன்னமன் னுளொடும் போம்வழி தருவி.

(இ-ள்) தேவாதிபரே. எமது திருவாப்புடையீசரே. தேவரீருடைய இயல்பறிந்த மும்மூர்த்திகளும், மற்றைய தேவர்களும், அரிய தவசிகளும், யோகியர்களும், முனிவர்களும் ஆகிய யாவருந் தொடர்ந்தறியக்கூடாத நின்னை, சிறகுகளையுடைய அன்னம்போலும் உமாதேவியாரோடும் செல்லும் மார்க்கத்தைத்தேடி எவ்வாறு பின்றொடர்ந்து அடியேன் வருவேன். (எ-று) (ககூ)

என்று கூறலு மிறையுள மகிழ்ந்தியா மேகுந்
துன்று நீணெறி யிடத்தினம் விடையடிச் சுவடும்
பொன்றொ டுத்தன கொன்றைநான் மலருமுன் பொருந்துந்
தென்ற மிழ்த்திரு நாட்டினிக் குறிவழி சேறி.

(இ-ள்) என்றிவ்விதமாக அர்ச்சகர் விண்ணப்பஞ்செய்யவும், திருவாப்புடையீசர் திருவுளமகிழ்ந்து, யாம் செல்லும் தருக்கள் செறிந்த நீண்ட வழியில் நாம் ஆரோகணித்துச் செல்லும் இடபவாகனத்தி னடிச்சுவடுகளும் பொன்னையே சொரிந்தாற்போன்ற அன்றலர்ந்த கொன்றைப்புஷ்பங்களும் எதிரே செறிந்திருக்கும். ஆதலால் இவ்வடையாளங்கொண்டு சிறந்ததென் தமிழ்ப்பாண்டி நாட்டில் நம்மிடம் வந்து சேருவாயாக. (எ-று) (உ0)

என்று ரைத்தருளி யாப்பனூர்த் திருவுரு விலிங்கந்
தன்னை மறைத்துமை யாளொடுந் சேயொடுந் தாவுந்
துன்னவி டைப்பரி மேற்கொடு நடந்தனன் சுருதி
முன்னவ னுத்தமன் பசுபதி பரமனைம் முகத்தோன்.

(இ-ள்) என்றிவ்வண்ணங் கட்டளையிட்டருளி, அழகிய திருவாப்பனூரிலுள்ள சிவலிங்க சொருபத்தை மறைத்து, உமாதேவியாரோடும், விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்கடவுள் என்னும் புதல்வர்களோடும் விரைந்துசெல்லும் இடபவாகனத்தின் மேற்கொண்டு சென்றருளினார், வேதநாயகராகியும், முதற்கடவுளாகியும், பசுபதியாகியும், மேலானவராகியும், பஞ்சவதனங்களையுடையவராகியும் விளங்கும் சிவபெருமான். (எ-று) (உக)

அந்த வேலையி னருச்சக னகங்குழைந் தவ்வூர்ச்
சந்த நான்மறைக் கிழவர்தம் வீதியைத் தணந்து
முந்தை வீதியி னிடந்தொறுங் குறுகியே முக்க
ணெந்தை யாப்பனூ ரிறையவர் மொழியிதென் றியம்பும்.

(இ-ள்) அச்சமயத்தில் அருச்சகர் மனமுருகி அத்திருவாப்பனூரிலுள்ள இசையமைந்த நான்கு வேதங்கட்கும் உரியவர்களாகிய பிராமணர் வீதியினின்று நீங்கிப், பழையதானவீதிகடோறுஞ் சென்று, மூன்று கண்களையுடைய எமது கடவுளாகிய திருவாப்புடையீசர் அருளிய கட்டளையே எம்மால் இப்பொழுது சொல்லப்படும் மொழியென்று சொல்வாராயினர் (எ-று) எ - அசை. (உஉ)

சிறப்ப ரன்றிரு நாமமுச் சரிப்பவர் திருநீ
றறப்பு டார்பினி லணிபவ ரவனையர்ச் சிப்போர்
கற்பின் மேம்படு வனிதையர் யாவருங் கழறு
மிறப்ப னீங்கிது சத்தியஞ் சத்தியங் கேண்மின்.



(இ-ள்) அறிவு சொருபமாய் விளங்குஞ் சிவபெருமானது திருநாமங்களை யுச்சரிப்பவர்களும், அன்புடன் திருவெண்ணீற்றைச் சரீரத்திலணிபவர்களும், அச்சிவபெருமானைப் பூசிப்பவர்களும், கற்புத்தன்மையிற் சிறந்த மங்கையர்களும் ஆகிய யாவரும் இங்கொன்று சொல்லுகிறேன். இவ்வார்த்தை உண்மை உண்மை. இது கேட்பீர்களாக. (எ-று) (உங)

மதிமு டித்தநங் கிலக நாயகர் வயனெற்
பதர்பி டிப்பநீர் பருத்தியி னிறைந்தநூற் பனவர்
சிந்தவு றப்பெருங் கன்மழை யுருமொடுஞ் சிந்திப்
பதிய றக்கெடும் போமினப் பாலெனப் பகர்ந்தான்.

(இ-ள்) சந்திரனைத்தரித்த நம்முடைய திருவாப்புடையீசரது வயலிலுள்ள நெற்கள் பதராய் விம்பபடி, அதற்குரிய நீரைப் பருத்திச்செடிக்கிறைந்த பூணூலணிந்த அப்பிராமணர்கள் அழிய, மிகுதியான கல்மழையானது இடிகளோடுஞ் சிந்துதலால் இந்நகர் முழுதும் நாசமாம். ஆதலால் நீவிர் இவ்வூரைவிட்டு வெளிப்பட்டுவிடுவீர்களாக என்று சொன்னார். (எ-று)(உச)

சொன்ன வாசகஞ் செவிநுழைந் தீர்ந்திடத் தூயோ
ரன்ன மாநகர் துறந்துசென் றயனக ரடைந்தார்
பின்னர் மூடரு மறுதொழிற் குரியரும் பெயரா
தென்னி தாகுமென் றிகழ்ந்தன ரிற்கணே யிருந்தார்.

(இ-ள்) அர்ச்சகர் கூறிய வார்த்தைகள் காதுகளிற் புகுந்திழுத்தலால், சுத்தராயுள்ளவர்கள் விசாலமான அத்திருவாப்பனூரைவிட்டு நீங்கிப்போய்ப் பக்கத்துள்ள நகரங்களிற் சேர்ந்தார்கள். பின்னர் அறிவீனர்களும் ஆறுதொழிலையுடையவர்களாகிய பிராமணர்களும் விட்டகலாது, இவ்வாறு கூறுவது என்ன அறிவீனமென்றவமதித்தவராய்த் தத்தம் மனைகளிலேயே யிருந்தார்கள். (எ-று)

பிராமணருக்குரிய அறுதொழிலாவன.—வேதமோதுதல், வேதமோதுவித்தல், யாகஞ்செய்தல், யாகஞ்செய்வித்தல், தானங்கொடுத்தல், தானம் வாங்கல் என்பனவாம். (உரு)

ஆதி சைவரின் மாசிலான் மனைவியா லரனு
ரோதி யேகிய வருண்மொழி பகர்ந்தவ னோடும்
போது நன்னெறி விடையடிச் சுவடுகண் பொருந்த
நாத னூர்திரு வருணினைந் தகநெக நடந்தான்.

(இ-ள்) ஆதிசைவர் மரபில் குற்றமில்லாத அவ்வர்ச்சகர், திருவாப்புடையீசர் தமக்குத் திருவாய்மலர்ந்து சென்றருளிய திருபாவசனக்களை மனைவியிடத்திற் புகன்று, அவளோடும் போகும் கல்லமார்க்கத்தில், இடபவாகனத்தின் அடிச்சுவடு கண்ணிற்காணப்பட, சிவபெருமான் தமக்குப்பாலித்த அக்கிருபையைச் சிந்தித்துக்கொண்டு, உள்ளமுருகச் சென்றார். (எ-று)

அக்க ணத்தெழு முகிற்குல மரனதா ணையில்வான்
மிக்கெ ழுந்தக முடிவென மனிதரை வெருவத்
தக்க பாதலந் தங்கிறை யுடனெளி தரவெண்
டிக்க யங்களுஞ் செவிடுற விடித்தன திரண்டே.

(இ-ள்) அக்கணத்திலே கடவுளாஞ்ஞையினாலே, சப்தமேகங்களும், ஆகாயத்தில் உயர்ந்து, இது யுகமுடிவு காலமேயென்று, மனிதர்கள் பயமடையவும், தகுதிபெற்ற பாதாளத்திலுள்ள ஆதிசேடன் தனது சிரம் நெளியவும், எட்டுத்திக்கிலுமுள்ள யானைகளும் செவிடடையவும், கூடி முழங்கின. (எ-று) ஏ - அசை. (உஎ)

மீது விப்பிரர் விழியணி தெறித்திட மின்னிக்
காது டைப்பவர்த் தவவவர் சிகைத்தலை கடிதிற்
போத முற்றெதிர் பிளப்பவன் பெருங்கல்வெங் காலன்
தூதர் விட்டெறி கவண்கல்லெனக் கொலீதெனச் சொரிக்க.

(இ-ள்) அப்பிராமணர்கள் கண்களிலுள்ள மணிகள் தெறித்தோடும்படி ஆகாயத்திலே மின்னித் காதுகளிரண்டுஞ் செவிடுபடும்படி ஒலித்தனவாகி, அவர்களுடைய சிகையுள்ள சிரசுகள் விரையப்பின்னப்பட்டுபோராகப் பிளவுபட வலிய பெரிய கற்களை, கொடிய இயமதூதர்கள் கவணினிடமாக வைத்து வீசியெறிகின்ற கற்களோ இவைகளென்று சொல்லும்படி பொழிந்தன. (எ-று) (உஅ)

இடிக்கு லந்திலே மழையொடுஞ் சிதறிட வெங்கும்
வடிக்கும் வெண்சுதை தீற்றிய மாடமா ளிகைகள்
கொடிக்கொள் கோபுர மாமரங் குசெய் குன்றம்
பொடிக்கு லந்தொடு வேறுறத் தகர்ந்தன புரமே.

(இ-ள்) இடிக்குலைகள் கல்மழையுடனே எங்குந்தெறவடித்தெடுத்த வெள்ளிய சுண்ணந்தடவிய வீடுகளும், உபரிகைகளும், கொடிகள் கட்டப்பட்ட கோபுரங்களும், கோவிலும், சபைகளும், கட்டில்களும், புழுதிக்



கூட்டங்களோடு வேற்றுமையில்லாதிருக்கும்படி, புழுதியாகி யழியப்பெற்றது அந்நகரம். (எ-று) ஏ - அசை. (உக)

மக்கள் பேர்சொலி யழைப்பர்மற் றவர்சொரி மழைக்கற்
றெருக்க செம்புனீ ருடன்வரக் கண்டுயிர் சோர்வா
ரொக்க விற்சிறு குழவியை யெடுப்பதற் கோடிப்
புக்க மாளிகை யுருமினு லிடிந்துயிர் போவார்.

(இ-ள்). பிள்ளைகளைப் பெயர்சொல்லி அழைப்பார்கள். அப்பிள்ளைகள் பெய்த கல்மழையினாலே உண்டாகிய உதிரத்தோடும் வரக்கண்டு (தாங்கள்) உயிர்சோர்வார்கள். இடையில் சிறிய குழந்தைகளை வீட்டினின்றும் எடுத்துவருவதற்கோடி நுழைந்த அவ்வீடு இடியினால் இடிந்துவிழ உயிரிழப்பர். (எ-று) மற்று - அசை. (௩0)

கருத்த ழிந்தியா மருச்சக னிரப்புரை கடிந்து
பருத்தி செய்ததிற் பலித்ததிப் பலனெனப் பகர்வா
ரருத்தி யுற்றுயிர் பிழைத்திடச் செய்யிலாப் புடைய
திருத்தர் கோயிற்கே கொடுப்பநம் பங்கென நினைப்பார்.

(இ-ள்) நாம் மதிகெட்டு அருச்சகர் இரந்து கேட்டுக்கொண்ட வார்த்தையை அவமதித்துப், பருத்திப்பயிர் செய்ததனாலே, யிந்தப்பிரயோசனங் கிடைத்ததென்று புகல்வார். நம்மிடத்திற் கருணைகொண்டு நாம் உயிர்பிழைக்கச் செய்வரேல் அத்திருவாப்புடையீசர் கோயிலுக்கே நம்பங்கு நிலங்களைக் கொடுத்துவிடுவோமென்று நினைப்பார். (எ-று) (௩க)

உரிய பங்கினுக் குள்ளநீ ரிறைக்கவு முற்ற
பரிசி தென்னிலாப் புடையவர் கோயிலுட் பட்ட
திரவி யங்கவர்ந் தவர்படுஞ் செய்கையார் தெரிப்பார்
நரக முற்றுங்கொள் காணியங் கவர்க்கென நவில்வார்.

(இ-ள்) நமக்குரிய பங்குக்குக்கிடைக்கவேண்டிய சலத்தையே இறைத்திருக்கவும், கிடைத்த பிரயோசனம் இதுவென்றால், அத்திருவாப்புடையீசரது திருக்கோவிலுக்குரிய பொருளை அபகரித்தவர்கள் அடையும் பிரயோசனத்தை யார் இவ்வளவினதென்று கூறவல்லவர். அவர் கொள்ளும சொந்த இடம் இருபத்தெட்டுக்கோடி நரகங்களுமே யாமென்று சொல்வார். (எ-று) (௩உ)

தெய்வ நாயகன் வயலில்வெண் சாலியைச் சிதைத்த
வெய்ய தீவினை கொடிதென்பர் சிவனருள் விலகாச்
சைவ வேதியன் மனைபுகில் யாமெலாந் தடையற்
றுய்ய லாமென வோடின ரிடையில்வீழ்ந் தலப்பார்.

(இ-ள்) தேவாதிபராகிய சிவபெருமானது வயலிலே விளைந்த வெண்ணிறமுள்ள நெல்லைப் பதராகும்படி செய்த பொல்லாத தீவினையானது கொடிதென்று சொல்லுவார். அப்பரமசிவனது திருவருள் நீங்கப்பெறாத அவ்வாதிசைவர் மனையிற்சென்றால், நாமெல்லோரும் தடையின்றி உயிர் பிழைக்கலாமென்று விரைந்தோடுவாராய் மத்தியில் வீழ்ந்திறப்பார். (எ-று)

முதிரு மென்புகண் முரிந்திட முகந்தலை கரங்கால்
பிதிர மெய்யெலாங் குருதியந் தாரைநீர் பெருக
வதிரும் விண்ணக நின்றுவீழ் சிலைமழை யன்றி
யுதிர மாரியுஞ் சொரிந்தெனக் கிடந்ததவ் வூருள்.

(இ-ள்) முற்றுதலடைந்த எலும்புகள் நொறுங்கவும், முகம், தலை, கை, கால் என்னுமிவைகள் சிதறவும், சரீரமெங்கும் உதிரம் தாரைதாரையாய்ப் பாயவும், ஒலிக்கின்ற ஆகாயத்தினின்றும் பெய்கின்ற கல்மழையேயல்லாமல், இரத்தமழையும் பெய்ததென்று சொல்லும்படி யிருந்தது அவ்வூரில். (எ-று) (௧௪)

மாசி லாவரு டத்திலவ் வாப்பனூர் மறைந்து
தேசி லாவகை யன்றுதொட் டிருந்தது சிறந்தோர்
பேசி லாரமு தனையவாப் புடையவெம் பெருமா
னேசி லாலவாய்ப் பெருந்திரு நகர்வயி னணுகி.

(இ-ள்) வலிய கல்மழையினால் அத்திருவாப்பனூர் புதைபட்டு, அதுமுதற் பிரகாசமில்லாமலே யிருந்தது. மேம்பட்ட பெரியோர் துதிக்கில், அவர்க்கு அமிர்தம்போன்று இனிக்கின்ற நமது திருவாப்புடையீசர், குற்றமற்ற பெரிய திருவாலவாயென்னும் பதியின்கணடைந்து. (எ-று) (௧௫)

மருக்க மழ்கொன்றை வனமலி வைகையின் வடபா
லிருக்க வுன்னின னப்பொழு திடவநா யகனித்
திருக்கி ளர்வனத் திருப்பதே நலனெனச் செப்பி
யருக்க நன்மலர் வேணியா னடிபணிந் தனரால்.



(இ-ள்) மணங்கமழ்கின்ற கொன்றைவனம் நிறைந்துள்ள வைகை நதியின் வடகரையிலே வீற்றிருக்கத் திருவுளங்கொண்டருளினார். அப்பொழுது அக்குறிப்பையுணர்ந்த நந்திதேவர் எம்பெருமானே! இந்தச் சிறப்புமிக்க கொன்றைவனத்தில் வசித்திருப்பதே நன்மையென்று விண்ணப்பித்து நல்ல எருக்கம்பூ மாலையை யணிந்த சடைமுடியையுடைய அவ்வாப்புடையீசரது திருவடிகளில் நமஸ்கரித்து. (எ-று) (௧௬)

இத்த லப்பெய ரென்பெய ராகவிங் குறையு
மத்த நின்றிரு நாமமு மதற்கிசை பெயரா
யுத்த மப்புவி யிடபபு ரேசனென் றுரைப்ப
நித்த மாவரந் தருகெனக் கொடுத்துப்பின் னிமலன்,

(இ-ள்) ஐயனே! சிறந்த இவ்வுலகம் இந்தத்தலத்தின் பெயர் அடியேனுடைய பெயராக இடபபுரமென வழங்கவும், இங்கு வீற்றிருக்குந் தேவரீருடைய திருநாமமும் அதற்கிசைந்த நாமமாக இடபபுரேசனென்று வழங்கவும், நிலைத்திருக்கும்படி, இவ்வரங்களைத் தந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அவ்வாறே கொடுத்தருளிப், பின்பு மலரகிதராகிய அச்சிவபிரான், (எ-று) (௧௭)

இன்ன மோர்வரந் தருதும்யா மென்னெனி லெமக்கு
மன்னு தென்றிசை விடுமொரு கணையெல்லை வனசந்
துன்னு தீர்த்தமொன் றுன்பெய ராற்கண்டு சுருதி
பன்னி யப்புன லாலெமை யாட்டெனப் பணித்து.

(இ-ள்) இன்னும் நாம் ஓர் வரங்கொடுக்கின்றோம். அஃது யாதெனில், நிலைபெற்ற எமக்குத் தென்பக்கத்தில் ஓரம்புவிடுதூரத்தில், தாமரைகள் நெருங்கிய ஓர் தீர்த்தத்தையும் உன்பெயராலேயே செய்து, வேதவாக்கியங்களை யோதி, அத்தீர்த்தத்தால் நம்மை அபிஷேகிப்பாயாக என்று கட்டளையிட்டருளி, (எ-று) (௧௮)

இடவ தீர்த்தத்தைத் தரிசிக்கிற் பரிசிக்கி லினிமை
தொடர வுட்கொளிற் குடைந்திடி னறமுதற் றொகைநா
லுடைய மெய்ப்பய னடைவரீ துண்மையென் றரைத்து
வடிவின் மேம்படு நந்தியை மனமகிழ் வித்து.

(இ-ள்) இவ்விடபதீர்த்தத்தைக் கண்களாற்பார்த்தால் தருமத்தையும், கையாற்றீண்டினால் பொருளையும், அன்புடனுட்கொண்டால் இன்பத்

தையும், ஸ்நானஞ்செய்தால் மோக்ஷத்தையும் அடைவர். இது சத்தியம் என்று திருவாய் மலர்ந்தருளி, அழகின் மிகுந்த நந்திதேவரை, உள்ளங்களிக்கச்செய்து, (எ-று) (௩௯)

அம்பி கைகுர வங்கமழ் குழலணங் கவள்சேய்
தும்பி மாமுகன் றன்னொடுங் கமர்ந்தனன் சுருதி
யெம்பி ரானணி யாப்பனூ ரிறையவ னிமையோர்
தம்பி ரானுமை தனிப்பிரான் சராசரத் தலைவன்.

(இ-ள்) எமது வேதநாயகரும், அழகிய திருவாப்பனூரிலெழுந்தருளிய கடவுளும், தேவர்கள் தலைவரும், உமாதேவியாரது ஒப்பற்றநாயகரும், சரம் அசரம் என்னும் இருவித ஜீவர்கட்கும் மேலானவரும் ஆகிய திருவாப்புடையீசர், குரவங்கமழ் குழலம்மை என்னும் அவ்வம்பிகை, இவர்கள் புத்திரர்களாகிய விநாயகமூர்த்தி, முருகக்கடவுள் ஆகிய இவர்களோடு அவ்விடபுரத்தி லெழுந்தருளினார். (எ-று) (௪௦)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதி நாளி லிடவபு ரப்பே ரான காதை வறிந்து சொற்றோ
ரீதிலேசொலொருகவிகற்றோ ரீறிலாதபொருள்செவியுற்றோர்
வேத நாதர் கைலைவ ரைக்கே மேவி வாழ்வ ரெனமுனி வர்க்கே
சூத னோது வவனிரு பொற்றாள் சூடி னார்க டமதுசி ரத்தே.

(இ-ள்) முற்காலத்தில் இடவபுரமென்னும் நாமமுண்டான சரித்திரமாகிய இதனைச்சொன்னவர்களும், இப்புராணத்திற் கூறும் ஓர் செய்யுளைக்கற்றவர்களும், அச்செய்யுளின் முடிவில்லாத அர்த்தங்களைக் காதாற் கேட்டவர்களும், வேதநாயகராகிய சிவபெருமானமர்ந்தருளும் திருக்கைலாச மலையை யடைந்து வாழ்ந்திருப்பர் என்று நைமிசாரணிய வாசிகளுக்குச் சூதமுனிவர் கூறியருள, அதுகேட்ட அம்முனிவர்கள் சூதமுனிவருடைய அழகிய திருவடித் துணைகளைத் தமது சிரசுகளிற் சூடிக்கொண்டார்கள். (எ-று) ஏ, ஏ - அசைகள். (௪௧)

இடவபுரச்சருக்கம் முற்றிற்று.

ஆ- திருவிருத்தம். ௨௦௪.

95

# அன்னவிநோதச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பின்னர்முனிவ ராப்பனூர்ப் பெருமா னிடவ புரநாத
னன்னவிநோதனெனுந்திருப்பே ரடைந்ததிலையிங்கருளென்னச்
சொன்னமொழியாற் சூதமுனி சுடர்ச்செஞ் சடில முடிதுளக்கிக்
கன்னன்மதுரம்பழுத்தனைய கதைநீர்கேண்மினெனமொழிவான்.

(இ-ள்) பின் அந்நைமிசாரணியவாசிகள் திருவாப்பனூரிலெழுந்தருளும் திருவாப்புடையீசரும், இடவபுரத்தில் வீற்றிருந்தருளும் இடவபுரேசருமாகிய சிவபிரான் அன்னவிநோதரென்னுந் திருநாமத்தைப் பெற்ற தன்மையை இப்போது உபதேசிக்கவேண்டுமென்று வேண்ட, அம்முனிவர்கள் கூறிய விண்ணப்பத்தால், சூதபுராணிகர் பிரகாசம்பொருந்திய சிவந்தசடைமுடியை யசைத்து கரும்பின் மாதுரியமானது முதிர்ந்தாற்போன்ற அச்சரித்தை நீங்கள் கேளுங்களென்று சொல்லுவாராயினார். (எ-று) (௧)

உம்பர் தொழுங்கந் தரனாப்ப னூர்நின் றிடவ புரத்தினமர்ந்
திம்பர் வணங்க விருந்தகடம்பி னிறைவ னடியர்ச் சனைபுரியு
நம்பி சிவவே தியர்திலக னலங்கூர் குடும்பத் துடனடந்தே
யம்பொன்சடிலரளித்ததிரு வடையா ளத்தி னெறிச்செல்வான்.

(இ-ள்) தேவர்கள் வணங்குகின்ற காளகண்டத்தையுடைய சிவபெருமான் திருவாப்பனூரினின்றும் எழுந்தருளி, இடவபுரத்தில் விருப்புற்று இவ்வுலகர் வணங்கும்படி வீற்றிருந்தருளிய பின் அக்கடவுளடிகளைப் பூசிக்கின்ற சிவப்பிராமணர்களுட் சிறந்தவராகிய அவ்வர்ச்சகர் புண்ணிய மிகுந்த குடும்பத்துடனே நடந்து அழகிய பொன் போன்ற சடைமுடியையுடைய திருவாப்புடையீசர் கட்டளையிட்ட அடையாளத்தின்வழியே செல்வாராயினார். (எ-று) (௨)

நடக்கும் வழிமே லரிபிரமர் நயனங் களிகூர் தரவணங்கக்
கிடக்குந் தரும விடைப்பெருமான் கிளர்காற் சுவடும் பொற்பூவுங்
கடக்குங் குடமப்பூண் முலைமனையா டன்பாற் காட்டி விரைந்தவினி
நடக்குஞ் சடையார் சேவடியீ தார்க்குக் கிடைக்கு மெனத்தொழுவான்.

(இ-ள்) நடந்து செல்லும் மார்க்கத்தில் திருமால் பிரமதேவர் ஆகிய இவர்களுள் கண்கள் களிக்க வணங்கும்படி இருக்கின்ற, தரும தேவதையாகிய

இடபதேவராக விளங்குகின்ற அடிச்சுவடுகளையும், அதனருகேகிடக்கும் பொன்மயமாகிய கொன்றைமலர்களையும், பெருமை பெற்ற குங்குமக்குழம்பினையும், ஆபரணங்களையுந் தரித்த தனங்களையுடைய மனைவி யிடத்திற்சாட்டிக்கொண்டு, தேவகங்கையை யடக்கிய வேணியையுடைய சிவபெருமான் சேர்ந்தருளும் இடபதேவருடைய திருவடிகளாகிய இவை யாவர்க்குங்கிட்டுமென்று, விஸ்மயத்துவணங்குவார். (எ-று) (௩)

தொழுதுதொழுதுமலிவிழிநீர் அருட்பத்துரும்பாடித்துாடித்
தழுவ குழைந்து நெருநெகிழ்ந் தாரா மையிருவடிச்சுவடு
முழுதுங்கண்டேமொற்றியொற்றிமுதிர்கற்புடையாளுடன்சிவன்பே
ரெழுது நாவ லருள்வழிச்சென் றிடவ புரத்து ளடைந்தானால்.

(இ-ள்) பலதரம் வணங்கிக், கருமணிகளையுடைய கண்களினின்றும் சலமானது பலதரம்பொங்கிவழிய, பலதரம் ஆனந்தக்கூத்தாடிப், புலம்பி, இளகி, மனவுருக்கமடைந்து, களித்து, அன்புமேலீட்டால் அவ்வடிச்சுவடுகள் முழுமையுங் கண்களிற் பலதரம் ஒற்றி, முதிர்ந்த கற்புத்தன்மையையுடைய நாயகியோடும், சிவநாமங்களையுச்சரிக்கும் நாவையுடைய அவ்வர்ச்சகர், அப்பெருமானுடைய கட்டளையின்படியே சென்று நந்திநகரத்துட் சேர்ந்தார் (எ-று) ஆல்-அசை. (௪)

அந்தண் கைலை மலைமருந்தை யமுதை யமரர் சிகாமணியைச்
செந்தண் பவளச்சிவக்கொழுந்தைத் திருவாப்புடையபெருமானை
மைந்தர் மலைமா தொடுமிடவ மகிழ் நொடுங்கண் டதிசயித்துச்
சிந்தை மலர்ந்து குவித்திருகை சிரமேற் குவித் துரைப்பான்.

(இ-ள்) அழியாதருளர்ச்சி பொருந்திய திருக்கைலாயமலையிலுள்ள சஞ்சீவியாகியும், தேவாமிர்தமாகியும், தெய்வசிகாமணியாகியும், சிவந்த குளிர்ந்த பவளம்போலுந், திருமேனியையுடைய சிவக்கொழுந்தாகியும், விளங்குந் திருவாப்புடையீசனை, (அவரது) திருக்குமாரர்களோடும், உமாதேவியோடும், ஆழ்ந்த இடபதீர்த்தத்துடனும், தெரிசித்து, ஆச்சரியமுற்று, மனமகிழ்ச்சியடைந்து, இரண்டுகைகளையும் சிரமேற்குவித்துச் சூட்டிக்கொண்டு இதனைச் சொல்லலாயினார். (எ-று) (௫)

வாயு விருக்கு நான்மறையோய் வானு விருக்கும் பெருந்தேவ
ராயு விருக்கு மணிமிடற்றோ யறிவு விருக்குந் திருவுருவோய்
வேயு விருக்கு மணிப்பசுந்தோள் விமலை குரவங் கமழ்குழலெந்
தாயு மிருக்கு மொருபுறத்தோய் தந்தாய் வழிநான் வந்தேனால்.



(இ-ள்) திருவாக்கிலே குடிகொண்டுள்ள இருக்கு முதலிய நான்கு வேதங்களையுடையவரே, தேவலோகத்தில் வசிக்கும் பெருமை பொருந்திய தேவர்கள் ஆயுசு நிலைபெறுதற்கேதுவாகிய நீலகண்டத்தையுடையவரே, அறிவின்கண் நிலைபெற்றிருக்கும் திருவுருவத்தையுடையவரே, முத்துக்கள் நிலைபெற்ற மூங்கில் போலும் பசியதோள்களையுடைய நிர்மலையாகிய குரவங் கமழ்ந்தகுழலம்மையென்னும் எமது மாதா அமர்ந்திருக்கும் ஒருபாகத்தையுடையவரே, வழியுணர்த்தியருளினீர். ஆகலின் அடியேன் இங்கு வந்து சேர்ந்தேன். (எ-று) ஆல்-அசை. (௬)

வந்தே னையா ஞூட்டுதற்கு வையை நீருண் டருச்சனைக்குச்
செந்தேன் மலருண் டிவ்வனத்திற் றேவே யரிய திருவமுதாக்
கந்தோயாதுண் டென்னிடையே யறியாய்கொல்லோ சிறுவிலைநாட்
டந்தா தரிப்பார் யார்யானித் தலத்தி லறிந்த துனையன்றே.

(இ-ள்) எம்பெருமானே அடைந்தவனாகிய யான் தேவரீரை யபிஷேகஞ்செய்வதற்கு வைகைநதியில் தீர்த்தமிருக்கின்றது. அர்ச்சிப்பதற்கு இக்கொன்றைவனத்தில் செவ்வியதேனொழுகுகின்ற பூக்களிருக்கின்றன. அருமையாகிய நைவேத்தியத்திற்கு அடியேனிடத்தில் என்ன இருக்கின்றது. ஐயோ இதனைத்தேவரீர் அறியீரோ. இந்தப் பஞ்சகாலத்திலே வேண்டியவற்றைக் கொடுத்து யார் பாராட்டுவார். அடியேன் இத்தத்தலத்திலறிந்தது தேவரீரையே. வேறியாவரை அறிவேன். (எ-று) (௭)

உண்ணு வமுதே யுனைப்பூசித் துண்ப தெனது விருந்தியவை
பண்ணு தொழியிற் சீவனமெப் படியென் றிரந்து மொழிந்திடலுங்
கண்ணாற் காணா வருவுருவின் காட்சி யிலிங்கத் திடைத்தோன்றிப்
பண்ணார் மறையோய் வந்தனையோ பாவை யோடு மெனவினவி.

(இ-ள்) உண்ணமுடியாத தேவாமிர்தமாயுள்ளவரே, தேவரீரைப் பூசித்து உண்பதே எனது குலவிருத்தியாதலால், அப்பூசை செய்யாவிடின் எப்படி சீவனஞ் செய்கிறது என்று தங்குறைகளைச் சொல்லிப் பிரார்த்தித்தலும், கண்களாற் பார்த்தற்கருமையான திருவுருவத்துடன் பிரத்தியக்ஷமாகச் சிவலிங்கத்தினின்றுந்தோன்றி இசைபொருந்திய வேதங்களையோதியுணர்ந்த அந்தணனே உன் குடும்ப சகிதமாய் வந்து சேர்ந்தனையா என்று வினவியருளி. (எ-று) (௮)

உரிய வாப்ப னூரிலுடின் றுயர்வெள் விடையி னடக்கிங்ஙன்
புகுவி யாட்சி பெறவிருந்தேம் வருந்தி விடைத்தே வெள்ளவந்தித்

தரிய தலமா தியமூன்று மடியேன் பெயர்கொண் டருளுகெனப்
பரிவி னுரைப்ப மகிழ்ந்துவரம் பாலித் தேமிப் பார்விளங்க.

(இ-ள்) நமக்குரித்தாயிருந்த திருவாப்புடையாரினின்று நீங்கி, மேன்மை தங்கிய வெள்ளிய இடபத்தில் ஆரோகணித்தடைந்து இவ்விடத்திற்றங்கி நிலைபெற அமர்ந்தோம். இடபதேவன் வருத்தமுற்று நம்மை வணங்கி, இங்குள்ள அரிய தலம், தீர்த்தம், மூர்த்தி யென்றும் மூன்றும் அடியேன் பெயரால் விளங்கவேண்டுமென்று விரும்பிப் பிரார்த்திக்க, இவ்வுலகம் விளங்கும்படியுவந்து அவ்வாறே வரத்தைக் கொடுத்தருளினோம். (எ-று) (௯)

இப்பா னீவேண் டுறும்பொருளுக் கிந்த வைக வதிமணலுன்
கைப்பால் வாரிக் கொடுவந்தோர் கலனிட் டறலிட் டுலையேற்றி
வெப்பார் காட்டத் தெரிமூட்டி மெய்யன் புறுத்தி யடிலமுதாந்
தப்பா ததனை யெமக்குநிவே தனஞ்செய் தனையிற் கொடுபோதி.

(இ-ள்) இனி நீ வேண்டிக்கொண்ட விஷயத்திற்கு இந்த வைகையாற்றிலுள்ள மணலை உன்கையால் வாரிக்கொண்டுவந்து ஓர் மட்பாத்திரத்திலிட்டுத் தண்ணீரையும் பெய்து அடுப்பில்வைத்து வெவ்விய விறகில் அக்கினியை மூளச்செய்து சத்திய பத்தியுடன் சமைத்தால் அன்னமாகும். இது தவறாது. அவ்வன்னத்தை நமக்கு நிவேதனஞ்செய்து, பின் அப்பிரசாதத்தை வீட்டிற்குக் கொண்டுபோய், (எ-று) (௧0)

கற்புக் குரிய துணைவியொடுங் காதற் குரிய புதல்வரொடு
மற்புக் குரிய நீயுமகிழ்ந் தருந்தி யருந்தி யெமைவழிபட்
டிற்புக் குறைவா யிதியார்க்கு மிசையே லிவையெப் பகல்வெளியாஞ்
சொற்புக் குறுமப் பகலடிசி லேன்று திருக்குஞ் சொன்னேமால்.

(இ-ள்) கற்பிற்சிறந்த உன் மனைவியோடும், ஆசைக்குப்பாத்திரமாயுள்ள புத்திரரோடும், மெய்யன்புடைய நீயும் உவந்துண்டு உண்டு, நம்மையும் தொழுதுகொண்டு உன் வீட்டையடைந்து வசிப்பாயாக. இவ்விரகசியத்தை எவருக்கும் சொல்லாதே. இவ்விஷயம் எத்தினத்தில் சொல்லால் வெளிப்படுமோ அத்தின முதல் அன்னமாகாமல் மணலாகவேயிருக்கும். கட்டளையிட்டேம். (எ-று) ஆல் - அசை. (௧௧)

ஈதெ லாமுன் பொருட்டுரைத்தே மென்றே யிலிங்கத் துட்புகுத
நாத னிடப புரப்பரம னல்குங் கருணைத் திறம்போற்றிச்
சீத மலிவை கையிற்படிந்து திருவெய் மணல்வேண் டுவெடுத்துக்
காத னீர்விட் டுலைப்பெய்து கனல்வாய்த் துவரிட் டடப்புகுந்தான்,



(இ-ள்) இடபதேவர் வரம்பெற்றமை முதலிய இவ்விடயங்களையெல்லாம், உன்னிமித்தமாக விளக்கியருளினோம், என்று திருவாய்மலர்ந்து, அச்சிவலிங்க மூர்த்தத்தினிடமாய், அந்தர்த்தானமாக, இடபபுரத்திலமரும் தலைவராகிய இடபபுரேசர் தமக்குப் பிரசாதித்த திருவருட்டிறத்தைத் துதித்து, குளிர்ச்சிமிக்க வைகையாற்றில் ஸ்நானஞ்செய்து, அழகிய வெள்ளிய மணலை வேண்டியவளவு எடுத்து, அன்புடன் ஓர் மட்பாத்திரத்தில் நீர் சொரிந்து அவ்வுலையிலிட்டு, அக்கினியினிடமாக விறகைவைத்துச் சமைக்கத் தொடங்கினார். (எ-று) ஏ-அசை. (௧௨)

அடும்போ தரனை நஞ்சமமு தாக்கு மணியை யரும்பொருளை
நெடும்போ தளத்தி னினைத்திடலு நெற்பா லடிசி லெனப்பாகம்
படும்போ தன்ன மறியாத பரனை யாட்டி நறுந்தேன்வாய்
விடும்போ தர்ச்சித் தன்னமுநி வேதித் திறைஞ்சி மனைபுகுந்தான்.

(இ-ள்) சமையல் செய்யுங்கால், வினைகளை யரிப்பவராகியும், விஷத்தையும் அமுதாகவாக்கிக்கொண்ட மாணிக்கம்போன்றவராகியும், யாருமடைதற்கரிய பரம்பொருளாகியுமுள்ள, இடபபுரேசரை நெடுநேரமளவும் மனதில் தியானித்தலும், நெல்லினிடமாக ஆக்கும் அன்னத்தைப்போலப் பக்குவமாகும் சமயத்தில், பிரமதேவராகிய அன்னப்பறவையால் அறியப்பெறாத திருமுடியையுடைய அவ்விடபபுரேசரை அபிஷேகஞ்செய்து, நறிய தேனனது வாயினின்றும் துளிக்கின்ற மலர்களாற் பூசித்து, அன்னத்தையும் நிவேதனஞ்செய்து வணங்கித் தம் வீட்டிற்குப்போனார். (எ-று) (௧௩)

அணியாப்புடையார்கொடுத்ததிரு வமுதைக்குடும்பத்துடனருந்தித்
தணியாப் பசிதீர்ந் தகத்துவகை தழைத்தா ருலகம் வினவாதப்
பணியாற் சைவ னியற்றிவரு நாளி லொருநாட் பரந்தபசிப்
பிணியாற்றமிழுட்டுயிர்வருந்தும் பெற்றிபார்த்தங்கவன்மனையாள்.

(இ-ள்) சிறந்த திருவாப்புடையீசர் தந்தருளிய பிரசாதத்தை மனைவி குழந்தைகளுடனுண்டு, தணியாத உதராக்கினிதணிந்து, மனதில் மகிழ்ச்சியதிகரித்து, உலக இயல்பு ஒன்றையும் விசாரியாது, அத்தொண்டை அவ்வாதிசைவர் நடத்திவருங்கால், ஒரு தினம், பரவிய பசிநோயால், அப்பாண்டிதேசத்திலுள்ள உயிர்களெல்லாம் துன்புறுந் தன்மையை, அவ்வர்ச்சகரது இல்லாள் பார்த்து, (எ-று)

பணியால் என்பது வேற்றுமை மயக்கம். (௧௪)

காந்த ளிடத்தி னவளிருகண் களிப்பச் சிலம்பு புலம்படியந்
சார்ந்த மணிக்க தனந்ததும்பத் ததும்ப நடந்து வரிக்குயிலும்
வாய்ந்த கிளியும் வாயடைப்ப மதுரந் ததும்ப மலர்முருக்கிற்
சேர்ந்த பவள மணிச்செவ்வாய் திறந்தா டிருந்தின் கிளைகேட்பாள்.

(இ-ள்) தக்காயாளிடத்தில் அவளது இரண்டு கண்களும் பார்த்து மகிழவும், காலிலணிந்த சிலம்புகள் ஒலிக்கவும், தனமணங்கமழுஞ் சந்தனம் பூசிய தனங்களிரண்டும் பலமுறை குலுங்கவும் நடந்து, வரிகள் பொருந்திய குயிலும் அழகுவாய்ந்த கிளியும், நாவுந்தால் சத்தம்வாய் மூடிக்கொள்ளவும், மாதுரியம் ஒழுகவும், முருக்கம்பூவைப்போலச்சிவந்த பவளமணி போன்ற செவ்விய வாயைத்திறந்து, இவ்வாறு வினவுவாள். (எ-று) (௧௫)

இவ்வூர் மனிதர் பசியெனுந்தீ கிலம்பா டெனுநெருப்பை கொழுப்
பெவ்வூர் புகுவோ முப்பவதற்கென் றியம்ப யாவிலூர்புகுந்தேங்கி
கைவாய் கிவப்ப யாவலக்கை யோச்சா தில்லங் காத்திருப்பத்
தெய்வீ கம்பே ரமுதநிகர் தினமுந் தருவ தெவனென்றாள்.

(இ-ள்) இவ்வூரிலுள்ள மனிதர்கள் பசியென்றும் அக்கினிக்குத் தரித்திரமென்கிற செய்கைப்பெய்து அதனைமூள்வித்து, எந்தவூருக்குப்போவோமென்று முறையிட, நாமோ இவ்வூரில் புதிதாகவந்துள்ளோம். யான் கையிட்டெல்லாம் சிவக்க, உலக்கைபெடுத்துக்குத்தாமல், வீட்டையேகாத்துக்கொண்டிருக்க தெய்வமான சிறந்த அன்னத்தை நாடோறும் அதிகமாய்க்கொண்டுவந்து கொடுப்பது எப்படி என்று கேட்டாள். (எ-று) (௧௬)

அமுதி லினைந்த மடந்தெதிர்சொ லாடான் சிறுபோ திருக்குமலர்க்
குமுத மலிவாய்த் திருவேயான் கூறி ஞானை யமுதுதவா
நமது விருத்தி செம்பசித்தி னையும் தொடர்ந்து சுமதனும்
சுமதி புடையாய் கேளாய்க சும்மா விருநீ யெனச்சொன்னான்.

(இ-ள்) அமிர்தம்போலும் தக்காயின் வார்த்தைக்குத்தடுத்து மறுமொழியொன்றுஞ் சொல்லாதவராய்ச் சிறிதுநேரம் தாமதித்திருந்து, பின் செய்வல்லிமலர்போன்ற அழகிய சிவந்த வாயினையுடைய இலக்குமிபோல்பவளே, நான் அவ்விரகசியத்தை வெளிப்படச்சொல்வேனேல், நமக்கு அன்னங்கிடைக்காது. அதனுல் நம்முடைய ஜீவனமும் மாறும். ஒருநாளைவருத்தமும் உதராக்கினி நம்மையுந் தொடர்ந்து தகிக்கும். ஆதலால் நல்லறிவுள்ள பெண்ணே! நீ அதைபற்றிக் கேளாதே. சும்மா இரு என்று சொன்னார். (எ-று) (௧௭)



கேட்டான் மதிவா ளுதற்குறுவே கினர்ந்தாள் புகைந்தா ளிதழ்துடித்தா, ளட்டா வேற்கட் கடைசிவந்தாள் சிரித்தாள் புருவ மேனெரித்தா, ளொட்டா மரைமென் முகம்புலர்ந்தா ளண்பா நன்று நன்றுசொல்லிக், காட்டா யெனிலியா னின்னேயுன் காற்கீழ் விடுவ னுயிரென்றாள்.

(இ-ள்) இவ்வாறு தங்கணவர் கூறியவார்த்தையைக்கேட்ட அப்பார்ப்பனி, மூன்றாம்பிறையையொத்த ஒளிபெற்ற நெற்றியிலே குறுவெயர்வையையுடையவளானாள். கோபக்குறிப்புடையளானாள். உதடுகள் துடிக்கப்பெற்றாள். தீட்டாத கூரிய வேற்படைபோன்ற கடைக்கண்கள் சிவப்படைந்தாள். கோபநகை நகைத்தாள். புருவங்களை மேலேற நெரித்தாள். அன்றலர்ந்த மிருதுவாகிய தாமரைமலர்போன்ற முகம் வாடினாள். பிராணநாயகரே நீர் கூறியது தகாதன்று. அதனைக் கூறிவிளக்காவிடின் நானிப்போதே உமது பாதத்தின் கீழே உயிரைவிடுவேனென்று சொன்னாள். (எ-று) (௧௮)

அந்த மாற்றஞ் செவிகுடைந்து ளாவி பதைப்ப மனம்பதைப்பப்
பந்த யாக்கை நடுங்கிநம்பார்ப் பனியே பனிமா மதிக்கன்னி
பெந்தை யாப்ப னூரிடைப்பண் டியற்றுஞ் செயலு மறிநியவ்வூர்ச்
சிந்தை நீத்திவ் விடையடைந்த செயலுந் தெரிதி தெரிதியால்.

(இ-ள்) அந்தப்பழிச்சொல்லானது தம்செவிகளைத் துளைத்தலால் உயிரும் மனமும் துடிதுடிக்கச் சந்தாதுக்க[illegible]சரீரம் நடுங்கி, எம்முடைய பிராணநாயகியே, குளிர்ந்தபெருமை பொருந்திய சந்திரனைப்போலத்தரித்த நந்திருவாப்புடையீசர் அத்திருவாப்பனூரில் முன்செய்தருளிய செய்கையையும் அறிவாய். அன்றி அவ்வூரில் வசிக்கவேண்டுமென்னுந் திருவுளத்தை விட்டு இவ்விடத்திலமர்ந்த செய்தியையும் நீநன்றாயறிவாய். (எ-று) ஆல்-அசை. (௧௯)

பின்ன ரணியாப் புடையபிரான் பெருந்தாட் டுணையைக் குவித்திறைஞ்சி, யென்னை வருத்தும் பசிப்பிணிதீர்த் தருளென் றிரப்ப வெதிர்தோன்றிச், சொன்ன வுபாய மெனக்கேனின் றோன்றுஞ் சுருரு மதிசயிப்பா, ரன்ன நடையாய் நீகேட்டி லனந்தா னந்த மடையியால்.

(இ-ள்) பின் அழகிய திருவாப்புடையீசரது சிறந்த இரண்டு திருவடிகளையுங் கைகூப்பி வணங்கி, அடியேனை வருத்துகின்ற பசிநோயை நிவிர்த்தி செய்து காத்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, எனக்கு நேரே

சிவலிங்கத்தினிடமாய்த்தோன்றிக் கட்டளையிட்டருளிய சூழ்ச்சியை என்னென்று புகல்வேன்! அதை மொழிந்தால் தேவர்களும் ஆச்சரியமடைவார்கள். அன்னம்போன்ற நடையினையுடைய நங்கையே அதனை நீகேட்டால் அளவில்லாத ஆனந்தமடைவாய். (எ-று) ஆல்-அசை. (உ0)

அன்ன வுபாயம் யாதெனினங் கரைநீர் வேக வதிமணலை, யுன்ன
தார்வ நிரம்பவெடுத் துலைவைத் தடிலோ தனமாகும், பின்னர் நிவே
தித் தருந்திதனைப் பிறருக் குரையே லுரைக்கிநதி, துன்னு மணலா
மெனச்சொன்னான் சொன்னேன் சொன்னே னனலோடும்ப

(இ-ள்) அப்பெருமா னருளிய உபாயம் என்னையெனின், சங்குகள் உலாவித் திரிகின்ற நீரையுடைய வைகையாற்றிலுள்ள மணலை உன் ஆசை நிரம்ப வாரியெடுத்து உலையேற்றிச் சமைப்பாயேல், அது அன்னமாகும் பின்பு அதனை நமக்கு நைவேத்தியஞ் செய்து உண்பாய். இவ்விரகசியத்தை யாவர்க்குஞ் சொல்லாதே. சொல்லின் வைகையாற்றிலுள்ள மணலாகவே யிருக்கும் என்று ஆஞ்ஞாபித்தருளினார். இதனை யறிவித்தேன் அறிவித்தேன் என்றவளவில், (எ-று) (உக)

செவ்வாய்க் கமுதா யினவிந்நாட் செவிக்கு மமுதா யினவென்றே
யைவா யரவ மணிந்தபிரா னருளு மடிக ளருச்சனைசெய்
மெய்வாய் நிறைவே தியனன்பும் வியந்தா னந்தக் கடற்படிந்தாள்
சைவா கமநூன் முழுதுணர்ந்தோன் சாவாத் துயரக் கடல்வீழ்ந்தான்.

(இ-ள்) அப்பார்ப்பனி இச்செயல் இதுகாறும் செவ்விய வாய்க்குமாத்திரம் அமுதாயிருந்தது. இன்று காதுக்கும் அமுதாயிற்று என்று ஐந்து வாய்களையுடைய சர்ப்பத்தை ஆபரணமாகத்தரித்த அன்னவிநோத மூர்த்தியினது திருவருளையும், அக்கடவுளது திருவடிகளைப் பூசிக்கின்ற மெய்யின் நிரம்பிய அவ்வருச்சகரது பக்தியையும், புகழ்ந்து, பேரானந்தக்கடலில் முழுகினாள். சிவாகமங்கள் முழுதும் ஆராய்ந்தறிந்தவராகிய அவ்வர்ச்சகர் உடனே அழிவற்ற துக்கசாகரத்தி லமிழ்ந்தினார். (எ-று) (உஉ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அப்ப கல்கழிந் தெதிர்பக லிப்பக லடியவர்க் கெளியானை
முப்ப ரம்பொருண் முதல்வனை வழிபடின் முதிர்புனன் மலர்போலுஞ்
செப்பு மின்னமு தமைப்பதெப் படியெனத் தெருமர லுறுங்காலை
யொப்பில் கற்புடை மறைக்கொடி பதிக்கிவை யுய்த்துரைத் தினண்மா
[மாதோ.



(இ-ள்) அற்றைத்தினம் போக மறுநாளில் இன்றைக்கு அன்பர்களுக் கெளியவராகியும், திரிமூர்த்திபராயுமுள்ள முழுமுதற்கடவுளாகிய பெருமானை வழிபட்டால், சுவைமுதிர்ந்த தீர்த்தம், புஷ்பங்களைப்போல, சொல்லுகின்ற இனிய நிவேதனஞ் சமைப்பது எப்படியென்று மயங்கிக்கொண்டிருக்கும்போது, நிகரில்லாத கற்பினையுடைய பூங்கொடிபோல்வாளாகிய அப்பார்ப்பனி தந்நாயகருக்கு இவ்வாறான வார்த்தைகளைத் தேர்ந்து சொன்னாள். (எ-று) மாதோ-அசை. (உங)

ஐய நீயுயி ருடலியா னிதனில்வே றுயதென் மருளேன்மற்
றுய்ய நம்பொருட் டுரைத்தசொ னமையலா லொருவரு மறியார்நீர்
வைகை நன்னதி படிந்துமுன் போலுலை வைத்தடின் மணற்சோறும்
பொய்யு றாதா னருண்மொழி யிம்மெனப் போகெனப் புகன்றாளால்.

(இ-ள்) தலைவரே நீர் உயிராயிருக்கின்றீர். நான் அவ்வுயிர்க்கு உடலாக இருக்கின்றேன். இதிலே வேறானதென்னை. மயங்கவேண்டாம். நாம் சீவித்தற்காகக் கட்டளையிட்டருளிய திருவாக்கை நாமன்றி, வேறொருவருமறியார். ஆதலின் நீர் நன்மையான வைகையாற்றில் ஸ்நானஞ்செய்து, முன்செய்ததுபோல உலையேற்றிச் சமைப்பீரேல் அம்மணல் அன்னமாகும். அப்பெருமானருளிய திருவாக்குத் தவறாது. விரைந்துசெல்லுமென்று சொன்னாள். (எ-று) மற்று ஆல் - அசைகள். (உச)

அம்மொ ழிப்படி யீசனைப் பூசைசெய் யருத்திமு னீர்த்தேகச்
செம்ம னத்தவன் கடன்கழீஇ யந்நதித் திருமண லுலைவாய்ப்பெய்
திம்மெ னப்புகுங் கட்டில்வாய்த் துவர்முழு தெரித்தெரித் தனங்காணு
தும்மை நற்பய னுலந்ததென் றவ்வெரி யுதரமுற் றெழச்சோர்வார்.

(இ-ள்) அவ்வார்த்தையின்படி சிவபெருமானைப் பூசிக்கும் ஆசையானது முன்னேயிழுத்துச்செல்ல, களங்கமற்ற மனத்தினராகிய அவ்வருச்சகர் நித்தியகன்மங்களை முடித்துக்கொண்டு அவ்வைகையாற்றின் மணலை உலையிலிட்டு விரைந்துசென்று மடைப்பள்ளியில் விறகுகளையெல்லாம் அடுப்பில்வைத்து எரித்தெரித்துப்பார்த்தும்அன்னமாகாமையால், பூர்வபுண்ணியத்தின் நல்லபிரயோசனமானது முடிந்துவிட்டதென்று, அவ்வடுப்பிலுள்ள (உரு)
தீயானது வயிற்றிற் பசியாயுண்டாகச் சோர்வார். (எ-று)

சென்னி திக்கண்வந் தடியற வீழ்தருத் தகைமையிற் பணிந்தேத்தி
யென்னி னிச்சொல்வ துனக்கியான் யாவையு மிருந்திடத் தறிவாய்நீ

தென்னவ னேற்பழிச் சுந்தரன் புனைந்தன மேனிமை கலைசான்றோர்
கன்னி யுத்தமிக் கொருபுற மளித்தருள் கடவுளை யெனைநாதன்.

(இ-ள்) எம்பெருமானது சந்நிதானத்தில் வந்து வேரற்றுவீழும் மரத்தின் தன்மைபோல் நமஸ்கரித்துத் துதித்து, தேவரீருக்கு இனியான் விண்ணப்பிக்கவேண்டிய செய்தி என்ன இருக்கிறது. தேவரீர் எல்லாவற்றையும் இருந்தவிடத்திலேயே யிருந்து தெரிவீர். ஆயினும் சேற்றையதினத்தில் பழிக்குப் பயந்து இங்குசொன்னேன் அல்லது பெரிய ஆபரணங்களைத் தரித்த ஸ்திரீயினது இச்சையினைச் சொன்னேனென்று. கன்னியாகிய உமாதேவியாருக்கு ஓர்பாகத்தைக் கொடுத்தருளிய என் தெய்வமே என்று வேண்ட அக்கடவுள், (எ-று) ஆல் - அசை. (௨௬)

அருத்த மொன்றுறு மடியவர் விரைந்தெதிர் வந்தவர் விரந்தோரைக்
கருத்த றிந்தவை முடிப்பது விரதமாங் கன்றுதந் தெறிந்தோன்றி
யருந்தி கூர்திரு மறையவ னசைவுறு மதிகவுத் தமனேகேள்
திருந்த வைகையந் துறைமணன் முகந்திடுஞ் செயலினி முடியாதால்.

(இ-ள்) மெய்யன்பர்கள் ஏதேனுமொரு அன்புறுதின், விரைவாக அவர்க்கெதிர்தோன்றி, அவர் வேண்டிவிண்ணப்பிக்கும் நிந்தனையையறிந்து அவற்றை முடிப்பதையே விரதமாகக் கொண்டுள்ளனெற்றி நேத்திரத்தையுடைய அவ்விடபுரீசர் நேரே தெரிசனங்கொடுத்து அன்புமிக்க அழகிய அந்தணனே, ஆதிசைவர்களுள் உத்தமனே நீ கேட்பாயாக. திருத்தமான அழகிய துறையினையுடைய வைகையாற்று மணலைக்கொண்டு அன்னமாகச் சமைக்கும் செய்கையானது இனிகூடாது. (எ-று) ஆல்-அசை. (௨௭)

நீயி ரக்குமிக் குறைதவிர நெருநலே நீணிலத் துயிர்க்கெல்லாந்
தாயிரக்கமிக் குள்ளவன் சுகுணனாந் தண்கதிர் மருமான்பாற்
போயிரக்கமுற் றெதிர்கன விடைப்புகன் றுள்ளனம் டவன்பாலன்
குயுரைத்தியாம் வந்தமர்ந்தது மடைவினிற் போவென்றான்.

(இ-ள்) நீ வேண்டிக்கொள்ளும் இந்தக் குறைபாட்டிற்கு, நாம் நேற்றையதினமே விசாலமான இவ்வுலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம், தாய்போல மிக்க கருணையையுடையவனும், தண்ணளியகிரணங்களையுடைய சந்திரகுலத்துதித்தவனுமாகிய சுகுணபாண்டியனிடத்திற்சென்று இரக்கத்துடனே இரவில் நேரே அவன் சொப்பனத்திலே கட்டளைபுரிந்திருக்கின்றோம். ஆதலால் அச்சுகுணபாண்டியனிடத்திற்சென்று, நாம் இங்கிருந்து வந்ததையும், இருந்ததையும், கிரமமாக நன்றாய்ச்சொல்வாயாக என்று திருவாய்மலர்ந்தருளினார். (எ-று) (௨௮)



என்றநாதனை வணங்கினனிறைவனு மிலிங்கத்துண் மறைந்தான்பின்
றென்றனாடனைக் காண்பதற் கந்தணன் சென்றனன் செலுமுன்னர்
மின்ற வாமுடிக் கோமகன் பேரவை மேவுமந் திரரோடு
மன்றி ராக்கன விடைத்தனிக் கண்டபே ரதிசய நவின்றனால்.

(இ-ள்) என்று திருவருள்புரிந்த கடவுளை நமஸ்கரித்தார். அக்கடவுளும் அச்சிவலிங்கத்தினிடமாக அந்தர்த்தானமாயினார். பின்பாண்டிவேந்தரைப் பார்ப்பதற்கு அவ்வர்ச்சகர் சென்றார். போகுமுன்னமே, ஒளிபொருந்திய இரத்தினங்கள் பதித்த கிரீடத்தைத்தரித்த அச்சுகுணபாண்டியர். தமது பெரிய சபையிலுள்ள மந்திரிமார்களுடனே அன்றிரவிலே சொப்பனத்திலே தனித்துக்கண்ட பெரிய ஆச்சரியமான காரியத்தை அறிவித்தார். (எ-று) ஆல்-அசை. (௨௯)

வேத விப்பிர வேடராய் விழிமணி மெய்யின ராய்ப்பூதி
சாத னத்தவ நடையரா யொருவர்தாந் தனித்துவந் தெனைவேந்தே
நீத மற்றபே ராப்பனூ ரெனுநகர் நின்றுநம் மனையாளுங்
காதன் மக்களும் வீடிலேம் வைகையின் கரைமருங் கிருக்கின்றேம்.

(இ-ள்) வேதங்களையுணர்ந்த பிராமண வடிவங் கொண்டவராய்த் தமது திருமேனியில் உருத்திராக்ஷதாரணமுடையவராய், முத்திநெறிக்குச் சாதனமாகிய விபூதியையணிந்த தவவொழுக்கமுடையவராய், ஒருவர் தாம் தனியேவந்து, என்னைநோக்கி, ஓஅரசனே! நியாயமில்லாத ஆப்பனூரினின்று நீங்கி வந்து நாமும் நமது தேவியும் குழந்தைகளும் வசிப்பதற்கு வீடில்லாமல், வைகையாற்றின் கரைப்பக்கத்தில் இருக்கின்றோம். (எ-று) (௩௦)

அன்றி யும்பசித் திருந்தன மழுதினுக் கடைந்தன நின்பாலியா
மென்று கூறியங் கனமறைந் தேகின ரென்றலுங் கனிந்தூறுந்
தின்றிருங்கனிச் சுவையெனச் செவிப்புலன் சுவைப்பமந் திரர்யாரு
நன்று நன்றென மகிழ்ந்தணி யாப்பனூர் நாதனைப் புகழ்காலை.

(இ-ள்) இஃதன்றியும் பசித்திருக்கின்றோம், ஆதலால் நாம் உன்னிடத்தில் அன்னத்திற்காக வந்தோம் என்று கட்டளையிட்டு அங்கே மறைந்தருளினார் எனப்புகன்றவளவில், மந்திரிமுதலிய யாவரும், கனி முதிர்ந்து அதனிடத்திற் பெருகும் மிக்க சுவை போல, அவ்வரசர் கூறிய மொழிகள் செவிகளுக்கு இன்பத்தை விளைக்க, இதுமிகவும் வியப்பு எனக்களித்து, அழகிய திருவாப்புடையீசரைப்புகழ்ந்து கொண்டிருக்கும் சமயத்தில், (எ-று) (௩௧)

ஆதி யாகம வேதிய னரசவை யணுகியங் கனம்மனைசி
யீதி யாப்புடை நாயகர் திருவெண்ணீ றெனக்கரங் குவித்தேற்று
நீதி யானுத னிலவுறத் தரித்தன னிமலனார்ச் சகன்பின்னர்ச்
சோதிவான்மதிவேந்தகேளற்புதஞ் சொல்லுகேனெனச்சொல்வான்.

(இ-ள்) முதன்மையான சிவாகமங்களையுணர்ந்த அச்சிவப்பிராமணர் இராஜசபையிற்சென்று அங்கேயிருந்து இஃது திருவாப்புடையீசருடைய வெள்ளிய திருநீறாகும் என்று கூற, மனுநீதியையுணர்ந்த அச்சுகுணபாண்டியர் தன்னிருகரங்களையுங் கூப்பி வணங்கி, அத்திருநீற்றைவாங்கி நெற்றியில் விளங்கத்தரித்துக்கொண்டார். பின்பு மலரகிதராகிய சிவபெருமானை யர்ச்சிக்கும் அவ்வுத்தமர் ஒளிபொருந்திய உயர்ந்த சந்திரவமிசத்திலுதித்த பாண்டிமன்னரே அற்புதமான செய்தியொன்று சொல்லுகிறேன்கேட்பீரா கவென்று புகல்வாராயினர். (எ-று) (௩௨)

மற்று நீதியி லாப்பனூர் விடுத்ததும் வரும்வழிக் கடையாளஞ்
சொற்ற துந்திரு மனையவ ளுடன்குறி தொடர்ந்துபின் படர்ந்திங்கு
னுற்ற துந்துறை மணலமு தாக்கது முண்மையில் லவள்பாற்போ
யற்ற தும்பரன் விடைகொடுத் துரைத்தது மறைந்தன னயராதே.

(இ-ள்.) திருவாப்புடையீசர் நீதியில்லாத அவ்வாப்பனூரைவிட்டு நீங்கியதையும், தாம் வரும் மார்க்கத்துக்கு அடையாளஞ்சொன்னதையும், பின் தன் மனைவியோடு அடையாளம் பார்த்து அதின்வழியே தான் இங்கேவந்ததையும், வையையாற்று மணலையே அன்னமாகச் சமைத்து நிவேதிக்க, அப்பெருமான் ஏற்றதும், இந்த இரகசியத்தைத் தன் மனையாளிடத்துச் சொல்லுதலால், அம்மணல் அமுதாகாதொழிந்ததையும் பின் அச்சிவபெருமான் கட்டளையிட்டருளியதையும்; தவறாது கூறினர். (எ-று) மற்று-அசை.

வேந்தர் சேகரன் குதூகலித் தருளினன் வேந்தவை யுளர்கோமான்
சாந்த நீற்றினங் கனவுரை புகன்றதுஞ் சைவனாற் சிகையாளன்
கூர்ந்துவந்திவைபகர்ந்ததுஞ்சருக்கரைக் குன்றிற்றேன்மழைநான்ற
தாந்த கைத்தென மகிழ்ந்தனர் புகழ்ந்தன ராப்புடை யவர்நாமம்.

(இ-ள்) அரசர்களுக்கு மகுடம் போன்றவராகிய சுகுணபாண்டியர் பேரானந்தமடைந்து மனங்கரைந்தார். அவ்விராச சபையிலுள்ள மந்திரி மார் முதலிய யாவரும், களபமாக விபூதியை யணிந்த பெருமான் சொப்பனத்திற் கட்டளையிட்டருளியதாக அரசர்மொழிந்ததும், அதற்குத்தக, சிவா



கமநூன்முடிபுகளையுணர்ந்த இச்சிவவேதியர் அன்புகூர்ந்து இங்கேவந்து இவைகளைச்சொன்னதும், சர்க்கரைக்குவியலில் தேன்மழை பெய்தாற்போ ல்வதாம் என்று, அத்திருவாப்புடையீசர் திருநாமங்களை மனமகிழ்ச்சியுடன் கொண்டாடித்துதித்தார்கள். (எ-று) (௩௩)

இரைத்த காதன்மு னீர்த்தெழ வேதிய னெழுந்துமுன் செலச்
சூழ்ந்த, வரைத்த ரேசனு மமைச்சர்பின் வரப்பெரு வரைப்புறந்
திரைக்கைபா, லரைத்த சாந்தலிந் தலர்சொரிந் தமுதுமங் கருத்தி
யார்த் தெழும்வையைக், கரைத்த னிச்சிவக் கொழுந்தினை விரைந்து
செல் காவலன் கண்டானால்.

(இ-ள்.) முழக்கம்பெற்ற விருப்பமானது இழுத்துச்செல்ல, அச்சிவ வேதியர் எழுந்து முன்னேபோக, பொதியமென்னும் சந்தனமலையையு டைய சுகுணபாண்டியரும் மந்திரிமார் பின்னேவர, பெரிய மலையின்புறத் தில் அலைகளாகிய கைகளால் அரைத்துக் கொணர்ந்த சந்தனச்சாந்தைத் தரித்தும், மலர்களைத் தூவியும், பலவித உணவுகளையும் நிவேதித்தும், ஒலி த்தெழுகின்ற வையையாற்றின் கரையிலமர்ந்தருளும் ஒப்பற்ற சிவக்கொழு ந்தாகிய கடவுளை விரைந்து செல்லும் அச்சுகுணபாண்டியர் நோக்கினார். (எ-று) ஆல் - அசை. (௩௪)

கண்ட கட்பொறி வழியெழும் புனலுரங் கலந்தமுத் திரைத்தீர
வண்ட லிட்டிழி தரமயிர் முகிட்பெழ மலர்க்கரங் குவித்தேகித்
தொண்ட ருக்கெளி வருங்கரு ணையங்கட லுணையடி முடிசூடத்
தண்டெ னத்தரை மிசைப்பணிந் தெழுந்தரு டழைத்திடக் கரைந்
[தானால்.

(இ-ள்) தெரிசனஞ்செய்த கண்களின் வழிப்பொங்கியெழும் நீரானது மார்பிலே சேர்ந்த முத்துக்களைச் சிதறியழித்து வண்டலாக்கிக் கொண்டு ஒழுகவும், உரோமாஞ்சங் கொள்ளவும், தாமரைமலர்போன்ற கைகளைக்கூப் பிச்சென்று, மெய்யன்பர்களுக்கு எளிமையா யெழுந்தருளும் அழகிய கிருபா சமுத்திரமாகிய அவ்விடபுரேசரது இரண்டு திருவடிகளும் தமது சிரசிற் பொருந்த, தண்டாகாரமாய்ப் பூமியில் நமஸ்கரித்து எழுந்து, திருவருள் சுரக்கும்படி, மனமுருகித் துதிக்கின்றார். (எ-று) ஆல் - அசை. (௩௫)

**கோச்சகக்கலிப்பா.**

விரையிருக்குஞ் செழுங்கமல மேலிருக்கும் பொருளுணரா
வுரையிருக்குஞ் சதுர்மறையி னுச்சியிருக் கத்தனிவெள்

வரையிருக்கத் தொழுமடியார் மனமிருக்க மணிவகைக்
கரையிருக்குஞ் செயலென்னோ கரைகடந்த பரமேட்டி.

(இ-ள்) அளவைக்கடந்து விளங்கும் மேலான கடவுளே! வாசனை தங்கிய செழிப்பான தாமரைமலரின்மேல் வீற்றிருக்கும் பிரமதேவருமறியாத பிரணவப்பொருள் குடிகொண்டிருக்கும் நான்கு வேதங்களின் சிரசாகிய உபநிஷத்துக்களிருக்கவும், ஒப்பற்றவெள்ளிய கைலையங்கிரியிருக்கவும், வணங்குகின்ற மெய்யன்பர்களது இருதயகமலமிருக்கவும் இவற்றையெல்லாம் விட்டு அழகிய வைகை நதிதீரத்தில் எழுந்தருளியிருக்குஞ்செய்கை என்னகாரணமோ? (எ-று) (௯௭)

ஆடளிக்கு நறுந்தேன்பெய் யம்புயற்கும் பாற்கடல்வாய்
நீடளிக்கு மறிதுயில்கொ ணெடியவற்குங் கற்பாந்த
நாடளிக்கும் பிம்மயோக நற்றவர்க்கு மற்றவர்க்கும்
வீடளிக்கு நீகனவில் வீடிரந்த செயலென்னே.

(இ-ள்) திரிகின்ற வண்டுகளுக்கு நல்லதேனைத் தருகின்ற தாமரை மலரில் வதியும் பிரமதேவருக்கும், திருப்பாற்கடலில் நெடிய ஆலயத்தில் நித்திரை செய்துகொண்டிருக்கும் திருமாலுக்கும், கற்பாந்த காலத்தையும் கடந்திருக்கும் கும்பிமென்ற நல்லயோக முதிர்ச்சியுடைய தவத்தர்களுக்கும், ஏனையவர்களுக்கும் வீட்டைப்பாலிக்கும் தேவரீர், அடியேன் சொப்பனத்தில் வந்து வீடுகேட்ட செய்கை என்ன ஆச்சரியம்! (எ-று)

வீடு-மோக்ஷம், கிருகம்.

வேண்டுவோர் வேண்டியவற்றையெல்லாம் ஈயவல்ல அக்கடவுள் தாம் வீட்டைவேண்டியது போலிரந்தது அடியேனை யாண்டருளுங்கருணைத்திறமேயல்லது வேறன்று என்பது கருத்து.

கற்பாந்தகாலத்தும் அழிவில்லாதவரென்பார் கற்பாந்தநாள் தள்ளிக் கும்பிமயோகர் என்றார். (௯௮)

கமழ்முல்லைச்சிற் றரும்பன்ன மூரலிளங் கனியமுதைச்
சமைவாய்த்த விடத்திருப்பத் தனியோத நஞ்சொன்றி
நிமிரநற்கந் தரமிருத்தி நிறைதருவின் றொட்டவர்க்கு
மமுதளிக்கு நீகனவி லமுதிரந்த பரிசென்னே.

(இ-ள்) மணம் வீசும் சிறிய முல்லையரும்புபோன்ற தந்தங்களையும், இளமையையுமுடைய கன்னிப்பருவம் வாய்ந்த நின்மலசொரூபியாகிய



உமாதேவியார் பொருந்த வாமபாகத்தில் வீற்றிருக்க, ஒப்பற்ற திருப்பாற்கடலிற்றோன்றிய ஆலகால விஷம்பொருந்தி மேம்பட்டு விளங்க நல்லகண்டத்திலே நிறுத்தி, கற்பக விருக்ஷங்களையுடைய தேவர்களுக்கும் அமிர்தத்தைக்கொடுத்தருளிய தேவரீர் அடியேன் சொப்பனத்தில் எழுந்தருளிவந்து, அன்னத்தை யாசித்த தன்மை என்ன அதிசயம். (எ-று.) (௯௯)

என்றினைய வகைபன்னி யிறில்களிப் படைந்திறைவன்
றுன்றியநூண் மதியமைச்சர் தம்மொடும்பொன் சொரிகொன்
மன்றன்மலர்த் தருநிழலுள் வதிபவற்கு மலைமகட்கு.
நன்றனமைபொற் றிருக்கோயி லினிதெடுக்க நனிநினைந்தான். [றை-

(இ-ள்) என்றித்தன்மையனவாகத் துதிசெய்து அழிவில்லாத சந்தோஷத்தையடைந்து சுகுணபாண்டியர் தம்மைச்சூழ்ந்த புத்திநுட்பமுள்ள மந்திரிமாருடன், பொன் வர்ணமுள்ள வாசனைபொருந்திய புஷ்பங்களைச் சொரிகின்ற கொன்றைமரநிழலில் தங்கியருளும் திருவாப்புடையீசருக்கும், உமாதேவியாருக்கும், தகுதிபெற்ற பொன்மயமாகிய அழகிய கோயிலையினிதாகச் செய்துமுடிக்க மிகவும் பரியாலோசனை செய்தனர். (எ-று) (௱)

கலிநிலைத்துறை.

சிற்ப நூற்பொருள் முழுவதுங் கைதொடு தேற்றுங்
கற்பி னோர்களை யழைத்திரு கண்சிறைப் படுத்தும்
பொற்பி னன்மக மேருவின் முடிமிசை புனைய
நற்பொன் மாமுடி வகுத்தென மானநன் கமைத்து.

(இ-ள்) சிற்பசாஸ்திரத்தின் பொருள்களையெல்லாம், கைத்தொழில்களால் தெளிவிக்கும் கல்விமான்களாகிய சிற்பர்களைவருவித்து, பார்க்கின்றவர்களுடைய இரண்டு கண்களையும் தம்பாற் பிணித்துக்கொள்ளத்தக்க, அழகினால் மேருவைப்போல(ஆலயம் சமைத்து) அதனது முடிமேலேதரித்துக்கொள்ளும்படி பொன்னாலாகிய பெருமைபெற்ற கிரீடத்தைச் சூட்டினாற்போல விமானத்தைச் சிறக்க அமைத்து, (எ-று.) (௱௧)

அருத்த மண்டப மாதிமா மண்டப மருகாற்
பொருத்து பீடிகை மண்டபம் பொன்னணு ராடு
திருத்த மண்டபந் திருமதில் கோபுர நிமலற்
கருத்தி யான்முடித் தமைக்குமப் படிவருத் தமைத்து.

(இ-ள்) அர்த்தமண்டபம், முதன்மையாகிய மகாமண்டபம், இலைத்த அலங்கார்பீடமண்டபம், இலக்குமியையொத்த அழகிய கணிகையர் நடிக்கும் நிர்த்தமண்டபம், திருமதில்கள், கோபுரம் ஆகிய இவற்றை நிர்மலராகிய அவ்விடபபுரேசருக்கு ஆசையுடன் செய்துமுடித்து, உமாதேவியாருக்கும் அவ்வாறே செய்து முடித்து, (எ-று) (சஉ)

பானு முற்பட்ட பகர்பரி வாரவா னவர்க்கு
போனி லத்தினல் லுறையுளும் விதிமுறை திருத்தி
வானு யர்த்தவெள் விடைக்கொடி மரம்பலி பீடந்
தானி யற்றினன் வேறுள பணிகளுஞ் சமைத்து.

(இ-ள்) சூரியன் முதலாகச் சொல்லுகின்ற பரிவாரதேவதைகளுக்கு விண்ணுலகம் போலத் தகுதியான கோவில்களையும் கிரமமாகச்செய்து மேலேயுயர்த்தப்பெற்ற வெள்ளிய இடபக்கொடியையுடைய த்வஜஸ்தம்பமும், பலிபீடமும் மற்றுஞ் செய்யவேண்டிய திருப்பணிகளுஞ் செய்து முடித்தார். (எ-று) (சங)

நந்தி தீர்த்தகதின் ஞாங்கர்சூழ் படித்துறை நனிநிறீஇச்
சந்தி யாமடங் கண்டுகற் றளிப்புறஞ் சாதி
சிந்து மாதவி வலம்புரி கணவிரஞ் சிறைத்தேன்
வந்து சூழ்மலர் மலியுநந் தனவனம் வைத்து.

(இ-ள்) இடபதீர்த்தத்தின் பக்கத்தில் சூழவும் படித்துறைகள் கட்டுவித்து, சந்தியாவந்தனஞ் செய்தற்குரிய மடங்களுமியற்றி, கற்களினுலமைத்த கோயிலின்புறத்தில் சிறகுகளையுடைய வண்டுகள் வந்துமொய்க்கும் பூக்கள் நிரம்புதற்கிடமாகிய வசந்தகாலமல்லிகை, இருவாட்சி, குருக்கத்தி, நந்தியாவர்த்தம், அலரி முதலியவைகளையுடைய திருநந்தனவனம் வைத்து, (எ-று) (சச)

இருத மாலெனு நீர்புக வயல்வளங் கொழிக்கு
மருத நன்னில வரைப்பினி லூர்களும் வழங்கிப்
பெரிது பூசனை யியற்றிப்பின் பேரியங் கலைப்பக்
கருது மன்பர்கண் களித்திட நல்விழாக் கண்டு.

(இ-ள்) இருதமாலையென்னும் வையையாற்றின் தண்ணீர்பாய்தலால் வயல்வளமிகுந்துள்ள நல்லமருதநில வெல்லையிலே கிராமங்களும் மானியமாக விடுத்து விசேஷபூசைகள் நடத்திப் பின்வாத்தியங்கள் முழங்



கவும், தியானிக்கின்ற மெய்யன்பர்களுடைய இருகண்களும் கண்டு பேரானந்தமடையவும், சிறந்த திருவிழாவும் நடத்தி, (எ-று) (சரு)

இன்ப முற்றடி யவர்குடி புரப்பதற் கிசைந்து
முன்பு வைகைவெண் மணலமு தாகந்தருண் முறையா
லென்பு நெக்குநின் றிடவபு ரேசனை யிறைஞ்சி
யன்பி னாலெடுத் தன்னவி னோதனென் றழைத்தான்.

(இ-ள்) இன்பமடைந்து தமது மெய்யடியராகிய அர்ச்சகர் குடும்பத்தைக் காப்பதற்கிணங்கி, முன்னே வையையாற்றிலுள்ள வெண்மணலையே அன்னமாக விரும்பி ஒப்புக்கொண்டருளிய முறைமையால், எலும்புகள் கட்டுவிட்டுருக நின்றுகொண்டு அவ்விடபபுரேசரை வணங்கி, அன்புமேலீட்டால் அன்னவினோதன் என்று பெயர் சூடி அழைத்தார். (எ-று) (சசு)

சன்னி தித்தெரு வீதியி னருச்சகன் றனக்கு
முன்ன தத்திரு மாளிகை யெடுத்துமற் றுள்ள
நன்ன லத்தகத் தடியவர்க் குறையுளு நவின்று
மன்ன மெய்த்திரு வைதிகர் நியமமும் வகுத்து.

(இ-ள்) சன்னிதிவீதியில் அவ்வர்ச்சகருக்கு, உயர்ந்த அழகிய இருக்கம் அமைத்து, வேறுள்ள நற்குணம் நிரம்பிய மனதையுடைய சிவனடியார்களுக்குத் திருமடங்களும் செய்வித்து, உண்மையாகிய சிறந்த வைதிகர்வீதிகளும் நிலைபெற ஏற்படுத்தி, (எ-று) (சஎ).

நீதி மன்னவர் வணிகர்பின் னவர்குடி நெருங்கும்
வீதி யுன்னுந லாவண மமைத்துநீள் விண்ணோர்
கோதி னன்னக ரெனும்படி செய்தனன் குளிர்வெண்
சோதி மின்னிய மதிக்குலக் கோமகன் சுகுணன்.

(இ-ள்) குளிர்ந்த வெண்ணிறமுள்ள பிரகாசம் விளங்கப்பெற்ற சந்திரகுலத்திற்றோன்றிய சுகுணபாண்டியர், மனுநீதியின் வழியொழுகும் அரசர்களும், வைசியர்களும், சூத்திரர்களுமாகிய குடிகள் நெருங்கியிருக்கின்ற தெருக்களையும், எப்பொருள்களும் செறிந்துள்ள நல்லகடைவீதிகளையும் வகுத்து நீண்ட தேவர்கள் வசிக்கும் குற்றமற்ற நகரமே என்று கண்டோர் கூறும் வண்ணம் செய்துமுடித்தார். (எ-று) (சஅ)

இந்த வைச்சிவ தருமமற் பணிசெயு மியல்பாற்
சுந்த முத்தமிழ் நாடெலா மழைவளஞ் சுரப்ப

பொருந்த பல்லுயிர் புரக்கநாட் டன்குல முழுதோம்
புத்த மத்தனி யான்மக வின்றினி துவந்தான்.

(இ-ள்) இவ்விதமான சிவதருமங்களாகிய நல்ல திருப்பணிகளைச்செய்யும் தன்மையால் பரிசுத்தமாகிய முத்தமிழ்களும் வழங்குகின்ற பாண்டி தேசமுழுவதும் மழைவளம் அதிகரிக்க, நெருங்கிய பலவுயிர்களையுங்காத்து வருநாளில், தன்வமிசமுழுமையும் காக்கத்தக்க உத்தமமான நல்ல குணங்களையுடைய ஒப்பற்ற ஆண்பிள்ளையைப்பெற்று மிகமனமகிழ்ந்தார். (எ-று)

வண்மை யுங்குல மானமும் பொறைமையும் வழுவா
வுண்மை யுஞ்சிவ தருமமும் புகழ்மையு முடையாத்
திண்மை யுந்தனி மகவுடன் வளர்த்தனி திகழ்பார
மெண்மை தாங்கபத் தொடுந்நமக் கரசனிற் றிருந்தான்.

(இ-ள்) ஈகை, குலாபிமானம், பொறுமை, (எப்போதும்) தவறாத சத்தியம், சிவபுண்ணியம், கீர்த்தி, சிதையாதவலிமை ஆகிய இவற்றைத் தனது ஒப்பற்ற புதல்வரோடு வளரச்செய்து, அழகிய இப்பூபாரத்தை மதம் பொழியும் எட்டுயானைகளோடு தானுந் தாங்கி, அரசு செலுத்தி வாழ்ந்திருந்தனர். (எ-று) (௰)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஈறி லன்னவி னோதமெ னுங்கதை யீது சொன்னவர் கேள்வி
முயன்றவரோர், தேறு நன்னிதி யாயுள்பெ ருப்புகழ் சேர்வ ரின்னலு
றூர்பகை கொண்டிடார், மாறில் மன்னர்ச மானரெ னும்படி வாழ்வ
ரென்னவு மாதவர் முன்சொனா, னீறு பிலிர்விய மேனிய னந்தணர்
நேய முன்னிய சூதன்ம கிழ்ந்தரோ.

(இ-ள்) திருவெண்ணீற்றொளிபழுத்த திருமேனியை யுடையவரும், அழகிய தன்னையிலையை யுடைய முனிவர்களுடைய அன்பை நாடியவரும் ஆகிய சூதமுனிவர் பேரானந்தமடைந்து, நைமிசாரணிய முனிவர்கள்முன் அழிவில்லாத திருவாப்புடையீசர் அன்னவினோதமாகிய இச்சரித்திரத்தைப் பிறர் கேட்கச் சொன்னவர்களும், அதைக்கேட்டலில் முயன்றவர்களும், யாவரும் மதிக்கத்தக்க நல்ல சம்பத்தையும், ஆயுசுவிர்த்தியையும், சிறந்த கீர்த்தியையும் அடைவார். துன்பத்தையடையார். பகையால் வருத்தமுறார். பகையில்லாத இராஜசமானர் என்று யாவரும் சொல்லும்வண்ணம் வாழ்வார் என்றுந் திருவாய்மலர்ந்தருளினார். (எ-று) அரோ - அசை. (௧௧)

அன்னவினோதச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௨௱௯.

# சந்திரசேனச் சருக்கம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
26 JAN 1911
MADRAS.

## கலிவிருத்தம்.

கேட்ட மா தவர்குழாம் பின்னுங் கேட்பது
வேட்டனம் யாந்தனி விடைப்பி ரான்பெயர்
சூட்டுமத் தீர்த்தத்தின் கதைசு ருக்கமுன்
காட்டினை விரித்தினிக் கழறு வாயென்றார்.

(இ-ள்) இவ்வாறுகூறக்கேட்ட தவம்மிக்க நைமிசாரணியவாசிகள் அடியேங்களின்னமும், கேட்கவிரும்புகிறோம். ஒப்பற்ற நந்திதேவர் திருநாமந்தரிக்கப்பெற்றுள்ள தீர்த்தத்தின், சரித்திரத்தை, முன்னே தொகுத்துக் கூறியருளினீர். இப்பொழுது விரிவாக விளம்பியருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். (எ-று) (௧)

நந்திநா யகப்பெயர்த் திருத்த நன்கதை
சிந்தியா விருவிழி பனிப்பத் தேக்கிய
புந்தியான் சூதனும் புராண தேசிக
னந்தணீர் கேண்மினென் றறைதன் மேயினான்.

(இ-ள்) திருநந்திதேவரது திருநாமம்பூண்ட, அந்நந்திதீர்த்தத்தின் சரிதத்தைத் தம்முள்ளே சிந்தித்து, இருகண்களும் ஆனந்தவெள்ளஞ் சொரிய, நிரம்பிய மனத்தையுடையவராகிய, சூதபுராணிகரென்னும் ஞானாசாரியர், முனிவர்களே கேளுங்களென்று சொல்லத்தொடங்கினார். (எ-று)

பண்டைநாண் மந்திரி யுடனோர் பார்த்திபன்
குண்டைநீர் மடுவிடைக் குடைந்து மேற்குலக்
கெண்டைவா ளயனியாற் கிடைத்த நீப்பழி
விண்டயர் வுயிர்த்தனன் விரைந்தென் றோதினான்.

(இ-ள்) முற்காலத்தில் ஓர் அரசன் தனதுமந்திரியுடனே, தண்ணீர் நிறைந்த அவ்விடபதீர்த்தத்தில், ஸ்நானஞ்செய்து, உயர்ந்த பிராமணகுலத்துதித்த, சேற்கெண்டையைப்போன்ற ஒளிபொருந்திய கண்களையுடைய ஓர் பெண்ணினால், சேர்ந்த மிகக்கொடிய பழிநீங்கி, விரைய, துன்பங்களினின்று நீங்கினான் என்று கூறினார். (எ-று) (௩)

முதுமறை யிருடிகண் மொழிந்த வேந்தியார்
பெறுபெய ரெதுநக ரிவற்குப் புகர
வதைத்திடும் பழியெவ ணடைந்தவா றது
ததுதொடர்ந் திவட்பரிந் தடைந்த வாறெவன்.

(இ-ள்). பழமையான வேதங்களையுணர்ந்த அம்முனிவர்கள் சூதமுனி வரை நோக்கி, தேவரீர் கூறிய அரசன் யார்? அவன் பெயர் என்னை? அவ ன் நகரம்யாது? இவ்வரசனுக்குப் பிராமணனைக்கொன்றதனாலாகிய பெரிய பிரமகத்தியானது எந்தப்பெண்ணினிச்சையால் வந்தது. அப்பிரமகத்தி யானது பின்தொடர்ந்து அலையச்செய்ய இவ்விடத்திற்கு வந்து சேர்ந்தது எப்படி? (எ-று) (௪)

உளைமதி யமைச்சரோ டுற்றித் தீர்படி
விளைமதி மருட்கெடும் விளைவிற் றீர்ந்துசூழ்
வளைமதி லாற்புரி வாயி றாழ்ந்துதண்
முளைமதிக் கண்ணியங் கடவுண் முன்செலா.

(இ-ள்) உள்ளீடில்லாத அறிவினையுடைய மந்திரியுடனே வந்துசேர் ந்து, இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, கூர்மையுடைய புத்தியையடை ந்தும், கொடிய பாவத்தினின்று நீங்கிச், சுற்றிலும் வளைந்த திருமதில்களை யுடைய நல்ல ஆலயத்தின் வாயிலிலே நமஸ்கரித்துத் தோன்றிய சந்திரனா கிய அரும்பையணிந்த அழகிய சிவபெருமான் திருமுன்னே சென்று, (எ-று)

உளை - துய். துய்போல் உள்ளீடில்லாத மதியென்பார். 'உளைமதி' யென்றார். (௫)

ஆதியை யடிபணிந் தரிதி னேத்துதி
யோதியவ் வரசன்ற னகர்க்க ணுற்றனன்
ஈதினி தெமக்குநன் கியம்பு வாயென
நீதியின் வரன்முறை நிகழ்த்து வானரோ.

(இ-ள்) முழுமுதற்கடவுளாகிய அன்னவினோதமூர்த்தியைப் பாதங் களில் நமஸ்கரித்து, அருமையாய் என்ன தோத்திரஞ்செய்து அவ்வரசன் தன் நகரத்தையடைந்தனன். இவைகளை யெல்லாம் அடியேங்களுக்கு இனிதாக விளங்கத் திருவாய்மலர்ந்தருளல்வேண்டும் என்று பிரார்த்திக்க, நீதியோடு கிரமமாகச் சொல்வாராயினர். (எ-று) அரோ - அசை. (௬)



ஊடலின் கொடியனா ருணர்ந்து காதரைக்
கூடலின் கலவிமே னிலையிற் சேர்தர
நாடும்வெண் கதிர்மதி னைந்து டைப்பதொத்
தாடும்வெண் கொடிநிக ழவந்தி மாநகர்.

(இ-ள்) ஊடலைச் செய்கின்ற மின்னற்கொடிபோன்ற பெண்கள், தங் களுடைய பிணக்கை நிவிர்த்திக்கின்ற கணவர்களோடு, இனிய கலவியோடு கூடுகின்ற, மேல் நிலைக்கண்ணே, தன் களங்கம் நீங்கும் வகையை நாடுகின்ற சந்திரனிடத்துள்ள, அக்களங்கத்தைத் தாம் துடைப்பனபோன்று அசை கின்ற வெண்கொடிகள் விளங்கப்பெற்ற அவந்திமாநகரிலே, (எ-று) (௭)

மறையொலி முழவொலி மாத ராடலின்
றுறையொலி யரவொலி துன்ன நாடொறுங்
கறையணி மிடற்றுமா காள விசனுன்
றுறைதரு முலகுயிர்க் குவகை நல்கியே.

(இ-ள்) தினந்தோறும் வேதமுழக்கமும், மத்தளமுழக்கமும், உருத் திரகணிகையர்கள் நடித்தலினாலுண்டாகிய பலவித முழக்கமும், சிவனடி யார்கள் ஹரஹர என்னும் முழக்கமும் ஒக்கும்படி, உலகிலுள்ள பலவுயிர் களுக்கும், இன்பத்தைப் பாலித்து, விஷமணிந்த கண்டத்தையுடைய மகா காளவீசுரன் அவ்விடத்தில் எழுந்தருளியிருப்பர். (எ-று) (௮)

முனிவரு முழுதுணர் மோன ருந்தவத்
தெளிவரு மசைவற விருக்கும் யோகரு
மனைவரு முனிவரு மற்றை மூவரு
மனைவருஞ் சரிப்பதா லளகை தோற்குமால்.

(இ-ள்) அதிவருணாச்சிரமிகளும், எல்லாவற்றையும் அறிந்தடங்கிய மௌ னிகளும், தவநெறியினொழுகும் மற்றையரும், சமாதியின்கண் தறிபோல வ சைவற்றிருக்கும் சிவயோகிகளும், இல்லறதருமத்தில் விருத்தியையுடைய முனிவர்களும், இவரல்லாத ஏனைய மூன்றாச்சிரமிகளும் ஆகிய யாவரும் சஞ்சரித்துக்கொண்டிருப்பதால், அந்நகரத்திற்கு அளகாபுரியும் தோல்வி யடையும். (எ-று) ஆல் - அசை. (௯)

அத்திரு நகர்புரந் தளிக்கு மன்னவன்
மைத்தலைச் சுடிகைமீக் கிடந்த பாரகம்

வைத்தநின் புயப்பெரு வலியி னைம்படச்
சித்திரத் தெழிலவனுந் திறக்குந் செங்கியான்.

(இ-ள்) அவ்வகைத் தொகைகளைக் காத்தளிக்கும், அரசனானவன், ஆதி சேடனுடைய படம்பொருந்திய தலையின் உச்சியிற்கிடந்த இடமகன்ற இப் பூமியைத்தாங்கப்பெற்ற வலிமைபொருந்திய பெரிய புஜபலத்தையுடைய வன். மடலிலே யெழுதுஞ் சித்திரத்தினழகினுஞ் சிறந்த அழகினையுடை யவன். (எ-று) (௧௦)

கழுதுவாய் வெப்புறப் பகைஞர் கன்னிய
ரழுதுகண் வெப்புற வரசர் பொன்முடி
யுழுதுகால் வெப்புறக் கணக்கர்க் கொண்கர
மெழுதுகை வெப்புற வெரிக்கும் வாளினான்.

(இ-ள்) பேய்களின்வாய்சிவக்கவும்; சத்துருக்களது மனைவியர்களு டைய கண்கள் அழுது சிவக்கவும், அரசர்கள் சிரத்திற்றரித்திருக்கும் பொன் மயமான கிரீடங்கள் உராய்தலால் கால்கள் சிவக்கவும், குடிகளாற் செலுத் தப்படும் இறைப்பொருள்களை எழுதுதலால் கணக்கர்களுக்குக் கைகள் சிவ க்கவும், தாக்கும் வாளினையுடையவன். (எ-று)

கரம் - குடியிறைப்பொருள். (௧௧)

புத்தியைத் திரிக்கும்வேள் புணர்ச்சி நான்முறை
சித்திரக் குவிமுலை யவரைச் சேக்கையி
னித்தமைந் திடைக்குறி னெகிழ்ப்ப தன்றியோர்
முத்திமற் றிலையென முடிக்கும் பெற்றியான்.

(இ-ள்) அறிவை மாறுபடுத்தும் மதனுகைய நூலின்படி, தொய்யிலெழு திய குவிந்த ஸ்தனங்களையுடைய பெண்களைப், படுக்கையில் நிதமுமிருக்க வைத்து, அவரிடையிலுள்ள ஆடையைக்களைந்து கூடுவதேயல்லாமல், முக் தியென்பதொன்று வேறே கிடையாது என்று நிர்மாணித்திருக்கும் தன் மையுடையவன். (எ-று) (௧௨)

கன்னிய நாடலே நிறைந்த கண்ணினான்
கன்னியர் பாடலே நுழைந்த காதினான்
கன்னிய ரூடலே திருத்துங் கையினான்
கன்னியர் காமமே கனிந்த சிந்தையான்.



(இ-ள்) பெண்களுடைய நடனமே நிறைந்த கண்களையுடையவன், அவர்கள் பாடும் சிற்றின்பப்பாடல்களே நுழைந்த காதுகளையுடையவன். அப்பெண்கள் பிணக்கையே வணங்கலாதியவற்றால் தணிக்கின்ற கைகளை யுடையவன். அம்மங்கையர் விரகமே முதிர்ந்த மனத்தையுடைய வன். (எ-று) (௧௩)

சதமரு நூறுந்தொகைத் தைய லாரையற்
புதமரு நறுமலர் பொதிந்த பாயலி
னிதமரு தணைவது நேம மேற்கொளா
மதமரு யானையின் மதிம யங்குவான்.

(இ-ள்) நூறுக்குக் குறையாத எண்ணிக்கையுடைய பெண்களை, ஆச் சரியகரமான நறுமணங்கமழும் மலர்களைப்பரப்பிய சயனத்தில், நாடோறும் மறவாதுசேர்ந்து சுகிப்பதையே தனக்குரிய நியமமாக மேற்கொண்டு, மதங் கொண்டயானையைப்போல, அறிவுமயங்கித் திரிபவன். (எ-று) (௧௪)

கொலைவினை யாடும்வேற் குரிசில் கோதையர்
முலைவினை யாடும்பொன் மார்பன் மூரிவெஞ்
சிலைவினை யாடுந்தோட் செம்ம லெண்டிசைத்
தலைவினை யாடும்பேர்ச் சந்த்ர சேனனே.

(இ-ள்) கொலைத்தொழில் குடிகொண்டுள்ள வேற்படையைத் தரித்த தலைவன், பெண்களுடைய ஸ்தனங்கள் மோதுதலையுடைய அழகிய மார் பையுடையவன், வலியவெவ்விய வில்தவழ்ந்துகொண்டிருக்கும் புஜங்களை யுடைய அரசன், எட்டுத்திசைகளிலும் பரவிய அவனுடைய பெயர் சந்திர சேனனாம். (எ-று) ஏ - அசை. (௧௫)

ஆமத்தார் வேந்தனை தமைச்ச னன்னவன்
காமத்தா லழிதருங் கருத்துக் கேற்பநற்
றாமத்தார்க் குழலியர்த் தூரீஇப் புணர்ப்பவ
னாமத்தாற் சுகுணன்செந் நடையிற் றுர்க்குணன்.

(இ-ள்) இத்தன்மையாகிய மாலையணிந்த அந்தச்சந்திரசேனனுடைய மந்திரி, அந்த அரசன் காமவிகாரத்தாலறிவழியுங் கருத்துக்கியைய, நல்ல வாசனை யூட்டப்பெற்ற மாலையையணிந்த கூந்தலையுடைய பெண்களைத் தேடிச்சேர்த்து விடுகிறவன். பெயரினாலே சுகுணன் என்று சொல்லப்படுப வன். ஒழுக்கத்தில் துர்க்குணமுடையவன், (எ-று) (௧௬)

அன்னவ னெடுந்தனி யாசனேர்பகல்
மன்னிய காமனோய் மலரு மாலையி
லுன்னத நெடுங்கொடி யுபரி கைக்கணே
கன்னலந் சிலைதடை குழைப்ப வைகினன்.

(இ-ள்) அந்தச் சுகுணனென்னும் மந்திரியுடனே ஒப்பற்ற சந்திர சேனன் என்னும் மன்னவன், ஒரு நாளில் நிலைபெற்ற விரகநோயானது விகசிதமாகின்ற மாலைக்காலத்திலே, உயரமான நீண்ட கொடிகள்கட்டிய மேன்மாளிகையின்மேலே, மன்மதன் தனது அழகிய கருப்பு வில்லின் நுனி வளையும்படி வளைக்க இருந்தான். (எ-று) (௧௭)

மருக்கமழ் முக்கர் வீதி வாய்ப்பெருந்
திருக்குல மறையவர் நெறிமை மேம்படு
மரக்கினை யூட்டின வமுதைத் திற்றிய
முருக்கிதழ் வாயினள் முத்த முரலாள்.

(இ-ள்) வாசனைவீசுகின்ற அவ்வலத்திமாநகரத்தின் வீதியினிடத்தில் மிகவுயர்ந்த அந்தணர்குலத்துதித்த ஓர் பெண், அரக்கைச் சேர்த்து, நல்ல அமிர்தத்தைத்தடவியிருக்கும், முள் முருக்கம்பூப்போன்ற அதரங்கள் வாய்ந்த வாயினையுடையவள், முத்துப்போன்ற பற்களையுடையவள். (எ-று) (௧௮)

தேனையும் பாகையுந் திரட்டுந் தெருந்செய்யவம்
மானையு மீனையு மருட்டுங் கண்ணினள்
ஊனையு முயிரையு முருக்கும் பொற்பினள்
வானையு மண்ணையு மயக்குங் காட்சியாள்.

(இ - ள்) தேனையும் வெல்லப்பாகையுஞ் சேர்த்துத் திரட்டினுற்போலத்த செவ்விய சொல்லையுடையவள், மானையும் மீனையும் மயக்குங் கண்களையுடையவள், கண்டவர்களுடைய வுடம்பையும், அவ்வுடம்பை நிலைக்களமாக வுடைய உயிரையும், உருகச்செய்யும் அழகினையுடையவள், தேவலோகத்தவரையும் பூவுலகத்தவரையும் மயக்குந் தோற்றத்தையுடையவள். (எ - று) ()

ஒருசிறு நூல்லிடந் தொசிய வோங்கிய
விருகுரும் பையுமைந் தேறக் காந்தளம்
பெருமலர் வீசிவெண் பிறைய விர்பநற்
றிருமலர் சிவப்பவத் தெருவிற் செல்கின்றாள்.



(இ - ள்) ஒரு சிறிய நூல்போன்ற இடைசாய்ந்து துவளும்படி, பருத்த தென்னங்குரும்பைபோன்ற, இரண்டு ஸ்தனங்களும் குலுங்கியிறுமாப்படையவும், வெள்ளிய பிறைபோலும் நெற்றிவெயர் வரும்பவும், நல்ல அழகிய தாமரைமலர்போன்ற பாதங்கள் சிவக்கவும், அழகிய விசாலமான காந்தள்மலர்போன்ற கைகளை வீசிக்கொண்டு அந்த வீதியிற் போகின்றாள். (எ - று) (௨௦)

மேனிலத் தேவரும் விரும்பி யங்கவர்
கானிலத் தேவருங் கவின்கொண் டுற்றிடும்
பூநிலத் தேவர்பொற் றொடியைப் போதமி
ஞானிலக் கோமக னயந்து நோக்கினன்.

(இ - ள்) தேவலோகத்திலுள்ள தேவர்களும் விருப்புற்று, அவ்விடத்து அத்தேவர்கள் காலால் நடந்து பூமியில் வரத்தக்க அழகுபெற்றிருக்கும் பொன்னாலாகிய வளையலையணிந்த அப்பிராமணப்பெண்ணை, நால்வகைப் பட்டிலங்களையுடைய இப்பூமியையாளும், அறிவிலியாகிய அச்சந்திரசேனன் இச்சித்துப்பார்த்தான். (எ - று) (௨௧)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மருமலர்க் குழலோ குழல்வகிர்ந் ததனுள் வரிந்தசிந் தூரமோ வணருந், திருநறு நுதலோ திலதமோ நெறித்த சிறுகொடிப் புருவமோ வெழுதுங், கருவிழி யழகோ கடைவிழித் துடிப்போ காளையர்க் கனங்கவேள் விடுத்த, திருபமே யனைய திதுவென வெவரு நிகழ்த்துறு பொன் னோலைவார் குழையோ.

(இ-ள்) வாசனைபொருந்திய பூக்களை முடித்த கூந்தலோ, அக்கூந்தலைப் பிரிவுபடுத்தி அதனுள் எழுதிய சிந்தூரப்பொடியோ, வளைந்த அழகிய நல்ல நெற்றியோ, அந்நெற்றியிற் றீட்டிய பொட்டோ, வளைவாகவுள்ள சிறிய கொடிபோன்ற புருவமோ, மைதீட்டிய கரியகண்களின் அழகோ, கடைக்கண்களின் துள்ளலோ, காளைப்பருவத்தையுடைய ஆடவர்களை மயக்குவாயாகவென்று, மன்மதன் அனுப்பிய ஓலைச்சுருள்போல்வது இதுவென்று, கண்டோர் எவரும் சொல்லத்தக்க பொன்னோலையணிந்த நீண்ட காதோ, (எ - று) (௨௨)

கண்ணடி யனைய கபோலமோ நாசி காபர ணத்தின்முத் தசைவோ, தண்ணறுங் கனிவா யதரமோ விரதந் ததும்பிமேல் வழிந்த

தேன்மொழியோ, வன்னாலங் கமுகி னணியிய மிடறோ வனைமத் தடந்தோள்களோ சிவந்த, வன்னாவிற் பவளங் கிளைத்தநன் கிளி யின் வாய்ந்தநன் மலிவிரல் வடிவோ.

(இ-ள்) கண்ணாடிபோன்ற கன்னமோ, மூக்கணியினிடத்துள்ள முத்தி னது அசைதலோ, தண்ணியவாசனையையுடைய வாயிற்பொருந்திய கொவ் வைக்கனியை நிகர்த்த உதடுகளோ, மதுரம் பொங்கி மேலே வழிந்த தேன் போலும் இனிய மொழிகளோ, பெருமைபொருந்திய அழகிய கமுகமரத் தின் மிடறுபோன்ற அலங்காரமமைந்த கண்டமோ, விசாலமான மூங்கிலை யொத்த தோள்களோ, சிவப்பு வர்ணத்தையும் பிரகாசத்தையுமுடைய பவ ளக்கொடியினின்றுங் கப்புவிட்டெழுந்தருளிர்ந்த கொழுந்துகளைப்போலப் பொருந்திய நல்ல அழகிய விரல்களின் வடிவமோ, (எ-று) (௨௩)

சந்தனக் கலவைச் செழுநறுஞ் சேற்றிற் றண்பனி நீரிலுண் முளைத்த, சுந்தரக் கமலத் துணைமுகை யிதெனச் சொலுங்குயந் தெளிர்தரு முலையோ, வந்திபிற் கிளைத்த வளரிமயி ரொழுங்கோ வொருபிடி நாசப்பின தொசிவோ, மைந்தருங் கமுக மூற்றிருந் தொழுக வாய்ந்தபே ரல்குலின் வனப்போ.

(இ-ள்) செழிய நறுமணங்கமழும் கஸ்தூரி முதலியவை கலந்த சந் தனக்குழம்பாகிய சேற்றிலே குளிர்ந்த பனிநீரில் முளைத்த அழகிய தாமரை யரும்புகளே யிவையென்று சொல்லும்படி, தேமல்படர்ந்து விளங்குகின்ற ஸ்தனங்களோ, கொப்பூழினின்றும் முளைத்த அழகிய உரோமங்களின் வரி சையோ, ஒருபிடிக்குளடங்கிய இடையின் அசைவோ, ஆடவர்களுக்கு வியத் யாபிர்தமானது ஊற்றுப்போல் சுரப்புற்றெழுகப் பொருந்திய விசாலமான நிதம்பத்தினதழகோ, (எ-று) (௨௪)

நாவலா றடுத்த கரைவளர் கதலி நலங்கவர் பொலங்கவா னொழி லோ, சேவலார் முடித்த மதிமனைப் புறவிற் றிருந்திய தசைமுழந் தாளோ, தூவலார் பகழித் தூணியின் கணைக்காற் றோற்றமோ சிற டித் துணையோ, பாவலா ருரைக்கு முவமையுங் கடந்த பாவையோ விவளென நினைந்தான்.

(இ-ள்) (மேருவைச் சூழ்ந்து செல்லும்) ஜாம்பூநதமென்னு நதியை யடுத்த கரையில் வளர்கின்ற வாழையினது அழகைக்கொண்ட பொன்மயமா கிய தொடைகளின் அழகோ, இடபத்தைச் செலுத்தும் வன்மையுடையராகிய



சிவபெருமான் தரித்தருளிய சந்திரமண்டலத்தின் மேற்பரப்புப்போலத், திருத்தமாகிய தசைப்பற்றுள்ள முழங்காலோ, அம்புதற்குரிய அம்பறாத் தூணியைப்போன்ற கெண்டைக்காலின் தோற்றமோ, சிறிய இரண்டு பாதங் க[illegible]ள் பாக்களில் வல்லவர்களாகிய புலவர்கள் கூறும், உவமான [illegible], விளங்கப்பெற்ற ஒரு பிரதிமையோ இந்தப்பெண் [illegible]ன். (எ-று) (௨௫)

[illegible] தண்ணருங் கருவி மலர்க்கணை துளைப்ப நெட்டுயிர்ப் பெறிந் துளைந் துளைந்து, மனைத்தவ முனிவர் பெருங்குலக் கற்பின் மடந் தையென் றறிந்துந் தன் மனத்துட், டினைந்தனை யெனினு முறாக் குறை விலனுய்த் தெரிவைதோ ளைலநுகர் காதல், பனைத்தனை வளா ரப் பார்த்தகண் டிருப்பாப் பார்த்திப னமைச்சனை வாயால்.

(இ-ள்) இவ்வாறு நினைத்த மனதை மன்மதனுடைய புஷ்பபாணங் கள் ஊடுருவிச்செல்ல அதனால் பெருமூச்சு விடுத்து மிகவருந்தி, இல்லறத் தில் வாழும் பிராமணர்களது சிறந்த குலத்திற் பிறந்த கற்பினையுடைய பெண்ணென்று தெரிந்திருந்தும், தன்மனதில் ஓர் தினையளவாயினும் நல் லறிவில்லாதவனாய், அப்பெண்ணின் தோளோடு புணர்ந்து சுகத்தையனுப விக்கவேண்டுமென்னும் இச்சையானது, பனையளவாக ஓங்க, அப்பெண்ணை ப்பார்த்த கண்களை மீட்க முடியாதவனாய், அச்சந்திரசேனன் சுகுணன் என்ற மந்திரியைத் தன் வாயினாலே, (எ-று) (௨௬)

அழைத்துநீள் கரத்தாற் சுட்டிமா திவள்பே ரல்குலின் றுறைப் படி யார்வந், தழைத்தமற் றினியிவ் வொருத்தியே யனையுஞ் சத வனி தையர்சுகம் விருப்பேன், பிழைத்திடி லுய்யேன் கொணர்கென முகமன் பேசினன் பேசலு மனையா, ளுழைந்தவரி மகிணன் பிரிவி லா திருக்கி லுஞற்றுவ தெவனென வுரைப்பான்.

(இ-ள்) விரித்து கண்டகையாற் சுட்டிக்காண்பித்து, இந்தப்பெண் ணினது அல்குலென்னுந்துறையிலே, மூழ்கவேண்டுமென்னும் இச்சையதி கரித்திருக்கின்றன. இனியிவளொருத்தியே போதும். நூறு ஸ்திரீகளுடன் சுகிக்கிறதென்னும் சுகத்தை யிச்சியேன். இவளைக் கூடுதல் தவறுமேல் உயிர்பிழையேன். ஆதலால் எவ்விதத்திலேனும் கொண்டுவருவாயாக என் று உபசார வார்த்தை கூறினன், கூறலும், அவள் பக்கத்திலே ஒப்பற்ற நாயகன் பிரிவில்லாமலிருப்பானேல், யான் செய்யத்தக்கது யாது என்று வினவ, அரசன் சொல்லுவான், (எ-று) மற்று-அசை. (௨௭)

சாத்திரீனத் தாரந்து மதனுடல் மொய்ம்பத் தாழ்ப்பதோ னிவ
டவின முனிவன், சிரத்திவளத் தடிந்து கொள்வர்கெனச் சுடர்வாடின்
கைதொட் டெந்திடுங் காலைக், காத்திவா பொடுங்கிக் கொடுங்கொலை
யிதையான் காண்கிலனெனக்கடி தோடிக், குரத்திலுத் ... ர்காற்
பசம்பரித் தேரோன் குறைந்தனன் மறைந்தனன் குடு.

(இ - ள்) மன்மதன் புஷ்பபாணங்களைப் பிரயோகத்திலே ... து
டலைப் பிளக்கத் தாமதஞ் செய்வதென்னை? அப்பிராமணன் சிரசைக்கொய்
துவிட்டு, இவளைக்கொண்டுபோக, என, பிரகாசம்பொருந்திய வாட்படை
யைத்தனது திண்ணிய கையாலெடுத்துக்கொடுக்கும்போது, குளம்புகளைப்
பற்றிய கால்களையுடைய பசிய குதிரை பூட்டிய இரதத்தையுடைய சூரியன்
கொடிய கொலைத்தொழிலாகிய இச்செய்கையை, யான் பாரேனென்று,
தன்னுடைய கிரணங்களை யொடுக்கிக்கொண்டு தன் உடலைச் சுருக்கினவ
னாய், விரையச்சென்று, மேற்றிசைக்கடலில் ஒளித்தனன், (எ-று) (௨௮)

இளமையும் பொருளு மடமையு மரசு மிவையொரு நான்கு
மாங் கெய்தும், வளமையி லரசன் பழிப்புகழ் பரந்த வண்ணமொத்
திருண்டன கங்கு, லளவகன் முறைசெ யரசன தேவ லாணையா
லெழுதுமந் திரியும், விளையொலி நகர்ஞ் சமயுறின் றேற மிக்கவர்
கொடுமனை புகுந்தான்.

(இ-ள்) இளமைப்பருவமும், செல்வமும், அறியாமையும், இராஜாங்க
முமாகிய இந்நான்கையும் ஒருங்கேயுடைய, நற்குணமில்லாத அச்சந்திரசே
னனுடைய பழிப்பாகிய கீர்த்தியானது எங்கும் பரவிய தன்மையை நிகர்
த்து இரவானது இருண்டது. வரம்புகடந்து கொடுங்கோன்முறைசெய்யும்
அவ்வரசனுடைய ஏவலாகிய ஆஞ்ஞையின் வழிநடக்கும் சுகுணன் என்ற
மந்திரியும், மிக்க ஒலியையுடைய நகரத்திலுள்ளவர்கள் நித்திரைசெய்யும்
வரையும், தாமதித்து நின்று பின்சென்று மேற்குலத்தாராகிய அப்பிராமண
ர்களுடைய வசிப்பெண் உள்ள வீட்டில் நுழைந்தான். (எ-று) (௨௯)

பனிமலர்த் தளிம மீமிசைத் துயிலும் பார்ப்பனி மருங்குதன்
படைகொ, டனிமறைப் பனவன் சிகைத்தலை கடறு தனங்கூர்ங்
கருவியாற் றடிந்து, கனிபழுக் கமைந்த குதலையஞ் சொற் குவி
ரிதழ்க் குவிமுலைக் கணைக்கட், குனிசிலைப் புருவக் கருநெடுங் கூந்
தற் கொடியினைப் பிடித்தனன் அடித்தாள்.



(இ-ள்) குளிர்ச்சிபொருந்திய மலரணையின்மீது நித்திரைசெய்கின்ற
பிராமணப் பெண்ணின் பக்கத்தில் தூங்குகின்ற, ஒப்பற்ற வேதங்களைய
றிந்த பிராமணனுடைய சிகையுள்ள சிரசை, உறையினின்று நீக்கிய கூர்மை
பொருந்திய வாளினால் வெட்டிக், கனிபழுத்தாலொத்த கிரம்பாமைவாய்ந்த
அழகிய இனியசொற்களையும், முருக்கம்பூப்போலும் அதரங்களையும், குவி
வாகிய ஸ்தனங்களையும், அம்புபோன்ற கண்களையும், வளைவாகிய வில்லை
யொத்த புருவங்களையும், நீண்ட கரிய கூந்தலையுமுடைய பூங்கொடிபோல்
வானாகிய அப்பெண்ணைப்பிடிக்க அவள் பதைத்தனள். (எ-று) (௩௰)

கலிவிருத்தம்.

இறந்த போடவற் கேங்கியங் கெய்துறை
துறந்த வாளவற் கண்டுதான் ணொன்றழத்
திறந்த வாயினைச் சிக்குறச் சேமியா
மறந்த வாமதி மன்னன்முன் விட்டனன்.

(இ-ள்) வெட்டுண்டிறந்த தந்நாயகன் பொருட்டு, ஏக்கமடைந்து
அவ்விடத்தில் வந்துள்ள உறையினின்று நீங்கியவாட்படையையுடைய மந்
திரியைப்பார்த்து, திகைத்திட்டு அழுதற்குத்திறந்த வாயைப்பிணிப்புற மூடி,
கொடுமைநீங்காத மனத்தையுடைய அச்சந்திரசேனன் முன் விடுத்தனன்.
(எ-று) (௩௧)

விட்ட போதுவி டாதசை வேந்தன்வே
டொட்ட போதுசு டுவதெலா நின்கட்
பட்ட போதகு ளிர்ந்தன பாவைநீ
நட்ட போதென் னயப்பறி வாயரோ.

(இ-ள்) மந்திரிவிட்டவளவில், அவளிடத்துவைத்த இச்சை மாறாத
அவ்வரசன் அவளைநோக்கி, பாவைபோல்பவளே, மன்மதன்தொடுத்த புஷ்
பபாணங்கள், என்னைத்தகிக்குந் தன்மையெல்லாம், உனது கட்பார்வை,
என்மேற்பட்ட அப்போதேகுளிர்ச்சியையடைந்தன. என்னோடு சிநேகித்த
பிறகு, என்னுடைய நன்மைகளை நீதெரிவாய். (எ-று) அரோ-அசை. (௩௨)

மூலைத்த லைச்சுக நல்கிடின் மோகவேள்
கலைத்த லைத்தொழிற் காந்தையர் கைதொழ
வலைத்த லைத்திரு வன்னவுன் றன்னைமேன்
மலைத்த லைத்தனி தாங்குவன் யானென்றான்.

(இ-ள்) உனது ஸ்தனங்களோடு சேர்ந்தனுபவிக்கும் சுகத்தை எனக்குக்கொடுத்தாயாயின், காமஇச்சையையுண்டாக்கும், மதனாகமத்திற் கூறுஞ் செயல்களிற்றேர்ந்த என் மனைவி மார்களெல்லாம், உன்னைக்கைகூப்பி வணங்கும் வண்ணம், அலைகளையுடைய திருப்பாற்கடலிற்றோன்றிய, இலக்குமியைப் போன்றவளை யான் என்னுடைய தலையின்கண்ணே தனியே சுமப்பேன் என்று கூறினன். (எ-று) (௫௩)

என்ற போதக்கி ருசெவி யின்றுளை
மன்ற னாறும லர்க்கையிற் சேமிபா
நின்ற நேரிழை நீதியை வேரொடுங்
கொன்ற வேந்தனைப் பார்த்திவை கூறுவாள்.

(இ-ள்) என்று கூறிய போது இரண்டு செவியின் துவாரங்களையும் வாசனைவீசுகின்ற மலர்போலும் கைகளாற் பொத்திக்கொண்டு நின்ற, நேரிய ஆபரணங்களைத் தரித்த அப்பார்ப்பனி மனுநீதியை அடியோடு களைந்த அச்சந்திரசேனனை நோக்கி யிவ்வார்த்தை சொல்லுவாள். (எ-று) ()

கொலைவி ழைந்தவர் செய்ந்நன்றி கொன்றுவாழ்
தலைவி ழைந்தவர் சாதிவி ழைந்தவர்
புலைவி ழைந்தவர் பொற்பழிந் தேபிற
னிலைவி ழைந்தவர் யாவரு யர்ந்துளார்.

(இ-ள்) கொலைத்தொழிலை விரும்பினவர்களும், ஒருவர் செய்த உபகாரத்தை மறந்துயிர்வாழ்தலை விரும்பினவர்களும், கள்ளுண்பதை விரும்பினவர்களும், புலாலுண்ணுதலை விரும்பினவர்களும், நடுநிலைமை தவறிப் பரதாரகமனஞ் செய்பவர்களும் ஆகிய இவர்களில் யாவர் உயர்ச்சி பெற்றிருக்கின்றார்கள். (எ-று) (௫௫)

தார மல்லவர் தாயென்ப தாயினை
நேரு மன்னைநி ருபமுன் னோன்மனை
சாரு மன்னையி னுந்தவத் தேசிகன்
பாரி பார்ப்பனி பார்க்கி னதிகமால்.

(இ-ள்) அரசனே ஆராயுமிடத்துத் தன்தாரமல்லாத நாரியர்களைத் தாயென்று சொல்வார்கள். தமையன் மனைவியும் தாய்க்குச்சமானமானவள். தமக்குரிய தாயினும் தவமுதிர்ச்சியுடைய குருபத்தினி உயர்ந்தவள். குருபத்தினியினும் பிராமணஸ்திரீ உயர்ந்தவள். (எ-று) ஆல்-அசை. (௫௬)



இன்ன தன்மைபி ருக்கமற் றியாரென
வென்னை யுன்னினை யிழில்செங் கோன்முறை
மன்னர் சென்னெறி மாற்றினை மாற்றினை
கன்ன வின்மனக் காவல னீயென்றாள்.

(இ-ள்) இவ்வாறிருக்க நீ என்னை எவளாக நினைத்தாய்? அழிவில்லாத செங்கோல் முறைமையையுடைய அரசர் ஒழுகும் நீதிமார்க்கத்தை மாற்றிவிட்டாய். ஆகையால் நீ கல்போலும் மனத்தையுடைய அரசனே என்று சொன்னாள். (எ-று) மற்று-அசை. (௫௭)

குவடு பட்டகு விமுலைக் கூர்விழி
யவடு வர்க்கனி வாயின றைந்தசொற்
றுவடு ணர்க்கழ் நாணொலி துன்றலிற்
செவிடு பட்டசெ வியினன் கேட்டிலான்.

(இ-ள்) மலைபோன்ற குவிந்த தனங்களையும், கூரியவிழிகளையுமுடைய, அப்பிராமணஸ்திரீ, பவளம், கொவ்வைக்கனி யிவைகளையொத்த வாயினாற் சொல்லிய வார்த்தைகள், துவளுகின்ற பூங்கொத்தையுடைய கருப்புவில்லினது நாணோசையானது, நிறைந்திருப்பதால், செவிடடைந்த காதுகளையுடையவனாயிருத்தலால், அச்சந்திரசேனன் கேட்கப்பெற்றிலன். (எ-று) (௫௮)

காத னப்பெருங் காமுக ரேறனான்
மேத னத்தன மேற்றன்மி டக்கினொ
லாத ரத்தினி லங்கையி னான்மருஉம்
போத லற்றினள் பொற்பினி லொப்பிலாள்.

(இ-ள்) இச்சையிக்ககாமிகளுக்குட் சிறந்தவனாகிய அச்சந்திரசேனன், பார்ப்பனியினது மலைபோன்ற கொங்கைகளின்மேல் தனது வலிமையால், ஆசையோடும், அழகிய கைகளினாலே தழுவும்போது, அழகில் ஒப்பில்லாதவளாகிய அம்மாது புலம்பினள். (எ-று) (௫௯)

அனைய காலைய ரசனை வைதுநீஇ
மனையள் பாற்றுயர் மாசற மாற்றுவா
னெனவவ் வேதியன் றுனிக வாப்பழி
வினையு ருக்கொடு வந்துவி லக்கினான்.

(இ-ள்) அச்சமயத்தில், அவள் நாயகனுடைய பிராமணன் அச்சந்திர சேன மன்னனை வைதுகொண்டு அடைந்து, தன் மனைவியிடத்து சேர்ந்த துன்பத்தைக் குற்றமற நீக்குவோனைப்போல, நீங்காத பழித்தொழிலாக சேர்ந்த பிரமகத்திரூபங்கொண்டு வந்து தடுத்தான். (எ-று) (சo)

இடிக்கும் வெம்பகு வாய்திறந் தேங்கும்பற்
கடிக்கு மஞ்சவு றங்குங்கண் மேற்கனல்
பொடிக்கு நின்றுபு கைந்றுயிர்க் கும்பிட
ரடிக்கும் வஞ்சினங் கூறும டர்க்குமால்.

(இ-ள்) கையாலிடிக்கும், வெவ்விய பிளந்த தன் வாயைத்திறந்து முழங்கும், பற்களைக்கடிக்கும், பலரும் பயமடைய அதட்டும், கண்களின் மேல் அக்கினிப்பொறி அரும்பும், எதிர்நின்று புழுங்கிப் பெருமூச்செறியும், பிடரில் மோதும், சபதவார்த்தை புகலும், வருத்தும். (எ-று) (சக)

என்ன பாவமி தென்ற ழுங்கு
மன்ன வாபழி தாவெனு மந்திரி
தன்னை வாபொர வென்னுந் தனித்தனி
யின்னல் கூரவிவ் வாறுதொ டர்ந்ததால்.

(இ-ள்) இதுஎன்ன பாவம் என்று அழும், நகைக்கும், அரசனை பழிக்குப் பழிகொடு என்று கேட்கும், மந்திரியைச் சண்டைசெய்யவாவென்று விளிக்கும், இவ்வண்ணம் தனித்தனியே துன்பமடையும்படி அவர்கள் பின் தொடர்ந்தது. (எ-று) ஆல் - அசை. (சஉ)

கலிவிருத்துறை.

மேவும வந்திபு நாடுமி கந்தபின் வேறேதுங்
காவலன் மந்திரி யோடிபு றன்றிரு காவொய்வர்
கேவல வெம்பழி நீர்வகை கண்டிலர் கேதாரம்
போவது புந்தியி னீடுநி னைந்தனர் போனூரால்.

(இ-ள்) தாங்களிருந்த அவந்திமாநகரத்தையும் அந்நகரத்தையுடைய நாட்டையும் விட்டு நீங்கி, தனித்துச் செல்கின்ற சந்திரசேனனும், மந்திரியும் ஓடிப் பலஇடங்களிலும் அலைந்து இரண்டுகால்களுந் தளர்வார்கள்; ஒப்பில்லாத பிரமகத்தியானது தொலையும் வழிகாணாதவர்களாய், திருக்கேதாரம் என்னும் தலத்தையடைவதை மனதில் மிக நினைத்தவர்களாகிச் சென்றார்கள். (எ-று) ஆல்-அசை. (சங)



எவ்வுயி ரேனும ருந்திடி னெஞ்சத் தகலாதே
திவ்விய லிங்கம தாகத் திரடரு சிவதீர்த்தம்
வெள்ளுற மூழ்கினர் கேதா ரத்தமர் மாதேவன்
செவ்விய தாண்மல ரங்கைக ளாங்கினர் சென்றூரால்.

(இ-ள்) எவ்வகையான ஆன்மாக்களேயாயினும், தன்னையுட்கொள்ளின் அவ்வான்மாக்களின் மார்பிலே நீங்காதிருக்கும்படி, மனதாலிகழ்ச்சி செய்யாமல், உட்கொள்ளின், தான் திவ்விய சிவலிங்க சொருபமாகத் திரண்டு நிற்கும் பெருமையுடைய சிவதீர்த்தத்தில் தம்மை யுட்கொள்ளும்படி ஸ்நானஞ்செய்தவர்களாகி அத்திருக்கேதாரத்தலத்தில் அமர்ந்தருளும் கேதாரநாதருடைய சிவந்த தாமரைமலர்போன்ற திருவடிகளை அழகிய கைகளைக்கூப்பித் தொழுதவர்களாய்ச் சென்றார்கள். (எ-று)

அத்தீர்த்தத்தைச் சிலநாள் நியமமாக உட்கொள்ளின், அதுவே உட்கொண்டவர்கள் மனதில், சிவலிங்கவடிவமாய்த் திரண்டு விளங்குமென்பது அத்தலமான்மியம். (சச)

கொங்கலர் சேர்பிரு தூதக வாவிது டைந்தேகிக்
கங்கையின் மூழ்கினர் காசிவி லீசன் கழல்பேணிப்
பங்கமில் சீசயி லம்பணி யாவருள் படர்கோடி
சங்கர மேவின ரங்கண மர்ந்துத ணந்தாரால்.

(இ-ள்) வாசனைபொருந்திய பூக்கள் நிறைந்த பிருதூதக தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, அப்பாற்சென்று கங்காதீர்த்தத்தில் மூழ்கினவர்களாய்க் காசியில் வீற்றிருக்கும் ஸ்ரீ விசுவேசுரரது திருவடிகளை வணங்கிப் பின் அழிவில்லாத திருப்பருப்பதத்தில் அமர்ந்தருளும் மல்லிகார்ச்சுனேசுரரைத் தொழுது, கிருபை தழைந்த கோடி சங்கரமென்னும் தலத்தையடைந்து வழிபட்டு அங்குச்சிலகாலம் தங்கியிருந்து நீங்கினூர். (எ-று) ஆல்-அசை. (சரு)

கோதா விரிகண வேணிபி ருகினி குளிருந்தண்
போதார் பொன்முகி முதலா நதிகள்பு குந்தாடித்
தீதார் பழிகழி யாதே தொடர்வுறு செயலெண்ணித்
தாதா ரிதழிய ரேகாம் பரகர் சார்ந்தாரால்.

(இ-ள்) கோதாவிரி, கிருஷ்ணவேணி, பிநாகினி, குளிர்ச்சியான புஷ்பங்கள் நிறைந்துள்ள பொன்முகரி முதலிய புண்ணிய நதிகளிற் சென்று ஸ்நானஞ்செய்து, குற்றம்பொருந்திய அப்பிரமகத்தியானது நீங்காமலே பின்றொடர்ந்துவருஞ் செய்கையை நினைத்து, மகரந்த நிரம்பிய கொன்றைமாலை

மையுடையவராகிய ஏகாம்பரேசுரர் எழுந்தருளுங் காஞ்சீபுரத்தை யடைந்தனர். (எ-று)

கன்னிவேணி என்பது கம்பைவேணி யெனக்குறைந்துநின்றது. பொன்முகி - பொன்முகரியெனவும் பெயர் பெறும். வேதரூபமாகிய மாமரத்தினடியிலே பெருமான் வீற்றிருக்குந் தலமாதலின் காஞ்சீபுரம் ஏகாம்பரநகரெனப்பெயர்பெற்றது. ஏக — அம்பரம் = ஏகாம்பரம். (சசு)

சைவா கமமுறை மலையாள் வழிபடு தண்சூதப்
பைவா ளரவணி பவர்தாள் மலர்கள்ப ணிந்தேகிப்
பெய்வார் மழைதவழ் கிரியி லத்துறை பெருமானுஞ்
செவ்வாய் வரதமு குந்தனை வந்தனை செய்தாரால்.

(இ-ள்) பார்வதி தேவியார் சிவாகம விதிப்படி பூசித்த குளிர்ந்த மாவிருக்ஷத்தினடியில் விளங்கும் ஒளிபொருந்திய படத்தையுடைய சர்ப்பங்களை ஆபரணமாகத் தரித்தருளிய ஏகாம்பரேசுரருடைய மலர்போலுந் திருவடிகளை வணங்கிச்சென்று, மழைபெய்கின்ற நெடிய மேகங்கள் தவழ்கின்ற அத்திகிரி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமையுடையவராகிய சிவந்தவாயையுடைய வரதராஜப்பெருமானை வணங்கினர். (எ-று) ஆல் - அசை.

இக்காஞ்சியில் சிவபெருமானைத் திருமால் ஆராதிக்குங்கால், அர்ச்சனைக்கு வேண்டும் தாமரை மலர்களை நாளும் உதவிவந்த யானையின் பெயரால் தாம் வீற்றிருக்கும் மலை அத்திகிரி யெனவழங்க சிவபெருமான்பால் வரம் பெற்றனரென்பது புராண சரித்திரம். மற்றொருகாலத்தில் ஐராவதம் வழிபட்டமையால், அப்பெயரடைந்ததென்பதும் உண்டு. (சஎ)

சூழ்ந்தொளிர் காஞ்சிக டந்துத லம்பல தொழுதேகின்
றாழ்ந்தொளிர் வேணிய ருமையொ டாடிய தனிமன்றம்
வாழ்ந்தொளிர் தில்லையி னெல்லைவ ணங்கிம கிழ்ந்தேவிண்
போழ்ந்தொளிர் கோபுர வாயில்ப ணிந்துள்பு குந்தாரால்.

(இ-ள்) வலம் வந்து, பிரகாசிக்கின்ற காஞ்சீபுரத்தை விட்டகன்று இடையிலுள்ள பலதலங்களை வணங்கி, பின்னர்க் கொடிபோன்று தொங்கி விளங்குஞ் சடைமுடியையுடைய நடேசப்பெருமான், சிவகாமவல்லியுடனே பரமானந்தத் தாண்டவஞ் செய்தருளிய ஒப்பற்ற கனகசபையானது நிலைபெற்றுப் பிரகாசிக்கின்ற சிதம்பரஸ்தலத்தின் எல்லையைக்கண்டமாத்திரத்திற் பணிந்து பேரானந்தமடைந்து, ஆகாயத்தைப்பிளந்து மேலிட்டு விளங்குகின்ற (ஸ்தூலலிங்கமாகிய) கோபுரத்தின் வாயிலில் நமஸ்கரித்து உள்ளே சென்றனர். (எ-று) ஏ, ஆல்-அசை. (சஅ)



சிமையநெ டுஞ்சிலை யுடையப ரம்பொருள் சிவஞான
மமையநி ரம்பிய வெளியொளி மன்றினு ளகலாதே
யுமையவ ளம்பிகை பரைசிவ சுந்தரி யுடனாடு
மிமையவர் கும்பிடு நடமிரு கண்களி னெதிர்கண்டார்.

(இ-ள்) மேருவை நீண்ட வில்லாகவுடைய முதற்கடவுளாகிய நடேசப்பெருமான், சிவஞானம் பூரணமாக நிரம்பிய ஆகாசமாகிய ஒளிபெற்ற சபையின்கண் நீங்காது, உமையவளும், அம்பிகையும், பராசக்தியும் ஆகிய சிவகாமசுந்தரியுடனே நின்று ஆடுகின்ற தேவர்கள் யாவருங் கைகூப்பி வணங்கும் ஆனந்தத்திருநிருத்தத்தை இரண்டுகண்களாலும் நேரே தரிசித்தார்கள். (எ-று)

சர்வவல்லமையுடைய மேலான கடவுளென்பார் "சிமையநெடுஞ்சிலையுடைய பரம்பொருள்" என்றும், ஏனைச்சடாகாயம்போலாது சித்தேயாய் எங்கும் பூரணமாக வியாபித்தலின் சிதம்பரமெனப் பெயர் என்பார் "சிவஞானமமைய நிரம்பியவெளி" என்றும், அது சிவம் நிலவும் தானமாதலின் ஒளிமயமாய்,சபையென்றுபசரிக்கப்பட்டுநிலைபெறுவதென்பார் "ஒளிமன்று" என்றும், ஆன்மாக்களை ஆட்கொண்டருளுதற்பொருட்டு, சிவகாமசுந்தரியார் கண்டு களிக்க அநவரதமும் செய்யும் பஞ்சகிருத்திய நடனமென்பார் "சிவசுந்தரியுடன் அகலாதேயாடும்" என்றும், இஷ்டசித்திகளை வேண்டியிமையவரும் வணங்குவதென்பார் "இமையவர் கும்பிடு நடம்" என்றும், அதனைத் தரிசித்தற்கு இருகண்களும் போதா என்பார் "இருகண்களின்" என்றும், தரிசிப்பவர்க்குப் பிரத்தியக்ஷமாய் நின்று அருள்புரிவதென்பார் "எதிர்கண்டார்" என்றுங் கூறினர். (சகூ)

இருவிழி மென்புன லருவிசொ ரிந்திட வெதிர்வீழா
வுருகினர் நின்றடி பரவின ரஞ்சலி யுடன்மீளா
வரும்வழி கண்டன ருயர்சிவ கங்கைநன் மலர்வாவிப்
பொருகரை யின்புடை யெழுகட லுண்டருள் புகழோனை.

(இ-ள்) இரண்டுகண்களினின்றும் மெல்லிய நீரானது அருவியைப்போல ஒழுகத் திருமுன்னே நமஸ்கரித்து, மனங்கரைந்தார்கள். நின்றுகொண்டு திருவடிகளைத் துதித்தார்கள். பின்பு அஞ்சலியாகக்குவித்தகைகளுடனே திரும்பி வருகின்ற வழியில் உயர்ந்த நறிய பூக்கள் நிறைந்த சிவகங்கை என்னுந் திவ்ய தீர்த்தத்தின் அலைகள் மோதுகின்ற கரையின் பக்கத்தில், எழுகடல்களையும் பருகிய கீர்த்தியுடைய அகத்தியமுனிவரை நோக்கினர். (எ-று) (ருO)

முதுதிரி புண்டர நுதலனை மென்சடை முடியானை
யதிர்கட லெஞ்சினை யமுதினு கர்ந்தவ னனையானைச்
சதுர்மறை யின்பொரு ளறிவனை யின்றமி ழருவானைப்
பொதியநெ டுங்கிரி முடியினி ருந்தருள் புரிவானை.

(இ-ள்) முதிர்ந்த மூன்றுகுறியாகத்தரித்த விபூதிபொருந்திய நெற்றியையுடையவரும், மிருதுவாகிய சடைமுடியையுடையவரும், முழங்குகின்ற திருப்பாற்கடலிற்றோன்றிய ஆலகால விஷத்தை, அமுதாக உட்கொண்டருளிய சிவபெருமானை நிகர்த்தவரும், நான்குவேதங்களின் பொருள்களையெல்லாம் அறிந்தவரும், இனியதமிழை உலகத்தில் விளங்கச் செய்தவரும், நீண்டபொதியமலையின் உச்சியிலமர்ந்து யாவர்க்கும் அருள்பாலிப்பவரும் ஆகிய முனிவரை, (எ-று)

இத்தகைய அகத்தியமுனிவரைச் சிவகங்கைக் கரையிற் கண்டனர். என இச்செய்யுளை மேற்செய்யுளோடு கூட்டிமுடிக்க. (௬௧)

இனிநுன் றெரிசன மெனவந் தடியிணை யெதிர்வீழா
முனிபுங் கவவுனை நனிநம் பினமென மொழிவார்முன்
புனிதன் சிவமுறு நார் விழிகொண் டனையவர் புரிபாவந்
தனையுந் தெரிபவ னருடந் தெதிர்மொழி தருவானல்.

(இ-ள்) முனி சிரேட்டரே உமது தரிசனங் கிடைக்கப்பெற்றது மிக நன்று என்று துதித்துக்கொண்டு வந்து, இரண்டு இருவடிகளின் முன்னே நமஸ்கரித்து எழுந்து, தேவரீரைப் பெரிதும் நம்பினோம் என்று முறையிடுவார்முன், பரிசுத்தராகிய அவ்வகத்தியமுனிவர், சிவத்தையறியும் ஞானக் கண்ணினால், அவ்விருவரும் செய்த பாவங்களையும் தெரிந்தவராய், அவர்கள் மீதருள் கூர்ந்து மறுமொழி கூறுவாராயினார். (எ-று) ஆல்-அசை. ()

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஓவருங் கொடிய பாவ முழந்துட லடுங்கு நீவி
ரியாவருஞ் சுறுநா ளுங்கட் கினியணித் ததனாற் றேவர்
தேவரும் பொதுவி னூட றெரிசித்தீ ரெனையுங் கண்டீர்
மேவருங் களிப்பான் முன்செய் வெம்பவம் விளம்பித் தீர்வீர்.

(இ-ள்) நீங்கற்கரிய கொடிய பாவங்களைப்புரிந்து சரீரம் நடுங்குகின்ற நீங்கள் யார்? உங்கட்குப் பிழைக்கும் நாள் சமீபித்தது. அதனால் தேவாதி பராகிய நடராஜமூர்த்தியினது அருமையான பொன்னம்பலத்திற் செய்தரு



ளும் பரமானந்த தாண்டவத்தைத் தெரிசனஞ் செய்தீர்கள். நம்மையுங் காணப்பெற்றீர். அடைதற்கரிய செல்வச்செருக்கால், முன்னே செய்த கொடும்பாவங்களையெல்லாம் நம்முன் அறிவித்து அவை நீங்கக்கடவீர், (எ-று) ().

என்றுரை கொடுப்ப வேந்த னிறைஞ்சிநின் றெங்கட் கிங்ஙன்
னன்றுரை வழங்க யாஞ்செய் நன்மையு முளவோ வைய
குன்றுறழ் நெடிய மாடக் கொடிநக ரவந்தி யாள்வேன்
றன்றகை யழிந்து தேயுஞ் சந்திர சேன னென்பேர்.

(இ-ள்) என்று கட்டளையிட்டருள, அரசன் வணங்கி நின்று (சுவாமி தேவரீர்) நாமெங்கட்கு இங்கே உய்யும் நல்வசனத்தைப் பணித்தருள, நாங்கள் செய்த புண்ணியங்களும் உள்ளனவோ? யான் மலைபோன்ற நெடியமாடங்களிலே கொடிகள் நாட்டப்பெற்ற அவந்தி நகரத்தை யாள்பவன். தன் பெருமை கெட்டுத் தேய்தலையடைகின்ற சந்திரசேனன் என்பது என் பெயர், (எ-று) (௬௪).

என்னுயி ரமைச்சன் மற்றீங் கிவன்பெயர் சுகுணன் யாக்கை
தன்னும்பெள வனத்திற் செல்வத் தருக்கிற்றன் மதிமீக் கூர்ந்து
மன்னுயிர் வருத்தி வாழ்ந்தேன் மறையவர் பொருள்கூட் டுண்டேன்
கன்னிய ரல்குற் காமக் கடலிடைக் கவிழ்ந்து வீழ்ந்தேன்.

(இ-ள்) இவன் என்னுடைய உயிர்போன்ற மந்திரி. பெயர் சுகுணனாம். சரீரத்திற் பொருந்திய இளமைப்பருவத்திலே செல்வச்செருக்கினாலே அற்புத்தியதிகரித்து, நிலைபெற்ற பிறவுயிர்களையெல்லாம துன்புறச் செய்து வாழ்ந்தேன். பிராமணர்களுடையபொருள்களை அபகரித்தனுபவித்தேன். மங்கையர்களுடைய நிதம்பத்தாலெய்தும் ஆசைக்கடலில் குப்புற்று விழுந்தேன். (எ-று) மற்று - அசை. (௬௫)

நிதம்பக பிரவாய் நூறு நேரிழை யவர்தோ டோய்ந்து
மதம்படு விலங்கி னின்றேன் மற்றெலா நிற்க யான்செய்
கதம்புரி வினையி தொன்று கழறுவே னொருநாட் டேவர்
பதந்தொட வுயர்ந்த செம்பொன் படர்நெடுஞ் செய்குன் றேறி.

(இ-ள்) பிரதிதினமும் பகற்காலங்களும் போகநுகர்தற்குரிய இராக்காலங்களாகவே கொண்டு நேரிய ஆபரணங்களைத்தரித்த நூறுநாரியர்களுடைய தோளைப் புணர்ந்து, மதங்கொண்ட யானைபோல மருண்டு நின்றேன். இவையெல்லாமிப்படியிருக்க, அடியேன்செய்த கொடுமையை விளக்

கும் பாவவினைகளுள் ஒன்றைச் சொல்லுகின்றேன். ஒருநாளில் தேவலோகத்தை யளாவும்படி ஓங்கிய செவ்விய பொன்னாற் செய்த விசாலமாகிய நீண்ட கட்டிமலையிலேறி. (எ-று) மற்று-அசை. (௫௬)

இருந்தன னிவனோ டங்க ணிருஞ்சிறை நேமிப் புட்கும்
வருந்துகா முகர்க்குந் தத்த மனந்தொறும் பகிர்ந்து வைப்பான்
முருங்கெரி மேல்பால் வெற்பின் முகட்டிற்சே ணுறவ ளர்த்தாங்
திருந்துவே ளென்ன மாலைச் செக்கர்வந் தணையும் வேலை.

(இ-ள்) அவ்விடத்தில் இம்மந்திரியோடிருந்தேன். அவ்வேளையில் அழகில் திருத்தமிக்க மன்மதன் பெரிய சிறகுகளையுடைய சக்கரவாகப்பறவைகளுக்கும் விரகத்தால் வருந்துகின்ற காமிகளுக்கும் தந்தம் மனங்கடோறும் கூறுபடுத்திவைக்கும் பொருட்டு, தகிக்கின்ற அக்கினியை மேற்றிக்கிலுள்ள அஸ்தகிரியின் உச்சியில், ஆகாயம் முழுமையும் பரவும்படி வளர்த்தாற் போல மாலைக்காலத்தில் தோன்றுதற்குரிய செவ்வானம் வந்து செறியும் அச்சமயத்தில். (எ-று) (௫௭)

சூரிய கிரணத்தைப் பருகும் நேமிப்புள் அச்சூரியனையிழந்து வருந்துதற்குரிய காலமாதல்பற்றி மாலைக்காலம் அதற்கும் வெப்பம் மூளும்படி வருத்துங்காலமாகக் கூறப்பட்டது.

தேனிருந் தொழுகுங் கொவ்வைச் செங்கனி மணிவாய்க்
கெண்டை, மீனிருந் தொளிரும் வாட்கண் மிக்கவர் தெரிவை மைக்
கார், வானிருந் தொளிரு மின்னின் மருங்குறள் வாட வந்தா,
ளானிருங் கொடியார் வைகு மவந்திநீண் மறுகி னம்ம.

(இ-ள்) இடபக்குடிகொண்ட பெருமைபெற்ற கொடியையுடைய சிவபெருமான் அமரும் அவந்திமாநகரத்தின் நெடியவீதியில், தேன்நிலைபெற்றிருந்து கசிகின்ற சிவந்த கொவ்வைக்கனிபோன்ற அழகிய வாயையும், கெண்டைமீன்கள் தங்கியிருந்து திகழ்ந்தாற்போன்ற ஒளிபொருந்திய கண்களையுமுடைய ஓர் பிராமணப்பெண்ணானவள் ஆகாயத்திலிருந்து விளங்குகின்ற கரியமேகத்திற்றோன்றும் மின்னலைப்போல இடைதுவளவந்தனள். (எ-று) அம்ம-அசை. (௫௮)

கண்டனன் மதியை மோகக் கார்முகின் மறைப்ப மேலாம்
பெண்டன முயங்கி யின்பம் பெறவிவன் றன்னோ டந்த
வண்டிமிர் குழலாள் சென்ற மனைவயின் வெளவி யென்பாற்
கொண்டணை முனிவன் சீறிற் கோறியென் றுரைத்து விட்டேன்.



(இ-ள்) (அடியேன்) பார்த்தேன் (உடனே எனது) அறிவாகிய சந்திரனைக் காமவிச்சையாகிய இருண்டமேகம் வந்து மூடிக்கொள்ளலால், உயர்குலத்தவளாகிய அந்நங்கையின் கொங்கையோடு இன்பமனுபவிக்க உத்தேசித்து வண்டுகள் ஒலிக்கின்ற கூந்தலையுடைய அப்பெண்ணை அவள் போகிய வீட்டிற்சென்று கவர்ந்துகொண்டு என்னிடம் வருவாயாக. அவள் நாயகன் வெகுளின் அவனைக்கொல்வாயாக. என்று இம்மந்திரியோடு சொல்லியனுப்பினேன். (எ-று) (௫௯)

சொற்படி முனிவன் சென்னி துணித்தவட் கொணர்ந்தான் மாவக்
கற்படி பெயரா மின்னைக் கரத்தினா லணைக்கு முன்ன
ரற்படி நிறத்திற் சீறி யடர்ந்தது பிரம பாவ
நற்படி வலஞ்செய் குற்றேம் விடாதுபி னலைவ தைய.

(இ-ள்) என்சொற்படியே அப்பிராமணன் சிரசை வெட்டி அம்மடந்தையைக் கொண்டுவந்து சேர்த்தான். மானமாகிய கற்பின் நிலையினின்றுந் தவறாத அம்மாதை என் கைகளினால் தழுவுமுன்னரே இருள்பொதிந்த நிறத்துடன் சீறிக்கொண்டு பிரமகத்தி சூழ்ந்தது. அதன் நிவிர்த்தியின் பொருட்டு இப்புண்ணியபூமியை வலமாகவந்தோம். வந்தும் சுவாமீ! அப்பிரமகத்தி யெங்களையகலாது பின்தொடர்ந்து வருத்துகின்றது. (எ-று) (௬௦)

நெய்யடை கனலிற் சீறி நெருங்கிய பழிக்கு ளெய்த்தேங்
கையடை யாங்க ளெம்மைக் காப்பதுங் கடமை யென்றார்
மெய்யடை நீற்று வேணி மெய்த்தமிழ் முனிவன் பாவ
மையடை யுளத்தி ரஞ்ச லஞ்சலென் றருளி மாதோ.

(இ-ள்) நெய்சேர்ந்த அக்கினியைப்போலச் சினந்து அடர்ந்த பிரமகத்திதோஷத்துக்கு மனம் இளைத்தோம். அடியேங்கள் (தேவரீருக்கு) அடைக்கலம். எங்களை இரக்ஷிப்பது தேவரீர் கடமையாம் என்று வேண்டினார். திருமேனியிற்றரித்த திருநீற்றையும் சடைமுடியையும் உடைய உண்மைத்தமிழாசிரியராகிய அவ்வகத்தியமுனிவர் கரியபாவங் குடிகொண்ட மனத்தையுடையவர்களே! அஞ்சற்க அஞ்சற்க எனத்திருவருள் பாலித்து. (எ-று) மாது ஓ - அசைகள். (௬௧)

படவர வேணி காட்டும் பதிநதி வடபாற் றோன்று
மிடவபு ரேசன் பாத மிருகடி கைப்போ துன்னி
யுடலிபுள குதிப்பக் கண்ணீ ரூற்றிருந் தொழுக வாங்கவ்
விடலர சனைப்பார்த் தன்பி னருள்சுரந் துரைப்ப தானான்.

(இ-ள்) படத்தையுடைய பாம்பானது எல்லைகாட்டிய தலமாகிய திருவாலவாயையடுத்த வைகைநதிக்கு வடபக்கத்திற்றோன்றும் இடபபுரேசரது திருவடிகளை இரண்டுநாழிகையளவு தியானித்துச் சரீரம்புளகங்கொள்ள கண்களினின்றும் ஜலமானது ஊற்றெடுத்துப்பெருக, அங்கே நின்ற வெற்றி பொருந்திய அச்சந்திரசேனமன்னனை அன்புடன் பார்த்து கிருபை மிகுந்து கூறுவாராயினர். (எ-று) வணி - எல்லை. (சுஉ)

கனிநறுஞ் சுவைத்தேன் கைப்பக் கற்றோர்க் கினிப்ப மேனாட்
பனிவரை முகட்டி லென்பாற் பரஞ்சுட ருபதே சித்த
புனிதநற் றமிழ்சேர் சங்கம் பொலிநகர் வடபால் வைகைக்
கினிதணித் துறையுங் காட்சி யிடவபு ரப்பே ரூரூர்.

(இ-ள்) சுயஞ்சோதியாகிய சிவபெருமான் முற்காலத்திலே இமமலையின் உச்சியில் முதிர்ந்த மணமுள்ள மதுரம் வாய்ந்த தேனும் கைக்கும்படி கற்றவர்களுக்கு இனிக்குமாறு என்னிடத்துபதேசித்த சுத்தமாகிய நல்ல தமிழ் வளரும் சங்கம் விளங்கிய மதுராபுரியின் வடதிசையில், வைகை நதிக்குச் சமீபித்ததாகத்தோற்றப் பொலிவையுடைய இடபபுரம் என்னும் பெயர்பெற்ற பழையதலம் இனிதாகத் தங்கும். (எ-று)

பனிமலையிற் பார்வதி தேவியாரைத் திருமண முடித்தற்குப் பெருமான் எழுந்தருளிய காலையில், தேவர்முனிவராதியர் பலரும், ஒருங்கு சேர்ந்தமையால், வடபூமி தாழ்ந்து தென்பூமி உயர்ந்ததாகவும, அத்தருணத்தே பூமி சமமாகுதற்பொருட்டு, அகத்தியமுனிவரைத் தென்பூமிக்கேகுமாறு பணித்தவழி, அவர் அப்பூமி செந்தமிழ்நாடாக இருத்தலால், அடியேனுக்கும் அச்செந்தமிழிலக்கண நூலை அநுக்கிரகிக்கவேண்டுமென்றபிரார்த்தித்து, அவ்வாறே உபதேசிக்கப்பெற்று, அத்தமிழ்நாடடைந்தனரென்பது புராணசித்தமாதலின் "பனிவரை முகட்டிற் பரஞ்சுடருபதேசித்த" என்றும், அது ஆராய்வோருக்கு சிந்தைக்கினிது செவிக்கினிது வாய்க்கினிது என்னும்படிஇனிப்பதொன்றென்பார் "தேன்கைப்பக்கற்றோர்க்கினிப்ப" என்றும், அன்றியும் இகபரங்களை யறிதலோடு இனிமையும் உடைத்தாதல்பற்றியே செந்தமிழெனப் பெயர்வாய்த்ததென்பார் "புனிதநற்றமிழ்" என்றும், இவ்வுயர்ச்சிபற்றியே ஆலவாயமலனாதியர் ஒருங்குசேர்ந்து அத்தமிழை விருத்திசெய்தார் என்பார் "சங்கம் பொலிநகர்" என்றுங் கூறினர். (சுங)

ஏயவந் நகரி லன்ன விநோதனு மிலிங்க மூர்த்திக்
காயதென் றிசையி னந்தி யடிகள்பேர்த் தீர்த்த முண்டால்



மேயவத் தீர்த்த மூழ்கி விறல்வடு கேசன் நீங்கு
போயினன் பிரம பாவம் பூருவ மெனவுங் கேட்டார்.

(இ-ள்) நிலைபெற்ற அவ்விடபபுரத்தில் அன்னவிநோதராகிய சிவலிங்கப்பெருமானுக்குத் தென்றிசையிலே, திருநந்திதேவரது திருநாமம் பூண்ட தீர்த்தம் ஒன்றிருக்கின்றது. பொருந்திய அந்நந்தி தீர்த்தத்தில், முன்னொருகாலத்தில் வெற்றியையுடைய வைரவக்கடவுள் ஸ்நானஞ்செய்து தன்னைத்தொடர்ந்த பிரமகத்தி நீங்கப்பெற்றார் என்றருளிச்செய்தலும் அதனைக் கேட்டனர். (எ-று) (சுச)

குரைமுக வூர்திக் கெய்துங் கொடும்பழி வரவென் னிந்தத்
திரைதவழ் வாவி தோய்ந்து தீர்ந்ததெவ் வாறின் றெங்கட்
குரையெனச் சிறுவி திப்பே ருடையவன் மகத்திற் செந்தா
மரைமக னமரர் நாப்பண் வந்துமுன் பிருக்குங் காலை.

(இ-ள்) குரைக்கின்ற முகத்தையுடைய ஞாளியை வாகனமாகக்கொண்ட வைரவமூர்த்திக்கு, நேர்ந்த கொடிய பிரமகத்தி வந்த காரணமென்னை? அலைகள் தவழாநின்ற இடப தீர்த்தத்தில்முழுகி, நிவிர்த்தியானது எப்படி? இப்போது அடியேங்கட்கு உரைத்தருளவேண்டும் என்று வேண்ட, அவரை நோக்கிச் சிறுவிதி எனப்பெயர்பெற்ற தக்கன் யாகத்தில், செந்தாமரை மலரில் வசிக்கும்பிரமதேவர் வந்து முன்னே தேவர்களுக்கு மத்தியிலிருக்கும்போது, (எ-று) (சுரு)

சராசர சடங்க டோறுந் தனித்தனி கலந்து நிற்கும்
பராபரன் விமல னெந்தை பசுபதி சிரங்கள் போலும்
விராவிய சிரங்க ளைந்தும் விளங்கிய தனக்கு மென்னுந்
தராணவ மடைந்து நின்று னஃதுணர் சுருதி மூர்த்தி.

(இ-ள்) சரமும் அசரமுமாகி உயிர்களினுடல்கடோறும் தனித்தனியே புணர்ந்து நிற்கின்ற பராபரனாகியும், மலரகிதராகியும், எமது பிதாவாகியும், ஆன்மாக்களுக்கெல்லாம் பதியாகியும், விளங்கும் சிவபெருமானுடைய சிரசுகளைப்போலவே கலந்த ஐந்து சிரசுகளும் தனக்கும் விளங்கியிருக்கின்றனவென்று தூரகங்காரங்கொண்டு இருந்தார். அதையறிந்த வேதநாயகராகிய கடவுள். (எ-று) (சுசு)

சினந்தலை நிமிர்ந்த சூலத் திகம்பர குமரற் கூவி
மனந்தலை மயங்குந் தன்பூ மகன்றலை யைந்தி னொன்றி

னனந்தலை விளங்கு மெம்மை நகுதலை யறுத்தி யென்றெ
முனந்தலை யறுத்தான் பாவ முடுகிய தரன்பாற் போகி.

(இ-ள்) கோபம் அதிகரிக்கப்பெற்ற சூலாயுதத்தைத் தரித்த திருவாணரொருபத்தையுடைய வைரவ மூர்த்தியையழைத்து, மனந்தமொறிய குளிர்ச்சிபொருந்திய தாமரைமலரில்மரும் பிரமதேவருடைய ஐந்து சிரசுகளுள் நான்கு சிரங்களின் மத்தியில் நிலவுகின்ற, நம்மை அவமதித்துச்சிரித்த தலையைக்கொய்வாயாகவென்று ஆஞ்ஞாபிக்குமுன்னரே அச்சிரசைச் சேதித்தனர். உடனே பிரமகத்தி வந்து பிடித்தது. வைரவக்கடவுள் பரமசிவனிடம் சென்று. (எ-று)

பிரமதேவரது நடுச்சிரம், சுவாமியை அவமதித்திகழ்ந்ததைப்பற்றி வைரவக்கடவுள், இடக்காத்தின் கனிட்டவிரலாலதனைச் சேதித்தமையை "முன்னமெனது நகனெப்ப னுதித்த நீயோ முதல்வனெனப், பின்னும் வெருண்டு கூறுதலும் பிள்ளைப்பிறைதாழ் மணிமௌலிப், பொன்னஞ் சிகரி வரைகுழைத்த புனிதன் காரி முகநோக்க, வன்னோ னிட்கை நகநுதியான் மலரோனைந்தாந் தலையகழ்ந்தான்" என்னுங் கூர்மபுராணம் வைரவன் பலியிரந்தவத்தியாயத்துச் செய்யுளானறிக. (கூஎ)

ஐயவிப் பாவம் பாறும் வழியெனக் கருள்செ யென்ன
வையையின் வடபாற் செங்கோல் வழுதிநாட் டிடவ நாமச்
செய்யநன் னகருண் டந்த திருநகர்த் தென்சா ராக
வெய்துறு மிடவ தீர்த்தம் விளங்குமூ வுலகு மேத்த.

(இ-ள்) பெருமானே இந்தப்பிரமகத்தி நீங்கும் மார்க்கத்தை அடியேனுக்குத் திருவருள் செய்யவேண்டும் என்று பிரார்த்திக்க, மனுநீதியின் முறையே செங்கோல் செலுத்தும் பாண்டியனது தேசத்தில், வைகையாற்றிற்கு உத்தரபாகத்திலே செவ்விய நல்ல இடபபுரம் என்னும் தலம் ஒன்றிருக்கின்றது. அந்த அழகிய நகரத்தின் தென்பக்கத்தில், வேகம் பெற்ற நந்திதீர்த்தமானது மூன்றுலகும் துதிக்க விளங்காநிற்கும். (எ-று) ()

அவ்விடை மடுவி னூடி யரும்பவங் கழிந்து பின்ன
ரிவ்விடை நம்பாற் சேறி யெனப்பட இப் பழியி னீங்கித்
தெவ்விடை மழுவ லான்பாற் சென்றனன் காரி மேனு
ளுவ்விடை யடைந்தந் நீர்தோய்ந் துயர்ப்பழி கழுவி நீவிர்.

(இ-ள்) அந்த நந்தி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து நீங்கற்கரிய பிரமகத்தியினின்று நீங்கிப்பின்பு இங்கே நம்மிடம் வந்து சேர்வாயாக, என்று கட்



டளைபுரிய அவ்வாறே வைரவக்கடவுள் முழுகி, அத்தோஷத்தின் நீங்கிப் பகைவர்களைப் பின்னிடும்படிசெய்யும் மழுவை வலக்கரத்திற் றரித்தருளிய சிவபெருமான் சந்நிதியில் அடைந்தனர். ஆதலால், நீங்களும் அவ்விடத்திற் சென்று அவ்விடப தீர்த்தத்தில் முழுகி, உம்மையடைந்த பிரமகத்தியைப் போக்கிக்கொண்டு, (எ-று) (கூகூ)

அன்னக ரிலிங்க மூர்த்தி யன்னவி னோத நாதன்
பொன்னடி வணங்கி வாழ்ந்து போற்றிநீ டவந்தி யென்னுஞ்
சென்னக ரடைமி னென்று செப்பலும் விடைகொண் டேகி
மன்னவ னமைச்ச னோடும் வந்துகா விரிநீர் மூழ்கா.

(இ-ள்) அந்நந்தி நகரத்திலமர்ந்தருளும், சிவலிங்கப்பெருமானாகிய அன்னவினோதமூர்த்தியினது, பொன்போலுந் திருவடிகளைத்தொழுது, அங்கே வசித்திருந்து, பின்னும் வணங்கிக்கொண்டு மேகங்கள் சூழ்கின்ற நீண்ட அவந்தியென்னும் உங்கள் நகரைச்சேர்வீரென்று கூறலும், அனுமதிபெற்றுச்சென்று, சந்திரசேனன் சுகுணன் என்ற மந்திரியோடும்வந்து, காவிரி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, (எ-று)

லிக, என்கிற தாதுக்குச்சித்திரித்தல் என்பது பொருளாதலால் படைத்தல், காத்தல் முதலியவற்றால் உலகத்தைச் சித்திரிப்பதாகிய சிவத்தினது பிரபாவமே லிங்கமெனப்படும். (எ0)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

எருதூர் திருவிடை மருதூ ருடையவ ரிருகா டொழுதடி கரு
தாரூர், பொருதூர் நகையிறை யுறையூர் பலநெறி புகுவார் பரவின
ரொருநாவற், றருதூ ரிடைவளர் சடைபோ னிறைபுன றழலூர்
திருவுரு முழுதூரும், விருதூர் கொடிவிடை யவர்கான் மலர்சிர
மிசைரு டினர்பழி வினைதீர்வார்.

(இ-ள்) வழிப்பற்றிச்செல்லும் அவ்விருவரும் திருவிடைமருதூரில்வீற்றிருக்கும் இடபவாகனராகிய இறைவரது இரண்டு திருவடிகளையும் வணங்கித், திருவடிகளை நினையாதவர்களாகிய முப்புராதிபர்களுடைய முப்புரங்களையும், அழித்துப்பரவிய புன்முறுவலையுடைய சிவபெருமான் எழுந்தருளி விளங்கும், பல தலங்களையும் வணங்கினபின்பு, ஒப்பற்ற வெண்ணாவல் விருக்ஷத்தினடியில் அக்கினிமயமாக விளங்கும், திருவுரு முழுமையும் தமதுவளர்ச்சியுற்றசடைமுடிபோலவே, பூரணகங்கை தவழப்பெற்றுள்ளவரும், விரு

துக்கொடியில் இட்பந்தங்கப் பெற்றுள்ளவரும், ஆகிய சிவபிரானது மலர் போலுந் திருவடிகளைச் சகலவினையும் நீங்குபவராய்த் தமது சிரசின்மீது தரித்துக்கொண்டனர். (எ-று)

திருவானைக்காவென்பது அப்புத்தலமாய் ஓய்வின்றிக் கங்கை பெருகிப்பெருமான் திருமேனி குளிரச்சூழ்ந்து நிற்பதாகலின் "நிறைபுனறழலூர் திருவுரு முழுதாரும்" என்றும், நாவல் அத்தலவிருக்ஷமாதலின் "நாவற்றரு நீழலிடைத்திருவுரு" என்றுங் கூறினர். (எக)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

விரிநதி யணிய ரங்கமேல் விழிவளர் கரிய செங்கண்மா
றிருவடி மலர்ப ணிந்துநீ டிரிசிர கிரியி லெந்தைதாள்
பரவினர் பழிக ழிந்திலார் பதிபல நெறிக டந்துபோ
யருள்பொழி வழுதி தென்றனா டதனை விரைவின டைந்துளார்.

(இ-ள்) காவிரிநதியாற் சூழப்பெற றழகு வாய்ந்த ஸ்ரீரங்கமென்னுந் தலத்தில் அறிதுயில் கொண்டருளும் கரியதிருமேனியையும் சிவந்த கண்களையுமுடைய திருமாலின் திருவடித்தாமரைகளை வணங்கிப் பின், நீண்ட திரிசிராமலையில் வீற்றிருக்கும் எமது கடவுளாகிய தாயுமானேசரது திருவடிகளை வணங்கினர். வணங்கியும் பிரமகத்தி நீங்கப்பெறாதவர்களாய், மார்க்கத்திலுள்ள பலதலங்களையும் தெரிசித்துச் சென்று யாவர்க்குங் கருணை சொரிவதாய்ப் பாண்டியனாலாளப்படுகின்றதென்றல் வளஞ் சூழ்ந்த பாண்டியன் நாட்டை விரைவிலடைந்தார். (எ-று)

இராமமூர்த்தி இராவணசங்காரஞ்செய்து விபீஷணனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வித்து அயோத்திமா நகரஞ்செல்லுங்கால் பின்தொடர்ந்து வந்த விபீஷணனுக்கு இராமர் திருமால் திருவுருவமும் விமானமுங் கொடுக்கப்பெற்று வருங்கால் காவிரியிற் சென்று ஸ்நானஞ் செய்து பூசையை முடித்து, சுவாமியை விமானத்தோடும் அந்நதியின் மணலில்வைத்து அமுதுசெய்து கொண்டு விமானத்தை யெடுக்கவும், பெயராது வேரூன்றினமைகண்டு கவலையடைந்தழி, விஷ்ணுமூர்த்தி அவன் கனவில் வந்து, விபீஷணா கவலைகொள்ளற்க, இங்கே இலக்குமிதவம்புரிகின்றாள், அவ்விலக்குமியை நாம் இங்கு நடனஞ்செய்யும்படி செய்வித்தலால், இத்தலத்திற்கு ஸ்ரீரங்கமெனவும், அதிலமர்கின்ற நமக்கு, ஸ்ரீரங்கநாதரெனவும் பெயர் வழங்கும் என்று சொப்பனஞ் சாதித்தார். இதனை "திருவின்மாதரானடனஞ்செயவியற்றினன் தருவமாகரொன் றரங்கமென்றளதா-மருவுசீரங்கநாதரென்



றெமக்குரை வழங்கும்-பொருவில் பூசனை விழாமுத லெமக்கிவண் பொலியும்" என்னுந் திருவானைக்காப்புராணச்செய்யுளானறிக.

இராவணன் தனது பகைவர்களைத்தடுத்தற்பொருட்டுத் திரிசிரா,கரன்; தூஷணன் என்னும் மூவரையுங்காவலாக நிறுத்தி அரசுபுரியுங்கால், கரன் தூஷணன் என்னுமிருவரும் சத்துருக்களைச் செயித்து இராவணனையடைந்தனர்கள். மற்றத் திரிசிரா என்பவன் அவனுமதியால் தென்கைலையிலிருந்து ஆலயமுதலியவற்றையுண்டாக்கி அம்மலையின்கீழ் நகரமும் உற்பத்தி செய்து பெருமானைவழிபட்டுவருங்கால் தவம்புரிய, சிவபெருமான் தெரிசனங் கொடாமையால் இரண்டுதலைகளைக்கொய்து நெருப்பில் ஆகுதிசெய்து, மற்றதையும் அறுக்கும்போது, கடவுள் பிரசன்னமாகி உனக்கு வேண்டும் வரங்கேட்பாயாக என்றருளத், தேவரீருக்கும் இந்நகரத்திற்கும் என்பெயர் வழங்கவேண்டுமென்று பிரார்த்திக்க, அவ்வாறே தந்தருளினர் என்பது புராணசித்தம். (எ௨)

கலி நிலைத் துறை.

செந்த மிழ்த்திரு நாட்டிடை விரைந்துசெல் பவர்பூஞ்
சந்த னத்தட வரைமுனி தமக்குமுன் பிசைத்த
சுந்த ரப்பெருந் திருநகர் விழியெதிர் தோன்ற
மந்த ரப்புயத் தவர்தொழு திம்மென வருவார்.

(இ-ள்) செவ்விய தமிழ்வழங்கும் பாண்டித் திருநாட்டில், விரைந்து செல்பவர்களாகிய மந்தரமலைபோன்ற புயங்களையுடைய அவ்விருவரும், பொலிவாகிய சந்தனமரங்களையுடைய விசாலமான பொதியமலையில் வீற்றிருக்கும் அகத்தியமுனிவர், தங்களுக்கு முன்னே கட்டளையிட்டருளிய அழகிய பெரிய நகரமானது கண்முன்னே தோன்றவும் வணங்கி, விரைய வருவாராயினர். (எ-று) (எ௩)

தடந கர்க்கயல் வரவர கிழலெனத் தழுவித்
தொடர்பெ ரும்பழி காறளர்ந் தயர்ந்துபின் றாங்கிப்
படர்தி றத்தினை நோக்கின ரிருவரும் பலகா
லடந வின்றினர் பாடினர் மகிழ்ந்தனர் நடந்தார்.

(இ-ள்) விசாலமாகிய அந்நகரத்திற்குச் சமீபத்தில் நெருங்க நெருங்கத் தன் தேகச்சாயைபோல விடாதணைந்து,பின்தொடர்ந்துவந்த கொடிய பிரமகத்தியானது, தளர்ச்சியுற்றுச் சோர்ந்து, பின்னே யுறங்கிவிருந்தன

மையைச் சந்திரசேனனும் மந்திரியும் பார்த்தவர்களாய்ப், பலதரமும் ஆனந்தக் கூத்தாடினார்கள். பலவாறு புகழ்ந்தனர். மிகக்களித்தனர். இவ்வாறாகப் போனார்கள். (எ-று) (எச)

தானு மெய்த்திரு வாப்புடை யவர்பெருந் தலத்தி
னெல்லை புக்கனர் விலகெனத் தொடர்பழிக் கிசைத்து
மானு றத்தமை வம்மினென் றழைத்தென வானங்
கான கர்க்கொடி நிமிர்ந்துபி னுடங்குவ கண்டார்.

(இ-ள்) நிலைபெற்ற தமது திருமேனி சிறந்த ஆப்புவடிவமாக அமைந்த, பெருமானுடைய பெருமைபொருந்திய இடபபுரம் என்னும் தலத்தின் எல்லையையடைந்தவர்களாகிய அவ்விருவர்களும், தம்மைத்தொடர்ந்துவந்த பிரமகத்திக்கு இனி நீ நீங்குவாயெனக்கூறித், தங்களை மாட்சிமைப்பட வாரக்கடவீரென்று அழைத்தாற்போல, ஆகாயத்திற் காணப்படுகின்ற நகரிலுள்ள கொடிகள் முன் ஓங்கி அசைவனவற்றைப் பார்த்தார்கள். (எ-று) (எரு)

நஞ்ச முண்டவா யருவருப் பறநனி யமுது
பஞ்ச நாண்மலர் முகத்தராற் கருணதிப் பாங்கர்
வஞ்சி போன்மருங் குடையவர் முகமென மலருங்
கஞ்ச நாண்மலர்த் தடமுநந் தனங்களுங் கண்டார்.

(இ-ள்) அன்றலர்ந்த தாமரை மலர்போலும் ஐந்து திருமுகங்களையுடைய திருவாப்புடையீசருக்கு, ஆலகால விஷத்தையுண் டருளிய, திருவாய்க்கு வெறுப்புத்தன்மை நீங்க மிகவும் அன்னத்தைக்கொடுத்த வைகையாற்றின் பக்கத்திலே, வஞ்சிக்கொடிபோன்ற இடையினையுடைய பெண்களின் முகத்தைப்போலப் பூக்கின்ற புதிதாகிய தாமரை மலர்களையுடைய தடாகங்களையும், திருநந்தனவனங்களையும் பார்த்தார்கள். (எ-று)

இவ்வைகை நதியிலுள்ள மணலே பெருமானுக்கு அன்ன நிவேதனமான சிறப்புப்பற்றி "அமுதருள்நதி" என்றார். (எசு)

உவந்த சிந்தையர் புரம்புகுந் திறையவ ருலாக்கொ
ளிவந்த கோள்விழா வீதியு மண்டப நிலையுஞ்
சிவந்த நுண்டமிழ்க் கழகமு மளகையான் செல்வங்
கவர்ந்து வைத்தன பலபொருட் டெருவுமோர் கண்டார்.

(இ-ள்) மனமகிழ்ச்சியுடைய அரசனும் மந்திரியும், அவ்விடபபுரத்தினுட்சென்று, அவ்விடபபுரேசர் திருவுலாக்கொண்டருளும், உயர்ந்த இரதோற்சவ வீதிகளையும், திருமாளிகைப்பத்தி மண்டபங்களையும், நுண்ணிய பொருளமைதியுடைய செந்தமிழ்க்கல்விபயிலும் இடங்களையும், குபேரனது செல்வங்களையெல்லாம் ஒருங்கு திரட்டி வைத்தாற்போன்ற, பலபொருட் செறிவுகளமைந்த தெருக்களையும் எதிரே நோக்கினார்கள். (எ-று) (எள)



வட்ட வெண்குடைச் சுகுணனுஞ் செந்தமிழ் மாறன்
மட்ட ருமலர்க் கொன்றையி னற்குமுன் மணற்சோ
றட்ட வேதியற் கன்பினு லியற்றிமே லாட
விட்ட கேதன மாளிகை வீதியுங் கண்டார்.

(இ-ள்) வட்டமாகிய வெண்கொற்றக் குடையினையுடையவனும், செந்தமிழ்க்குரிமை பூண்டவனுமாகிய சுகுணன் என்னும் பாண்டியன் (முன்னே தேன் நீங்கப்பெறாத மலர்களாற்றொடுத்த கொன்றைமாலையையுடைய பெருமானுக்கு, வைகையாற்றிலுள்ள மணலையே அன்னமாகச் சமைத்து நிவேதித்த, அவ்வாதி சைவருக்கு) அன்புடன் கட்டுவித்து, மேலே யாடும்படி கொடிகளை நாட்டிய, மாளிகையையுடைய வீதியையும் பார்த்தார்கள். (எ-று) (எஅ)

பைந்த மிழ்த்திரு ஞானசம் பந்தர்தம் பனுவன்
மந்தி ரப்பதி கத்தினு லமணர்பொய் மதம்போய்
நந்த நற்சிவ சமயமே சயத்தம்ப நாட்ட
வந்தி ருக்கும்வை திகத்திரு மாமடங் கண்டார்.

(இ-ள்) பசிய முத்தமிழ் விரகராகிய திருஞான சம்பந்தசுவாமிகள், தம்முடைய மந்திர சொரூபமாகிய தேவாரத் திருப்பதிகத்தினால், சமணர்களுடைய பொய்ச்சமயமானது அழிந்து கெடவும், சற்சமயமாகிய சைவ சமயமே வெற்றித்தம்பம் நாட்டவும், எழுந்தருளியமர்ந்த வைதிகர்கள் நெருங்கிய சிறந்த திருமடத்தை யிருவருந் தரிசித்தார்கள். (எ-று)

பனுவல் என்றது ஈண்டுத் தேவாரம். இவையும் நினைத்தவர்களைக் காப்பன என்பார் "மந்திரப்பதிகம்" என்றும், சமண் சமயம் அழியவும், சைவ சமயம் நிலைபெறவும், திருஞானசம்பந்தப்பெருமான் அடியார் குழாத்துடன் திருமடங்கொண் டமர்ந்திருந்தது, திருவாப்பனூரே யாகலின் "வைதிகத் திருமடம்" என்றுங் கூறினார். (எ-று) (எகூ)

தெளித்த செம்பணி வெயில்விட்டத் தருவின்மென் சினைக
டளிர்த்த தொத்தவி லரம்பையர் பாசிலை தனைத்தேன்

துளித்த பூவுடன் முறியெனக் கொய்துறச் சுரர்கண்
களித்து நோக்கியுண் ணகைப்புரி மாடங்கள் கண்டார்.

(இ-ள்) ஒளியுண்டாகக் கடைந்த மாணிக்கங்கள் பிரகாசத்தை வீசுதலால், கற்பகவிருக்ஷங்களிலுள்ள மெல்லிய இலைகள் தளிர்த்ததுபோன்றிருத்தலால், தெய்வப்பெண்கள் பசிய இலைகளைத் தேனைச்சொரிகின்ற பூக்களோடு தளிரெனக்கொண்டு பறிக்க, தேவர்கள் கண்களிப்படைந்து பார்த்து, தமக்குள்ளே சிரிக்கும்படி செய்யத்தக்க மாளிகைகளைப் பார்த்தார்கள். (எ-று)

கடைதலால் தெளிவுண்டாக்கிய மணியென்பார் 'தெளித்த செம்மணி' எனவும், அவற்றினொளி பரவலால் பாசிலையைத் தளிரென மயங்கிப்பறித்தனரென்பார் "பாசிலைதனை முறியெனக்கொய்துற" எனவும், அவைதளிரன்மை கண்டசுரர் அவர் பிணங்காவாறு புறந்தோன்றாது நகைத்தனரென்பார் "உள்நக" எனவும், மணியொளியால் இவ்வாறு மயக்கவல்லன என்பார் "கொய்துறநகைப்புரிமாடம்" எனவுங் கூறினார். (அ0)

விரும்பு மேனிலை யிருந்துதம் மென்குழற் காளைச்
சுரும்பு தன்பெடை யெனத்தொடர்ந் தெய்த்திட மீப்போ
யரும்பு கற்பகப் பொதும்பர்புக் களியினின் றுடக்
கரும்ப னார்பரு மணிக்கழங் காடுவ கண்டார்.

(இ-ள்) யாவரும் இச்சிக்கத்தக்க மேல்வீடுகளிலிருந்துகொண்டு, தம் மெல்லிய கூந்தலிலுள்ள ஆண்வண்டுகள் தம்முடைய பெண்வண்டென்று நினைத்துப் பின்தொடர்ந்து, இளைக்க மேலே சென்று, அரும்புதலைக்கொண்ட கற்பகச்சோலைகளிலே புகுந்து வண்டுகளைப்போல நின்று அசையும்படி, கரும்புபோல்வார்களாகிய மங்கையர்கள், பருத்த இரத்தினங்கள் பதித்த கழங்குகள் விளையாடுவதை நோக்கினார்கள். (எ-று)

கரும்பனார் மேல்நிலையிலிருந்து பருமணிக்கழங்கை எய்த்திடவும், ஆடவும், ஆடுவனவற்றை நோக்கினரென்பது கருத்து. (அக)

விழித்த பார்வைக ளிமைப்பறத் தஞ்செயல் வெறுத்துப்
பழித்த வானர மடந்தைய ரதிசயம் படவா
னொழித்த வாதுயர் மேடைமே லம்மனை யுறைகள்
கழித்த வாளன கண்ணினா ராடுவ கண்டார்.



(இ-ள்) உறைகளின் நீக்கிய வாள்போன்ற கண்களையுடைய பெண்கள், ஆகாயத்தின்கண் நீங்காது ஓங்கிய மேடைகளின்மேல் நீங்காதிருந்து கொண்டு, விழித்த கண்கள் இமைத்தலொழியத், தஞ்செயல்களை வெறுத்தவர்களாய்த், தம்மைப்பழித்த தெய்வப்பெண்களும் ஆச்சரியப்படும்படி, அம்மனை ஆடுவனவற்றை யிருவரும் நோக்கினார்கள். (எ-று)

பழித்தலாவது, கண்ணிமைத்தலாதிய செயல்பற்றி என்க. (அஉ)

இன்ன தாயநன் னகர்வளங் கண்டுகண் டேகி
நன்னர் மாதவர் மறையவ ரருச்சனை நவில்வோர்
பன்னகா பர ணன்புகழ் விரிப்பவர் பாங்கர்
மன்னு மால்விடை மடுவிடைப் போயெதிர் வணங்கி.

(இ-ள்) இத்தன்மைத்தாகிய அவ்விடபுரத்தின் சிறப்புக்களைத் தனித்தனிபார்த்துச் சென்று நற்குண நிரம்பிய பெரிய தவத்தர்களும், அந்தணர்களும், சிவார்ச்சனை செய்பவர்களும், சர்ப்பாபரணத்தையுடைய பெருமான் சீர்த்தியை விரித்துக்கூறுபவர்களுமாகிய இவர்கள் பக்கங்களில் நிலைபெற்றிருக்கும், பெருமை பொருந்திய அநந்தி தீர்த்தத்தின்கண் அடைந்து நேரே வணங்கி. (எ-று) (அங)

எறிந்த தெண்டிரை வாவியின் படித்துறை யிழிந்தங்
கறிந்த சங்கற்ப விதிமுறை யமைச்சனோ டாடிப்
பிறிந்தி லாக்கொடும் பழிபிறிந் தகமுறப் பிணித்துச்
செறிந்த மாசற விளங்கினன் சந்திர சேனன்.

(இ-ள்) சந்திரசேனன் என்பவன், தெளிவாகிய அலைகளை வீசுகின்ற அநந்தி தீர்த்தத்தின் படித்துறையிலிறங்கி, அங்கே தாம் தேர்ந்துள்ள சங்கற்ப விதிப்படியே, மந்திரியுடனே ஸ்நானஞ்செய்து, தீர்த்தங்களிலாடிப் பலதலங்களை வழிபட்டும், ஒழியாத பிரமகத்தி ஒழிய, தன்மனத்தைத்தன் வசமாக்கிக்கொண்டு, பந்தித்து நின்ற அஞ்ஞானாந்தகாரமும் நீங்க விளங்கினான். (எ-று) (அச)

வொருவ ரும்பணி வாயுமிழ் சுடரென விளங்கு
மிருவ ருஞ்சின கரமடைந் திடவபு ரேச
னொருவ ருங்குர வங்கமழ் குழலுமை பாகன்
பொருவ ருஞ்சரண் பணிந்தனர் வேந்தினை புகலும்.

(இ-ள்) அஞ்சத்தக்க இராகு கேதுக்கள், தம் வாயாலுண்டுமிழப்பட்ட சந்திர சூரியர்களைப்போலப் பிரகாசிக்கின்ற அவ்விருவரும், திருக்கோயிலிற் சென்று, நீக்கமில்லாத குரவங்கமழ்குழலம்மையை ஒருபாகத்திலுடையவராகிய இடபபுரேசரது, ஒப்பில்லாத திருவடிகளை வணங்கினார்கள். அவருள் அரசன் இவ்வாறு துதிக்கின்றனன், (எ-று) (௮௫)

தேவ தேவநி ராமய துரியவ தீத
மூவ ராகிமற் றிருவரா மொருமுழு முதல்வ
பாவ காரிய ருளம்புகா வாதியெம் பரம
தாவு மால்விடைக் கீலக நாயக சரணம்.

(இ-ள்) தேவாதிபரே, நோயில்லாதவரே, துரியாதீதமாயுள்ளவரே, திரிமூர்த்தி சொருபராகி, மேலும் சிவம் சக்தி வடிவராகி விளங்கும் ஒப்பற்ற முழுமுதற் கடவுளே, பாவகாரியங்களைச் செய்பவர்களது உள்ளத்திற் செல்லாத முதன்மையான எமது பரமனே, தாவிச்செல்லும் பெருமை பொருந்திய, இடபவாகனத்தில் எழுந்தருளும் திருவாப்புடை நாதரே நமஸ்காரம். (எ-று) மற்று - அசை.

நோயின்மை - அநாதிமலமுத்தத்தன்மை. துரியாதீதர் - சிந்தனைக்கப்பாற்பட்டவர். கீலகம் - ஆப்பு; சரணம் - புகலிடமும் ஆம். (௮௬)

நாத பன்னக பூடணா சுடர்த்திரி நயன
வேத மன்னவி பூதிமே னியவிளங் ககில
பூத மன்னவ நூபுர மறைச்சரா ணம்பு
சாத வன்னவி னோதமெய்ப் பரஞ்சுடர் சரணம்.

(இ-ள்) எப்பொருட்கு மிறைவரே, அரவாபரணரே, பிரகாசம் பொருந்திய சோம சூரியாக்கினியென்னும் முக்கண்களையுடையவரே, சுருதிகட்குத்தலைவரே, விபூதியையணிந்த திருமேனியையுடையவரே, விளங்குகின்ற எல்லாவுயிர்கட்குங் கர்த்தரே, வேதங்களாகிய சிலம்புகளைத் தரித்தருளிய திருவடித்தாமரைகளையுடையவரே, அன்னவினோதரே, உண்மைச்சுயஞ்சோதியாயுள்ளவரே நமஸ்காரம். (எ-று) (௮௭)

அந்த காரிகங் காதர திரிபுர மரித்த
மந்த காசவெண் கயிலைமால் வரைச்சிகா மணியா
மிந்து சேகர நீலகண் டாவெம்மக் கிறைவ
சந்த நான்மறை யாப்பனூர்த் தனிமுதல் சரணம்.



(இ-ள்) இயமனைக்கொன்றவரே, கங்கையைத்தரித்தவரே, திரிபுரங்களை யெரித்தருளிய புன்னகையுடையவரே, பெருமைபொருந்திய வெள்ளியகைலையங்கிரியில் சிரோரத்தினமாயமரும் சந்திரசேகரரே, நீலகண்டரே, எங்கட்கிறைவரே, இசைபொருந்திய நான்குவேதங்களும் முழங்கும் திருவாப்பனூரில் விளங்கும் ஒப்பற்ற முதற்பொருளே நமஸ்காரம். (எ-று)

அந்தகாரி என்பதற்கு அந்தகாசுரனைச் சங்கரித்தவர் எனினும் பொருந்தும். (௮௮)

பருமம் வாளர வல்குலார் மயற்படு குழிவீழ்
கரும னென்பெரும் பழிதெறக் கலங்கரு ருழந்தேன்
றெருமரா வகை யருள்சுரந் தருணிமிர் திமில்வெண்
டரும மால்விடை யூர்திகழ் பசுபதி சரணம்.

(இ-ள்) பருமம் என்னும் அணியையணிந்த ஒளிபெற்ற பாம்பின் படத்தையொத்த நிதம்பத்தையுடைய பெண்களது மயக்கமாகிய படுகுழியில் வீழ்கின்ற பாவியாகிய எனது பெரிய பிரமகத்திவருத்துதலால், கலங்குதற்கேதுவாகிய துன்பத்தால் வருந்தினேன். மயங்காவண்ணம், திருவருள்சுரந்தருளும் நிமிர்ந்த முரிப்பினையுடைய வெள்ளிய பெருமைபொருந்திய, தருமதேவதைவடிவாகிய இடபத்தின் பெயர்வாய்ந்த இடபபுரத்திலே விளங்கும் பசுபதியே நமஸ்காரம். (எ-று)

பருமம் என்பது பதினெண்கோவை மணிவடம்.

அருள்சுரந்தருள் பசுபதி என இயையும். (௮௯)

என்ன வேந்தினின் றிறைஞ்சலு மிருசெவிக் கினிப்பச்
சொன்ன தோத்திரத் திறையவன் மனங்களி தூங்கி
நன்னர் மாக்ககனத்திடை வாணியி னலங்கூர்
மன்ன கேட்டியென் றவனெதி ரிம்மொழி வழங்கும்.

(இ-ள்) என்றிவ்வாறு துதிசெய்து நின்று வணங்கியவளவில், இரண்டு திருச்செவிகளுக்கும் இனிக்கும்படி சொல்லிய துதியினால், அத்திருவாப்புடையீசர் திருவுளமகிழ்ந்து, நன்மைவாய்ந்த ஆகாயத்தில் அசரீரிமொழியினால், புண்ணியம் முதிர்ந்த அரசனே கேட்பாயாகவென்று, அவ்வரசனெதிரே இந்தவாக்கியத்தைத் திருவாய்மலர்ந்தருளுவார், (எ-று) (௯0)

சினக்கு றும்பெறிந் திலங்குவேற் சந்திர சேன
வுனக்கு மந்திரி தனக்கும்வன் பழிதொலை வுற்ற
தெனக்கு வித்திரு காஞ்சிர மேற்றினின் றிறைஞ்சி
யனக்கு றாப்படர் தடம்பனை யவந்திசென் றடைந்தார்.

(இ-ள்) கோபமாகிய குறும்புகளைப்போக்கி விளங்குகின்ற வேலைத் தரித்த சந்திரசேனனே! நினக்கும் மந்திரிக்கும் வலியபிரமகத்தி நீங்கிற்று என்றுகூற, (அதுகேட்ட இருவரும்) தம்மிருகரங்களையுஞ் சிரசின்மேலே குவித்து, நின்று வணங்கி, விடைபெற்று, அன்னப்பறவையின் கூட்டங்கள் பரவியிருக்கும், விசாலமான வயல்கள் சூழ்ந்த அவந்திமாநகரத்தைப்போய்ச் சேர்ந்தார்கள். (எ-று) (கூக)

அடைந் தரசிய லமைச்சிய லறந்தெரிந் தாற்றி
நடந்து நாள்கழீஇப் பின்னர்முன் விடைப்பெயர் நளிர்நீர்
குடைந்த புண்ணிய மானமீ திவர்ந்திமக் குன்ற
மடந்தை பாகர்தங் கயிலைபுக் கிருந்தனர் மாதோ.

(இ-ள்) சேர்ந்து தருமநூல்களை யாராய்ந்து அரசியலையும் அமைச்சியலையும் நடாத்தி தங்கள் வாணாளைக் கழித்துப்பின்பு, முன்னே குளிர்ச்சி பொருந்திய நந்தி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்த புண்ணியத்தால் வந்த தேவவிமானத்தின் மீதேறிப், பனிமலையிலவதரித்த பார்வதிதேவிபாகரது, கைலையையடைந்து, பேரானந்தப் பெருவாழ்வுபெற்றிருந்தார்கள். (எ-று) (கூஉ)
மாதுஓ - அசைகள்.

## பதின்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தொடர வந்திபு ரந்தருள் சந்திர சேனன் சுகுண மந்திரி யென்
றிவர் தெண்டிரை தாவுங் கடவு ணந்தியி லஞ்சிப டிந்துபின் மேவுங்
கடிய வெம்பழி நின்றும கன்றருள் காதை, தடைய றும்படி விண்
டவர் திண்செவி சாருந் தகைய ரந்தயில் வெண்பொனெ டுங்கிரி
யூடு, படர்வ ரென்றுசி வன்பெயர் நன்குணர் சூதன் பகர வந்தணர்
சிந்தையு வந்தனர் மாதோ.

(இ-ள்) பாம்பரையாகத் தொடர்ந்துவந்த அவந்திமாநகரத்தைக், காத்தருளிய சந்திரசேன மன்னவன், சுகுணன் என்னும் மந்திரி என்னப்பட்ட இருவரும், தெளிவாகிய அலைகள்மோதுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய நந்திதீர்த்தத்தில் முழுகித் தம்பின்னே தொடர்ந்துவந்த, கொடிய பிரமகத்தி தோஷத்தினின்று நீங்கிய இச்சரித்திரத்தைத், தடையின்றிச் சொன்னவர்களும், வலியகாதுகளாற் கேட்டவர்களும், அழிவில்லாத உன்னதமுடைய வெள்ளியங்கிரியின்கண் அடைவார்களென்று, சிவபெருமானுடைய கீர்த்திகளைச் செவ்விதினுணர்ந்த சூதமுனிவர் திருவாய்மலர்ந்தருள, அது கேட்ட நைமிசாரணியவாசிகள் களிகூர்ந்தனர். (எ-று) (கூங)
மாதுஓ - அசைகள்.

சந்திரசேனச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம். கூஉ.

# பாட்களச் சருக்கம்.

## அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வேத முனிவர் பெருந்தீர்த்த மேன்மை விரும்பி வினவுதலுஞ்
சூத முனிவ ரச்சோவென் சொல்கே னெங்கோ னருடைத்தோ
னேது செயினும் பரிகார மில்லாப் பாவி பாட்கள னென்
றோதுபெயரோன்வஞ்சனைக்கோ ருறையுளனையா னொருமறையோன்

(இ-ள்) வேதங்களை நன்குணர்ந்த அந்நைமிசவன முனிவர்கள் பெருமைபெற்ற அந்நந்திதீர்த்த மகிமையைப்பற்றி விரும்பிக்கேட்டலும், சூதமுனிவரர் ஆச்சரியம். அதனது பெருமையை யாதென்றுரைப்பேன். எமதிறைவராகிய சிவபிரானது திருவருளைச் சிறிதும் பெறாதவனும், எப்பரிகாரங்களைச் செய்யினும் நீங்கப்பெறுதலில்லாத பாபத்தையுடையவனும், பாட்களனென்னும் பெயரையுடையவனும், வஞ்சனைக்கு ஒரு இருப்பிடமாயுள்ளவனும் ஆகிய ஓர் பிராமணன் இருந்தான். (எ-று) (க)

அவனி மடுத்தோய்ந் தூனுற்றுபவ மகன்று செழியற் கமைச்சியாய
புவனி முழுதுந் திறைபளப்பப் புரிந்து சிவசா யுச்சியமா
மூவமை யொழிந்த பெரும்பதவி யுற்று னெனலு முறுவரவ [வான்.
னவனிவரும்பேறடைந்தனன்மற் றெமக்குவிரித்தோதெனமொழி

(இ-ள்) அப்பாட்களன் இந்நந்திதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, தான் முன்செய்த பாவங்களினின்றும் நீங்கி, இப்பூமிமுழுவதும் இறைப்பொருள் செலுத்தப் பாண்டியராஜனுக்கு,மந்திரித்தொழிலுரிமை நடத்தி வாழ்ந்து, ஒப்பில்லாத பெரிய சிவசாயுச்சியபதவியையடைந்தனன், என்று கூறலும், அம்முனிவர்கள், இவ்வரிய பயனைப் பெற்றவனாகிய அவன் யாவன்? அவன் சரிதத்தை, எங்களுக்கு விரித்துபதேசிக்கவேண்டுமென்று வேண்டச், சொல்வாராயினர். (எ-று) மற்று - அசை. (உ)

புண்ட ரீக மலர்ப்பசுந்தார்ப் பூசு ரேசர் மகச்சாலை
கொண்ட தூமம் புயலளக்குங் கொடிமின் னொடிக டமையளக்கும்
விண்ட நாத மறையொலிபோய் மேக நாத மளந்தப்பா
லண்ட கூட முகடளக்கு மளகை நாமப் பெருமூதூர்.

(இ-ள்) தாமரைமலர்களாற் றொடுக்கப்பட்ட மாலையையணிந்த, பிராமணோத்தமர்கள் புரியும் யாகசாலையிலுண்டாகும் புகைகள், மேகமண்டலத்தையளாவும். மேல்மாளிகையிற் கட்டிய கொடிகள், அம்மேகங்களிற்றோ

னறும் மின்னற்கொடிகளையுடையதாயும், உச்சரித்த சுரங்களோடுகூடிய வேத முழக்கஞ்சென்று, மேகமுழக்கத்தைக் கீழ்ப்படுத்தி, அம்மேகமண்டலத்திற்கும் அப்பாற்பட்ட அண்டப்பரப்பினது உச்சியையுடையதாயும், இப்படிப்பட்ட அளகை யென்னும் பெயர்கொண்ட பெரிய பழைமையாகிய நகரின் கண். (எ-று) (௫)

அரணி திருத்திக் கடைந்தமைத்த வழல்வா யோம நறுந்தூமஞ்
சுரரை யவிநுய்த் திடவழைக்குந் தூதிற் றுறக்கம் புகுமடவார்
கருமென்குழற்கூட்டகிற்புகைபோய்க் கடவுண்மகளிர்முடித்தகுழற்
றருவி னறுமென் மலர்வாசந் தனையும் விழுங்கிக் கமழுமால்.

(இ-ள்) திக்கடைகோலைச் சீர்திருத்தஞ்செய்து, கடைந்தாக்கிய அக்கினியிலே பெய்யும், ஆகுதியினின்று எழுகின்ற நறுமணங்கமழும் புகை, தேவர்களை அவிர்ப்பாகங்கொள்ளும் வண்ணம், அழைக்கப்போகின்ற தூதினைப்போல், தேவலோகத்திற்செல்லும். அந்நகரிலுள்ள பெண்கள் கரிய மெல்லிய கூந்தலுக்கேற்றுகின்ற அகிற்புகைகள் மேலேபோய்த், தெய்வப் பெண்கள் முடித்த கூந்தலில் அணியப்பட்டுள்ள, கற்பக முதலிய தருக்களினுடைய மணமுள்ள மிருதுவான மலர்களின் வாசனையையும், கீழ்ப்படுத்தி அதனினும் மிகமணஞ்செய்யும். (எ-று) ஆல் - அசை. (௬)

இருகை யொருநன் முகப்பிரம ரிவர்கொ லென்னும்வை திகர்செறிந்திக்
கரும நிதியாற் கவிதூரந் தழைக்கு மவ்வு ரவதரித்தோ
னுரிய பெயர்பாட் களன்குருவா யுடைய தாதை யிடத்தினின்றுங்
கருதுஞ் சுருதி முழுவதுஞ்சாத் திரமுங் கனியக் கற்றனனால்.

(இ-ள்) இவர்கள் செவ்விய இரண்டுகரங்களையும், ஒருமுகத்தையுமுடைய பிரமர்களோ என்று, ஐயுறத்தக்க வைதிகர்கள் செறிந்து, கருமத்தின் வழியீட்டிய நிதிகளால் யாகாதிகன்மங்களையியற்றித், தீமைகளையோட்டி செழித்திருக்கின்ற அவ்வளகாபுரியிற் பிறந்தவன், பாட்களன் என்னும் உரிய பெயரையுடையவன். தனக்காசிரியராய்த் தன்னை அடிமையாக வுடைய, பிதாவிடத்தினின்றும், யாவரும் மதிக்கத்தக்க வேதங்களும், சாஸ்திரமுதலியயாவும், முதிரக்கற்றனன். (எ-று)

"பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக் கொடுத்தோன்
சிறப்ப வுபதேசஞ் செய்தோன்—அறப்பெரிய
பஞ்சத்தி லன்னம் பகர்ந்தோன் பயந்தீர்த்தோன்
எஞ்சலில்சீர்த் தாதையரென் றெண்" என்பது

நூற்றுணி பாகலின் "குருவாயுடையதாதை" என்றார். (௭)



புதுநாண் மலர்வாய்க் கவர்தேனீப் பொருவப் புராண மிதிகாசஞ்
சதிகூர் பரதஞ் சோதிடம்வே தாந்தந் தர்க்கம் வாகடநற்
றுதிசேர் பெருங்காப் பியமுதலாச் சொன்னூல் யாவுங் கசடறக்கற்
றதிவா லியவா சாலகனு மாகி வடநாற் கரைகண்டான்.

(இ-ள்) புதிதாகிய் அன்றலர்ந்த பூக்களிலுள்ள தேனைக்கிரகிக்கின்ற ஈயைப்போலப், புராணங்கள், இதிகாசங்கள், தாளவொத்தமைந்த பரதம், சோதிடம், வேதாந்தம், தர்க்கம், வைத்தியம் முதலிய சாத்திரங்கள், நல்ல கீர்த்திபெற்ற பெரியகாவியங்கள் முதலாகக் கூறும், நூல்கள் யாவற்றையும் பழுதகலக்கற்று, வாலியப்பருவமுள்ளவனும், வாக்குவல்லபமுடையவனுமாகிச், சமஸ்கிருதபாஷையை முற்றுங்கற்றவனானான். (எ-று)

கசடறக்கற்றலாவது:— விபரீத ஐயங்களை நீக்கி, மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும் பலகாலும் பழகல். (௮)

இந்நூல் கொளுத்துந் தேசிகர்க்கொன் றீந்தா னலனெட் டுணையேனு
மந்நூ லறிவி னுன்மேம்பட் டகிலம் புகழ்நற் கவியானான்
பின்னூற்பொருளாற்பொருடேடும் பெற்றிமேற்கொண் டனுதினமு
முந்நூல் புரளுந் தடந்தோளான் மோகித் தூரூர் தொறுமுழலும்.

(இ-ள்) இந்த சாத்திரங்களைப்போதித்த ஆசிரியருக்கு யாதொரு பொருளையும், எள்ளளவுங் கொடுத்தானில்லை. அந்த சாத்திரவுணர்ச்சியால் மேலாகி, உலகினர்யாரும் மெச்சத்தக்க நல்ல வித்துவானாயினன். பின்பு இக்கல்விப்பொருளாற் செல்வப்பொருளைச் சம்பாதிக்குந்தன்மையை மேற்கொண்டு, நாடோறும் உபவீதம் அசைகின்ற விசாலமான புயங்களையுடைய அப்பாட்களன், பொருளாசை கொண்டு அதனால் ஊர்தோறும் அலைந்து திரிவானாயினன். (எ-று) (௯)

கருத்தோ டரச ரவையணுகிக் கற்ற நூல்சோ தனையுறுத்தி
வருத்த மகலப் பங்குமனை வாங்கிப் பொருள்கூட் டுவதன்றி
யிருத்து மயிடந் தயிலகடம் விளக்கஞ் சாகந் திலந்தேனுத்
தருக்குங் கால புருடன்முதற் றானங் கவர்ந்துந் தனம்வளர்க்கும்.

(இ-ள்) இக்கருத்துடன் இராஜசபைக்குப்போய்த், தான் கற்ற கல்வியைச் சோதனைகாட்டி, வருத்த நீங்க, இராஜாங்கத்திலேற்பட்டுள்ள பாகம் வீடு முதலியவைகளை வாங்கி, இவ்வகையால் பொருளீட்டுவதல்லாமலும், விருத்திப், எருமைக்கடா, எண்ணெய்க்குடம், விளக்கு, அஜம், எள்ளு, பசு,

செருக்கினையுடைய காலபுருடன் முதலிய தானங்கள் வாங்கியும் திரவியத்தை விருத்திசெய்வான். (எ-று)

காலபுருஷன் என்பது கறுப்புக்கம்பளியால் மானுடவடிவாக அமைத்து, அதில் நிறைய எள்ளையும் திரவியத்தையும் நிரப்பித்தைத்து, பிராணப் பிரதிட்டையுஞ் செய்து வைத்த ஓர் உருவம். (அ)

பெரிய நகர்நன் னதிக்கரைகள் பெயரா திருந்து புராணநூ
றெரியவுரப்பிவிரித்துரைத்துந் தேன்போல்வடசொற்சுவைதிரட்டி
யரிய பிரபந் தாதிவகுத் தருப்பப் பரிசிற் கவையளித்து
முரிய சிராத்தம் பின்னவருக் குஞற்றி யுலைந்தும் பொருளீட்டும்.

(இ-ள்) பெரிய நகரங்களிலும், நல்ல புண்ணிய தீர்த்தக்கரைகளிலும் நீங்காதிருந்துகொண்டு, புராணங்களைப் பிறருக்குத் தெரியும்படி, முழக்கத்தோடு விரிவாகச்சொல்லியும், வடசொற்களைத் தேன்போலச் சுவைதரத் திரட்டி, அருமையாகிய பிரபந்தமுதலியவைகளைச்செய்து, அவற்றை, அர்ப்பப் பிரயோசனத்திற்காகக் கொடுத்தும், உரிமையாகிய சிராத்தங்களைப் பின்வருணத்தவர்களுக்குச் செய்து திரிந்தும், திரவியங்களைச் சம்பாதிப்பான். (எ-று) (கூ)

மண்ணின் முளைத்த புற்கொடிநீண் மரத்து மூல மிலைகாய்பூ
வண்ண நறுமென் கனிகிழங்கின் மருவுங் குணங்கள் விதந்துரைத்து
மெண்ணின்மருந்துண்டிறந்தவுயி ரெழுப்புமெனப்பண்டிதஞ்சொற்று
மங்கு ஊறும் பிணியை மிகவளர்த்து நாளிற் றணித்து நிதிவரும்.

(இ-ள்) பூமியில் முளைத்திருக்கிற புல், கொடிகள், நீண்டதருக்களின் வேர்கள், இலைகள், காய்கள், பூக்கள், நிறம்பெற்ற மணம்வாய்ந்த மெல்லிய பழங்கள், கிழங்குகளாகிய இவைகளிற் பொருந்திய, குணங்களையெல்லாம் தனித்தனி புகழ்ந்து கூறியும், நம்மிடத்து எண்ணிறந்த மருந்துகள் உண்டு. அவை இறந்த உயிர்களையும் எழுப்பும் என்று, தம் வைத்தியத் திறமையைக் கூறி, அவரவர்களிடத்துப் பொருந்திய வியாதிகளை மிகவளரச்செய்து, அவற்றை நாடோறும் சிறுகத்தணியச் செய்தும் திரவியம் ஈட்டுவன். (எ-று) (௰)

அல்லல் புரியுங் கேதுதிசைக் கப்பாற் பிருகு திசைநமக்கு
மல்கும் பொழுது தனகனக வத்து வாக னாபரணம்
புல்கும் குடைசா மரையாதி பொருந்து மெனவும் வறுமையிலாச்
செல்வ ரிடத்திற் சோதிடநூ றேற்றித் திரிந்தும் பொருள்கூட்டுமே.



(இ-ள்) இப்பொழுது உங்களுக்குத் துன்பத்தை விளைக்கும் கேதுதிசை நடக்கின்றது. அதன்பிறகு சுக்கிரதிசைநடக்குங் காலத்தில், செல்வமும், பொன்னும், பலவித வஸ்துக்களும், வாகனங்களும், ஆபரணங்களும், நிலைபெற்ற குடையும், சாமரையும் ஆகிய இவை முதலியவைகள் கிடைக்குமென்றும், தரித்திரமில்லாத செல்வவான்களிடத்தில் சோதிடசாத்திரங்களைப் போதித்து உழன்றும், பொருளையீட்டுவன். (எ-று) (கக)

இவைய லானெய் பாறயிர்மோ ரெண்ணெய் காட்ட மிலவணநற்
சுவைசூழ் பலங்கா யிலைபயறு சொன்றி முதலா வியவிற்று
நவைகூர்பொருள்வட்டியின்மிதப்ப நவின்றுகொடுத்துவாங்கியுமற்
றவைபால் வெறுக்கை மிகவிளைக்கு மந்தோ வாசைக் களவின்றால்.

(இ-ள்) மேற்கூறியவகையல்லாமலும், நெய், பால், தயிர், மோர், எண்ணெய், விறகு, உப்பு, நல்லமதுரமான பழம், காய், இலை பயறு, அன்னம் இவை முதலியவற்றை விலைப்படுத்தியும், இழிவுமிக்க தம்பொருள்களை வட்டியிலதிகப்படக்கூறி நல்கி, மீட்டும்பெற்றும், மேற்சொல்லியதொழில்களால், பொருளைமிகவளர்ப்பன். ஐயோ! அவனாசைக்கு எல்லையில்லை. (எ-று) மற்று - ஆல் - அசைகள்.

பாவவழியாலீட்டப்பட்டமையின், யாவராலும் இழிக்கப்பட்ட பொருளென்பார் "நவைகூர்பொருள்" என்றார். (கஉ)

கங்கை யமுனை பிரயாகை கண்ண வேணி காவிரிமற்
றெங்கு நடந்து சேதுமுத லியற்றுந் தீர்த்த யாத்திரைநெய்
பொங்கு மோமஞ் சிவபூசை பொருவில் சீருத் திரசெபமு
மங்க ணுலகிற் பிறர்பொருட்டா லாற்றி நிதியங் கூலிகொளும்.

(இ-ள்) கங்கை, யமுனை, பிரயாகை, கிருஷ்ணவேணி, காவிரி என்னும் நதிகளையுடைய எவ்விடங்களினுஞ்சென்று, மூழ்கிப்பின்பு, தென்றடைந்து, சேது முதலியவற்றிலியற்றுந் தீர்த்தயாத்திரைகளையும், நெய்வளரும் யாகம், சிவபூசை, சமானமற்ற ஸ்ரீ ருத்திரசெபம் ஆகிய இவற்றையும், அழகிய விசாலித்த இப்பூமியில் பிறர் நிமித்தமாகச்செய்து, அதற்குக் கூலியாக வாங்கியும், பொருளைச்சேர்ப்பான். (எ-று)

கூலிகொள்ளலாவது கங்காஸ்நானபலன் முதலியவற்றைப் பிறர்க்குத் தத்தஞ்செய்து அவற்றிற்கீடாகப் பொருளேற்றல். (கங)

## கலிவிருத்தம்.

ஆவாவொரு செல்வானுதி யளவாகினு முதவா
தோவாமலி வகைதேடின னொருகோடிபொ னதன்மேன்
மேவாமம தைகண்மேவினன் வீழ்நாள்பட வாழ்நாட்
பூவார்முலை விலைமங்கையர் தஞ்சேரிபு குந்தான்.

(இ-ள்) ஆ ஆ ஒருவருக்கும் ஒரு செல்லின்வால் நுனியளவுங்கொடாமல், ஒழியாது இவ்வாறு ஒருகோடி திரவியம் சம்பாதித்தான். அதற்குப் பின் அடையத்தகாத அகங்காரங்களையடைந்தவனாய்த் தனது வாழ்நாளெல்லாம் வீணாளாகக் கழியும்படி வாழுங்காலத்தில், பூமாலைகளணிந்த கொங்கைகளை விற்றலால், முலைவிலைமகளிரெனப் பெயர்பெற்ற வேசையர்களது தெருவைச்சேர்ந்தான். (எ-று)

ஆ ஆ = வியப்பிடைச்சொல். சேரி = அம்மங்கையர் சேர்தற்குரிய இடம். (கச)

கொல்லுங்கணை விழிவேசையர் கூடுங்கல வியைநேர்
சொல்லுஞ்சுக மமரமாதர்சு வர்க்கத்தினு மிலதென்
றல்லும்பக லினும்வேள்களி யாட்டந்தவி ராமற்
புல்லும்பணை யந்தானொரு பொருளன்றென நினையும்.

(இ-ள்) கொல்லுந்தொழில்படைத்த அம்புபோன்ற கண்களையுடைய வேசையர்களோடுகூடி யனுபவிக்குஞ்சுகம், தெய்வப்பெண்களுடைய ஸ்தனங்களினும் விளையாதென்று, இரவினும் பகலினும் மன்மதனுங்களிக்கத்தக்க கலவித்தொழில் தவிராது, அணைதற்பொருட்டுக் கொடுக்கும், உடன்பாட்டுத்திரவியம் எவ்வளவினதாயினும், அதைத்தான் இது ஒரு பெரிதன்றென்று நினைப்பான். (எ-று)

சுவர்க்கம் என்பதற்கு விண்ணுலகம் எனக்கொள்ளலும் ஆம். கலவித்தொழில்களை மன்மதன் களிக்கும் தொழிலாகலின் "வேள்களியாட்டம்" என்றார். (கரு)

மையோதிய ரல்குற்சுவை வாஞ்சித்துறு பணையங்
கையோடுற நல்கிப்புணர் காமத்துறை புக்கான்
பெய்யோதகந் துளியாற்றனி பெருகிக்குள முடைந்தாங்
கையோபொரு ளொருகோடியு மற்றானரு ளற்றான்.



(இ-ள்) உயிர்களுக்குதவி சிறிது மில்லாதவனாகிய அப்பாட்களன், மேகம்போற் கறுத்த கூந்தலையுடைய பெண்களது, அல்குலின்கண் அனுபவிக்கும் சிற்றின்பச் சுவையை விரும்பி, மிக்கபரிசப்பணத்தை அவ்வப்போதே கையிற்கொடுத்துச் சேருகின்ற காமவழியிற் சென்றவனாய், பெய்கின்ற கூட்டமாகிய மழைத்துளியால், மிகப்பெருகிக் குளத்துநீர் உடைபட்டுச் சென்றதுபோலத், தான் ஈட்டிய ஒரு கோடி பொருள்களோடு, முன்னிருந்த பொருள்களும் கழியப்பெற்றவனாயினான். (எ-று.)

மிகப்பெருகிய நீரோடு உள்ளநீருங்கழிந்ததுபோல, மிகஈட்டிய செயற்கைத் தனங்களோடு, இயற்கைத்தனங்களும் கழிந்ததென்பார் "குளமுடைந்தாங்கு ஒருகோடியுமற்றான்" என்றார். அருளற்றவனது பொருள் பயன்படாதகலுமாறு விளக்கியவாறும் ஆயிற்று.

குளம் என்றது ஈண்டுக் குளத்துநீரை. ஐயோ என்பது இரக்கக்குறிப்பு. (கசு)

அற்றானுமென் விலைமாதர்த முலையாசைய றாமற்
சுற்றார்தரு மனையிற்பொருள் சோரஞ்செய்த ளித்தும்
பற்றாமன்மெய்ம் மறையோர்நறை படர்தீவினை யோமக்
கற்றாவினந் திருடுந்தொழில் கண்டார்கள் கலித்தார்.

(இ-ள்) அப்படி நிர்ப்பாக்கியனானாலும் என்னை? அவ்வேசைகள் தனங்களையணையவேண்டுமென்கிற ஆசையொழியாதவனாய்ச், சுற்றுப்பக்கங்களிலுள்ள மனைகளில் பொருள்களைக் களவுசெய்து கொடுத்தும், அதுவும் போதாமையால், மணங்கமழும் அக்கினிகாரியத்திற்கு, நெய் முதலிய உதவும், கறவைப்பசுக்களைத் திருடுதலை மேற்கொண்டனன். அச்செய்கையைச் சத்தியநெறியையுடைய வேதப்பிராமணர்கள், நேரே ஒருநாள் கண்டவராய்ப் பெருமுழக்கஞ்செய்தனர். (எ-று.) (கஎ)

மறைத்தாலுவர் கோவென்று வளைத்தார்வளை யாமு
னறைத்தார்முடி யரசன்றமர் நணுகிச்சின மனமிக்
குறைத்தார்கவ ளிருகாலினொ டொருகாலறு காலாய்க்
குறைத்தார்கரு வியினால்வினை கொடிதென்று விழுந்தான்.

(இ-ள்) வேதங்களை அத்தியயனஞ்செய்யும் நாவையுடைய அந்தணர்கள், கோவென்று கூவிச் சூழ்ந்தனர், அவர் சூழுமுன்னமே, தேன்பொருந்திய மாலையையணிந்த கிரீடத்தையுடைய அரசனுடைய சேவகர்கள் அணுகி, மனத்தின்கண் கோபம் மிக அதிகரித்து, அப்பாட்களனுடைய

இரண்டுகால்களுள், ஒருகால் அற்ற காலாகும்படி வாளினால் வெட்டினார்க
ள். நமது வினைமிகக் கொடிது என்றுகீழே வீழ்ந்தான். (எ-று) ஆங்கு-அசை.

ஊர்நோக்கவு ளோர்தங்களை நாணுஞ்சர ணூறுபுண்
ணீர்நோக்குதி ரங்குந்தனி நெஞ்சோடுபு லம்பும்
வார்நோக்குமென் முலைவேசையர் வழிநின்றெதிர் நோக்கப்
பார்நோக்குமி ருக்குந்துயர் பகரும்பரி சன்றால்.

(இ-ள்) ஊரிலுள்ளவர்கள் தன்னைப்பார்க்க அதனால் மனம் மிகவரு
ந்தி, அங்கே ஒரிடத்திலொதுங்குவான். காலிற்பொருந்திய புண்ணிலிருந்
தொழுகும் இரத்தத்தைப்பார்ப்பான். இரங்குவான். தனித்தவனாய் மன
தோடு புலம்புவான். கச்சிறுக்கிய மெல்லிய தனங்களையுடைய வேசையர்
கள் வழியில்நின்றுகொண்டு, நேரே தன்னைப்பார்க்க தலைகுனிந்து பூமியை
ப்பார்ப்பான். அசைவற்றிருப்பான். அப்பாட்களனடையுந்துன்பம் சொல
வுந்தரத்ததன்று. (எ-று) ஆல்-அசை. (ககூ)

காலேமுழு நோயென்றுக லங்குங்கர மூன்றித்
தானேதவழ் பூம்பார்மிசை தவழுங்கலுழ் கண்ணீ
ராலேநில னையும்படி யவ்வூரிடை நின்று
மேனோடுயி ருருகத்தனி யூரூர்தொறு முழலும்.

(இ-ள்) காலிலுள்ள அந்நோயைச் சரீரமுழுவதுமுள்ள நோயாகப்பா
வித்து மனங்கலங்குவன். பூமியில் கைகளை யூன்றிக்கொண்டு தானேதவழு
வன். தளர்ச்சியடைவன். அழுகின்ற கண்ணீரினால் நால்வகைப்பட்ட இப்
பூமி நனையும்வண்ணம், அவ்வூரினின்றும் உடலோடு உயிரும் உருகும்படி
தனியே ஊர்கடோறும் அலைந்து திரிவான். (எ-று)

கால் என்பது கால் என்னும் எண்ணையும், காலென்னும் உறுப்பையும்
உணர்த்திநின்றது. (உ௰)

ஆறுசீலன் என்பதும் பாடம்.

அந்தோவொரு மருநாள்வயி னவன்மாசட லெங்கு
நொந்தோடவ சும்பூறுபுண் ணோய்பொங்குசி ரங்கு
சந்தோவரும் வெஞ்சூலைந லங்கூர்விர ணத்தான்
வந்தோலமி டுந்தீருய மருந்தார்தரு மென்பான்.



(இ-ள்) ஐயோ, இவ்வாறு தியங்கியலையுநாளில், அப்பாட்களன் வருந்
தி, மாசடைந்த சரீரமுழுமையும் ஓடும்படி, அசுத்த நீர்க்கசிவையுடைய புண்
களும், துன்பமிகுந்த ஓர்வகைச் சிரங்குகளும், நீங்காத மிகக்கொடிய பக்க
சூலையும், நடுக்கமிகுகின்ற இரணங்களும் ஆகிய இவற்றால், ஆங்காங்கும்
அடைந்து, கூவியழுவான். இக்கொடிய வியாதிகள் தீரத்தக்க ஔஷதம்
யார்கொடுப்பார் என்று புலம்புவான். (எ-று)

சந்து = பொருந்துவாய். அது இங்கே பக்கத்தை யுணர்த்தி நின்
றது. (உக)

முன்னேவரு பவர்கண்ணொடு மூக்கின்றுளை புதைப்பக்
கொன்னேமுடை நாறும்பிணி பழுத்தற்றுடல் குலைவா
னென்னேகழி பவநல்வினை யீதென்றறி கில்லேன்
மின்னேர்சடை யானன்னவி னோதன்பதி புக்கான்.

(இ-ள்) முன்னே வருவோர்கள் கண்களோடு, நாசித்துவாரங்களை
யும் பொத்திக்கொள்ளும்படி, புலால் நாற்றம் நாறுகின்ற வியாதிகள் முதிர்
ந்து, சரீரம் வீணே சிதையப்பெற்றவனாகிய அவன் பூர்வசன்மத்திற் செய்த
புண்ணியம்யாதோ, இன்னதென்று உணர்கிலேன். மின்னற்கொடிபோ
ன்ற சடையையுடையவராகிய அன்னவினோத மூர்த்தி அமர்ந்தருளும்,
இடபபுரத்தைச்சேர்ந்தான். (எ-று) கழிபவம்=பூர்வசன்மம். (உஉ)

மேகச்சுர வேகத்தினின் மேவிப்பசு மடுநீர்
சோகத்துயர் போகத்தனி தோய்வுற்றன னுடனே
யாகத்தறு கால்பெற்றன னுசிற்பிணி யறவே
மாகத்தெழு பாலக்கதிர் மானப்பொலி தருவான்.

(இ-ள்) மேகசம்பந்தமான சுரவியாதியின் தீவிரத்தினால், வந்து,
இடபதீர்த்தத்தில், சோகத்தோடுகூடிய துன்பமானது, தீரத்தனியே மூழ்
கினான். உடனே தன் சரீரத்தில் வெட்டுண்ட காலை, முன்போற்பெற்ற
வனாய், மற்றும் தீமையையுடைய வியாதிகள் நீங்க, ஆகாயத்திலெழுகின்ற,
பாலசூரியனைப்போல விளங்கினான். (எ-று) (உங)

ஈதற்புத மீதற்புத மியார்பெற்றன ரெனவே
யோதிப்பெரி தாடிப்புன லூறிப்பொழி விழியான்
சோதிப்பெரு வாவிக்கரை சூழ்வுற்றெதிர் பணிவா
னாதித்தனி நாதற்றொழ வார்வத்தொடு மணையா.

(இ-ள்) இது அதிசயம் அதிசயம், இவ்வரிய பேற்றை என்போற் பெற்றவர் யாவர், என்றுரைத்து, மிகவும் ஆனந்தக் கூத்தாடி, ஆனந்த பாஷ்பம் பொழியுக்கண்களையுடைய அப்பாட்களன், ஒளிபெற்ற பெரிய அந்தத்திர்த்தக்கரையில் பிரதக்ஷிணஞ்செய்து, எதிரே நமஸ்கரித்தவனாய் முதன்மையான ஒப்பற்ற இடபபுரேசரை வணங்குதற்கு அன்புடன் சென்று, (எ-று) (உச)

குரலங்கமழ் குழல்பங்கமர் குழகன்சின கரநேர்
கரவஞ்சலி யுடன்வந்திரு சரணந்தொழு தெதிர்நின்
றிருகண்களு நிறைபுன்புன லெழநெஞ்சமு ளுருகிச்
சுரகங்கையர் மகிழும்படி துதியிங்கிது புகலும்.

(இ-ள்) குரலங்கமழ் குழலம்மை என்னுந் தேவியார், ஓர் பாகத்தில் வீற்றிருக்கின்ற, கட்டழகையுடைய திருவாப்புடையீசரது, திருக்கோயிலையடையும்படி, அஞ்சலித்தகைகளுடன் வந்து, இரண்டுகண்களினின்றும் பெருகும் புனல் சொற்றெறிக்க, உள்ளே மனம் உருகித், தேவகங்கையைத் தரித்த, இடபபுரேசர் திருவுள்ளமகிழும் வண்ணம் இவ்வாறு துதிப்பான், (எ-று) (உரு)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அடர்பூத நாத சதுர்வேத கீத வளவாவ நீத சரணம்
படரால கால நுகர்கால கால பரநாத மூல சரணம்
நடனாதி ராம குணரூப நாம நவைபோய தாம சரணந்
திடஞான கோச கைலாச வாச சிவநீல கேச சரணம்.

(இ-ள்) நெருங்கிய பூதகணங்களுக்குத் தலைவரே, நான்குவேதங்களின் இசையையுடையவரே, அஷ்டப்பிரமாணங்களாலும் அளவிடுதற்கரிய மேலானவரே, அடைக்கலம். பரவிவந்த ஆலகாலவிஷத்தைத் திருவமுது செய்தருளிய காலசங்காரமூர்த்தியே, மேலாகிய நாததத்துவத்திற்கு மூலப்பொருளாயுள்ளவரே, அடைக்கலம். நடித்தலையுடைய சுந்தரரே, குணம், உருவம், பெயர் என்னும் கற்பனைகளைக் கடந்த திருமேனியையுடையவரே, அடைக்கலம். பலம்பொருந்திய ஞானவைப்பாயுள்ளவரே, கைலையங்கிரியில் வீற்றிருப்பவரே, மங்கலசொரூபராகிய திருவாப்புடையீசரே அடைக்கலம். (எ-று)

நீலக + ஈசன். நீலகம் = ஆப்பு. (உசு)

சரணமென்பதற்கு வணக்கமெனினும் பொருந்தும்.



பூவாகி மேவு மணமாகி மூடு புயலாகி நீடு துளியாய்க்
காவாகி வீசு கொடையாகி மீறில் கதிராகி வீறு சுடராய்ப்
பாவாகி யோது பொருளாகி வந்து பழைதா யிருந்து புதிதாந்
தேவாகி யேக வடிவாகி நின்ற சிவநீல கேச சரணம்.

(இ-ள்) புஷ்பமாகியும், அதிற்பொருந்திய வாசனையாகியும், மூடுகின்ற மேகமாகியும், அதிற்பொருந்திய திவலைகளாகியும், கற்பகச்சோலையாகியும், அதுகொடுக்குங்கொடையாகியும், கெடுதலில்லாத சூரியனாகியும், அதில் விளங்கும் கிரணங்களாகியும், செய்யுளாகியும், அதனாற் சொல்லப்படும் பொருளாகியும், பரவிப்பழமைப்பொருளாயிருந்தும், புதிய பொருளுமாய் விளங்குகின்ற தெய்வமாகியும், எவற்றையுங் கடந்துநின்ற ஏகசொருபமாகியும், நிலைபெற்ற திருவாப்புடையீசரே அடைக்கலம். (எ-று)

இறைவர் உலகில் ஆதார ஆதேயங்களாய் விளங்குபவரென்பார் "பூவாகி மேவுமணமாகி" என்றிங்ஙனம் முறையே தனித்தனி விதந்தனர்.

ஆதாரம் = தானமாயுள்ளது. ஆதேயம் = அத்தானத்தைப்பற்றி நிலைபெறுவது. (உஎ)

இருளாய்வி டிந்து பகலாய்வி ளங்கி யெழுகின்ற சோதி சரண
மருளாயு ணர்ந்து தெளிவார்தெ ளிந்த வடிவாம னாதி சரணஞ்
சுருளாய டங்கி விரிவாய்ம லர்ந்து தொடர்பாவ நாச சரணந்
தெருளாய்நி றைந்து முடிவாகி நின்ற சிவநீல கேச சரணம்.

(இ-ள்) அந்தகாரமாய், அவ்வந்தகார மகன்று பகல்வடிவமாய்த்தோன்றி யெழுகின்ற சோதிசொரூபரே அடைக்கலம். மயக்கமாய், அம்மயக்கத்தின் நீங்கித் தெளிபவர்களுக்கு, அவராற்றெளியப்பட்ட சொருபமாய் விளங்கும் அனாதிப்பொருளே அடைக்கலம். சுருங்கிய பொருளாயொடுங்கி, விரிவுடைப்பொருளாய் விரிந்து கவிந்துள்ள பாபநாசகரே அடைக்கலம். தெளிவுடைப்பொருளாய் வியாபித்து, முடிவுடைப்பொருளாகி நிலைபெற்ற திருவாப்புடையீசரே அடைக்கலம். (எ-று)

முன்னர்த்திரோபவிப்பவராய்ப், பின்னர் அனுக்கிரக கர்த்தாவாய் இறைவர் உலகில் நிகழும் நிலைமை விளக்குவார் "இருளாய் விடிந்து பகலாய் விளங்கி யெழுகின்ற சோதி" என்றிவ்வாறு முறையே தனித்தனி விதந்தனர். (உஅ)

வேல்காட்டி யன்ன விழிகாட்டி யல்குல் விலைகாட்டு மாதர் முலைமேன், மால்காட்டி நோய்கொள் வினையேற்கு முய்யும் வழி காட்டி யாரு மறியக், கால்காட்டி யின்று னருள்காட்டி யாண்ட கதையென்கொல் கூர்மை யெழுதுஞ், சேல்காட்டும் வாட்க ணுமை யாண்ம ணாள சிவலிங்க கேச சரணம்.

(இ-ள்) வேலை விதிர்த்துக் காட்டினாற்போலக், கண்களைக்காட்டி வசப்படுத்தித், தாம் பெற்ற பொருட்கீடாக நிதம்பத்தைக் காட்டுகின்ற பெண்களுடைய தனங்களில், விருப்பங்கொண்டு, அதுகாரணமாகப் பலநோய் களைக்கொண்ட தீவினையையுடைய அடியேனுக்கும், பிழைக்குநெறியை விளக்கி, யாவருங்காணும்படி வெட்டுண்டுபோன காலைப் பின்னும் பெறும் படி தோற்றுவித்து, இப்பொழுது தேவரீருடைய திருவருளையும் விளக்கி, ஆட்கொண்டருளிய காரணம்யாதோ, மிகவும் மையெழுதப்பெற்ற சேற் கெண்டையையும் வாளையும்போன்ற கண்களையுடைய உமாதேவி நாயகரே, மங்கலசொரூபராகிய திருவாப்புடையீசரே அடைக்கலம். (உக)

மாவேட்ட மாடு செழியன்ற னன்பின் வலைபுக்கு நின்ற பெருமா
னீவேட்டி ரங்கி வலியப்பு ரந்த நிலையென்கொ லைப சரணம்
பூவேட்டி ருந்த வயன்மாலி ரண்டு புடைதங்கு நேச சரணந்
தீவேட்டு வேத முனிவோர்வ ணங்கு சிவலிங்க கேச சரணம்.

(இ-ள்) மிருகங்களை வேட்டையாடிய சோழாந்தகபாண்டியாது, அ ன்பின் வலையிற் சிக்கிய பெருமானே! தேவரீர் விரும்பி, எளியேனிடத்தும் காதல்பூண்டு திருவருள்சுரந்து, வலியவே காத்த நிலைமை என்னையோ! தலைவரே அடைக்கலம். தாமரைமலரையும், பூமிதேவியையும் முறை யே யிச்சித்திருந்தவர்களாகிய பிரமதேவரும், திருமாலும், இருபக்கத்தும் தங்கிய ஏகபாதமூர்த்தியே அடைக்கலம். வேதங்களையுணர்ந்த முனிவர் கள் அக்கினியைவளர்த்து யாகஞ்செய்து வழிபடும், மங்கலசொரூபராகிய திருவாப்புடையீசரே அடைக்கலம். (எ-று)

பெருமான் - அண்மைவிளி.

பூ என்னும் பலபொருளொருசொல் பிரமன்மேற் செல்லுங்கால் மல ரினையும், விட்டுணுமேற் செல்லுங்கால் பூமியினையும் உணர்த்திற்று. (உo)

ஈவற்ற லோபி யொழிவற்ற காமி யிடருற்ற மூட னிறுவோ, பாவத்தி னுக்கு முடைநோய்க்கு மிங்கொர் பரிகார மற்ற கொடி



யேன், வாவிக்குண் மூழ்கி வினைவிட்டொ ழிந்து மறுவற்ற மேனி யுடனுன், சேவிக்க வின்று னருட்டந்த தென்கொல் சிவலிங்க கேச சரணம்.

(இ-ள்) ஈகையில்லாத உலுத்தன், நீங்குதலில்லாத காமவிகாரி, துன் பமிக்க அறிவீனன், இம்மட்டோ, (இன்னும்) பாவங்களுக்கும், துர்நாற்றம் வீசும் வியாதிகளுக்கும், தீரும் வகை யொன்றுமில்லாத கொடியேன். இத்தன்மையனாகிய நாயேன், இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, பாபங் களினின்றும் நீங்கி, மாசற்ற சரீரத்துடனே வணங்கும்படி இப்பொழுது தே வரீருடைய திருவருளளித்தது, என்னையோ? மங்கலசொரூபராகிய திருவா ப்புடையீசரே! அடைக்கலம். (எ-று) (உக)

என்றேத்தி யோதி முடிதாழ்ந்தி றைஞ்சி யிறைமுன்னர் நிற்கு மளவிற், குன்றாத கோயி லடியார்ம கிழ்ந்து குழுமிப்பு கழ்ந்து விரைவிற், சென்றேத்த வந்து தமிழ்மாற னெங்க டிருவாப்ப னூரர் செயலுந், தன்றாடி ருந்த மறையோன்கி ளர்ந்து தகவும்ப ணிந்து நியவா.

(இ-ள்) என்று பலமுறைதுதித்து, தலைபூமியிற்படிய நமஸ்கரித்துத் திருவாப்புடையீசர் சந்நிதிமுன் நிற்குமளவில், குறைவில்லாத, அவ்வால யத்திலுள்ள சிவனடியார்கள் சந்தோஷமடைந்து, ஒருங்குதிரண்டு வியந்து, துரிதமாகப்போய்ச், சுகுணபாண்டியமன்னனுக்கு அறிவிக்க, அவ்வரசன் அணுகி வணங்கி, எமது திருவாப்புடையீசரது திருவருட்செய்கையையும், பாட்களனென்னும் அப்பிராமணன் தனது அற்றுப்போனகால், இப்பொ ழுது திருந்தப்பெற்று, விளங்குந்தன்மையையும் புகழ்ந்து. (எ-று)

திருத்தி என்றும் பாடம். (உஉ)

இறைகோயில் வாயின் முறைகூ ரமைச்சி னியல்பூட்டி னுன் பின்னரசர், இறைகோடி கோடி தரமீன வன்கொள் செங்கோல்வ ளர்த்து நெடுநாட், டுறைசேர்பல் போக நனிதுய்த்தொ ழிந்து தொடர்லிங்க கேச னருளாற், றரைமேயார்செ லாத சாயுச்சி யப்ப தவிமேவி னானம் மறையோன்.

(இ-ள்) அப்பாண்டியன் தனது அரண்மனையின் வாய்தலில், செங் கோன்முறை நடாத்தும் மந்திரியாந்தன்மையைக் கொடுத்தனன். அமைச் சியல் பூண்ட அப்பாட்களனென்னும் அந்தணன், பின்பு வேற்றரசர்கள்

இறைப்பொருளைக் கோடிகோடியாகக் கொண்டுவந்து குவிக்க, அரசன் மேற்கொண்ட செங்கோலை விருத்திசெய்து, நெடுங்காலம் பலவேறுவகைப் பட்ட போகங்களை மிகவுமனுபவித்து, அகன்று, தன்னை அடிமைகொண்ட திருவாப்புடையீசர் திருவருளால், இப்பூமியிலுள்ளவரால் எளிதில்லடைய முடியாத சாயுச்சிய பதவியை யடைந்தனன். (எ-று) (௫௩)

கேடுற்று யுர்ந்து வருபாட்க ளன்னை கிளர்கேடி யானு மருவா,
வீடுற்ற வண்ணா மிகுதேவர் கோன்முன் விறல்வேள லைப்ப மருண்
மான், மூடுற்று முன்னோர் தினமற்ற நோக்கி முனிகோத மன்றன்
மனையாள், மாடுற்று ணைந்த முனிசாப மேற்று வானாட டைந்து
கவல்வான்.

(இ-ள்) பலவிதசெல்வங்களையுமடைந்து வந்த பாட்களனென்பவன் மேம்பட்டவனாய், விளங்குகின்ற சுதரிசனமென்னுஞ் சக்கரத்தைத்தரித்த திருக்கரத்தினையுடைய திருமாலும் அடையப்பெறாத சாயுச்சிய பதவியைப் பெற்ற சரிதமிதுவாகும். தேவேந்திரன் முன்னொருகாலத்தில் வெற்றி பொருந்திய மன்மதன் வருத்தலால், கலங்குதற்கேதுவாகிய மயக்கம் கவியப்பெற்று அலைந்து, ஒருநாள் சமயம்பார்த்துக் கௌதமமுனிவருடைய மனைவியாகிய அகலிகையினிடத்து வந்துகலந்து, (அதுகாரணமாக) உள்ளம்புழுங்கிய அம்முனிவருடைய சாபத்தைப்பெற்றுச் சுவர்க்கலோகத்தைச் சேர்ந்து வருந்துவானாயினன். (எ-று) (௫௪)

அயிராணி யாதி யரமாத ருக்கு மமரர்க்கு நாணி யழிவா
லுயிராசை யற்ற வுடலான்வ ருந்தி யுருகிக்கு மைந்து குருமுன்
பெயராந டந்து வெருவிப்ப ணிந்து பெருமாத வன்க வுதமன்
வெயராவு ரைத்து விடுசாப யோனி வினைமேனி காட்டி நவில்வான்.

(இ-ள்) தம்மனைவியாகிய இந்திராணி முதலிய தெய்வப்பெண்களுக்கும், தேவர்களுக்கும் நாணிச்சோர்கின்றவனாய், உயிர்களால் விரும்பப்படுத லில்லாத தேகம் தமக்கு நேர்ந்தமையான் வருந்தி, மனமுருகி வாடித் தனது குருவாகிய வியாழபகவான் சந்நிதியில் விரைந்தடைந்து, அச்சமுற்று, நமஸ்கரித்துத், தவசிரேட்டராகிய கௌதமமுனிவர் மனம்புழுங்கிக் கூறிய சாபத்தால், பெண்குறியிகரித்த தேகத்தைக்காட்டிச் சொல்வானாயினன் (எ-று)

மாதர்க்கு மல்லன் மைந்தர்க்கு மல்லன் மற்றிங்கெ னக்கு மலனிக்
கோதுற்ற சாப மொழியச்சு ரேசி கூறென்று கூற மறையோன்
மீதுற்ற சிந்தை யொருமித்து நன்கு சிந்தித்தி ருந்து வரையா
மேதக்க வேத முனிசொற்ற தீமை வினைதீரும் வண்ண மொழிவான்.



(இ-ள்) அடியேன் பெண்களுக்கும் உதவாதவனாயினேன், புருஷர்களுக்கும் உதவாதவனானேன். அன்றி எனக்கும் உதவாதவனானேன். (ஆதலால்) இத்தீமைபொருந்திய, சாபம் நீங்கும் வண்ணம், திருவருள்புரிய வேண்டுமென்று, இந்திரன் பிரார்த்திக்க, வேதங்களை நன்குணர்ந்த அவ்வியாழபகவான், குற்றமற்ற தமது சித்தத்தை யொருவழிப்படுத்தி, செவ்வையாகச் சிந்தனைசெய்திருந்து, ஓர் வகை முடிவுசெய்துகொண்டு, மேன்மையையுடைய வேதவிதிவழியொழுகும், கௌதம முனிவராற் கூறப்பெற்ற, அச்சாபவினை நீங்கும்படி, கூறுவாராயினர். (எ-று) மற்று - இக்கு - அசைகள்.

சுரேசி - இந்திரன். வரைதல் - நீண்டு, இத்தீமை இன்னதனால் நீங்கும் எனத்துணிதலின் மேற்று. (௫௬)

இகழ்கின்ற சாப மிதுகன்ம பூமி யினிலன்றி யெங்கு மொழியா
திகழ்கின்ற வீரை புடைசூழ்நி லத்தி னரவாய்த்த மாலம் விரவித்
திகழ்கின்ற நிம்ப மணிமீன வன்ப திமிக்கி லங்கி யெவரும்
புகழ்கின்ற கூடல் வடபாலின் வைய்யை புணர்கின்ற கூல மதன்வாய்.

(இ-ள்) யாவரும் அவமதித்தற்கேதுவாகிய, இச்சாபமானது, கன்மபூமியாகிய பூவுலகத்திலல்லாமல், வேறெவ்விடங்களினும் நீங்காது. (ஆதலால்) சகரர்களால் வெட்டப்பட்ட சமுத்திரம் புறஞ்சூழப்பெற்ற இப்பூமியில் அரம்போன்ற வாயினையுடைய இலைகள் பொருந்தி விளங்குகின்ற, வேப்பமாலையைத்தரித்த அழகிய பாண்டியனுடைய நாட்டில், மிகப்பிரகாசமுள்ளதாய், எல்லவரும் துதிக்கின்ற நான்மாடக்கூடல் என்னும் மதுராபுரிக்கு, உத்தரதிசையிலேயுள்ள வைகைநதியைச்சார்ந்த கரையினிடத்து, (எ-று)

அகழ்கின்ற என்பது காலமயக்கம்.

கூலமதன்வாய் நந்திராமகர்மல்கும் எனக்கூட்டுக. (௫௭)

விடைநந்தி நாமு நகர்தாகன் விளங்கி மிகமல்கு மந்த நகரி
னிடைநந்தி யான னிறைதேவர் தேவ னிறைவன்பு ராண புருடன்
கடைநந்தி னீடு குழையண்ண லாதி கயிலாய வாணன் மழுவாட்
படைநந்தி நாத னிமவான்ம டந்தை பதிநீல கேச னுறையும்.

(இ-ள்) இடபபுரமானது மிகப்பிரகாசித்து நிலைபெறும், அத்தலத்தில், நமது தியானத்தின் நிலைபெற்றவரும், நிறைந்த தேவர்களுக்கெல்லாம் மூதாதிவரும், எப்பொருட்கு மிறைவரும், முன்னைப்பழம் பொருட்கு

முன்னைப்பழம் பொருளும், சங்கிற்கடைந்த நீண்ட குண்டலத்தை யணிந்த தலைவரும், முதல்வரும், திருக்கைலாய மலையிலெழுந்தருளி விளங்குபவரும், ஒளிபொருந்திய மழுவாயுதத்தைத்தரித்த நந்திதேவருக்கு முதல்வரும், உமாதேவியினது நாயகரும், ஆகிய திருவாப்புடையீசர் எழுந்தருளியிருப்பார். (எ-று)

விடைநந்தி = ஒருபொருட்பன்மொழி. (ருஅ)

உயர்கிலேசு ஞாறைகோயி லின்று மொருசாய கஞ்செ லளி
விற், செயனீடெ ஞறு திசையூடு நந்தி திருநாம வாவி யுளதவ், வியன்
னீரின் மூழ்கி யொழியாத சாப வினைபாறு மென்ன விடைகொண்,
டயல்சூழு மும்ப ருடனேச மற்ப்பு மகலாது சூழ நடவா.

(இ-ள்) மேன்மைபெற்ற திருவாப்புடையீசர் தங்கியருளும், ஆலயத்தினின்றும், தென்பக்கத்தில் ஒருகணைபோய் விழுந்தூரத்தில், சிறப்பதொழிலமைந்த நந்திதீர்த்தம் என்று ஒன்றிருக்கின்றது. மேன்மைபெற்ற அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால், நீங்காத வினைகாரணமாக நேர்ந்த இச்சாபம் நீங்கு மென்றருளிச்செய்ய, அவ்வாசிரியரிடத்தி லனுமதிபெற்றுக்கொண்டு, தன்னைப்புடைசூழ்ந்துவரும், தேவர்களுடனே, நாணமுநீங்காது சூழ்ந்துவர நடந்து, (எ-று) (ருகூ)

தென்பால்வி ளங்கு தமிழ்நாட்டு யர்ந்த திருவால வாயின் மருவி
நன்பார்பு கழ்ந்த திருநந்தி நாம நகர்மேவி யேற்று மடுநீ
ரன்பால்வ ழாத சங்கற்ப மோதி யரவென்று மூழ்கி யுடன்மேல்
வன்பால்வி ளைந்த பகமப்ப குத்தின் மலரச்ச ஞுகி மகிழா.

(இ-ள்) தென்றிசையில் விளங்கும், தமிழ்நாட்டில் மேம்பட்ட, திருவாலவாயென்னும் மதுரைப்பதியைச்சேர்ந்து, நன்மையான இவ்வுலகத்தாரால் புகழப்பெற்ற, அழகிய இடப்புரம் என்னுந் தலத்தையடைந்து, அன்பினால் வழுப்படாத சங்கற்பஞ்சொல்லி, ஹர ஹர என்றுச்சரித்து, இடபதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, சரீரத்தின்மேல் தனது அக்கிரமத்தால் உண்டாகிய பெண்குறிகள்யாவுங், கண்களைப்போலத் தோன்றக்கண்டு, இந்திரன் மனமகிழ்ந்து, (எ-று) (சுO)

குரவங்க மழ்ந்த குழன்மங்கை கொங்கை குழைபக்கு நைந்து
தழுவும், பரமன்சி வந்த பவளம்ப ழித்த பரிசொத்த மேனி யழகு



னரவம்பு னைந்த சரணார விந்த னகிலாக மஞ்சொ லிறைவன், புர
பங்க னெங்கள் சிவகிலேசு ஞுறைகோயில் சென்று புகுதா.

(இ-ள்) பரிமளமிக்க குரவங்கமழ் குழலம்மையினது, தனங்கள் இளரும்படி மனமுருகித், தழுவுகின்ற மேலானவரும், சிவப்பு நிறத்தையுடைய பவளத்தை யிழித்ததன்மை யமைந்த திருமேனியையுடைய சுந்தரரும், அரவச்சிலம்பை யணிந்த திருவடித்தாமரைகளையுடையவரும், சகல ஆகமங்களும் புகழ்ந்து பேசும் தலைவரும், திரிபுரங்களை யழித்தவருமாகிய, எமது மங்கல சொரூபராகிய திருவாப்புடையீசர் வதிந்தருளும் ஆலயத்திற்போய்ச்சேர்ந்து, (எ-று) (சுக)

திருமுன்ப ணிந்து வலம்வந்தெ னன்னை திருமேனி கண்டு
வியவா, விருகண்க ளன்றி விழிபாயி ரங்க ளின்றெய்த வந்த
பயனீ, தருமந்த மேன்மை யெனநின்று கூறி யணியாப்ப னூரு
ளமலன், பொருமந்த காரி சரணங்க டாழ்ந்து பூசிப்ப தன்னி
னிறைவான்.

(இ-ள்) சந்நிதானத்தில் நமஸ்கரித்து பிரதக்ஷிணஞ் செய்து, நமது பெருமையிற் சிறந்த திருவாப்புடையீசர் திருமேனியை நோக்கிப்புகழ்ந்து, இயல்பாகவுள்ள இரண்டு கண்களேயல்லாமல் ஆயிரங்கண்களையிப்போதடையப்பெற்றதனால், வந்த பிரயோசனம், அருமருந்தன்னமேன்மையையுடைய இக்காக்ஷியேயாம், என்று எதிர்நின்று துதித்து, அழகிய திருவாப்பனூரில் எழுந்தருளி விளங்கும் மலரகிதரும், யாவரையும் வருத்திய அந்தகாசுரனைச் சங்கரித்தவருமாகிய திருவாப்புடையீசருடைய திருவடிகளிலே நமஸ்காரஞ் செய்து, அருச்சிப்பதைச்சிந்தித்து முயல்வானாயினன். (எ-று)

அருமருந்தன்ன என்பது அருமந்த எனக்குறைந்து நின்றது. அருமருந்து-அமுதம்.

அக்காக்ஷியை அமுதமென்றது பிருதத்தையொழித்து முத்தியையளிப்பது பற்றி என்க. (சுஉ)

வானின்று வந்த நதிநீர்பொ ருடை மணியார மாலை கடவு
ளானின்ற வைந்து கனிதூப தீப மமுதாதி கொண்டு சுரர்தங்
கோனின்று பூசைவிதியாற்செய்துன்மை குறையாதவன்பின்வடிவாய்
நாவின்று வேத மொழியாலி ரங்கி நயனங்க ளூழ்ந்து பகர்வான்.

(இ-ள்) தேவலோகத்தினின்றும் வந்த தேவகங்கையாகிய திருமஞ்சனம், பீதாம்பரம், இரத்தினமாலைகள், பூமாலைகள், தெய்வத்தன்மை பொருந்திய காமதேனுவளித்த பஞ்சகௌவியம், பழவர்க்கங்கள், தூபம், தீபம், திருவமுது முதலிய உபகரணங்களைக்கொண்டு தேவேந்திரன் நின்று கொண்டு சிவபூசையைச் சிவாகமப்படி நடத்தி, குன்றாத உண்மையன்பின் வடிவமேயாகி, மனம் இளகிக்கண்ணீர் பொழிந்து தன்னுடைய நாவில் நிலைபெற்ற வேதவாக்கியங்களால் துதிப்பான். (எ-று) (சங)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பூத்த மலர்ச்சொருக்கும் பிறைக்கீற்றும் திலகமும்வெண் ணீறுந் தோடுந், தார்பூத்த மணிக்குழையுங் கிள்ளையுஞ்சூ லமுந்துகி லுஞ் சருமயாப்பும், பார்பூத்த சிற்றுதரப் பசங்கொடிபா கமுந்த னது பாக முங்கொண், டேர்பூத்த திருவாப்ப னூருடைய தனிமுதனின் னிருதாள் போற்றி.

(இ-ள்) சிறப்புமிக்க பூவணியையும், பிளக்கப்பட்ட சந்திரனையும், பொட்டையும், திருவெண்ணீற்றையும், ஓலையையும், அரும்புபோல மலர்ந்துள்ள இரத்தினக்குண்டலத்தையும், கிளிப்பிள்ளையையும், சூலாயுதத்தையும், பட்டுவஸ்திரத்தையும், புலித்தோலுடையையும், சராசரப்பிரபஞ்சங்களையீன்ற, சிறியவயிற்றினையுடைய பசியகொடிபோன்ற, உமாதேவியாரது பாகத்திலும், தேவரீருடைய பாகத்திலும் முறையே கொண்டு, அழகு பொருந்திய திருவாப்பனூரையிடமாகவுடைய ஒப்பற்ற முழுமுதற்பொருளே, தேவரீருடைய இரண்டு திருவடிகளுந் துதிக்கப்படுவன. (எ-று)

மலர்ச்சொருக்கும், திலகமும், தோடும், கிள்ளையும், துகிலும், அம்பிகை பாகத்திற்கும், பிறைக்கீற்றும், வெண்ணீறும், மணிக்குழையும், சூலமும், சருமயாப்பும், பெருமான் பாகத்திற்கும் கொள்க.

போற்றி-போற்றப்படுவன, வணக்கமும் ஆம். (சச)

காரணஞா னத்தருவே யுபநிடதம் பழுத்தமிழுங் கனியே யேத்து
நாரணஞா னனளவா வியோமநிரா மயபரமா னந்தத் தேனே
பூரணசோ திச்சுடரே நிரதிசயம் விளைமூலப் பொருளே போக்கும்
பாரணகா ளத்தமுதே யாப்பனூ ரமரேசநின் பாதம் போற்றி.

(இ-ள்) எவைக்கும் மூலமாகிய ஞானவிருக்ஷமே, உபநிடதங்களின் பழுக்கப்பெற்ற வெளியே சொரிகின்ற பழமே, துதிசெய்கின்ற விட்டுணு



மூர்த்தியாலும், பிரமதேவராலும் அளந்தறியக்கூடாத ஆகாசமே, நோயில்லாதவரே, பிரமானந்தமாகிய தேனே, வியாபித்தகாந்தியையுடைய ஒளியே, நிரதிசயானந்தமானது உண்டாகின்ற காரணப்பொருளே, எங்கும் பரவிய விஷத்தைத் திருவமுதாகக் கொண்டருளிய அமுதமே, திருவாப்புடையீசரே, தேவரீருடைய திருவடிகள் அடியேனால் போற்றப்படுவன. (எ-று)

பாரணம்-உண்ணல். காளம்-விஷம்.

சகலஞானங்களும் உதித்தற்கு மூலமென்பார் "ஞானகாரணத்தரு" என்றும், உபநிடதங்களால் பிரதிபாதிக்கப்படும் பழையோன் என்பார் "உபநிடதம் பழுத்தமிழுங்கனி" என்றும், எத்தகையராலும் எவ்வகைப் பிரமாணங்களாலும் அளவிடற்கரிய சிதாகாசவடிவர் என்பார் "நாரணஞானனளவா வியோம" என்றும், அநாதிமலமுத்தர் என்பார் "நிராமய" என்றும், எவற்றினும் மேம்பட்டு திகரின்றி இனிப்பவரென்பார் "பரமானந்தத்தேன்" என்றும், அகண்டமாய் சுயஞ்சோதியாய் விளங்குபவர் என்பார் "பூரணசோதிச்சுடர்" என்றும், இத்தகையதென வியத்தற்கரிய விம்மிதமுடைய காரணமாவதென்பார் "நிரதிசயம் விளை மூலப்பொருள்" என்றும், நிக்கிரகாநிக்கிரககர்த்தர் என்பார் "பாரணகாளத்தமுது" என்றும் கூறினார். ஞானவிருக்ஷத்தின் உபநிடதச்சாகைகளின் கனியெனினும் பொருந்தும். (சரு)

இனையவகை துதித்திறைஞ்சி யருள்பெற்று னந்தவெள்ளத் திழிந்தங் கேறி, நனையமலர்த் தருமணியான் வேண்டுமுப கரணமெலா நல்க வீக்கி, வனைகழலா கண்டலனைப் புடையவர்க்குத் தேர்விழா வழாது செய்வா, னனையவரா னூர்திமதி யவனுடனி னங்குராற் பணமுஞற்றி.

(இ-ள்) இவ்விதமாகத் தோத்திரஞ்செய்து வணங்கித் திருவாப்புடையீசர் திருவருளையடைந்து, பேரானந்தப் பெருவெள்ளத்திலமிழ்ந்தி, அதினின்று மேலேயேறித், தேன்பொருந்திய பூக்களையுடைய கற்பகதருவும், சிந்தாமணியும், காமதேனுவும் ஆகிய இவைகள் பூசைக்கு வேண்டிய பொருள்களனைத்தையுங் கொடுக்க, அலங்கரித்துக்கட்டிய வீரக்கழலையுடைய தேவேந்திரன் திருவாப்புடையீசருக்கு இரதோற்சவம் முதலியவிழாவை வழுவின்றிச் செய்தற்பொருட்டு, அச்சிவபெருமானது வாகனமாகிய இடபத்தினது மாசமாகிய வைகாசி மாதத்தில், அவரது தினமாகிய திருவாதிரை நக்ஷத்திரத்தில் முதல் அங்குராற்பணஞ்செய்து. (எ-று) (சசு)

திருப்புணர்த மூரிவிடைக் கொடியேற்றிச் சேர்திராட் டேர்க டாத்திக், குருப்புணர்த நாளெலாம் விசாகத்திற் றிருத்தவிழாக் குறையா தாற்றி, விருப்புணர்த னகத்திருந்து விளையுவகைப் பெரும்பெருக்கின் வெள்ளத் தாழ்ந்து, மருப்புணர்கொன் றையன்மலர்த்தாட் புணைபிடித்துக் கரையேறி வானுற் றான்.

(இ-ள்) சிறப்புவாய்ந்த வலிய இடபக்கொடியை யாரோகணஞ்செய்து, சுவாதி நக்ஷத்திரத்தில் தேரோட்டுவித்துக், குருவாரங் கூடிய விசாக நக்ஷத்திரத்தில் தீர்த்தங்கொடுத்தலாகிய உற்சவத்தையும் தவறாது நடத்தி, விருப்பத்தைநாடிய தன் மனத்தினின்றும் விளைகின்ற சந்தோஷமென்னும் பெருக்கையுடைய வெள்ளத்தில் அமிழ்ந்தி, வாசனை பொருந்திய கொன்றைமாலையைத்தரித்த திருவாப்புடையீசரது திருவடித்தாமரைகளாகிய தெப்பத்தைப்பற்றி உவகை வெள்ளத்தினின்றும் எறித் தனது தேவலோகத்தைக் சேர்ந்தான். (எ-று)

குருப்புணர்தல்நாள்-குருசம்பந்தித்தலையுடைய தினம், அது குருவாரம். (௪௭)

அரசுரிமை புரிசுதன்மைப் பெயர்மணிமண் டபத்தரசாரி யாசனத்திற், பரசுமிமை யவர்வணங்கப் புலோமசைப்பெண் புடையிருப்பப் பசும்பொன் வான, முரசுகடந் ததிரவை முலகளித்தா னிடைபுர மூர்த்தி பாதங், கருதுதல்சற் றகன்றொழிபான் கண்கொடுத்த கடவுளையார் கருதா ரம்மா.

(இ-ள்) அரசுரிமையை நடாத்துதற்குரிய சுதன்மையென்னும் பெயரையுடைய, இரத்தின மண்டபத்தின்கண், சிங்காதனத்தில் யாவராலும் புகழப்படுகின்ற தேவர்கள் தன்னைப்பணியவும், புலோமசை என்னும் தன் மனைவி பக்கத்திலிருக்கவும், பசிய பொன்மயமாகிய விண்ணுலகத்துள்ள வாத்தியங்களெல்லாம் முழங்கவும், இருந்து தேவலோகத்தைக்காத்தனன். இடப்புரேசரது திருவடிகளைத் தியானித்தலை, ஒருசிறிதும் நீங்கிலன். தனக்குக்கண்கொடுத்த தெய்வத்தை யார்தான் நினையார்கள். (எ-று)

அம்மா - அசை

சுதன்மை = இந்திரனது சபாமண்டபம்.

இவ்விந்திரன் தனக்கு ஆயிரங்கண் கொடுத்தனராகலின் இத்திருவாப்புடையீசர் தியானம் மறக்கவறாயினன் என்பது கருத்து. (௪௮)



எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாசங் கூர்தரு பாட்கள னீடரி பாவஞ் சாவமு டிக்குறு காதைதர், னேசங் கூர்மறை யேய்ப்பன வாமிதி னீதி தேர்ந்துரை கேட்பவ ரோதினோர், தேசங் கூர்புவி மேற்புகழ் சேர்தரு சீரும் போகமும் வாய்ப்புற வாழ்வரோர், நாசங் கூர்தலி லாப்பர னாருறு நாலென் றூர்சிவ மாகதி சேர்வரால்.

(இ-ள்) பாசபந்தமிக்க பாட்களனென்னும் பிராமணன் செய்தபாவத்தையும், மேம்பட்ட தேவேந்திரனது சாபத்தையும், நிவிர்த்திசெய்த இச்சரித்திரம், அன்புமிகுதற்கேதுவாகிய வேதத்தையொப்பனவாம். இதனது நிலைமையைத் தெளிந்து, சொல்லக்கேட்பவர்களும், சொல்பவர்களும் பலநாடுகளையுடைய இப்பூமியின்கண், புகழ்திரண்ட சிறப்புகளும், பலபோகங்களும் சித்திக்க வாழ்வார்கள். என்றும் அழிவில்லாத, திருவாப்புடையீசரால் அருளப்படுகின்ற, பெருமைபெற்ற நால்வகையெனப்பட்டு விளங்குகின்ற, சிவபதவிகளை அடைவார்கள். (எ-று) தான் ஆல் அசைகள்.

நாலென்றூர் என்பதற்கு நாலாவதுகதி என நிலைபெற்ற சிவசாயுச்சியமெனினும் பொருந்தும். (௪௯)

பாட்களச்சருக்கம்முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௪0௯.

---

# குபேரச்சருக்கம்.

---

## கலிவிருத்தம்.

கனிமா தவர்தந் தவமே சிவமார்
முனிசூ தபுரா ணிகனே முடிமேற்
பனிமா மதியார் பதிகொன் றைவனத்
தினிதா கியமான் மியமோ தினையால்.

(இ-ள்) ஒப்பற்ற மிக்க தவத்தையுடைய முனிவர்களது, தவப்பிரயோசனமாயுள்ளவரே, சிவம் குடிகொண்ட சூதபுராணிகமுனிவரே, சடைமுடியின் மேற்குளிர்ந்த பெருமைபெற்ற, சந்திரன்குடிகொண்ட திருவாப்புடையீசரது, இனிமைவாய்ந்த, கொன்றைவன க்ஷேத்திரத்தினது, சரித்திரத்தைத் திருவாய்மலர்ந்தருளினீர். (எ-று) ஆல் - அசை. (௧)

உளமுஞ் செவியு முருகிப் பருகிப்
புளகந் தரநீ புகலும் பரிசோ
ளவின் றதனு லமைகின் றிலதா
மேளக்கும் படிநெஞ் செழுமா சையரோ.

(இ-ள்) உள்ளமுங் காதுகளும், கரைந்து உண்டு, உரோமாஞ்சங் கொள்ள, தேவரீர் திருவாய்மலர்ந்தருளும், தன்மைக்கு, ஓர் எல்லையில்லை. அதனால் மனமுருகும் வண்ணம் எழுகின்ற ஆசையானது கேட்டலமையும் என்னும் அமைதிபெறுகின்றதில்லை. (எ-று) ஆல், அரோ - அசைகள். மேலுமேலுங் கேட்டலில் விருப்பமெழுகின்ற தென்பது கருத்து. ()

இன்னுங் கதையொன் றிசையென் றனுமே
அன்னும் ப்வமோர் சனசோ தனையாங்
தென்னங் திசைநந் திபுரச் சரிதம்
பன்னுந் தகையன் றெனினும் பகர்வேன்.

(இ-ள்) இன்னமும் ஒரு சரித்திரத்தை யருளிச்செய்யவேண்டும் எனப்பிரார்த்தித்த வளவில், நெருங்கிய பிறவித்துன்பமானது தீர்தற்குச் சாதியாயுள்ள, அழகிய தெக்ஷிணதிக்கிலுள்ள இடபபுரத்தினது சரிதம், அளவிட்டுச்சொல்லுந் தகுதியுடைய தன்றேனும், தெரிந்த அளவு சொல்லுகிறேன் கேட்பீர்களாக. (எ-று) ஏ - அசை. (ந)

மேனு ளொருமா தவன்மேன் மையுளோன்
ஞானு லயமா கியநான் மறையோன்
றேனர் கமலத் திசைநான் முகனர்
தானு தரநீ டனையன் றனையன்.

(இ-ள்) முற்காலத்திலே ஒப்பற்ற பெரிய தவத்தினையுடையவரும், சிரேஷ்டமானவரும், ஞானத்திற் கிருப்பிடமாகிய நான்குவேதங்களை யுணர்ந்தவரும், தேன்பொருந்திய தாமரையில் வீற்றிருக்கின்ற சதுர்முகங்களைக் கொண்ட பிரமதேவருடைய அன்புமிகுந்த புத்திரருக்குப்புத்திரரும். (எ-று) (ச)
தான் - அசை.

## கலி நிலைத்துறை.

குற்ற மிக்கனவம் புலச்செயல் கடிந்துமுக் குறும்புஞ்
செற்ற நற்றவர் சேகரன் றீவினைத் திறம்போ



யற்ற விச்சிர வசுவென விளங்கபி தானம்
பெற்ற வுத்தமன் குலத்தினுந் தவத்தினும் பெரியோன்.

(இ-ள்) குற்றமிகுந்த ஐம்புலன்களின் செய்கைகளை நீக்கி, காமம், வெகுளி, மயக்கமென்னும் முக்குற்றங்களையுங் கெடுத்த, நல்ல தபசிகளுக்கு முடிபோன்றவரும், தீவினைகளின் வகைகள் நீங்கியறவொழிந்த விச்சிரவசுவென்று விளங்கிய பெயர்பெற்ற சிரேட்டரும், குலத்தினாலுந், தவத்தினாலுஞ் சிறந்தவருமாகிய ஒருவரிருந்தார். (எ-று) (ரு)

அனைய வன்விடை யவன்மகிழ் நெடுந்தவ மாற்றி
வினைய நல்வட திசையொடு விபுலமும் விளங்க
நினையின் மாதவக் கொழுந்தென நிகழமுன் பெற்ற
தனையன் புண்ணிய சேனனென் றுயர்தனிப் பெயரோன்.

(இ-ள்) அவர் இடபவாகனத்தையுடைய சிவபெருமான், திருவுளமகிழ்தக்க, பெருந்தவங்களைச்செய்து, பாபநீங்கிய வடக்குத்திசையோடு, மற்றும் பூமியும், விளங்கும்படி, நினைக்குமிடத்துப் பெரிய தவத்தின் கொழுந்தென்று விளங்க முன்னே பெற்றெடுத்த, புத்திரர் புண்ணியசேனன் என்று சொல்லும்படி, உயர்ந்த தனித்நாமத்தையுடையவர். (எ-று)

வினையகல் வடதிசை - என்றது புண்ணியபூமி என்பது விளக்குதற்கு. இவர் தவஞ்செய்யப்பெற்றமையால், மற்றைத்திசையினும் வடதிசை விளக்கமுடைய தென்பார் வேறுபிரித்து வடதிசையொடு விபுலமும் விளங்க என்றார். (சு)

பால மைப்பரு வந்தொடுந் தாதியம் பரமன்
மேல மைப்புறுஞ் சிவபத்தி மிக்கெழ விரும்பி
நீல மைக்களத் தரனடி யருச்சனை நியமஞ்
சால மைத்துளி விழிவழி வரச்செய்து சார்நாள்.

(இ-ள்) அவர் இளமைப்பருவமுதற்கொண்டு, முதற்கடவுளாகிய சிவபெருமானிடத்தில் பதிவித்த சிவபக்தி யதிகரிக்க விருப்புற்று, காளகண்டத்தையுடைய அச்சிவபெருமானது திருவடிகளைப் பூசை செய்யும் நியதிகிரம, அன்புமேலீட்டால் மைதீற்றிய கண்களின்வழி நீர் சொரியும்படி செய்து, வசிக்குநாளில். (எ-று).

மேல் - ஏழனுருபு. பாலமைப் பருவமுடையவராகலின் மைதீற்றிய கண்களெனப்பட்டன. (எ).

வரையி லெந்தைத னன்புமென் னையனும் வளர்ந்து
புரையி லெவ்வனந் தழுவவெவ் வனங்களும் புகுந்து
கரையின் மாதவர்த் தொழுதரன் றனங்கள் காணூஉத்
தரையி னுள்ள தீர்த்தங்கள் யாவுஞ்சஞ் சரித்து.

(இ-ள்) திருக்கைலாயமலையில் வீற்றிருந்தருளும், எமது கடவுளிடத்து அன்பும், எமக்குத் தலைவராகிய புண்ணியசேனரும், நாள்தோறும், விருத்தியாகிக், குற்றமற்ற யௌவன பருவத்தையடைய, எக்காடுகளிலுஞ் சென்று, அங்கங்கேயுள்ள அளவில்லாத பெரிய தவசிரேஷ்டர்களைக்கண்டு வணங்கிச் சிவபெருமான் வதிந்தருளும், தலங்களையுந் தெரிசனஞ்செய்து, இவ்வுலகினுள்ள புண்ணிய தீர்த்தங்களெல்லாஞ் சென்று ஸ்நானஞ்செய்து, (எ-று)

ஆரு மின்சுவை யாற்புல வர்கண்மதித் தருந்தச்
சாருஞ் செம்பொரு ளமுதமுள் ளுறைதந்து நாவா
லூருஞ் செந்தமிழ்க் கடலிருந் தருந்தவ முஞற்றப்
பாருந் திண்பெருந் துறக்கமும் புகழ்மலை படர்ந்தான்.

(இ-ள்) நிரம்பிய இனிய மதுரத்தால் வித்துவான்கள் நன்குபாராட்டி யுண்ணும்படி, செறிந்த செம்பொருள்களாகிய அமிர்தமானது உள்ளே தங்கப்பெற்று, நாவினிடமாக ஊர்ந்து வருகின்ற செவ்விய, தமிழ்க்கடலாகிய அகத்தியமுனிவர் வீற்றிருந்து, அருந்தவஞ்செய்ய, அதனால் இம்மண்ணுலகும் விண்ணுலகும், புகழ்ப்பெற்ற பொதிகாசலத்தைப் போய்ச்சேர்ந்தார். (எ-று)

தேவர்கள் கடைந்து அருந்தும்படி நிறைந்த செவ்விய பலபொருள்களும், அமுதமுங்குடிகொள்ளப்பெற்று, நாவாய் ஊர்தலும் வாய்ந்த பாற்கடல் போல இவ்வகத்திய முனிவரும் புலவர்கள் பாராட்டியுண்ணும்படி, செவ்வியபொருட்டிறங்களாகிய அமுதமும் பலஉள்ளுறைகளும் தோற்றுவித்து நாவின்கண்ணே தவழ்தலைச்செய்யும் செந்தமிழ்க்கிருப்பிடமாகலின் "செந்தமிழ்க் கடல்" என்றார்.

புலவர்=தேவர், அறிஞர். மதித்தல்=கடைதல், சீர்தூக்கல்.

அருந்தல்=அனுபவித்தல், உண்ணல்.

செம்பொருள்=காமதேனு கற்பகவிருக்ஷ முதலியவை, அகமும் புறமுமாகப் செய்யுளிலமைந்த பொருள்கள். (௰)

நாவாய்=மரக்கலம், நாவின்கண்.



இமவ னரைப்பிடி வதுவைநா ளெமையொப்பாய் தென்பார்
சமநி றுத்தெனக் குறுமுனிக் கிறைவிடை தரப்போந்
தமர்த லிற்படர் விமலமஞ் சினம்புகைத் தாங்கு
நிமிர்த லிற்பொதி யமுமொரு கயிலைபோ னின்ற.

(இ-ள்) எப்பொருட்கு மிறைவராகிய சிவபெருமான் அகத்தியமுனிவருக்கு, பனிமலையிலுதித்த பெண்யானைபோன்ற உமாதேவியாரைத் திருமணம் புரிந்த காலத்தில், நமக்குச் சமமானவனே! தென்பூமியைச் சமப்படுத்துவாயென்று கட்டளையிட்டருளச் சென்று வீற்றிருந்தமையாலும், சஞ்சரிக்கின்ற வெள்ளை மேகங்கள் கவிந்தாற்போன்று நெருங்குதலாலும், பொதியமலையும் ஒப்பற்ற திருக்கைலாசமலை போலவே நிலைபெற்றது. (எ-று),

நின்றதென்பது ஈறுகுறைந்தது. ஒருமையிற் பன்மை மயக்கமுமாம்.

அவ்வ ரைப்புறத் தருச்சுனந் தேக்ககி லார
மொய்வி ரைத்தளி ராம்பிரம் வருக்கைவின் முகிறோய்
வெவ்வ ரைக்குல மிலவங்க மேலமென் கொடிகள்
செவ்வி மிக்கநன் கறிக்கொடி மலர்க்கொடி செறிவ.

(இ-ள்) அப்பொதியமலைப் பக்கங்களில், மருதமரங்களும், தேக்கமரங்களும், அகில்மரங்களும், சந்தனமரங்களும், நெருங்கிய வாசனைபொருந்திய துளிர்களையுடைய மாமரங்களும், பலாமரங்களும், ஆகாயத்திற் சஞ்சரிக்கும் மேகங்கள் படியப்பெற்ற வெவ்விய மூங்கில்களும், இலவங்கம், ஏலம் என்கின்ற இவற்றின் மெல்லிய கொடிகளும், சிறப்புமிக்க நல்லமிளகுக்கொடிகளும், பூங்கொடிகளும் நெருங்குவனவாம். (எ-று),

வரைப்புறத்துச் செறிவ என இயையும். (கக)

மேன்மை பெற்றவர் தம்புடை யாவர்மே வினுந்தம்
பான்மை யிற்செயும் பரிசெனப் படர்பணை நிவந்து
சூன்மை யுற்றபன் மரங்களுந் தங்குணந் துவன்றக்
கான்ம ணப்பெருஞ் சந்தனம் பொதுளிய கடிக்கா.

(இ-ள்) உயர்ந்தோர் தம்பக்கலில், எவரடையினும், தமது தன்மையைப்போற் செய்யும் இயல்புபோலப், பரவிய கிளைகள் ஓங்கிச், சூற்கொண்ட மேகங்கள் தவழப்பெற்ற, பலவேறு விருக்ஷங்களும், தம்முடைய நற்குணம் பொருந்தும்படி வாசனையை வீசுகின்ற பெரிய சந்தனமரங்கள் தழையப்பெற்றன விளக்கம் பெற்ற சோலைகள். (எ-று)

மேன்மையுற்றவர் தம்மைச்சார்ந்தவரையும் தம்மைப்போல்பவராக்கு தல்போலச் சந்தனமரங்களும் தம்முடைய வாசனைகளையே வனைமரங்களும் உடையனவாகும்படி மணம் வீசிப் பொருந்தும் என்பது கருத்து. (கஉ)

முதிர்ந்த குற்பிடி நசையறக் கற்பக முறித்தங்
கதிர்ந்த மால்களி றளிப்பன புழைக்கையி னகல்வான்
வதிந்த வெண்கயம் பசுந்தரு நறுந்தழை மறுத்தாங்
கெதிர்ந்த சந்தன திளந்தளிர் முறிப்பன நீட்டி.

(இ-ள்) பெருமுழக்கங்கொண்ட மதம்வாய்ந்த ஆண்யானைகள், தமது துதிக்கைகளால் தேவலோகத்துள்ள கற்பகதருவின் தளிர்களையொடித்துப் பூர்ண கர்ப்பமுள்ள பெண்யானையின தாசைதீரக் கொடுப்பன. விசாலமான தேவலோகத்திலுள்ள வெள்ளையானை, அங்குள்ள பசிய கற்பக விருக்ஷத் தினது நறிய தழைகளை வெறுத்து, அவ்விடத்தில் எதிரே காணப்பட்ட சந்தனமரத்தினிளமையான இலைகளிலுள்ள கொழுந்துகளை விரும்பித் துதிக்கையை நீட்டி முறிப்பது. (எ-று) அங்கு - அசை.

அரியன கிடைப்பினும் பெற்றவற்றில் விருப்பம் நீங்காப், பெறுதனவற்றை அவாவுதல் உயிர்கட்கியல்பாகலின், இவ்வுலகயானை விண்ணுலகத்துள்ள கற்பக நறுந் தளிரையும், அவ்வுலக வெள்ளையானை இவ்வுலகச் சந்தனத் தழையையும் அவாவின்றன என்பது கருத்து. (கங)

அலத்தக த்தளி ரடியர மாதர்புக் காடிச்
சலத்த வானதிக் கரைநின்று தங்குழ லீரம்
புலர்த்த வேட்டுவர் புனமெறி யகில்சுடும் புகைபோய்
நலத்த பூங்குழ லியன்மணம் விழுங்கிமே லாடும்.

(இ-ள்) செம்பஞ்சுக்குழம்பூட்டிய இளந்தளிர்போன்ற பாதங்களையுடைய தெய்வப்பெண்கள், நீரையுடைய தேவகங்கையிற்சென்று ஸ்நானஞ் செய்து, அதன் கரையில் நின்றுகொண்டு, தங்கள் கூந்தலிலுள்ள ஈரத்தை யுலர்த்த, (அச்சமயத்தில் இப்பொதிய மலையிலுள்ள) வேடர்கள் காடுகளிலுள்ள அகில் மரங்களை வெட்டிச் சுடுகின்ற புகையானது சென்று, அவ்வமாதர்களின் சிறந்த பூக்களை யணிந்த கூந்தலில் நிலைபெற்ற வாசனையைக் கீழ்ப்படுத்தித்தான் மேம்பட்டு மணக்கும். (எ-று) (கச)

படிவர் வேள்விவாய் நறைகளும் பன்மலர் மருவுங்
கடிவ ரையர மகளிர்தோ யருவிநீர்க் கடியு



மடிவில் பூனைநுபின் புழுகுநீஞ் சிபசந்தின் மணமு
நெடிய சாரலின் பரப்பெலாங் குமுகுமு நிகழும்.

(இ-ள்) முனிவர்கள் செய்கின்ற யாகத்திலுண்டாகும் வாசனையும் பலபூக்களின் வாசனையும், காவலைக்கொண்ட மலையில்வாழுந் தெய்வப்பெண்கள் ஸ்நானஞ்செய்கின்ற அருவியின்கணுண்டாகும் வாசனையும், கெடுதலில்லாத புனுகுப்பூனை, தன்னிடமுண்டாகும் புழுகைச் சந்தனமரங்களில் தேய்த்ததனாலுண்டாகும் பரிமளமும், நீண்ட அம்மலைச் சாரற்பக்கங்களினெல்லாம் குமுகுமுவென்று கமழ்ந்துகொண்டேயிருக்கும். (எ-று) (கரு)

இத்த கைத்தநல் வரைவளங் கண்டுகண் டேகிச்
சுத்த மெய்த்திரு வரையிடைச் சுருதிகண் முழங்க
முத்தி வைப்பென லாகியா ரமஞ்சூழ் முற்றுஞ்
சத்தி யத்தனி யுறைபுள்கண் டதனயல் சார.

(இ-ள்) இத்தன்மைத்தான நல்ல அம்மலையின், வளப்பங்களையெல்லாம், நோக்கி நோக்கிச்சென்று, பரிசுத்தமான வடிவத்தையுடைய சிறந்த அப்பொதியமலையின்கண் வேதங்கள் முழங்க, முத்திக்கு இடமெனப்பட்டதாகிச், சோலைகள் பக்கங்களிற் சூழ்ந்துள்ள, மெய்ம்மை குடிகொண்ட ஒப்பற்ற ஆச்சிரமத்தைக் கண்டு அதன்பக்கத்திலே செல்ல, (எ-று) (கசு)

மான மாமயிர்த் தொடக்குண்டு நிற்பவள் ளுகிராற்
கான வேங்கைக ளக்கிமற் றதனொடு கலக்குந்
தேனி லாமரு வியுளரிக் குருளைசென் றெழுகத்
தான மாப்பனைக் கரமடுத் தெடுக்குறுந் தழுவி.

(இ-ள்) கவரிமானனது தன்னுடைய உரோமஞ்சிக்கிக்கொண்டு நிற்க அதைப்பார்த்து, அதற்குப் பகையாயுள்ள காட்டிற்றிரியும் புலிகள் தமது கூரிய நகத்தினால் விடுவித்து, அக்கவரிமானோடு நட்புக்கொள்ளும். தேன் பொருந்திய அருவியில் சிங்கக்குட்டிகள் அகப்பட்டுச் சுழன்றோட, அதைக் கண்டு அதற்குப் பகையாகிய யானைகள் தங்கள் பகைமையை விட்டுப் பனைமரம்போன்ற துதிக்கைகளை நீட்டி அணைத்து எடுக்கும். (எ-று) (கஎ)

ஏனை மாக்களு மிவ்வகை பகைதவிர்ந் திருப்ப
தான வாச்சிர மத்திலுன் னுதல்விழி யகன்ற
ஞான மாச்சிவ னெமென விளங்கிநால் வேத
கான வாய்க்குட முனியவ ணிருப்பது கண்டான்.

(இ-ள்) மற்றைய மிருகங்களு மிங்ஙானே, சத்துருத்தன்மை நீங்கி வசிப்பதாகிய, அவ்வாச்சிரமத்தில் நெற்றிக்கண்ணொழிந்த பெருமை பொருந்திய ஞானசொரூபராகிய, சிவபெருமானே யாமென்று யாவருங் கூறும்படி பிரகாசித்து, நான்கு வேதங்களையும் அத்தியயனஞ்செய்யும் வாயினையுடைய அகத்தியமுனிவர் அங்கு எழுந்தருளியிருப்பதைப்பார்த்தார். (எ-று)

சிவபெருமானை நிகர்த்த சிறப்பினையுடையவரென்பார் "நுதல்விழி யகன்ற சிவன்" என்றார். (௬௮)

## எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சித்தமு ணெகிழக் கண்புனல் துளிப்பத் திருமுன்பு சென்றுதாழ்ந் தெழுந்து, முத்தமிழ் பழுத்த நான்மறைத் தருவே முதுதவக் கதிர்விடு சுடரே, சத்திய ஞானா னந்தமாக் கடலே தருமமெய்ப் பொருள்பிறந் தகமே, யித்தரு மலய வரைச்சிகா மணியே யெனத் துதித் தாடினின் றுரைப்பான்.

(இ-ள்) மனமானது உள்ளே குழையக் கண்கள் நீரைச்சொரிய அம்முனிவரது சந்நிதானத்தின் முன்சென்று, நமஸ்கரித்தெழுந்து நின்று, இயலிசை நாடகமென்னு மூன்று தமிழாகிய பழங்கள் பழுத்த, நான்குவேதங்கள் கிளைத்தெழுந்த ஓர் விருக்ஷமாயுள்ளவரே, முதிர்ந்த தவமாகிய கிரணங்களை வீசுகின்ற ஞான சூரியனே, சச்சிதானந்தசொருபமாகிய பெருமைபெற்ற சமுத்திரமே, தருமமென்னும் சத்தியப்பொருளுக்கு உற்பத்தி ஸ்தானமே, இந்தத் தகுதியுடைய பொதியமலைக்குச் சிரோரத்தினமானவரே என்று தோத்திரஞ்செய்து, ஆனந்தக்கூத்தாடி நின்றுகொண்டு, விண்ணப்பிப்பார். (எ-று) சத்தியம் - சத்து; ஞானம் - சித்து; சத்திய ஞானானந்தம் - சச்சிதானந்தம். (௬௯)

என்மனத் தெழுமோர் வேட்கையென் னெனின்யா னிருந்திசைப் பாலரோ டுறுகி, னன்னிதிக் கொருவ னாகவு மடியே னயந்தன னதற்கொரு வழிநீ, பன்னிடக் கடவ தெனவவன் மேற்கண் பரப்பிநான் முகன்மகன் மகன்சே, புன்னிதிப் பெயரி னுறற்குமு பாய முரைப்பலென் றுளத்தினுய்த் துரைப்பான்.

(இ-ள்) அடியேன் மனதிலோர் இச்சையுண்டாயின்றது. அஃதென்னவெனின், அடியேன் பெருமைபெற்ற திக்குப்பாலகர்களோடொருவனாகவும், கெடாத நல்ல செல்வத்திற்கொருவனேயாகவும் விரும்பினேன். அதற்குத் தேவரீர் ஒருமார்க்கம் அருளிச்செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க,



அப்புண்ணியசேனன்மீது கிருபாவீக்ஷணஞ்செய்து, பிரமதேவர் வழித்தோன்றலாகிய புண்ணியசேனனே! நீநினைத்தகாரியம் எளிதிற் கைகூடுவதாகிய ஒருபாயத்தைச் சொல்லுகின்றேனென்று, தமது திருவுளத்திலாராய்ந்து திருவாய் மலர்ந்தருளுவாராயினார். (எ-று)

பிரமதேவர் புதல்வர் புலஸ்தியர். இவர் புதல்வர் விச்சிரவா. இவர் புதல்வர் புண்ணியசேனராகலின் "நான்முகன் மகன் மகன்சேய்" என்றார்.

இப்பெரும் பொருப்பன் பதிநதி வடபா லிருக்கும்வெள் ளிடைப்புர மதனின், முப்பெரும் புவனம் பரவவாப் புடைய முழுமுதலுறைதருந் தெனசா, ரெப்பெரும் பவமுந் தொலைத்தவா வளிக்கு மேற்றுயர் பெயர்த்தட மொன்றுண், டப்பெருந் திருத்தம் படிந்ததன் மருங்கி லமர்ந்தினி தருந்தவம் புரியில்.

(இ-ள்) பெருமைபெற்ற இந்தப் பொதியமலையையுடைய பாண்டியனது, இராஜதானியாகிய மதுரைக்கும், வைகையாற்றிற்கும் வடபக்கத்திலிருக்கின்ற வெண்ணிறம்பெற்ற இடபுரத்தில், விசாலமான மூன்றுலகங்களும் புகழ, முழுமுதற்கடவுளாகிய திருவாப்புடையீசர் எழுந்தருளியிருப்பார். அதன் தென்பக்கத்தில் எவ்வகைப் பெரும்பாவங்களையும் நிவர்த்திசெய்து, விரும்பியவற்றைக் கொடுக்கின்ற மிகச்சிறந்த, நந்தி தீர்த்தம் ஒன்றிருக்கின்றது. அந்தப்பெரியதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அதன் பக்கத்தில் இருந்து, இனிதாக அரிய தவத்தைச் செய்தால், (எ-று) (௨௧)

திருவரு ளுருக்கொண் டணிகிளர் பவளச் செழுஞ்சடை யாப்புடை யமலன், வரும்வர மளிக்கு மிந்திரத் திருநேர் வளத்தினில் வைகுதி யென்னலில், விரைவினிற் படர்கென் றிசைக்கமுன் பணிந்து விடைகொடு பாவிவெற் பிழிந்து, பரனரு ளீர்ப்ப வயிச்சிரவணனுட் பரிவொடும் பதிகளுய்ச் சென்றான்.

(இ-ள்) திருவருளையே திருமேனியாகக்கொண்டு அழகு விளங்குகின்ற, பவளம் போன்ற செழிய சடையினையுடைய மலரகிதராகிய திருவாப்புடையீசர், எழுந்தருளிவருவர். நீ வேண்டிய வரங்களைக் கொடுத்தருளுவர். அதனால் இந்திர செல்வத்திற் கொத்த செல்வத்தோடு இருப்பாய். அச்செல்வத்தை விரும்பின், மிகத்துரிதமாய்ச்செல் என்று கட்டளையிட்டருள; வயிச்சிரவணன் எதிரே நமஸ்காரஞ்செய்து துதித்து, விடைபெற்றுக்கொண்டு, அப்பொதியமலையினின்றும் இறங்கிச் சிவபெருமானது திருவருள் முன்னே இழுத்துச்செல்ல, மனமகிழ்ச்சியுடன் வழிச்செல்வோனாகி நடந்தான். (எ-று)

படர்க என்று என்றபாலது, அகரந்தொக்கு, படர்சென்று எனநின்றது.

வைச்சிரவணன் என்பதற்கு விச்சிரவசுவின் புதல்வன் என்பது பொருள். (உஉ)

உள்ளில்வன் பவங்க ளொழிப்பதாய்க் காணி லுவந்தன யாவுநல்
குவதாய்த், தள்ளரும் புனித மாச்சிவ ராச தானியா யுத்தம தலமா
ய்க், கொள்ளுநன் கதிக்கொ ரேணியாய்க் கோதி னெடுந்தமிழ்க் குறு
முனி கூறும், புள்ளுறை கமல வாவிசூ ழிடவ புரத்தினில் விருப்பி
யுட் புகுந்தான்.

(இ-ள்) நினைக்கின் வலிய பாவங்களை யெல்லாம் போக்குவதாயும், பா
ர்க்கின் விருப்பினை பலவற்றையுங் கொடுப்பதாயும், நீக்கற்கரிய பரிசுத்தமான
பெருமைபெற்ற சிவபெருமான் வீற்றிருக் தாசபுரியுந் தானமாகியும், சிற
ந்த தலமாகியும், யாவரும் அடைகின்ற நல்லமோக்ஷமார்க்கத்திற்கு ஒப்பற்ற
ஏணியாகியும், குற்றமற்ற நெடிய தமிழாசிரியராகிய அகத்தியமுனிவர்
திருவாய் மலர்ந்தருளிய, பறவைகள் வசிக்கின்ற தாமரைத்தடாகங்கள் சூழ்
ந்த இடபபுரத்தில், காதலித்து உள்ளே பிரவேசித்தான். (எ-று) (உரு)

மலர்குடைந் தாடுந் தேனிறால் வாவி வதிந்துசங் கற்பநன் கியற்றி
நலனுற மூழ்கிக் கிலக நாம நாயகன் கோயில்சூழ்ந் திறைஞ்சிப்
பலனுறு பூசை விதிப்படி யாற்றிப் பசுமபெப் பாலினி திருந்து
குலவுகார் மாரி வருடநாட் காண்மேற் கொளநிறை நீரினுட் குளித்தும்

(இ-ள்) வண்டுகள் பூக்களைக்கிண்டி விளையாடுகின்ற இடபதீர்த்தத்
திற் றங்கிச் செவ்வையாகச் சங்கற்பஞ் செய்துகொண்டு, இஷ்டசித்தியின்
பொருட்டு ஸ்நானஞ்செய்து, திருவாப்புடையீசர் அமர்ந்தருளும், திருக்
கோயிலைப் பிரதக்ஷிணஞ் செய்து வணங்கி, மேலான பிரயோசனத்தைக்
கொடுக்கும் சிவபூசையைக் கிரமமாய் நடத்தி, அவ்விடபதீர்த்தத்தின் கரை
யில் சுகாதனத்திருந்து, விளங்குகின்ற மேகங்கள் மழையைப்பொழிகின்ற
கார்காலத்தில், தலைகீழாக நிறைந்த ஜலத்தில் மூழ்கின்றும், (எ-று)
இறால் - இடம். (உச)

வெயிற்சுடு வேனி லைவகை நெருப்பி னனந்தலை நின்றும்விழ்
பனிநாள், வயிற்குளிர்க் குடையூ தாடைநீத் திருந்தும் வள்ளுகிர்
மயிர்ச்சடை வளர்த்தும், தியக்குமைம் பொறியின் வாயில்க ளடைத்
துஞ் சிலபக லருந்தவ நடப்பக், குயிற்குல மருளுங் குரலவார் குழற்
பெண் கொடியொடும் பரன்வெளி வருமால்.



(இ-ள்) வெய்யிலானது சுடுகின்ற கோடைக்காலத்தில் பஞ்சாக்கினி
மத்தியில் நின்றுகொண்டும், பனி பொழிகின்ற காலத்தில், குளிருக்குத்தள
ர்ச்சி யடையாது வஸ்திரத்தை நீக்கியிருந்தும், கூரிய நகங்களையும் உரோமத்
தாலாகிய சடையையும் வளரச்செய்தும், கலக்கஞ் செய்கின்ற பஞ்சேந்திரி
யங்களின் வழிகளை விடயங்களிற் செல்லவொட்டாது தடுத்தும் இவ்வாறு
சிலகாலம் அருந்தவஞ்செய்துவர, குயிற்கூட்டங்களும் மயங்கத்தக்க வார்த்
தையையுடைய குரவங்கமழ் குழலம்மை யென்னும், தேவியுடன் திருவாப்
புடையீசர் பிரசன்னராக எழுந்தருளுவர். (எ-று) ஆல் - அசை. (உடு)

மின்பழுத் தமிழ்செஞ் சடைநறுங் கொழுந்தும் வெண்பிறைத்
தளிருமிவாளு முகமும், பொன்படைத் தனையமேனியுந் திருவெண்
பூதியும் புலியத ளுடையு,மன்பணிக் குழையு முபயமு மபய வரதமு
மிளிர்கழன் மலரு, மன்பனைப் புரிந்து தொடர்முழு நோக்கு மாகிவந்
தவனெதிர் நின்றான்.

(இ-ள்) பிரகாச முதிர்ந்து வெளிப்படுகின்ற, நல்ல சிவந்த சடைக்
கொழுந்தும், வெண்ணிறமுள்ள இளஞ்சந்திரனும், ஒளிபடைத்த திருமுக
மும், பொன்னுலமைந்தாலொத்த திருமேனியும், திருவெண்ணீறும், புலித்
தோலாகிய வஸ்திரமும், நிலைபெற்ற சர்ப்பக்குண்டலமும், அபயகரமும்,
வரதகரமும் மற்றையிருகரங்களும், விளங்குகின்ற திருவடித்தாமரைகளும்,
தம்மேலன்புடைய வைச்சிரவணனை விரும்பிச்செல்லும், பரிபூரணமான
பார்வையுங் கொண்டவராய், எழுந்தருளிவந்து அவன்முன்னே பிரசன்ன
மாயினர். (எ-று)

மேலுமேலுந் தளிர்க்குஞ் சடையென்பார் "சடைக்கொழுந்து" என்
றும், இளஞ்சந்திரனென்பார் "பிறைத்தளிர்" என்றுங் கூறினர். (உசு)

நின்றியா மகிழ்ந்தேம் பெருந்தவப் பிள்ளாய் நெடுந்தவ நீக்கியெ
ழுந் திருநீ, யென்றுவாய் மலர வுடனெழுந் தாடி யிருவிழி நீர்பரந்
திழியத், தன்றமை வருந்தி நாள்பல வுழந்த தவமுருக் கொடுவந்த
தனைய, கொன்றையந் தருவி னணிநிழ லமர்ந்த குழகனைப் பணிந்தி
னைவ துதிப்பான்.

(இ-ள்) இவ்வாறு பிரசன்னராகி நின்று, பெரிய தவத்தையுடைய
குழந்தாய்! நினது உறுதிநோக்கி யாம் மிக உவந்தனம். நீ செய்யுந் தவத்
தைவிட்டு எழுவாயாக, என்று திருவாய்மலர்ந்தருள, உடனேஎழுந்திருந்து
ஆனந்தக்கூத்தாடி, இரண்டுகண்களினின்றும் நீர்சுரந்து பொழிய, தனது

மேனி வருந்தி நெடுங்காலஞ் செய்த தவமே, திருவுருக்கொண்டு வந்தாலொத்த அழகிய கொன்றை விருக்ஷத்தினீழலின்கண் வீற்றிருந்தருளிய கட்டழகையுடைய அப்பெருமானை நமஸ்கரித்து இங்ஙனம் தோத்திரஞ் செய்வான். (எ-று)

தகை - பெருமைக்குணம் அது ஈண்டு அதனையுடைய உடலையுணர்த்தி நின்றது. (௨௭)

குணவிரா சதத்தின் மலர்மக னாகிக் கோதில்சத் துவகுணத் தரியா, யுணர்விறு மதத்தி னுருத்திர னாகி யுலகெலா மீன்றுகாத் தழித்துக், தவிவில்சாக் கிரத்தில் விசுவனுய்க் கனவிற் றைசத னுய்ச்சுழுத் தியினிற், புணர்பிராக் ஞனு யுயிர்தொறும் புணரும் பூரணப் பரஞ்சுடர் போற்றி.

(இ-ள்) இராசதகுணத்தில் பிரமதேவராகியும், குற்றமில்லாத சத்துவித குணத்தில் திருமாலாகியும், தெளிவில்லாத தாமதகுணத்தில் உருத்திரமூர்த்தியாகியும், உலகங்களையெல்லாம் சிருட்டித்து, இரக்ஷித்து, சங்கரித்தும், குறைதலில்லாத சாக்கிராவஸ்தையில் விசுவனாகியும், சொப்பனாவஸ்தையில் தைசதனாகியும், சுழுத்தியவஸ்தையில் பிராக்ஞனாகியும், ஆன்மாக்கடோறும் கலந்திருக்கும் வியாபித்த மேலான சோதி சொருபரே அடியேனைக் காத்தருள்க. (எ-று)

போற்றிய என்னும் வியங்கோள் ஈறுகெட்டு போற்றி என நின்றது. வாழிய என்பதுபோல. போற்றி என்பது வணக்கமுமாம்.

படைத்தற்றொழிலுடைமையின் பிரமதேவருக்கு இரசோகுணமும், காத்தற்றொழிலுடைமையின் திருமாலுக்குச் சத்துவகுணமும், அழித்தற்றொழிலுடைமையின் உருத்திரமூர்த்திக்குத் தமோகுணமுங் கூறப்பட்டனவேனும், மற்றைச் செயல், நிறம் முதலிய பற்றித் திருமாலுக்குத் தமோகுணமும், உருத்திரமூர்த்திக்குச் சத்துவகுணமும் கூறுவது நூற்றுணிபு. விசுவன், தைசதன், பிராக்ஞன் என்னும் நாமங்கள் சாக்கிர சொப்பன சுழுத்தி என்னும் அவஸ்தைகள் பற்றி வந்தவைகளாம். (௨௮)

ஆதியாய் நடுவா யந்தமா யவைதீ ரனாதியாய்ச் சுருதியு மளவா
நீதியாய்த் தூல சூக்கும வடிவாய் நிர்க்குண மாய்த்தனி முளைத்த
சோதியாய்ப் பரமா னந்தமந் திரமாய்ச் சொல்லள வாலளந் தியாரும்
போதியாப்பொருளாயுலகெலாநிறைந்தின் பொன்னடிப்பூந்தளிர்போற்றி.



(இ-ள்) முதலாகியும், மத்தியாகியும், முடிவாகியும், அம்மூன்றுங் கடந்த அனாதியாகியும், சுருதிகளாலும் அளவிடப்படாத தன்மையுடையதாகியும், ஸ்தூலவடிவாகியும், சூக்குமவடிவாகியும், குணரகிதமாகியும், தனித்தெழுந்த ஒளியாகியும், மேலாகிய ஆனந்தத்தை விளக்கும் மந்திரசொரூபராகியும், சொன்மாத்திரையாலளவிட்டு எவராலும் உணர்த்தமுடியாத பரம்பொருளாகியும், உலகமெங்கு நிறைந்த தேவரீரது பொலிவுபெற்ற தளிர் போன்ற அழகிய திருவடிகள் அடியேனைக்காத்தருள்க. (எ-று) (௨௯)

பிரணவ வடிவா யட்டமூர்த் திபுமாய்ப் பேருயிர்க் குயிரதாய் மாயை, யரணநீத் திலங்கு மறிவதாய்ப் பரமா காயமாய் முக்குறும் பெறிந்து, சரணடைந் தவர்கட் கருணிறை கடலாய்ச் சச்சிதா னந்தமாய்ச் சனன, மரணமில் பொருளா யாப்பனூ ரமர்ந்த மாசிலா முழுமுதல் போற்றி.

(இ-ள்) பிரணவமந்திர சொரூபமாகியும், அஷ்டமூர்த்திகளாகியும், பெருமைபெற்ற உயிர்கட்குயிராகியும், மாயை யென்னுங் கோட்டையினின்று நீங்கி விளங்குகின்ற சிற்சொரூபமாகியும், பரமாகாச சொருபமாகியும், முக்குற்றங்களையுநீக்கி அடைக்கலம் புக்கவர்களுக்கு நிறைந்த கிருபாசமுத்திரமாகியும், சச்சிதானந்த சொருபமாகியும், பிறப்பிறப்பில்லாத நித்தியவஸ்துவாகியும், திருவாப்பனூரி லெழுந்தருளி விளங்கும் களங்கமற்ற முழுமுதற்கடவுளே அடியேனைக் காத்தருள்க. (எ-று)

யாவும் உதித்தற்கு மூல மென்பார் "பிரணவவடிவா" யென்றும், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சந்திரன், சூரியன், ஆன்மா என்னும் எட்டும் அவர்வடிவமென்பார் "அட்டமூர்த்தியுமா" யென்றும், கருவிகளை உயிரியக்குமாறுபோல அவ்வுயிரை யியக்கும் அருளாளரென்பார் "பேருயிர்க்குயி" ரென்றும், தனுகரண புவன போகங்களாக விரிந்து கவிந்து நிற்பதென்பார் "மாயை யரணம்" என்றும், அதனைக்கடந்து நிற்கும் ஞான சொருபன் என்பார் "அறிவதா" யென்றும், என்றும் யாவும் ஒடுங்கும் சிதாகாச மென்பார் "பரமாகாய" மென்றும், காமம் வெகுளி மயக்கங்களைக் கடந்தவர்கட்குப் பேரருள் பாலிப்பதென்பார் "அருள் நிறை கட" லென்றும், என்றும் நிலைபெறாய் விளங்கி, இன்பமயமாயுள்ளதென்பார் "சச்சிதானந்தமா" யென்றும், தோற்ற ஒடுக்கமில்லாததென்பார் "சனனமரணமில்பொருள்" என்றுங் கூறினர். (௩௦)

ஒண்ணளிவின் வகைய துதிமொழித் தங்க மெட்டினோ டைந்தினு மிசைந்தச், விண்ணவர் பெருமான் றவத்தினுந் துதிக்கு விழைந்த

னம் விழைந்தன கொடுப்பேம், கன்றூறு தவத்தோய் கேளெனத்
திசையாழ் கடவுள ரோடொரு வதுவமா, யொண்ணிதிக் கரசா யழி
விலாச் செல்வத் துறைபதந் தருகென வுரைத்தான்.

(இ-ள்) இவ்வாறாகிய அளவில்லாத ஸ்தோத்திரங்களைக்கூறி, அஷ்டாங்க பஞ்சாங்கங்களால் நமஸ்கரிக்க, தேவாதிபராகிய திருவாப்புடையீசர் கருதப்படுகின்ற தவசிரேஷ்டனே! நீ செய்த தபசைப்பார்க்கினும், ஸ்தோத்திரத்துக்கு மகிழ்வடைந்தோம். (ஆதலால்) வேண்டிய வரத்தைத் தந்தளிப்போம். கேட்பாயாகவென்று திருவாய்மலர்ந்தருள, திக்குப்பாலகர்களோடு ஒருவனாகியும், அழகிய செல்வத்திற்குத் தலைவனாகியும் அழிவில்லாத செல்வத்திலேயே அமரும் பதவியைத் தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். (எ-று) (ஙக)

இருந்திசைப் பாலர் யாரினுஞ் சிறந்த விந்திரத் திருநிகர் வளத்
தில், பொருந்திநன் னிதிக்கோ னாகியெண் டிசையிற் பொருவில்சீர்
வடதிசை புரக்கு, மருந்திற லடைதி யெனப்பெரும் வரங்க ளாப்பு
டை யமலனுங் களிப்ப, வருந்திநோற் றுயர்ந்த வயிச்சிர வணனுண்
மலர்ந்தெழு களிப்பினான் மயங்கி.

(இ-ள்) பெரிய திக்குப்பாலகர்கள் எவரினுஞ்சிறப்புப்பெற்ற, தேவேந்திர செல்வத்தையொத்த செல்வத்திற் பொருந்தி, நல்ல சங்கநிதி, பதுமநிதிக்குத் தலைவனாகி, அஷ்டதிசைகளுள்ளும் சமானமற்ற சிறப்பினையுடைய வடதிசையைக் காக்கின்ற அரிய சிறப்பை யடைவாயாகவென்று, மேம்பட்ட வரங்களை மலாநிதரான திருவாப்புடையீசர் கொடுத்தருள, வருந்தித் தவங்களைச் செய்ததினாலுயர்ச்சிபெற்ற, அவ்வயிச்சிரவணன் என்பவன், உள்ளத்திலே விரிந்து எழுகின்ற உவகையால் மதிமயங்கி, (எ-று) (ஙஉ)

ஆங்கு - அசை.

மின்னினுஞ் சிறந்த குரவவார் குழற்பெண் விடைமிசை யரனொடு மிருப்ப, வென்னினு மிவளெத் தவமுயன் றனளோ வெம்பிரா னுடனிருந் தனளென், றுன்னின னொரு தொருகணாற் பார்க்க வுமைசிறி துருத்தனு முருகி, யங்கலை யொருகண் மறைந்துயி ரவியா வரனுயி ரளிப்பவாங் கெழுந்தான்.

(இ-ள்) மின்னற் கொடியினும் மேம்பட்ட குரவங்கமழ் குழலம்மையார், அப்பெருமானோடு இடபவாகனத்தின்மீது வீற்றிருக்கக்கண்டு, இவளென்



னைப்பார்க்கினும், என்ன அரிய தவத்தைச்செய்தாளோ, எமது சிவபிரானுடனே யிருக்கப்பெற்றனள் என்று நினைத்தவனாய்ப், பொறாமையனாய், ஒரு நேத்திரத்தினால் நோக்க, அதையறிந்த உமாதேவியார் சற்றுக் கோபித்தவளவில், ஒரு நேத்திரம் உருகுதலையடைந்து குருடாகி, உயிரிழந்து, சிவபெருமான் மீட்டும் உயிர் தந்தருள எழுந்தனன். (எ-று)

ஆங்கு - அசை. (ஙங)

எழுந்தயர் பவனைப் பெருந்தவச் சிறுவ வென்னினைந் தனையிவள் வலியா, மொழிந்திடற் கரிதா லாயினு மொழிவே முழுதுலகீன்றுகாத் தோம்பி, யுழுந்துருள் பொழுதி னழிப்பவ ளிவளோ டொழியவிங் கொருசெய லெமக்கின், றழுந்துய ரொழிதி யெம்மில்வேறலளீ தருமறைப் பொருளென வறிதி.

(இ-ள்) எழுந்து துன்புறுகின்ற வைச்சிரவணனைப் (பார்த்துப்) பெரிய தவத்தினையுடைய குழந்தாய், என்ன நினைப்பு நினைந்தாய். இத்தேவியினது வலிமை நம்மாற் சொல்லமுடியாது. ஆனாலும் சொல்லுகிறோம். (கேட்பாயாக,) உலகமுழுவதையும் பெற்று, அவைகளைக் காப்பாற்றிப்பின் உழுந்து உருண்டோடுகின்ற அவ்வளவு காலத்திற்குள் சங்கரிப்பவள். இவ்வுமையைவிட நமக்கு யாதொரு செயலுமில்லை. (ஆதலால்) நீ அழுதலோடு கூடிய துக்கத்தை அகல்வாயாக; எம்மில் வேற்றுமையுடையவளல்லள். அபேதமானவளே. யாம் கட்டளையிட்ட இது அரிய வேதப்பொருளென அறிவாயாக. (எ-று) ஆல், இங்கு - அசைகள்.

உழுந்துருள் பொழுது என்பதற்கு, கண்ணாடியில் உழுந்தை வைத்து உருட்டுங்காலம் என்ன இது காலவிரைவைக் குறிப்பதோர் மொழி. (ஙச)

தேனுமின் சுவையும் பிரித்திடற் கரிதாஞ் செயலெனக் கலந்தகலாம, லியானுமிங் கிவளு மிருப்பதிங் கிவளே யாவர்க்கு மோருயிர்த் தாயால், வானுளிந் திரற்குப் பெருந்திரு வளித்த வரப்பெருஞ் செல்விசெங் கமலப், பூநிறந் திகழ்மென் றளிரடி யலதோர் புகலிலை நினக்கெனப் புகன்றான்.

(இ-ள்) நாமும் இவ்வுமையும் கலந்து நீங்காமலிருப்பது, தேனும் அதன் மதுரமும் வேறு பிரித்தற் கரிதாஞ் செய்கைபோலத் தெளிவாயாக. இவ்வுமையே எல்லா வுயிர்களுக்கும் ஒப்பற்ற தாயாகும். (அன்றியும்) தேவலோகத்துள்ள இந்திரனுக்குப் பெரிய செல்வங்களைக் கொடுத்தருளிய இதே

ஷ்டமான பெருஞ் செல்வமுடையவள். இவளது செந்தாமரை மலர்போலும் சிறந்திகழும் மெல்லியதளிர்போன்ற திருவடிகளையன்றி, உனக்கடைக்கலமாக அடையப்படுபொருள் வேறொன்றுமில்லை யென்று திருவாய்மலர்ந்தருளினார். (எ-று) இங்கு - இங்கு. ஆல் - அசைகள். (௩௫)

சோதியாங் குறைத்த திருமொழி சிரத்திற் சூடினன் றொழுநிலை யதிப்பா, ஞேதியாங் கிரைக்கும் பழமறை முடிவி னுண்மையுங் கடந்தா னுருவிற், பாதியாம் பரையே முழுதுமாய் நிறைந்து படைப்பன வாதியைந் தொழிற்கு, மாதியாங் குரவங் கமழ்குழ லுமையே யஞ்சினே னபயநின் னபயம்.

(இ-ள்) சோதிமயமான திருவாப்புடையீசர் கட்டளையிட்ட திருவாக்கைத், தலைமேற்கொண்டவனுய்வணங்கி, இவ்வாறுதோத்திரஞ்செய்வான்:- சொல்லி முறையிடுகின்ற பழமையாகிய வேதாந்தத்தின் மெய்ப்பொருளையுங் கடந்து, எம்பெருமானது திருவுருவத்தில் அர்த்தபாகமாய் விளங்கும் பராசத்தியே, பரிபூரணமாயெங்கும் நிறைந்து, சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்கட்கும் முதன்மையாகிய குரவங்கமழ்குழலம்மையே மிகப்பயந்தேன், உன்னடைக்கலம் உன்னடைக்கலம். (எ-று) ஆங்கு ஆங்கு - அசைகள்.

உபநிடதங்களின் உண்மைவாக்கியங்களானும், நிச்சயித்தற்கருமைதோன்ற "பழமறை முடிவி னுண்மையுங் கடந்து" என்றும், எப்பொருட்கு மிறைவராகிய பெருமான் திருமேனியிலும் அர்த்தபாகங்கொண்ட அதிவல்லபந்தோன்ற "அரனுருவிற் பாதியாம் பரையே" என்றும் இங்ஙனமிருப்பதன்றியும் ஜகம் சத்திமயம் என்னும் சுருதிவாக்கியப்படி வியாபித்துநிற்கு நிலைமைதோன்ற "முழுதுமாய் நிறைந்து" என்றும், சத்தியோடு கூடாவழிச் சிவத்திற்கு யாதொரு செயலுமில்லை. சத்தியே எத்தொழிற்குங் காரணமென்பது தோன்ற 'படைப்பனவாதி யைந்தொழிற்குமாதி' என்றும், இத்தேவியையன்றி வேறு புகலிடமில்லை யென்பது தோன்ற "அஞ்சினே னபயநின் னபயம்" என்றும் கூறியபடி. ஐந்தொழிலாவன:- சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம். (௩௬)

மலர்தலை யுலகஞ் செய்தவக் கொழுந்தே மலைபழுத் துயிர்நறுங் கனியே, குலமறைக் கொடிமேற் படர்கொழு கொம்பே குதலைமென் மொழியிளங் கரும்பே, நலமிறை திருவே குயிலிளம் பெடையே நங்கையர்க் கொருமணி விளக்கே, மலர்தரு குரவங் கமழ்குழ லுமையே யஞ்சினே னபயநின் னபயம்.



(இ-ள்) இடமகன்ற இவ்வுலகமானது, செய்த தவத்திற் கிளைத்த பொருளே, இமயமலைதன்கண் முதிரப்பெற்று, ஈன்ற பசியபழமே, வேதங்களாகிய கொடிகள் மேலே தழைத்துப் படர்தற் காதாரமாகிய பூங்கொம்பே, மிருதுவான மதலைச் சொற்களாகிய இரதத்தைக்கொண்ட இளங்கரும்பே, இன்பவிளைவையுடைய செல்வமே, இளமை பொருந்திய பெண்குயிலே, சிறந்த மங்கையர்க்கும் ஒளியையுண்டுபண்ணும் ஒப்பற்ற குரவங்கமழ் குழலம்மையே, மிகப்பயந்தேன். உனக்கடைக்கலம் உனக்கடைக்கலம். (எ-று) (௩௭)

ஓமெனு மெழுத்தி னொருதனிக் குடம்பை யுள்ளுறைந் தருள்பசுங் கிளியே, தேமரு கடுக்கை வளர்சடைப் பெருமான் றிருவுளத் தடமட வனமே, காமரு பனிமால் வரைத்தனி மயிலே கயிலையஞ் சயிலமேன் மருந்தே, யாமெனுங் குரவங் கமழ்குழ லுமையே யஞ்சினே னபயநின் னபயம்.

(இ-ள்) பிரணவம் என்கின்ற அக்ஷரத்தினுலமைந்த ஒப்பற்ற கூட்டினுள் வாசஞ்செய் தருளுகின்ற பச்சைக்கிளியே, வாசனை பொருந்திய கொன்றை மாலையைத் தரித்த நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமானது திருவுள்ளமாகிய தடாகத்தில் விளையாடும் இளமையாகிய அன்னமே, அழகிய பெரிய இமயமலையிலுதித்த ஒப்பற்ற மயிலே, அழகிய கைலாயமலையிற் குடிகொண்ட மருந்தே, என்று புகழ்பெற்ற குரவங்கமழ் குழலம்மையே மிகப்பயந்தேன் உனக்கடைக்கலம் உனக்கடைக்கலம். (எ-று)

பிரணவப்பொருளாய் விளங்குபவள் என்பது தோன்ற "ஓமெனுமெழுத்தி னுறைபசுங் கிளி" என்றார்.

பிரணவத்தைக் கூடென்றதற் கிணங்கக் கிளி என்றும், பெருமான் திருவுளத்தைத் தடமென்றதற் கிணங்க மடவன்னம் என்றும், மலையரையனை மலையென்றதற் கிணங்க மயில் என்றும், கயிலையஞ்சயிலம் என்பதற் கிணங்க மருந்தென்றுங் கூறியவாறு. (௩௮)

நிலத்தினிற் பயிராய்ச் சலத்தினிற் சுவையாய் நெருப்பினில் வெம்மையாய்க் காலிற், சொலத்தரு நடையாய்க் காயத்தி னிடமாய்ச் சுடரினிற் கதிர்மதி நிலவாய், நலத்தரு புயலிற் றுரையாய் விளங்கி நல்லுயிர்த் தொகைபுரந் தளிக்கு, மலர்த்திகழ் குரவங் கமழ்குழ லுமையே யஞ்சினே னபயநின் னபயம்.

(இ-ள்) பூமியிற் பைங்கூழாகியும், தண்ணீரில் மதுரமாகியும், அக்கினியிற் சூடாகியும், காற்றில் சொல்லத்தக்க நடையாகியும், ஆகாயத்திலிடமாகியும், சூரியனில் கிரணமாகியும், சந்திரனில் சந்திரிகையாகியும், நற்குணமமைந்த தக்க மேகத்தில் மழையாகியும், பிரகாசித்துச் சிறந்த எல்லாவுயிர்களையுங் காத்து இரக்ஷிக்கின்ற புஷ்பங்கள் விளங்கும் குரவங்கமழ் குழலம்மையே மிகப்பயந்தேன் உன்னடைக்கலம் உன்னடைக்கலம். (எ-று)

கறைமிடற் றிறைவன் விழிகுடி யிருப்பக் கனிந்தடி யிருந்தடி பணைத்துப், பிறைவடங் கிடந்த முலைப்பசுங் கொடியே பெண்ணலங் கனிந்ததெள் ளமுதே, முறைமுறை புவன சராசர சடங்கண் முழுவதுந் தனிபிறந் தகமே, யறைமலர்க் குரவங் கமழ்குழ லுமையே யஞ்சினே னபயநின் னபயம்.

(இ-ள்) காளகண்டமூர்த்தியாகிய சிவபெருமானது திருக்கண்கள் இடைவிடாது நோக்கமாருமந் பார்க்கும் பேரழகும் பொருந்தி அடிபருத்துச் சந்திரஹாரங்கிடந்து, பிரகாசிக்கின்ற கொங்கைகளையுடைய மரகதக் கொடியே, பெண்ணிலக்கணம் முதிர்ந்த தெளிவாகிய அமிர்தமே, கிரமப்படி வரிசையாக உலகங்களும், சராசர வுயிர்களும், மற்றுஞ் சடப்பொருள்களுமாகிய, எவற்றிற்கும் தனித்த உற்பத்திஸ்தானமே, யாவரும் துதிக்கின்ற குரவங்கமழ் குழலம்மையே மிகப்பயந்தேன், உன்னடைக்கலம் உன்னடைக்கலம். (எ-று) (௪௦)

இவ்வகை துதித்தாங் கன்னைநீ சேயா னிழைத்தநிங் கிவைபொறுத் தருளென், றவ்விடை யிரப்ப வாப்புடை யமல னவமதித் திழந்தக ணிவன்பெற், றுய்வகை யளித்தி யெனமகிழ்ந் திறைவி யுருகிமுன் மறைகிழி பொன்போல், வெள்ளுற வளித்தா ளன்று தொட் டிலகம் வழுத்தின குபேரனென் றவனை.

(இ-ள்) என்றிவ்வாறு தோத்திரஞ் செய்து நீ தாய், அடியேன் உன் குழந்தை, ஆதலின் நாயேன் செய்த இக்குற்றங்களைப் பொறுத்தருளல் வேண்டுமென்று, அவ்விடத்திலிரந்து வேண்ட, மலரகிதராகிய திருவாப்புடையீசர் (நங்காய்) நின்னை அவமதித்தலா லிழந்துவிட்ட கண்ணை, இவன் மீண்டும் பெற்றுப் பிழைக்கும் வண்ணங் கொடுப்பாயென்று திருவாய்மலர்ந்தருள, சர்வலோக நாயகியாகிய குரவங்கமழ் குழலம்மை திருவுளமகிழ்ந்து, முன்னே கரைந்து மறைந்துபோன கண்ணுறனது பொன்போல் கொள்ளும்படி கொடுத்தருளினள். உலகத்தவர் அதுமுதற்கொண்டு அவ்வைச்சிரவணனைக் குபேரனென்று வழங்கினர். (எ-று) ஆங்கு - அசை.

அவமதித்திகழ்ந்த என்பதும் பாடம். (௪௧)



பரவருங் குரவங் கமழ்குழ லணங்கும் பரமனுங் கோயில்புக் குறையத், தரவருங் களிப்பி னளகையிற் குபேரன் சார்ந்திரு நிதிக்கர சாகி, வெருவரு மியக்கர் குய்யகர் வீணை விஞ்சையர் கின்னரர் நிறைஞ்சப், பொருவருஞ் சிறப்பின் வடதிசைப் புரவு பூண்டர சியற்றினன் மாதோ.

(இ-ள்) புகழ்தற்கரிய குரவங்கமழ் குழலம்மையும், திருவாப்புடையீசரும் ஆலயத்திற் சேர்ந்து அமர்ந்தருள, நிலைபெறவளரும் மகிழ்ச்சியால் அளகைமா நகரில் குபேரன் போய்ச்சேர்ந்து, சங்கநிதிபதுமநிதி என்னும் இருவகைச் செல்வங்கட்கும் தலைவனாகி, அச்சமற்ற இயக்கர், குய்யகர், வீணையில் வல்ல வித்தியாதரர், கின்னரர் ஆகிய இவர்கள் வணங்க, ஒப்பில்லாத சிறப்புகளோடு வடதிசையைக் காத்து, அரசுசெலுத்தினன். (எ-று)

மாது, ஓ - அசைகள். (௪௨)

* தர - நிலைபெற.

## எண் சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆயு முனிமக னளகை யதிபதி யாய கதையிதை யிதய நெகிழ்தர, வாயின் மொழிபவ ரிதழின் வரைபவர் மாசில் செவிவழி யுருகிநுகர்பவர், தீய கலியுக மருவு பவவினை தீர்வர் வறுமைக ளொழிவர் சுபமய, மேய நிதிதனி பெறுவ ருவமையி லீறு சிவபுரி யடைவர் சரதமே.

(இ-ள்) (சாஸ்திரங்களை) ஆய்ந்த விச்சிரவசு என்னும் முனிவர் புத்திரனாகிய வைச்சிரவணன், அளகைமா நகரத்திற்குத் தலைவனாகிய இச்சரித்திரத்தை மனங்குழைய, வாயாற்சொல்பவரும், ஏடுகளில் எழுதுகின்றவர்களும், உருக்கமுற்றுத் தம்குற்றமற்ற காதுகளிற் கேட்பவர்களும், கொடிய இக்கலியுகத்திற் பொருந்திய பாவவினைகளினின்று நீங்குவார்கள். தரித்திரங்களின் அகல்வார்கள். அவரவரும் விரும்பிய மங்கலவடிவமைந்த செல்வம் மிகவும் பெறுவார்கள். இறுதியில் ஒப்பில்லாத பெருமை பொருந்திய சிவலோகத்தை எய்துவார்கள். இது சத்தியமேயாம். (எ-று) (௪௩)

குபேரச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௪௩.

# சுதரிசனச் சருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

புனித மார்நயிமி சத்த ருந்தவர்பு கழ்ந்து மிலநபு ரேசனும்
வனிதை நாயகியு நிதிய திக்குநல்வ ரங்கொடுத்தவித காசமீ
தினிது கூறினையெ னச்சி றந்தபதி னெண்பு ராணமுனி யெம்பிரான்
கனியி னோடமுது தங்க லந்தனைய கதைபி னென்று பகர்வானரோ.

(இ-ள்) பரிசுத்தமமைந்த நைமிசாரணியத்திலுள்ள, செயற்கரிய தவத்தையுடைய முனிவர்கள், சூதமுனிவரைப்புகழ்ந்து, திருவாப்புடையீசரும், சூரவங்கமழ் குழலம்மையும், குபேரனுக்கு நல்லவரங்களைக் கொடுத்தருளிய சரிதமாகிய இதனை அடியேங்கட்கு இனிமையாக உபதேசத்தருளினீரென்று அறிவித்துக்கொள்ள, பதினெண் புராணங்களிலும் வல்ல அம்முனிவர் பின்னரும், பழரசத்துடனே பாலையுங் கூட்டினாற்போன்ற, ஓர் சரித்திரத்தைத் திருவாய்மலர்ந்தருள்வாராயினர். (எ-று) அரோ-அசை (க)

வேத வித்தனைய விப்பி ரேசர்புரி வேறி மேகலைசெய் வேள்வியு
நாத மிக்கவிடை யுப்பு ராணவி னன்ன நித்துறைய முபநிடப்
போத முற்றவர்ம டங்க ளந்தனவ னங்க ளும்பொதுளி யாவருங்
காத லிப்பவுள தஞ்ச னூர்பெரிய கஞ்ச னூர்பொருவு கஞ்சனூர்.

(இ-ள்) வேதங்களுக்கு வித்துப்போன்ற பிராமணர்கள், மேகலைகள் வருத்த யாககுண்டங்களில் புரிகின்ற யாகமும், மிகுந்த வேதாத்தியயன சாலைகளும், சிவபுராணங்களைப் பிறர்கேட்கப் பிரசங்கிக்கும், நல்ல நந்திரமும், உபநிஷத்துக்களின் ஞானார்த்தங்களையறிந்த பெரியோர்வசிக்கும் திருமடங்களும், திருநந்தனவனங்களும், நெருங்கி அன்னத்தை வாகனமாகச் செலுத்துகின்ற விசாலமாகிய தாமரையாசனத்தராகிய பிரமதேவருடைய சத்தியலோகத்தை யொத்த கஞ்சனூர் என்னும் நகரம் யாவரும் விரும்பும்படி இருக்கின்றது. (எ-று) (உ)

அயனி றைந்துநிர ஞாதி மூன்றுமிக முந்த வூரவத ரித்துளா
ருயர்கு லத்தரின்மு னவிலு முத்தமரு யர்ந்துளாரினுமு யர்ந்துளார்
நயனநெற்றியர்தமன்பரிற்றலைமை நண்ணி னாரருள்செய்கண்ணினா
ரியனி றம்புதிருமேனி மேனிலவெ றிக்கு நீற்றொளிப ழுத்துளார்.



(இ-ள்) சமித்து, தருப்பை, மாவிலை என்னும் மூன்றும், பக்கங்களில் நிரம்பி விளங்குகின்ற, அக்கஞ்சனூரில் அவதரித்துள்ளவர். பிராமண குலத்தவர்களுள் சிலாக்கியமாகச் சொல்லுகின்ற உத்தமர்களாக உயர்ந்தவர்கள் யாவரினும் மிக உயர்ந்தவர். நெற்றிக்கண்ணையுடைய சிவபிரானது அன்பர்களில் முதன்மையானவர். யாவரிடத்தும் இரக்கமான பார்வையையுடையவர். அழகு நிறைந்த தேகத்தில் சந்திரிகையை வீசுகின்ற, திருவெண்ணீற்றொளி முதிர்ந்தவர். (எ-று) (ங)

அண்ணல் கண்மணிசி ரங்க ளங்குழைகை யாக முற்றவும ணிந்
துளா, ரெண்ணி லாதசிவ நாம மோதியர னர்ச்சனைத்தொழி
லியற்றுவார், மண்ணி னூடுகடன் மலைம ரங்கொடிம னித்தர் புள்
விருக மாதியாய்க், கண்ணி னூடுதெரி பொருளி யாவுநிறை சிவமெ
னப்பரவு காட்சியார்.

(இ-ள்) உருத்திராக்கமணிகளைச் சிரசு, கழுத்து, காது, கை, சரீரம் ஆகிய இவ்விடங்களிலெல்லாந்தரித்தவர். அளவில்லாத சிவநாமங்களை உச்சரித்துச் சிவார்ச்சனைத் தொண்டைச்செய்பவர். இப்பூமியின் நடுவிலுள்ள சமுத்திரம், மலை, மரம், கொடி, மனிதர், பக்ஷி, மிருகம் முதலியனவாய்க் கண்ணிற்காணப்படுகின்ற எல்லாவஸ்துக்களையும், எங்கும் நிறைந்த சிவம் எனக்கொண்டு துதிக்கும், அறிவினையுடையவர். (எ-று) (ச)

ஈறி லாதசிவ னேப ரம்பொருளி தற்கொ ரையமிலை யிலையெ
னத், தேறி னார்கமலை மாறி னார்விமலர் சேவ டிக்குண்மனம் வைத்
தினைப், பாறி னார்வினையை நூறி னார்பரம னஞ்செ ழுத்தின்மணி
நாத்தழும், பேறி னார்சுதரி சனரெ னப்புவியி சைக்கு நற்பெயரி
சைந்துளார்.

(இ-ள்) என்றும் அழிவில்லாத சிவபெருமானே எவைக்குமேலான பரவஸ்து. இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை யில்லை என்று தெளிந்தவர். துக்கமகன்றவர். மலரகிதரான சிவபெருமானது திருவடிகளினிடமாக மனதைப்பதித்துச் சிரம நீங்கினவர். வினையை ஒழித்தவர். சிவபெருமானது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் செபித்தலினாலே நாத்தழும் பேறியவர். சுதரிசனரென்று இப்பூமியிலுள்ளார் சொல்லும் பெயரையுடையவர். (எ-று) (ரு)

நீதி வைதிகசை வத்த வப்பயிர்நி லத்தி னோற்றியவர் நிகழு
நாட், சோதி மெய்யர்சிவ தீர்த்த யாத்திரைதொ டங்கி யன்பொடு

நடந்துசெம், பாதி மெய்யிலொரு மாதிருந்தவர் தலங்கள் பற்பல
பணிந்துவந், தாதிசைவர்குல தெய்வ மாகவரு மப்ப னூருறைவனி
யமருநாள்.

(இ-ள்) நியமமுடைய வைதிகசைவமென்னும், தவப்பயிரை இப்பூமி
யில் விருத்திசெய்து, அச்சுதரிசனர் இருக்குங்காலத்தில், சோதிசொருபரா
கிய சிவபெருமானது தலயாத்திரை தீர்த்தயாத்திரை செய்யத்தொடங்கிச்
சிரத்தையோடு சென்று, சேர்பாதித்திருமேனியில், உமாதேவி தங்கப்பெற்
றவராகிய பரமசிவனெழுந்தருளும் அனேக தலங்களை வணங்கிவந்து,
ஆதிசைவர்களுக்குக் குலதெய்வமாய் விளங்குகின்ற, திருவாப்புடையீசர்
அமரும், திருவாப்பனூரிலே மிகத்தங்குங்காலத்தில். (எ-று)

யாத்திரை - செல்லுகை. (௬)

தருமநந்திமடு நீர்ப டிந்துதய சந்தி தர்ப்பணமு யன்றெழீஇக்
கரையிருந்துதிரு நீற ணிந்துதிகழ் கண்டி பூண்டுயர்க டன்கழீஇப்
புரையிலங்கசிவ மான தப்பெருவில் பூசை யாற்றியணி யாப்பனூர்ப்
பரனிருந்தகோ புரம டைந்துவலம் வந்து கண்டெதிர்ப ணிந்தரோ.

(இ-ள்) தருமதேவதை வடிவமாகிய நந்திதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்
து, உதயகாலத்திற் செய்யவேண்டிய சந்தியாவந்தனம் தர்ப்பணாதிகளைச்
செய்து எழுந்து அத்தீர்த்தக்கரையிலிருந்து கொண்டு, திருவெண்ணீற்
றைத்தரித்து விளங்குகின்ற உருத்திராக்க மாலிகையை யணிந்து, மேன்
மையாகிய நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக் குற்றமற்ற ஒப்பில்
லாத மானதமாகச்சிவபூசையைச்செய்து, அழகிய திருவாப்புடையீசர் வீற்
றிருந்தருளும், திருக்கோயிலிற் சென்று பிரதக்ஷிணஞ் செய்து, மனமகிழ்
ந்து, சந்நிதானத்தில் நமஸ்காரஞ்செய்து (எ-று) அரோ-அசை. (எ)

சாந்த நீற்றர்சிவ லீல கோசர்மகிழ் சன்னி தானமெதிர் நின்றுவே
தாந்த நற்றிபு கன்று பின்குரவ வார்கு ழற்கவுரி தன்னையும்
போந்து பத்தியொடு மூத்த நெஞ்செரடு தந்தை போற்றிமறு
மாகமழு, வேந்து கைத்தலர்த ளிக்குள் மீளவுமடைய் தெய்தி னார்
திருமுன் வைகினார்.

(இ-ள்) சந்தனம்போலத் திருவெண்ணீற்றையணிந்தவராகிய திரு
வாப்புடையீசர் திருவுளமகிழ்ந்து வீற்றிருக்கும், சந்நிதானத்தின் முன்
நின்றுகொண்டு, உபநிடதத்துக்களாகிய நல்லஸ்தோத்திரங்களாற்றுதிசெய்து



பின்னேசென்று, நீண்ட குரவங்கமழ்குழலம்மையையும், அன்புமுதிர்
ந்த மனதோடு துதித்து வணங்கி மாலையும் மழுவையுந்தாங்கிய திருக்கரங்க
ளையுடைய திருவாப்புடையீசர் கோயிலுள் மீண்டும், விரைய அடைந்தவ
ராய்ச் சந்நிதானத்தின் முன்னேயிருந்தார். (எ-று) (அ)

ஆதியைத்தனத கத்தி ருத்தியசை வற்றி நந்தபர வசமடைந்
தாதி யப்பரம சுகம ஞேலயம துற்றி றந்தபொழு துணர்விலா
தேத மற்றதொரு கம்ப மாமெனவி சைந்த யோகினர்வி ழித்தனர்
நீத கற்றுதிரு வத்த யாமவரை யாதல் கண்டுதரி சித்தரோ

(இ-ள்) முதல்வராகிய பரமசிவனைத் தனது மனதிலெழுந்தருளச்
செய்து, சலனமின்றியிருந்து தம்வசமிழந்து, அதனாற் பெறும் பெருகிய
மேலான சுகத்தை விளக்கும் மனவொடுக்கமடைந்து தற்போதமிழந்த
தருணத்தில், ஒன்றையுமுணராது, குற்றமற்ற ஒருஸ்தம்பாகாரமாகச்சிவ
யோகத்திலிருந்த அப்பெரியோர், அதின் நீங்கிக் கண்களைத் திறந்தனர்.
அத்தருணம் குற்றங்கள் யாவற்றையும் போக்குகின்ற அர்த்தஜாமபூசையா
தல் நோக்கித், தெரிசனஞ்செய்துகொண்டு. (எ-று) அரோ-அசை.

அது பகுதிப்பொருள் விகுதி. (௯)

வரைசெய் நற்சிகரி வாயி னீங்கிவெளி வந்து பார்த்தபொழு
தங்கத, மரைய சைத்தபர வஞ்செ ழுத்தையவ னன்ப ரைச்சிவனை
யவமதித், துரைசெய் மக்கள்பவ வினையெ னக்குழுமி யோவி யோவி
யெரி சுடரும் வாய்க், கரு நிறக்கழுதும் வழிந டப்பரிய கங்குல் கண்
டுதனி நின்றனர்.

(இ-ள்) மலைபோலும் நல்ல திருக்கோபுரவாயிலினின்று நீங்கி வெளி
யில் வந்து நோக்கியபொழுது, சர்ப்பத்தைக்கச்சாகத் திருவரையிற் கட்டிய
ருளிய, சிவபெருமானுக்குரிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தையும், சிவபெருமானது
மெய்யடியார்களையும், சிவபெருமானையும், அலக்ஷியஞ்செய்து இகழ்ந்து
பேசும், மனிதர்களுடைய பாவகருமத்தைப்போலத்திரண்டு, விட்டு விட்டு
அக்கினிவெளிப்படும் வாயையுடைய கரிய நிறம் வாய்ந்த, பேய்களும் வழி
கண்டு நடத்தற்கரிய இருட்டைநோக்கித் தனியாக அங்கே நின்றார். (எ-று)

செய்-உவம உருபு. (௧௦)

நின்று போம்வழிமை யங்கி வாறுறநி வந்த கோபுரநி லைக்கண்
வீங், தொன்றி யாவர்துணை போது வாரெனவு ளத்தி லுன்னினரவ்

வெல்லேவா, யென்று மன்பர்செல்வ ழிந்கு நற்றுணையெனப்புகுந்து
தவமாப்பனூர்க், குன்றவார்சிலைய னெம்பி நான்றனது கோயில்
காவலனின் மேவுவான்.

(இ-ள்) அங்கே நின்று தம் வீட்டிற்குப் போகும் வழிதெரியாமல், ஆகாயத்தையளாவிய உன்னதமான, கோபுரவாயிலிலே மீண்டும் வந்து சேர்ந்து, யார் நமக்கு இப்போது சகாயமாக வருவார் என்று மனதிலே நினைத்தார். அச்சமயத்தில் எப்போதும் தமது மெய்யடியார் ஒழுகும் மார்க்கத்துக்கு நல்ல துணையாகச் சென்று அருள்பாலிக்கும், மேருவை நெடிய வில்லாகவுடையவராகிய திருவாப்புடையீசர், தம்முடைய ஆலயத்திலுள்ள காவற்காரன் போல எழுந்தருளுவர். (எ-று) (கக)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

காண்மதக்களிற் றுரி யெனக்கருங் கஞ்சுகந் தரித்தேநீர்ச்,
சூன்மழைக்கிடை வெளிப்படா மின்னின்வா ளுறைபுகத் தோடுக்கி,
மான்மழுப்படை கரந்தகைத் தலஞ்சிலை வாளிதொட் டிமையோர்
தங், கோன்மலர்ப்பதம் புவிதொடு மொலியெழக் கோயிலின் புறம்
போந்தான்.

(இ-ள்) மதசலத்தைக் கக்குகின்ற யானையைக் கிழித்துக்கொண்ட தோலைத்தரித்ததுபோலக், கருஞ்சட்டையொன்றையணிந்து, கடல் நீரைப் பருகுதலால் கருக்கொண்ட கருமேகத்தினிடையே வெளிப்படாதுள்ள மின்னலைப்போல, வாள் உறையிலேயேயிருக்க, அதனைத்தோளில் தொங்கவிடுத்து, மானையும் மழுவாயுதத்தையும் மறைத்த திருக்கரங்களில், வில்லையும் அம்பையுங்கொண்டு, தேவாதிபராகிய திருவாப்புடையீசர், தமது தாமரை மலர்போன்ற திருவடிகள் பூமியில்மிதித்தலால் ஒலியெழும்படி, திருக்கோயிலின் வெளியே வந்தனர். (எ-று) ஏ - அசை. (க௨)

யாவர் போமவ ரெனமறை முனிவர நறைந்தலும் யானையா
தேவ தேவர்தங் கோயில்கா வலன்பெயர் செப்புவர் சிவனெனன்
றேவு ருதநீ ரெங்கிருந் தெங்ஙன முறுதிரென் றலுங்கோயின்
மேயி நாதனை வணங்கின னில்புக வேண்டிநின் றனனென்றார்.

(இ-ள்) வேதங்களையுணர்ந்த அச்சுதரிசனர், அங்கே போகிறவர் யாரென்று கேட்டலும், ஐயரே தேவாதிபராகிய சிவபெருமானது கோயிற் காவற்காரன் யான், எனக்குப்பெயர் சிவன் என்று சொல்லுவார்கள். செல்



லாது இங்கே நிற்கிறநீர் எங்கிருந்து எங்கே போகின்றீர், என்றுகேட்கவும், நான்கோயிலுக்குவந்து, சிவபெருமானைத் தெரிசனஞ் செய்தேன். இப்போது வீட்டிற்குப் போகவேண்டி நிற்கின்றேன் என்று கூறினர். (எ-று) அழைத்தல் ஈண்டுக் கேட்டலின் மேற்று.

(க௩)

என்ற லுந்திரு மாளிகை காறும்யா னிருள்வழித் துணைச்செல்வே
னின்ற நீரினி வருதிரென் றேகவு ளைகிழ்மனத் தவர்பின்போய்
மன்றன் மாமனை யடைதலு மந்தணீர் மனையிது செலும்யானென்
முன்றி லார்மனைக் கேகுவ னெனவரன் மொழியமற் றவர்சொல்வார்

(இ-ள்) என்றிவ்வாறு கூறியவளவில், அடியேன் தேவரீருடைய வீடுவரையில், இவ்விருளில் வழித்துணையாய் வருகிறேன். மயங்கி நிற்கின்ற தேவரீர் இப்பொழுதேவருவீர், என்று முன்னேபோக, உள்ளே குழையப்பெற்ற மனத்தையுடைய அச்சுதரிசனர் பின்னே சென்று, மங்கலகரம் பெற்ற பெரிய வீட்டையடைதலும், அந்தணரே இதுதான் உம்முடைய வீடு உள்ளேபோம். நான் என்னுடைய முற்றம் பொருந்திய வீட்டிற்குப் போகிறேன் என்று சிவன்கூற, அச்சுதரிசனர் என்னும் பிராமணர் புகல்வார் (எ-று) மற்று - அசை.

(க௪)

இம்மனைப்புற வேதிகை யிருத்தியா னினிதமு தயின்றப்பாற்
பொம்மனற்சுவை யடிசிலுப் பேனுண்டு போதியா லெனத்தர்மாச்
செம்மனிற்கிடை யாட்டியும் புதல்வருந் தேடுவ ரெனைமூடு
மைம்முகத்தபா ளைிரு ளாயதென் மனைப்படர் வேனென்றான்.

(இ-ள்) இவ்வீட்டின் புறத்திலுள்ள திண்ணையிலிருப்பாய், நான் இனிதாகிய அன்னத்தைஉண்டு, பின் உனக்கும் பொலிவாகிய மிக்கமதுரமுடைய அன்னம் இடுவேன். அதையுண்டுபோவாய், என்றுமொழிய, அதைக்கேட்டுப், பெருமையிற் சிறந்த அசசிவன் என்னும் சேவகர் வணங்கி, என்னை என்வீட்டிலுள்ள மனைவியும் புத்திரர்களும் தேடுவார்கள். கவிந்த அந்தகாரத்தையுடைய இருண்ட அர்த்தராத்திரியாயிற்று. ஆதலால் நான் என்னுடையவீட்டிற்குப் போகிறேன் என்று கூறினார். (எ-று) ஆல் - அசை.

(க௫)

சந்த நான்மறை வேதியர் கணமினித் தாழ்த்தியோ தனமேறு
மிந்த வேலையாந் தருகுநின் னில்லிடை யேகிமற் றயிலென்று
வெந்த காய்கறி வருக்கமும் பருப்புநெய் விட்டுறப் பிசைசோறுந்
தந்து பாலனஞ் சருக்கரை யொடுநிறை தரக்கொடுத் தனரன்றே.

(இ-ள்) இசை பொருந்திய நான்கு வேதங்களையுணர்ந்த சுதரிசனனென்னும் அப்பிராமணர்; காவலரை நோக்கி, இப்பொழுது ஒரு க்ஷணநேரம் தாமதித்திரு, இப்போது அன்னமாவது கொடுக்கிறேன். அதை உன் வீட்டிற்கொண்டுபோய் உண்பாய்; என்று புகன்று, பாகஞ்செய்த பதார்த்தவகைகளும், பருப்பும், நெய்யும், சேர்த்து மிகப்பிசைந்த அன்னமுங் கொடுத்துப், பாலோடுகூடிய அமுதைச் சர்க்கரையுடனே, திருப்தியாகும் வண்ணங் கொடுத்தனர். (எ-று) மற்று, அன்று, ஏ - அசைகள்.

சந்தமாவது உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம் என்னுஞ்சுரங்கள் (௧௬)

இற்றொறு நம்பலிக் குழல்பவர் தாழ்ப்பரோ விருகையும் விரித்
தேந்திப், பெற்றி தென்பெண்டிர் சேய்க்குமூண் டெனத்தரும் பெட்
டியிற் சுமந்தேகி, மற்றி ருக்குறை கோயில்புக் கயின்றனி மண்ட
பம் பலிபீட, முற்று நன்கறி வருக்கமு மடிசிலு முழுநிறைத் தனர்
மாதோ

(இ-ள்) தாருகவன முனிவர்பத்தினிகள் ஆச்சிரமத்திலும், சுந்தரமூர்த்திசுவாமிகளுக்காகத் திருக்கச்சூர் என்னும் தலத்தில் வீடுகளிலும், சென்று பிக்ஷைவாங்கியுழன்றவர், இதற்குப்பின்னிலைவரோ. தம்திருகரங்களையும் விரித்துப்பெற்றுக்கொண்டு, இவ்வமுது எனக்கேயன்றி என் மனைவி பிள்ளைகளுக்கும் போதும் என்று கூறி, அவர்கொடுத்த பெட்டியோடும் சுமந்துசென்று, தாம் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலையடைந்து திருவமுதுசெய்து, பின் அழகிய மண்டபங்களிலும், பலிபீடத்திலும் மற்றுமுள்ள இடங்களிலும், நல்ல பதார்த்தவகைகளையும் அன்னத்தையும் முற்றும் சிதறினர். (எ-று) மற்று, மாது, ஓ - அசைகள். (௧௭)

## வேறு.

பின்னர்முன் னன்னங் காணுப் பிறைத்திரு முடிமே லெஞ்ச
மன்னம்விற் றிருக்க வைத்தாங் கதுகொணர் பெட்டி ஞாங்கர்
தன்னொரு கிருத்தி நாதன் சயம்புவி லுறைந்தா னாகத்
துன்னிருள் புலருங் காலைத் தொடர்பரி சனங்க ளீண்டி.

(இ-ள்) அதன்பின் முற்காலத்தில், பிரமதேவராகிய அன்னப்பறவையால், காணப்பெறாத பிறையைத்தரித்த தமது திருமுடியின்மேலே, சேடித்திருந்த அன்னத்தைப் பொருந்தியிருக்கும்படி வைத்து, அவ்வன்னத்தைக் கொண்டுவந்த பெட்டியைத் தமதுபக்கத்தில் சமீபத்திலேவைத்து, அக்கடவுள் அச்சுயம்புலிங்க மூர்த்தத்திலே, எழுந்தருளியிருக்க, நெருங்கிய இருள் நீங்கி விடியுஞ் சமயத்தில், கூட்டமாகிய கோயிற்றொண்டர்கள் நெருங்கி. (எ-று) ஆங்கு - அசை. (௧௮)



இனகரம் புகுந்து தேவர் தேவனைத் தெரிசித் தேத்த
மனநெகிழ்ந் தருகி யாங்கு வருதலு முன்றி லெங்கும்
புனைகறி வருக்க மொய்ப்பப் பொருந்துமோ தனங்கண் டியாவர்
வினைபிது வென்று வஞ்சி யிச்சிலென் றகல வேகி.

(இ-ள்) திருக்கோயிலுட்சென்று, தேவாதிபராகிய திருவாப்புடையீசனைத், தெரிசனஞ்செய்து துதித்தற்பொருட்டு, மனம் நெக்குவிட்டு இளகி சந்நிதிமுன்வருதலும், முற்றம் முழுமையும், செவ்வையாகப் பாகஞ்செய்யப்பட்ட பதார்த்தவகைகளும், அன்னமும் இறைந்து கிடப்பதைப் பார்த்து, இது யார்செய்த செய்கை என்று பயந்து, எச்சிலென்று விலகிப்போய். (எ-று) (௧௯)

விள்கரும் பொனிற்செய் பூட்டு விடுத்திருங் கதவ நீக்கி
யுள்புகச் சென்றி யாங்கு மிறைந்திருப் பதுகண் டோர்ந்திக்
கள்வரியா ரென்னக் கண்ணீர் கலுழ்ந்தரன் முன்ன ரேக
வள்ளறன் சென்னி மேலு மற்றவை யிருப்பக் கண்டார்.

(இ-ள்) திறக்கக்கூடிய இரும்பாற் செய்யப்பெற்ற, பூட்டைநீக்கிப், பெரியகதவைத் திறந்து, உள்ளேபோக, அவ்விடத்திலும் அன்னம் இறைந்து கிடப்பதைப்பார்த்து, யோசித்து இப்படிச்செய்த கள்ளர் யாரென்று, கண்ணீர்விட்டழுது, திருவாப்புடையீசர் சந்நிதானத்திற் போதலும், வேண்டுவார்க்கு வேண்டியவைகளை யீந்தருளும் அச்சிவலிங்கப் பெருமானது திருமுடியின்மேலும், அவ்வன்ன முதலியன தங்கியிருத்தலை நோக்கினார்கள். (எ-று) மற்று - அசை. (௨௦)

உச்சிட்ட மிதனை யொன்று முள்ளிலா தஞ்சா தம்பொன்
கச்சிட்ட முலையாள் பாகன் கதிர்த்திரு முடியின் மேலும்
வைச்சிட்ட தென்கொ லந்தோ வந்தவா றென்னோ வென்று
பெய்ச்சிட்ட ராதி யாரும் வெருவினு ருருகி னூரால்.

(இ-ள்) சேஷமாகிய இவ்வடிசிலைக், கொஞ்சமும் நினையாமலும், பயப்படாமலும், அழகிய பொன்மயமான கச்சிறுக்கிய ஸ்தனங்களையுடைய உமாதேவியினது பாகராகிய சிவபெருமானது ஒளிபடைத்த, திருமுடியின் மேலும் வைத்தது என்னை? ஐயோ இதுவந்தவிதம் யாதோ, என்று உண்மையாளப் பெரியோர் முதலிய யாவரும் பயந்தார், மனங்கரைந்தார். (எ-று) ஆல் - அசை. (௨௧)

அச்செயல் கோயில் வைகு மரசரித் தொழில்செய் மாக்க
ளிச்செயல் புரிந்தா ரியாவ ரெனச்சினந் திருகி வார்ந்த
மைச்சுரு ளோதி பாகன் மந்திரப் பெரியோர் தம்மை
நிச்சயித் துரைமி னென்று நிறுத்தினர் கடுத்தா ரன்னோர்.

(இ-ள்) ஆலயத்திலுள்ள, மேல்விசாரணைக்கர்த்தர்கள், அச்செய்கை யைப்பார்த்து, இக்கொடியசெய்கையைச் செய்தவர் யாவரென்று கோபமதி கரித்து, நீண்டகரிய சுருண்ட கூந்தலையுடைய, உமாதேவியின் பாகராகிய பரமசிவன், வீற்றிருந்தருளும் திருக்கோயிலில், ஸ்தானீகர்களாகிய பெரியோர் களை, உங்களுக்குள் நிர்மானித்துச், சொல்லுங்களென்று தடுத்து நிறுத்தி னார்கள். அதுகண்ட அப்பெரியோர். (எ-று) (உஉ)

முத்திரை யிருப்பப் பூட்டு முறிபடா திருப்ப வுள்புக்
கத்தமண் டபமு மிச்சி லென்னமாங் காங்குச் சிந்தி
ருத்திரக் களவு மின்றிக் குறியிசைச் சொன்றி யாக்குஞ்
சித்திர மிதனை யொன்றுந் தெளிகிலம் யாங்க ளென்றார்.

(இ-ள்). வைத்த முத்திரையும் கெடாமலிருக்க, பூட்டும் உடைபடாம லிருக்க உள்ளேபோய்ச், சேவை அன்னத்தை அர்த்தமண்டபத்திலும், பல இடங்களிலும் இறைத்து, வஞ்சகத்தன்மை பொருந்திய களவுமில்லாமல் சிவ லிங்கப்பெருமான்மீதும் சாதத்தை வைத்திருக்கும் இந்த அதிசயத்தை யாங் கள் சிறிதும் தெளிகிலேம் என்று கூறினார்கள். (எ-று) (உங)

பின்னுமுட் காப்புங் கோயிற் பெரும்புறக் காப்பு மேற்கொண்
டுன்னருந் தொழில்செய் வாளர் புறந்தண்ட மிழைப்ப வோலிட்
டன்னவ ராற்றி மாய மறிகிலே மென்ன வையுற்
றென்னிது நடந்த வாறென் றாராயாங் கிருக்கும் வேலை.

( இ - ள் ) அதன் பிறகும் திருக்கோயிலின் உட்காவலையும் பெரியபுறக் காவலையும், மேற்கொண்டு, நினைத்தற்கரிய பணிவிடைசெய்யும் வேலைக்கா ரர்களை மிக்க தண்டனைசெய்ய (அதனையாற்றாது) அவர்கள் கூச்சலிட்டு அழுது, இந்த மாயத்தை யாங்கள் தெரிந்திலேம் என்று மொழிய, யாவரும் சந்தேகமடைந்து, இது நடந்தவிதம் எப்படியென்று கலந்து ஆராய்ந்துகொ ண்டு, அங்கிருக்கும்போது, (எ-று)

உன்னருந்தொழில் - யாவராலும் மதிக்கப்படும் அருந்தொழில் எனி னும் அமையும்.



ஓலம் — ஓல் எனக்கடைகுறைந்தது, (உச)

சிவமுணர் புனித ராஞ்சு தரிசன மறையோர் காலைத்
தவநிய தியினை முற்றித் தக்கபா தலத்தி னின்று
மவனியிற் றோன்றுஞ் சோதி யன்னவி னோத நாத
னவமலர்க் கழல்கண் டேத்த நற்றளி யகத்துள் வந்தார்.

(இ-ள்) சிவபெருமானை யுள்ளவாறே உணர்ந்த, பரிசுத்தராகிய சுதரிசனரென்னும் பிராமணர், காலநியமங்களை மிக முடித்துக்கொண்டு, தகுதிபெற்ற பாதாளலோகத்தினின்றும், சுயம்புவாய்ப் பூமியிற்றோன்றியரு ளிய, சோதிசொரூபரான அன்னவினோதமூர்த்தியினது, புதியதாமரைமல ர்போலும் திருவடிகளைத் தெரிசித்துத் துதித்தற்பொருட்டுத் திருக்கோயி லுள் வந்தனர். (எ-று) (உரு)

வருதலு நடந்த வண்ணங் கேட்டுளம் வருந்தி மாழ்கி
யுருகினர் பதைத்து ளெய்தி நோக்கின ருளத்தா சங்கை
பெருகினர் குறிப்பி னூற்றம் பெட்டியெஞ் சனஞ்சேர் றென்றுக்
கருகிரு ளிடைநேற் றுற்ற காரணந் தெரியக் கூறி.

( இ - ள் )வரவும் நடந்த செய்தியைக் கேள்வியுற்று, மனம்நொந்து மயக்கமடைந்தவராகிப் பதைபதைத்து, உள்ளே போய்ப்பார்த்தனர். மன திலே சந்தேகம் மிகவும் அடைந்தார். குறிப்பினாலே தம் வீட்டிருந்த பெட்டியும், பதார்த்தங்களும், அன்னமுமே யிவையென்று துணிந்து, நேற் றையதினத்தில், கறுத்த இருள் நிரம்பிய இராத்திரியில் நடந்த செய்கை யை யாவர்க்குந்தெரியும்படி சொல்லி, (எ-று) (உசு)

அந்தணர் சிவனு மென்னு மவனையின் கணழமி னென்றார்
மந்திரக் காவல் பூண்டோன் வந்தெதிர் வணங்க வந்த
தந்திர மொழிதி யென்னத் தளர்ந்துவாய் புலர்ந்து கம்பித்
திந்திர சால மைய விம்மொழி யெனத்தாழ்ந் தானால்.

(இ-ள்) அச்சுதரிசனரென்னும் பிராமணர், சிவன் நான் என்னும் அக்காவற்காரனை இங்கே கூப்பிடுவீரென்று கூறினார். திருக்கோயிற்காவற் காரனாகிய அவன் வந்து முன்னே பணிந்து நிற்க, (அவனைப்பார்த்து) நடந் தசெய்கையைச்சொல்வாயென்றுகேட்க, அவன் மனஞ்சோர்ந்து வாய்வாடி நடுங்கி, ஐயா இவ்வார்த்தை இந்திரசாலமாக இருக்கிறது எனப்புகன்று வணங்கினான். (எ-று)

ஆல்- ஐயசை. இந்திரசாலம்—அற்புதவித்தை. (உஎ)

அங்கவன் முகத்தி னோடு மகத்திய லுணர்ந்தி யாரு
மிங்கிவன் செயலன் றம்ப லவர்பொருட் டாப்ப னூர்நந்
தங்களுஞ் சடையார் செய்த திருவிளை யாட லென்னாத்
தங்களிற் றெளிந்தா னந்த சாகரத் தழிழ்ந்தி னாரால்.

(இ-ள்) அக்காவற்காரனுடைய முகத்தின் றன்மையையும், மனத்தின் தன்மையையும், தெரிந்து யாவரும், இச்செய்கை இக்காவற்காரன் செய்கையில்லை. மெய்யன்பராகிய இச்சுதரிசனரென்னும் அந்தணர்பொருட்டு, நமது திருவாப்பனூரிலெழுந்தருளும், சந்திரனைத்தரித்த சடைமுடியையுடைய திருவாப்புடையீசர், செய்தருளிய திருவிளையாடலாகும் இது, என்று தங்களுக்குள் நிச்சயித்து; பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கினார்கள். (எ-று) அங்கு-இங்கு. ஆல்-அசைகள். (௨அ)

நஞ்சனேன் பொருட்டிவ் வண்ணம் நம்பிரான் புரிந்த தென்னாக்
கஞ்சனூர் முனிவர் கண்ணீர்க் கடலிடைக் குளித்தார் கோயி
லெஞ்சலி லடியார் கூடி யாவெரால் பொழுப்பி யேத்தி
யஞ்சலித் திரும்பூ தெய்தி யாடினார் பாடி னாரால்.

(இ-ள்) எளியனேன் நிமித்தம், இவ்வாறு திருவாப்புடையீசர் செய்த வியப்பு என்று கஞ்சனூரில் அவதரித்த அப்பிராமணர், இரண்டு கண்களினின்றும் பெருகுகின்ற ஜலப்பெருக்கத்தில் மூழ்கினார். திருக்கோயிலினுள்ள குறைவில்லாத சிவனடியார்கள் ஒருங்குதிரண்டு, ஹரஹரமுழக்கஞ்செய்து, துதித்து அஞ்சலிபுரிந்து, ஆச்சரியமடைந்து ஆனந்தக்கூத்தாடினவர்களாய்ப் பாடினார்கள். (எ-று)
ஆல்-அசை. (௨௯)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கஞ்சனூரில்வா ழந்த ணாளர்சேர் கஞ்சுல் வாயினான் வந்து காவலாய்
நஞ்ச மூர்கிரீ பன்சொல் காதைதா னம்பி யோதுவோர் பம்பு கேள்வியோர், நெஞ்ச னோதியா னஞ்செய் மெய்ம்மையோர் நிந்தி யாதசீர் தங்கி வாழ்வரும், விஞ்ச பாவநா சஞ்செய் திறிலான் வெள்ளி வீடுவே துண்ட மேவுவார்.

(இ-ள்) கஞ்சனூரில் அவதரித்து வாழ்ந்த பிராமணராகிய சுதரிசனர் அடைந்த அக்காலிராத்திரியில், விஷங்குடிகொண்டகண்டத்தையுடைய திருவாப்புடையீசர் காவற்காரராய் வந்து சென்ற இச்சரித்திரத்தை, நம்பிக்கையுடன் சொல்பவர்களும், அதை நிரம்பக்கேட்பவர்களும், மனநிலை நியாயிக்கும் உண்மையுடையோர்களும், ஒருவராலும் இகழப்படாத கீர்த்தி நிலைபெற்று வாழ்வர். அன்றியும் ஊழ்விர்த்திக்கும் பாவவினைகளை யொழித்து, அழிவில்லாத சிவபிரான் எழுந்தருளியிருக்கும், உயர்ந்த வெள்ளியங்கிரியில் வாழப்பெறுவர். (எ-று) (௩௦)



சுதரிசனச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௬௪௪.

# அரிச்சந்திரன் தீர்த்தயாத்திரைச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

இன்னு மோர்கதை யியம்புதுங் கேட்பவர்க் கென்றுந்
துன்னி யாங்கெதிர் காலத்தி னுறுவினை துறந்து
மன்னு மாப்புக ழாயுசுஞ் செல்வமும் வழங்கி
முன்னு நன்கதி தருமெனச் சூதன்பின் மொழிவான்.

(இ-ள்) இன்னும் ஒரு சரித்திரத்தைச் சொல்லுகின்றோம். அது கேட்பவர்களுக்கு எப்போதும், எதிர்காலத்தில் நெருங்கிவரும்; ஆகாமிய வினைகளைப்போக்கி, நிலைபெற்ற மிக்க கீர்த்தியும், ஆயுசும், செல்வமும் ஆகிய இவற்றைக்கொடுத்து, யாவரும் மதிக்கத்தக்க நல்ல மோக்ஷத்தையும் கொடுக்கும் என்று பின் சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர். (எ-று) (௧)

போதிய விழ்மலர்க் கவட்டிலை யார்த்தடம் புயத்துக்
கதிர வன்குலக் கான்முளை யாமயன் மனுச்சந்
ததிய னத்தரு வரசர்க ளுறைதரச் சரயு
நதிவ ளத்தினி தமர்தரு மயோத்திமா நகரம்.

(இ-ள்) கட்டவிழ்ந்த மலர்களையும், பிளவுவாய்ந்த இலைகளையுமுடைய, திருவாத்திமாலையைத்தரித்த விசாலமான புயத்தினையுடைய சூரியகுலத்துக்கு ஆதியாகிய வைவஸ்வதமனுவினுடைய சந்ததியெனப்பட்ட அரசர்கள் வசிக்கச் சரயுமாநதியினையுடைய வளங்களோடு, இனிமையுடையதாய் நிலைபெற்றிருக்கும் அயோத்திமாநகரம். (எ-று) (௨)

எம்முகங் தோறுஞ் சென்றுசென் றினிதுநோக் குறினு
மம்முகந் தொறு மலர்த்திரு மகள்வினை யாடுந்
செம்முகப் பெருவாயிலு நியமமுந் தெருக்கு
மைம்முகப் புவி மாதணி கலமெனப் பதிந்த.

(இ-ள்) எவ்வெவ்விடங்கள்தோறுஞ்சென்று, சென்று, இனிது பார்க்கினும், அவ்வவ்விடங்கடோறும், செந்தாமரை மலரில் வசிக்கும் சீதேவி, நிலைபெற்றிருக்கின்ற, செவ்வியமுகப்புகளையுடைய பெரியவாயில்களும், தெருக்களும், நெருங்கிப்பசிய இடமகன்ற பூமிதேவி அணிந்தஆபரணம் போலப் பொருந்தியிருப்பன. (எ-று) (௫)

நெடிக கர்த்தரு நியதியின் பெரும்பணை நீட்டிப்
படர்மணத் தழை பொதுளிநல் லணிமலர் பரப்பித்
தொடரு மன்பதைப் புள்ளின நுகர்தரத் துறைந்து
வடுவி லாவனை மெறுங்கனி பழுத்தசீர் வளத்த.

(இ-ள்) உயர்ந்த அயோத்திநகரமாகிய விருக்ஷமானது, நெருக்கமாகிய பெரியகிளைகளை நீளவிடுத்துப், பரவிய மிகைளாகிய இலைகள் செறியப் பெற்று, நல்ல அலங்காரமாகிய பூக்களைத்தோற்றுவித்துத், தொடர்ந்துவருகின்ற மக்கட்கூட்டங்களாகிய பறவைகள், உண்ணநெருங்கிக் குற்றமற்ற கடைகளாகிய பழங்கள் பழுத்திருக்கின்ற சிறந்த வளப்பத்தையுடையது. (எ-று)

வளத்தது என்பது ஈறுகுறைந்தது. அல்லது ஒருமையிற் பன்மைமயக்கமுமாம். (௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பரவுநகர்க் கரசனறங் கடவுளருட் கடலுயிர்கள் பயிர்க்கு மேக
மிருபொருள்வைப் பிடம்பொறைமி றுறைப்புள்ளசய மகள்கோயி
லிசையின் மூர்த்தி, மருவிநிறை குணமலை மதிவிளக்கு நிலமிரவி மரபின் பொற்பூண், கருதுமனு நூற்பொருண்மற் றயலரசர் புனைசிரசே
கரமொப் பாரேன்.

(இ-ள்) புகழ்ப்பெற்ற அவ்வயோத்திமா நகரத்திற்கு அரசனாயுள்ளவன், தருமதேவதையை ஒத்தவன், கிருபையிலே சமுத்திரம் போன்றவன், ஆன்மாக்களாகிய நல்லபயிர்களுக்கு மேகம் போன்றவன், கல்விப்பொருள்



செல்வப்பொருள் என்னும் இரண்டும் வைத்தற்குரிய பெட்டிபோன்றவன், பொறுமையாகிய குணத்திற்கு இருப்பிடமாயுள்ளவன், விஜயலக்ஷ்மிக்கு ஆலயமாயுள்ளவன், கீர்த்தியே வடிவமாகவுள்ளவன், நிலைபெற்று நிரம்பிய குணமலையாயுள்ளவன், அறிவுவிளையும் விளைநிலமாயுள்ளவன், சூரியகுலத்திற்கு அழகிய பொன்னாலாகிய ஓர் ஆபரணமானவன், யாவரும் மதிக்கத்தக்க மனுசாஸ்திரத்திற்கு அர்த்தமாயிருப்பவன், வேற்றரசர்கள் தரித்துக் கொள்ளும் கிரீடத்தை நிகர்த்தவன். (எ-று) மற்று-அசை. (௭)

தூங்காமை யரணுடைமை படையுடைமை துணிவுடைமை
தூய்மை கேண்மை, நீங்காமை யறிவுடைமை நாணுடைமை பொ
றைமைபண்மை நெறிச்செ லாமை, பூங்காமை யெனக்கொடுக்குங்
கொடைமடமை யினைவதழுவிப் புரவுபூண்டோன், நீங்காமை
வகைப்பயந்தீர்த் தாறகற்றி யேழ்நிலக்கோல் செலுத்தா நின்றோன்

(இ-ள்) இராசகாரியங்களில் விரைவுடைமையும், மதில் அரண் முதலிய காவலுடைமையும், நால்வகைச்சேனைகளையுடைமையும், ஆண்மையுடைமையும், சுத்தமுடைமையும், உறுதியுணர்த்தவல்ல நட்பினையகலாதுடைமையும், பொருள்களை நுணுகியாராய்தலுடைமையும், நாணவேண்டியவற்றில் நாணுதலுடைமையும், பொறுக்கத்தக்க குற்றங்களைப் பொறுத்தலுடைமையும், இழிந்த மார்க்கத்திற் செல்லாது நன்னெறிக்கட் சேறலுடைமையும், அழகிய கற்பகச்சோலை, மேகம் என்னும் இவைகளைப்போல வரையாது கொடுத்தலுடைமையும், ஆகிய இந்நற்குணங்களால் காத்தலை மேற்கொண்டவன், தீங்குவிளையும் ஐந்துவிதமான பயங்களையும் தீர்த்து, அறுவகைக் குற்றங்களையும் நீக்கி, எழுவகைத்தீவுகளிலும் செங்கோலைச் செலுத்துகின்றவன். (எ-று.)

கொடைமடமை என்பது விரியுழி, கொடுத்தற்கண் உளதாகும்மடமை எனவிரியும். அஃதாவது தன்னிடத்து முன்னொரு பொருளையிரந்து பெற்றவர்தாமே பின்னரும் வந்து இரப்பினும் அவர்க்கு ஈதற்கண்ணே இவர் முன்னர்ப் பெற்றவரென உணராமையாம்.

ஐவகைப்பயமாவன தன்னாலும், பரிசனத்தாலும், பகைவராலும், கள்வராலும், பிறவுயிர்களாலும் வரும் அச்சங்கள்.

அறுவகைக் குற்றங்களாவன, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பனவாம். (௮)

கலிநிலைத்துறை.

செயிரில் கோசல நாட்டினும் பதியினுஞ் செறிந்த
துயிரி னல்லவைப் படையினு மமைச்சினு மளங்குரு
மயர்வில் கற்புடை மனைவியினுஞ் சேயினு மாகத்
துயிரி னும்புகழ் சத்தியம் புரப்பதொன் றுடையோன்

(இ-ள்) குற்றமில்லாத கோசலநாட்டிலும், அயோத்திமாநகரத்திலும், நெருங்கித்தாக்குகின்றியல்பின யானை, குதிரை, தேர், காலாள் என்னும் சதுரங்க சைனியங்களிலும், மந்திரிகளிலும், கலங்கித் தளர்ச்சியுறாத கற்புத்தன்மையையுடைய மனைவியிலும், புத்திரனிலும், தன் சரீரத்துள்ள ஆன்மாவிலும், சொல்லும்சத்தியம் வழுவாது காப்பதொன்றையே உறுதியாகவுடையவன். (எ-று)

எவற்றினும் சிறப்பச்சத்தியம் வழுவாது காப்பவன் என்பது கருத்து. (௭)

இவர் தருந்திருப் பெயரரிச் சந்திர னென்போ
னவனி சூழ்தர வேற்றுநா ளலைகடல் குடித்த
தவன வன்வரு தனுங்கடை புரப்பவன் சார்ந்த
கவனி காவலற் குணர்த்தின னிரைவினுங் கெழுந்தான்.

(இ-ள்) எங்கும் ஒப்பில்வழங்குகின்ற சிறந்த நாமம், அரிச்சந்திரனெனப் பெறுவன். அவ்வரிச்சந்திரன் நிலைபெற்று அரசுசெலுத்தி வருங்காலத்தில் (ஒருநாள்) அலைகளையுடையசமுத்திரத்தைப்பருகியருளிய, அகத்திய முனிவர் அங்கே எழுந்தருளுதலும், வாயிற்காப்பாளன் உள்ளணைந்து, இவ்வுலகையாளும் அவ்வரசனுக்கு அறிவித்தான். அதுகேட்டு அரசன் விரைவில் இருக்கைவிட்டு எழுந்தனன். (எ-று)

(௮)

தனைவணங்குதலும் என்னும் பாடம்.

நடந்த ருக்கிய மாதிய கன்புரோ கிதர்கொண்
டடைந்தி டத்தமிழ் முனிவனைப் பூசனை யாற்றித்
தொடர்ந்த மெய்த்தவந் தீர்த்தநந் தனந்தருச் சூழல்
படர்ந்த புன்முதல் விளைவுறு மருமொடும் பாரா.



(இ-ள்) வேகமாகச்சென்று, சிறந்த தனது புரோகிதர்கள் அர்க்கிய தீர்த்த முதலியவைகொண்டு அணுகத் தமிழாசிரியராகிய அகத்திய முனிவரைப் பூசித்து, விடாது அனுஷ்டிக்கப்பட்டுவரும், உண்மைத் தவசும், தீர்த்தமும், திருநந்தனவனமும், விருக்ஷங்கள் நிறைந்த சோலைகளும், தழைந்த புல் முதலியவைகளும், விர்த்தித்திருக்கின்றனவாவென்றுகேட்டலும், அம்முனிவர் கிருபையோடும் அரசனை நோக்கி, (எ-று) (௯)

இனிய நாடுநன் குடியுமவ் வாறிலொன் றீந்த
துனியில் செய்பொருட் கோசமு மாண்படைத் தொகையுங்
கனியு மென்மொழி மகார்முதல் வினவியுட் கரவின்
முனியும் வேந்துடன் முகமனன் கிருக்கெதிர் மொழிய.

(இ-ள்) உள்ளேவஞ்சகமில்லாத அகத்தியமுனிவரும் இனிதிருந்து இனியதாகிய நாடும், அதிலுள்ள நல்ல குடிகளும், அக்குடிகள் ஆறிலொரு பங்கை ஈந்த குறைவில்லாத செல்வப்பொருட்பொக்கிஷமும், மாட்சிமையுடைய சேனைக்கூட்டங்களும், முதிர்ந்த மெல்லிய வார்த்தைகளையுடைய குழந்தைகளும் முதலியவற்றை வினவி, அரசனுடன் உபசார வார்த்தைகளை எதிர் கூறுகிறச. (எ-று) (௧௦)

இருகை கூப்பிநின் றிற்றைநா ளடியனே னிழைத்த
பரவு பூசனை விரதநற் புண்ணியப் பயன்போற்
றெரிசனங்கொடுத் தெழுந்தரு ளினையிவண் சேர்ந்த
பரிசு தென்னவை செயுங்கருத் தெனக்கெனப் பகர்ந்தான்.

(இ-ள்) இரண்டு கைகளையுங் குவித்து நின்றுகொண்டு, இன்றுவரையில் அடியேன் செய்த புகழ்பெற்ற சிவபூசை, விரதம், நல்ல சிவபுண்ணியம் ஆகிய இவற்றின் பிரயோசனத்தைப்போல அடியேனுக்குத் தரிசனமளித்து எழுந்தருளினீர். இவ்விடத்திற்கு எழுந்தருளிய உத்தேசம் என்னை? அக்காரியங்களைச் செய்யவேண்டுமென்னும் விருப்பமே எனக்குள்ளது என்று விண்ணப்பித்தனன். (எ-று) (௧௧)

இனன்குலத் தவ கேண்மதி யெம்பெருங் கயிலையாங்
கனிந வுந்தியா னத்திருந் தருளுமக் காலை
நினது சன்பகா விரசுமே வடுநெடும் பிடை
புனைவ ருத்தநுங் கண்டனம் புரைப்பவிங் குற்றேம்,

(இ-ள்) சூரியகுலந்தரசனே கேட்பாயாக, நமதாச்சிரமத்தில் நாம் மூநிர்க்கதவத்தோடு கூடிய தியானத்தில் இருந்த அத்தருணத்தில், உன்னுடைய ஜன்மநக்ஷத்திரத்தில், இராகு வரவும், அதனால் மிக்க துன்பம் உன்னை இடர்செய்யவும் பார்த்து, அவற்றைத் தெரிவிப்பதற்காக இங்கே வந்தோம். [எ-று] (௩௨)

திருத்த யாத்திரை நீசெயிற் றீருநற் றினமும்
பொருத்த முற்றநல் லோரையும் புகுந்ததிப் பொழுதே
விருப்பி னாற்கடி தேகுதி யெய்துநின் வேட்கை
பிருந்தி யேய்புகுந் துயரென வேகினன் முனிவன்.

(இ-ள்) ஆதலால் புண்ணியதீர்த்தங்களிற் சென்று, ஸ்நானஞ்செய்தலை நீ செய்தால், அத்துன்பங்களெல்லாம் நிவிர்த்தியாகும், அதற்குத்தக்க பொருத்தமான, சுபதினமும் சுபலக்கினமும் கூடியது இத்தருணமேயாம், ஆதலால் விரையச் செல்வாய். உன் எண்ணமெல்லாம் கைகூடும். போகாதிருப்பின் துன்பம் வருமென்று மொழிந்து, அவ்வசத்திய முனிவர் சென்றனர். (எ-று) (௩௩)

விரைந்து வேந்தனும் யாத்திரை போய்வர விக்கம்
பொருந்து றாதநங் கரிமுக விமலனைப் பூசித்
தருந்து வித்துயர்ந் தோர்க்குந்தக் கிளையொடு மடைகாய்
திருந்து நக்கொடுத் தாசிபெற் றநுச்சையிற் சென்றான்.

(இ-ள்) அரசனும் சீக்கிரமாகத் தீர்த்தயாத்திரைசென்று, வருவதற்கு இடையூறுவாராமல், நமது மலரடிதராகிய யானைமுக விநாயகமூர்த்தியைப் பூசித்து, விசேஷ நிவேதனங்கள் செய்வித்துப், பெரியோர்களுக்குத் தக்ஷிணையுடன் தாம்பூலமும் திருத்தமாகக் கொடுத்து, அவர்களுடைய ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு, அவர்கள் உத்தரவினால் பிரயாணமாயினான். (எ-று)

அருந்துவித்தல் உயர்ந்தோர்க்கும் ஆம் - அனுக்ஞை என்பது அநுச்சையெனத்திரிந்தது. (௩௪)

பொருந்த வந்தனி வசிட்டனு மனைவியும் பிறரும்
பரிந்து முன்செல நிதியொடுந் தொடர்ந்தபின் படர்ந்து
பொருந்தி மிகமிக நாரதி னறும்புன லாடித்
திருந்த சங்கரற் கண்டடி வணங்கினன் வேந்தன்.

(இ-ள்) அப்பொழுது ஒப்பில்லாத தவசிரேஷ்டராகிய வசிட்டமுனிவரும், அளவில்லாத பிராமணர்களும், அன்புடன் முன்னே போகத், தா



மும் வேண்டிய திரவியங்களுடனே அவர்கள் பின்னே தொடர்ந்து சென்று, உயர்ந்த திருக்கேதாரமென்னும் தலத்திலடைந்து, அங்குள்ள சிவதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, அவ்வெழுந்தருளியிருக்கும் கேதாரநாதரைத் தெரிசனஞ்செய்து திருவடிகளிற் பணிந்து அங்குநின்றும் சென்று, (எ-று)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பிடைவெதிரி காச்சிரமந் தனிலடைந்து வேத வியாதனைக்கண்
டுயர்நர நாரயணரை வணங்கித், தடையில்கோ மதிசிந்து கண்ட
கைநற் சரயு சங்கமநீர்ப் பிரயாகை யினுமூழ்கிக் காசி, யிடைமருவிக்
கங்கைமணி கன்னிகையி னாடி யரினுமிக் காமிசனை சலோவுமை
யைத் துண்டிதீ, வடுகனிற்றை நாலோலாதித் தனைக்கால வடுகக் கடவு
ளைமா தவனையெதிர் கண்டுதொழு தங்கண்.

(இ-ள்) நெருங்கிய வெதிரிகாச்சிரமத்தைச் சேர்ந்து, அங்குள்ள வேதவியாசமுனிவரைத் தெரிசனஞ்செய்து, மேன்மைபொருந்திய நரநாராயணமூர்த்திகளைப்பணிந்து, தடையில்லாத கோமதிநதி, சிந்துநதி, கண்டகைநதி, நல்லசரயுநதி, சங்கமதீர்த்தமாகிய பிரயாகை, என்னும் இப்புண்ணிய தீர்த்தங்களில ஸ்நானஞ்செய்து, காசிப்பதியையடைந்து கங்கையில், மணிகர்ணிகை என்னுந் துறையில் மூழ்கி, எல்லா மூர்த்திகளிலுஞ் சிறந்த, விசுவேச மூர்த்தியையும், விசாலாக்ஷியம்மையையும், மதமொழுகும் துண்டிவிநாயகமூர்த்தியையும், உலோலாதித்தனையும், காலபைரவமூர்த்தியையும், பிந்துமாதவனையும் தரிசித்து எதிர்வணங்கி அவ்விடத்தில், (எ-று)

வெதிரி—இலந்தைக்காடு.

நரநாராயணரென்பவருள், நர—சிவவடிவமும், நாரயணர் திருமால் வடிவமுமாயுள்ள முனிவர்கள். இவ்வியல்பு கூர்மபுராணம் உத்தரகாண்டத்திற்காண்க.

கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் மூன்றுநதிகளும் கூடுமிடமாகலின் "சங்கமநீர்ப்பிரயாகை" யெனப்பட்டது.

முற்காலத்திலே, திருமால் சக்கரத்தால் ஒருவாவியுண்டாக்கி, அதில் தன் வெயர்வைநீரைப்பூரித்து, அக்கரையிலிருந்து தவஞ்செய்யுங்கால், பிரமன்னாகிய விசுவேசுரர் அவர் தவத்தை வியந்து, சிரக்கம்பஞ்செய்யுங்கால், அவர் குண்டலத்தினின்றும் நழுவிய நாகரத்தினம் விழுதலால் மணிகர்ணிகை யெனப் பெயர்பெற்றுப் பின்னே கங்காநதி கலக்கப்பெற்றது என்பது காசிகாண்டமான்மியம்.

விசுவங்களுக்கு ஆதாரமாய் ஆதியில் பிரமவிட்டுணுவாதி தேவரைத் தோற்றுவிக்கும் நிமித்தம் தானே தோன்றியதாய்ச், சகலபாவங்களையும் நீக்கி விளங்குதலின் அக்காசியிலுள்ள சிவலிங்கம் விசுவேசுரரெனப் பெயர் பெற்றது.

உமை என்பது அன்னபூரணிய மையை. இத்தேவியார் ஆன்மாக்களுக்கு இஷ்டசித்திகளையளித்து விளங்குஞ் சிவசத்தி. விசாலாட்சியம்மையைக் கொள்ளினும் அமையும்.

துண்டிவிநாயகர் சகலவிக்கினங்களையும் போக்கி விளக்கும் பிரதான மூர்த்தி.

உலோலாதித்தன் என்பது சூரியன். திவோதாஸன் என்னும் அரசனுடைய ஒழுக்கத்தை மாற்றுதற் பொருட்டுச் சிவபிரானால் ஏவப்பட்டுவந்த சூரியன் பன்னிரண்டு ஆதித்த உருக்கொண்டு இக்காசியிலடையக்கடவேன் என்று அலைவுற்றமையால் உலோலாதித்தன் என இப்பெயர் பெற்றனர்.

காலபைரவர் அக்காசியிலுள்ள வைரவக்கடவுள். இவர் பிரமதேவருடைய சிரசைக்கொய்த தோஷநிவிர்த்திப்பொருட்டுச் சிவாக்ஞைப்படி இத்தலத்தையடைந்து வழிபடுவோர்களுடைய பாவங்களை நிவர்த்தித்துக் கொண்டு வீற்றிருக்கின்றனர்.

மாதவன் என்பது திருமால். இவர் அக்கினிவிந்து என்னும் அந்தணன் வேண்டுகோளின்படி, யாவர்க்கும் வேண்டும் வரங்களைப் பாலித்துக்கொண்டு, விந்துமாதவர் என வழங்குகின்றனர். (கஅ)

ஆறங்கமுடன் மறைபயிலுவார் அருந்தில்லையின் வைய வந்தடைந்தியல்புறு முனிவர் தாய்ந்து பிராத்தருப் பணைந்திடு மென்றிரணைகணிடை முதலிய நதிமா புமரங்கண்டு நீடேப்புந்தா யிராங்குடைந்தடு சேவித்துப், தெவப்பவத்தித் துருணகரா நம்பனித்தெம் பெருமான் சேவிலை நிலைந்தி கொண்டைந்து சென் றிறைஞ்சி, மறைபயிலேகாம்பரத்தெம் பரம்பரனை வணங்கி வரதரை மனந்தெரிசித் தேத்தியங்குமிருந்தான்.

(இ-ள்) ஆறுவகைச் சுவைகளையுடைய உணவுகளைப் பிராமணர்கள் உண்ணும்படிசெய்து, பின் கயை என்னுந்தலத்தையடைந்து, அழகுபொருந்திய பல்குனி யென்னு நதியிற் மூழ்கி, சிரார்த்தம், தர்ப்பணம் இவைகளுடன் மிகவும் திரண்ட அன்னபிண்டமளித்துக், கங்காநதி சென்று கட

லிற் சங்கமமாகு மிடத்தில் ஸ்நானஞ்செய்து, ஆயிரம் பசுக்களைத் தானமீந்து, வருத்துகின்ற பாவங்களைப்போக்கும் சகாதம் என்னும் தலத்தை வணங்கி, எமது பரமசிவன் வீற்றிருந்தருளும் சீபர்வதம், திருக்காளத்தி, திருவேங்கடம் என்னுந்தலங்களை யடைந்து வணங்கி, வேதங்கள் முழங்கிக்கொண்டிருக்கும் காஞ்சிபுரத்திற் சென்று, ஏகாம்பரேசுரரைத்தொழுது, வரதராசப்பெருமானையும் தெரிசனஞ்செய்து துதித்து உள்ளங்களித்தனன். (எ-று)

அறுவகைச் சுவைகளாவன:- கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கைப்பு, தித்திப்பு.

கங்கைநதி கடலிற் கலக்குமிடத்திற்கு கங்காசாகரம் என்பது பெயர்

சுவேதவராககற்பத்தில் கயாசுரன் என்பவன், கோலாகலகிரியில் தவசுசெய்யுங்கால் பிரசன்னராகிய மும்மூர்த்திகளால், தான் அதிபரிசுத்தனாகும்படி வேண்டிய வரம்பெற்று இருந்தனன். அக்காலத்தில் யாகஞ்செய்யவிரும்பிய பிரமதேவர் அவனுடலினும் பரிசுத்தமுள்ள பொருளின்மையால், அவனைவேண்டி, அவன் சிரசிலேயே குண்டம் வகுத்து யாகஞ்செய்யுங்கால், தருமியென்பவள் தன் கணவராகிய மரீசிமுனிவரால் சாபம் பெற்று சத்தியலோகத்திற் கல்லாய்க்கிடக்க, அக்கல்லை இக்கயாசுரனுடைய சிரசு அசையாவண்ணம், அப்பிரமதேவர் ஆக்ஞைப்படி, இயமன் கொண்டுவந்துவைத்தனன். வைத்ததும் அச்சிரசு அசையக்கண்டு, சகலமூர்த்திகளும் அச்சிலையில் பாதம் வைக்க அத்தருணத்தில், அவன் நீங்களும், மற்றுந்தீர்த்தங்களும் இச்சிலையில் வசிக்கவும், பரிசித்தவரது பாவம்போகவும், பிண்டமிட்டவரது பிதிரர்கள் நல்லுலகடையவும், வரங்கேட்டு அவ்வாறே பெற்றனனாகலின், அத்தலந்தானம் அவன் பெயரால் கயா என வழங்குகின்றது.

குடஞ்சுட்டு—பக. உவ-கடல்.

வேதங்களே மாமரவடிவாய் விளங்கி வழிபட்டிருத்தலின், "மறைபயிலேகாம்பரம்" என்றார். (கஎ)

அறந்தழைக்குங் காஞ்சிகடந் தம்மைநடம் பரவு மாலங்காடருணைபழமலைபணிந்து தில்லைப், புறந்தழைக்குந் திருவெல்லை தாழ்ந்து திருவீதி புகழ்ந்துதொழு தேழ்நிலைக்கோபுரம்வணங்கி மணிவாய், திறந்தழைக்குஞ் சுருதிபுபுகடப்பொருளி னுருவஞ்சிறந்ததிருவம்பலத்திற் றிகழ்ந்தொருபாற் பச்சை, நிறந்தழைக்கு முலைமகளிப்ப வருடுளிப்ப நடஞ்செய் நிமலனடி. பழிச்சியுள நெகிழ்ந்துருகி நின்றான்.

(இ-ள்) தர்மங்கள் செழித்துள்ள காஞ்சிபுரத்தையகன்று, காளிகாதேவி கண்டு திகைக்கும்படி, பெருமான் ஊர்த்ததாண்டவம் புரிந்தருளிய திருவாலங்காடு, திருவண்ணாமலை, விருத்தாசலம் என்னுந்தலங்களை வழிபட்டுச், சிதம்பரத்தின் புறத்தில் வளம்பெற்றுள்ள திருவெல்லையை யணுகித், திருவீதிகளைப் புகழ்ந்து தொழுது, எழுநிலைகளையுடைய கோபுரங்களையும் நமஸ்கரித்து, அழகியவாயைத் திறந்து துதித்து முறையிடுகின்ற வேதங்களின் உபநிடதப் பொருள்வடிவமாக மேம்பட்ட திருவம்பலத்திலே விளங்கி ஒருபாகத்திற் பச்சை நிறஞ்செழித்துப் பிரகாசிக்கும் சிவகாமசவுந்தரிகண்டு பேரானந்தமடையவும், திருவருள்பொழியவும் பஞ்சகிருத்தியத் திருநடனஞ் செய்தருளுகின்ற ஆனந்தகூத்தராகிய ஸ்ரீ சபாநடேசமூர்த்தியினது திருவடிகளை ஸ்தோத்திரஞ்செய்து நெஞ்சநெக்குருகிப் பணிந்தனன். (எ-று)

(௧௮)

அங்கிருந்து கழுமலப்பொற் பதியடைந்து வாஞ்சியக்குடமூக்
கிடைமருது வேதவனஞ் சாய்க்கா, டெங்குநிகழ் திருவாரூர் பெருந்
துறைசீ தளிப்புத் தூரிறைஞ்சிச் சேதுவிற்சென் றிருந்திலங்கோ
டியினிற், சங்கையற நானவிதிப் படிமூழ்கி யாதித் தனிச்சுடரை
யிராமநா யகனையடி பரவிப், பங்கயப்பூம் புனலாடிக் கோசமங்கை
யானைப் பணிந்துதிருக் கானப்பே ரூர்தொழுது படர்வான்.

(இ-ள்) அச்சிதம்பரஸ்தலத்தினின்று நீங்கி, அழகிய சீகாழி யென்னும் க்ஷேத்திரத்திற் சேர்ந்து பணிந்து, பின் திருவாஞ்சியம், கும்பகோணம், திருவிடைமருதூர், திருவெண்காடு, திருச்சாய்க்காடு, எவ்விடத்தும் பிரபலமாய் விளங்கும் திருவாரூர், திருப்பெருந்துறை, திருப்புத்தூர் என்னும் இப்பதிகளை வணங்கி, இராமேசுரத்திற்குப் போய்ப் பெருமைபொருந்திய தனுஷ்கோடி தீர்த்தத்தில், ஐயமற மூழ்கவேண்டிய விதிப்படி மூழ்கி, முதன்மையான ஒப்பற்ற சோதி சொரூபராகிய இராமலிங்கப்பெருமானைத் திருவடிகளில் நமஸ்கரித்துத் தாமரை மலர்கள் செறிந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, திருவுத்தரகோசமங்கை யென்னுந்தலத்தில் அமருங்கடவுளை வணங்கி, திருக்கானப்பேரூர் என்னுந் தலத்தை வழிபட்டு, அப்பாற்சென்றனன். (எ-று)

சீதளி, என்பது திருப்புத்தூரிலுள்ளதொரு தீர்த்தம். இது, சௌரிகனிதீர்த்தமெனப் பெயர்பெற்றுப், பின்னர் இலக்குமி தவஞ்செய்து அமர்தற்கு இடமாயினமையின் சீதளி யெனப் பெயர் பெற்றது.

சீ—இலக்குமி. தளி—ஆலயம். (௧௯)



ஆதிசிதம் பரந்திருப்பாற் கரபுரமே ஞளினத்திமலர் தரச்செ
ய்பிதிர் முத்திபுர மெனப்பே, ரோதியதென் பூவணத்தி னரசர்பிரா
னடைந்தங் குற்றமணி கன்னிகையி னாடியுயர் பிதிர்கட், கேதமிலெ
ட் டருப்பணநன் களித்துரிய மரபி னிரவிபுரி பூசனைகொண் டிருந்த
தனிப் பொருளைச், சோதியைஞா னச்சுடரைச் சுடரொளியை யொ
ருபாற் சுந்தரமின் னனையுமையைத் தொழுதுருகித் துதித்தான்.

(இ-ள்) மாத்தியந்தன முனிவருக்கும், தியானகாட்ட முனிவருக்கும் சிவபெருமான் பிரணவோபதேசம் புரிந்து, சிதம்பரத்தில் புறத்தே நடன தெரிசன மளித்தது போலவே, அகத்தே நடன தெரிசனமளிக்கப் பெற்ற தானமாகலின், சிதம்பரமெனவும், சூரியன் பூசித்தமையால் பாற்கரபுரமெனவும், அஸ்தி, புஷ்பமாகும்படி யனுக்கிரகித்தமையின் பிதிர் முத்திபுரமெனவும் பெயர் பெற்ற அழகிய திருப்பூவண மென்னுந் தலத்தில் அரசர்க்கரசனாகிய அரிச்சந்திரமன்னன் சேர்ந்து, அங்கேயுள்ள சூரியனுண்டாக்கப்பட்ட அத்தீர்த்தத்தில், திருமால் முதலாயினோர்வைத்த அமிர்தக்கூறு, மணிமயமாய் வீழ்ந்தமையின் மணிகன்னிகை எனப்பெயர்பெற்ற அத்தீர்த்தத்தில் முழுகி, மேலான பிதிர்தேவதைகளுக்குக் குற்றமற்ற திலதர்ப்பணங்களை நன்றாய்ச்செய்து, தமக்குரிய குலமுதல்வராகிய சூரியன் புரிந்த பூசையை அங்கீகரித்து அமர்ந்த ஒப்பற்ற பரம்பொருளாகியும் சோதி சொரூபராகியும், ஞானசூரியனாகியும், சகல ஒளிகளுக்கும் ஒளியாகியும் விளங்குகின்ற பூவணலிங்கேசுரரையும், ஓர் பாகத்தில்வீற்றிருந்தருளும் அழகிய மின்னன்னை என்னும் உமாதேவியையும் வணங்கி மனங்கரைந்து தோத்திரஞ்செய்தனன். (எ-று)

தாம்பிரவர்ணி நதிதீரத்தில், கோலாகலநகரிலுள்ள தருமஞ்ஞன் என்னும்பிராமணர் தன் பிதாவின் அஸ்தியைக் காசிக்கங்கையில்விடுதற்பொருட்டுக் கைக்கொண்டு செல்லுங்கால் திருப்பூவணத்தில் மணிகன்னிகைத் தீர்த்தத்தையடைந்து மூழ்கிக்கரையேறும்போது, பெருமழைபெய்தமையால் விரைந்து கரையேறுங்கால், கரையில் வைக்கப்பட்டிருந்த அவ்வஸ்திக்குடம் கால் இடறி அத்தீர்த்தத்தில் விழுந்தது; ஓடியெடுக்குமுன் அக்குடத்தினின்றுஞ் சிதறிய அஸ்தி முழுவதும் தாமரைமலர் உற்பல மலராயிருக்கக்கண்டு தனது பிதா முதலியோர் நற்கதியடைந்தனர் என்பது புராணசரிதம் ஆதலின் "அத்திமலர்தரச்செய்" எனவும், கோதாவிரி நதிதீரத்தில் போகவதிநகரத்தில் சுச்சோதி என்னும் அரசன் நாரதமுனிவர் அருளியபடி திருப்பூவணஞ்சேர்ந்து மணிகன்னிகை வைகைநதி முதலிய தீர்த்தங்களில் மூழ்கிவசிக்குநாளில், ஒரு நாள் மணிகன்னிகையிற்படிந்து, சங்கற்பபண்ணிக்கூர்

ச்சத்தில் பிதிர்க்களை ஆவாகித்து நான்கல்லொழுக்கமிக்கவனாயின், என்னுடைய பிதிர்ப்பிதாமகர் பிரபிதாமகர் அனைவரும் எனக்கெதிரில் தோன்றி நான் கொடுக்கும் திலோதகத்தையும் பிண்டத்தையும் ஏற்றருளவேண்டும். ஏற்காவிடின் எனதுயிரை விடுவேன் என்று பிரதிஞ்ஞைசெய்து கொடுத்தபோது அவ்வரசனுக்கு மாத்திரம் பிதிர்க்கள் அனைவரும் தேவவடிவங் கொண்டு எதிரில் தோன்றி பிண்டத்தையுண்டு ஆசீர்வதித்துச் சிவபெருமான் திருவடிநிழலடைந்தனர். ஆதலின் "பிதிர்முத்திபுரம்" எனவும் கூறினர். (உ0)

ஆங்ககன்று பரங்குன்றத் தமர்பவளக் குன்றை யலங்கிலை
வேற் படைமணியை யடிதொழுது மதுரைத், தேங்கமழ்பொற்
கமலத் தீர்த்தம் தருட்சித்திக் களிற்றைச் சேனபனக் கரும்பையணி
யாலவா யமுதைப், பாங்குறக்கண் டிரசிதமன் றுடனெறி சித்தப்
பதிகடந்து வசிட்டனொடும் பலவரொடும் படர்ந்து, பூங்கதிர்நித்
திலஞ்சுருட்டுந் திரைவேக வதிநீர்ப் பொருகரைப்பா லிடவபுரத்
திருநகர்புக் கனனால்.

(இ-ள்) அங்குநின்று நீங்கித் திருப்பரங் குன்றத்தில் நிலவும், பவளாசலம் போன்ற சிவபெருமானையும், பிரகாசிக்கின்ற தகடுபோன்ற வேலாயுதத்தைத் தரித்த, மாணிக்கம் போன்ற முருகக் கடவுளையும் திருவடிகளிற் பணிந்து, பின் மதுரையை யடைந்து அங்குள்ள வாசனை வீசுகின்ற பொற்றாமரை யென்னும், தீர்த்தத்திற் படிந்து, கிருபை பொருந்திய சித்திவிநாயக மூர்த்தியையும், கரும்பு போன்ற மீனாக்ஷியம்மையையும், அழகுவாய்ந்த திருவாலவாயி லெழுந்தருளும் அமிர்தம்போன்ற ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானையும் க்ரமமாகத் தெரிசித்து, வெள்ளியம்பலத்திற் செய்தருளும் தாண்டவ தரிசனஞ் செய்துகொண்டு, அத்தலத்தை நீங்கி, வசிட்டமுனிவரோடும், மற்றைப் பிராமணர்களோடும் நடந்து பொலிவாகிய கிரணங்களையுடைய முத்துக்களை மடக்கி வீசுகின்ற அலைகளையுடைய வைகையாற்றின் நீர் அலை மோதுகின்ற கரையின்கணுள்ள இடபபுரமென்னும் தலத்தை யடைந்தனன். (எ-று) இல்-அசை. (உக)

கலிவிருத்தம்.

ஓலநீர்த் திரைப்பசுந் தடங்குடைந்து ரோமசன்
கூலநீடு யோகமெய்தல் கண்டிறைஞ்சு வித்தமுன்
சாலநேர நின்றபோது தவன்விழித்து நோக்குநீ
ஞாலநாத நின்வரத்து நல்வரத்தி தென்சொலா.



(இ-ள்) ஒலிக்கின்ற பின்னலையுடைய அலைகள் பொருந்திய இடபதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, உரோமச முனிவர் அத் தீர்த்தக் கரையில் யோக நிஷ்டையிலிருப்பதைப் பார்த்து, அஞ்சலிசெய்து, அவர்முன் நெடுநேரம் நிற்கும்போது, தவ சிரேஷ்டராகிய அம்முனிவர் விழித்துப் பார்த்துக், கடல் சூழ்ந்த இப்பூமியையாளும் அரசனே உன்வரவு சுபவரவு என்று கூறி, (எ-று) (உஉ)

கண்டுநாள னேகமுண்டு காணெனப் புகன்றபின்
மண்டுதீர்த்த ரங்களையை வாலுகத்தை யன்னமாப்
பண்டுகாணு நாதரிப்ப திக்குன்னைக்கு மேன்மையார்
விண்டுகூற வார்க்கநாளும் வியப்பதொன்று கண்டனன்.

(இ-ள்) யான் உன்னைப் பார்த்து அனேக நாளாயின என்று கூறிப் பின்னர், முற்காலத்தில் நெருங்கிய தீர்த்திரைகளையுடைய வைகையாற்றிநுள்ள, வெண்மணலைச் சாதமாகச் செய்தருளிய அன்ன விநோத மூர்த்தி, இவ்விடபபுரத்தில் வீற்றிருக்கும் மேன்மையை யாவர் விரித்துச் சொல்ல வல்லவர். இத்தினத்திலும் யாவரும் வியக்கத்தக்கதொரு புதுமையைப்பார்த்தேன். (எ-று) காண்-முன்னிலையசை. (உ௩)

என்சொல்வேனெ னப்பணிந்தி லங்குசெங்கை வேலினான்
றன்சொலிற்று தித்துநின்று சாற்றுறாத தேனுமென்
முன்சொலத்த குந்தயாவின் மொழிகொடுத்த போதனென்
னின்சொலிற் புகழ்ந்துமன்ன வீதுகேளெ னச்சொல்வான்.

(இ-ள்) அதையாது சொல்லக் கடவேன், என்று அம்முனிவர்கூற, விளங்குகின்ற வேற்படையைத் தரித்த செவ்விய கையினையுடைய அரிச்சந்திரன் நமஸ்காரஞ் செய்து, தன் வாக்கியங்களினால் துதிசெய்து நின்றுகொண்டு, அது சொல்லக் கூடாததாயினும் அடியேன் முன் சொல்லலாம். ஆதலால் தயை செய்து திருவாய்மலர்ந் தருளவேண்டுமென்று பிரார்த்திக்கக், தபசிரேஷ்டராகிய அம்முனிவர் இன் சொற்களால் வியந்து, அரசனே இதனைக் கேட்பாயாக என்று சொல்வாராயினர். (எ-று) (உ௪)

தலைமையான்கொ ளிந்தமாத லத்துளோரி னோர்தையல்
கலைபெனத்த குப்பெயர்க்கு டத்திமாடு கன்றுளாள்
விலைமெனச்சொ லாதுபாவெ னென்றும்விற்றுள் வாழ்க்கையாள்
அலைமெனக்கொ டாதுபோர்வி ளைந்தலிக்கு மேன்மையாள்.

(இ-ள்) புண்ணியஸ்தலங்களுட் சிறந்ததாகக் கூறும், இவ்விடபபுரத்தில் உள்ளவளாய்ப், பிங்கலை யென்று சொல்லத்தக்க பெயரையுடையவளுமாகிய ஓர் இடைப்பெண், மாடுகளும், கன்றுகளும் மிக உள்ளவள். எப்போதும் பால், நெய் இவைகளை யில்லையென்று சொல்லாது விற்று உண்ணுகிற வாழ்க்கையுடையவள், மோரைமாத்திரம் கேட்பவர்க் கெல்லாம்விலையில்லாமலே விரைந்து கொடுக்கும் மேன்மையுள்ளவள். (எ-று) (உ௫)

இழுதுநாறு மேனியான சிந்தசெயம் மீரனைத்
தொழுதுநமையை மெய்த்தவத்த சுந்தரப்பெ யரினான்
பழுதில்கன்றி னங்களாயர் பாலரோடு மேய்க்குநாட்
பொழுதுதேர்வி லாதகால மாரியென்பு குந்ததால்.

(இ-ள்) செய்மணம் கமழுந் சரீரத்தையுடைய, அப்பிங்கலை யென்னும் இடைச்சி பெற்ற பிள்ளையானவன், நமது சிவபெருமானை வணங்கி, உள்ளே அன்புபெருக வந்த, சுந்தரன் என்னும் பெயரினையுடையவன். அவன் குற்றமற்ற கன்றுக் கூட்டங்களை, மற்றைய இடைப்பிள்ளைகளோடு மேய்த்துக்கொண்டு வருங்காலத்தில், நாழிகை மதிக்கக்கூடாத காலமாகிய மழைக்காலம் வந்தது. (எ-று) ஆல்—அசை. (உ௬)

புடையுடுத்த சிறுவரோடு மழைபொழிந்த போதெலாம்
படமிடைத்த வடமொடுக்கி நிற்பனங்கொர் பகன்மனைத்
திடையெடுத்த வேட்கையாலி வைத்தவாய்ம காரொடு
மடைதிருத்தி யோர்குளம்வ குத்துநீர்ம றித்தனன்.

(இ-ள்) பக்கத்திற் றன்னைச் சூழ்ந்த சிறு பிள்ளைகளோடு மழைபெய்த காலத்திலெல்லாம், கட்டியினிடத்தில் தன் சரீரத்தை யொடுக்கிக்கொண்டிருப்பான். இவ்வாறு நிகழு நாளிலே, ஒருநாள் மனதிலுண்டான ஆசைப் பெருக்கத்தால், சுற்றயிட்டவர்களிய இடைப்பிள்ளைகளோடும், அவ்விடத்தில் ஒருகுளமுண்டாக்கி, அதிலே ஜலத்தை நிரப்பினான். (எ-று) (உ௭)

கொட்டுமிட்டி வைத்தபின்பு நித்தநீரின் மைவிலா
யாட்டுவொன்வர் கூட்டுநத்து மாபுகன்றி வத்தனைத்
தொட்டுவந்த கன்றுமிட்டு புக்கிவைன்னைப் போற்குழைத்
திட்டிசெறு செய்துநாற்றெ டுத்துவந்து நட்டரோ.

(இ-ள்) கூட்டமாகத் தண்ணீர் நிரம்பியபின்னர், மதிக்கத்தக்க குழந்தைப் பருவவிளையாட்டினால், ஓர்குட்டடிக்கத்தக்க அற்பநிலஞ்செய் உண்டாக்கி, மேய்ப்பதற்காக ஓட்டிக்கொண்டுவந்த கன்றுகளை, அவ்வயலில் விட்டுழுது வெண்ணெயைப்போலக் குழைபடச்செய்து, செறிந்த சேறாக்கி, நாற்றுமுடிகளை யெடுத்துவந்து அதில் நட்டு. (எ-று) அரோ-அசை. (உ௮)



இந்நிலத்தி னிதாவிளைந்த தென்னிலந்த வைகைநீர்
பொன்னுமுத்த முங்கொழிக்க பூந்திரைக்க ரைக்கணே
கன்னிபக்க நின்றகிலை கப்பிரான்ற னக்கெனப்
பன்னிநித்த லும்புகுந்து பாதுகாப்ப தாயினன்.

(இ-ள்) இந்தநிலத்திலே நட்ட இந்நெற்பயிர், நன்றாய் விளைந்ததேல், இவ்வையையாற்று நீர் அடித்துக்கொண்டுவரும், பொன்முத்து இவைகளைக் கொழித்து ஒதுக்கும், பொலிவாகிய அலைகள் மோதுகின்ற கரையினிடமாகக், குரவங்கமழ் குழலம்மையார் ஓர்பாகத்தில் நிலைபெற்ற திருவாப்புடையீசருக்கேயாம், என்று மொழிந்து தினந்தோறும் போய்க்காவல் செய்பவனானான். (எ-று) (உ௯)

திறந்துவிட்டு நீர்தினஞ்செ லுத்துபோது சிறுகுளம்
வறந்துவிட்ட தஃதறிந்து மாசிலான்சு ரந்தபால்
கறந்துவிட்டு மம்மருங்கு கன்றுமேய்த்து நாடொறு
மறந்துவிட்டி டாதுமேல்வ ளர்த்துநன்ப யிர்ச்செய்தான்.

(இ-ள்) மடையைத் திறந்துவிட்டுத் தண்ணீரைத் தினமும் பாய்ச்சிக்கொண்டுவரும்போது, அந்தச்சிறியகுளமானது வற்றிப்போய்விட்டது. அதுதெரிந்து, அவ்விடைப்பிள்ளையானவன், குற்றமில்லாத பசுவின் மடியிற் சுரந்திருக்கிற பாலைக்கறந்து, அந்நெற்பயிருக்கு விட்டும், அதன் பக்கத்திலேயே கன்றுகளைமேய்த்தும் தினமும் மறவாமல் நல்ல அந்நெற்பயிரை விர்த்திசெய்தான். (எ-று) (௩0)

பால்பிடித்து முற்றிநற்ற லைபழுத்த பக்குவத்
தால்பிடித்தி ருந்தறஞ்சொ லன்னைசெங்கை முத்தலை
வேல்பிடித்த நாயினன்வி ரும்பிமேய்தல் கண்டுநன்
கோல்பிடித்த கையனன்ற கோன்மகிழ்ச்சி கூர்ந்தரோ.

(இ-ள்) நெற்கள் பால்பிடித்து முதிர்ந்து, அதின் கதிர்கள் முற்றிய சமயத்தில், கல்லாலவிருக்ஷத்தினிழலில் வீற்றிருந்து, அறங்களையுபதேசித்தருளிய சிவபெருமானது சிவந்தகரத்திலேந்தப்படும், சூலமுத்தலையிடப்பெற்ற காலையுடைய பகவானது இச்சித்து, அப்பயிரைமேய்தலை நோக்கி, நல்லகோலை ஏந்திய கரத்தையுடைய அவ்விடையர் குலதிலகனான சுந்தரன் என்பவன் களிப்புமிகுந்து, (எ-று) அரோ—அசை. (௩௧)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கால்பாய வெருண்டுவயற் கயல்பாய நாரைபாய்ந்து கடைவாய்
தோறும், பால்பாயக் கதிர்மேய வாப்புடையா னயனீர் பாந்து
பாயச், சால்பாய வுவகைமனத் தலைபாய வாவுருவத் தனைக்கொண்
டெங்கோன், சேல்பாய்மை விழிபாக னாப்புடையானுகர்வதெனாத்
தெளிந்தான் மன்னோ.

(இ-ள்) பசு தன்னுடைய கால்கள் பரவுதலால், அச்சமுற்று வயல்களிலுள்ள கயல் மச்சங்கள், துள்ளிக்குதிக்க, நாரைபாவித் தன் வாயின் கடைதோறும், பால் பாயும்படி கதிர்களை மேயா நிற்க, அது கண்ட சுத்தான், தன்னுடைய இரண்டு கண்களின்றும் நீர் சாய்ந்து ஒழுகவும், தகுதிபெற்ற பெருமகிழ்ச்சி மனத்தில் அதிகரிக்கவும், அப்பசுவை அடியார்களாய், எம்முதலைவரும், மைதீட்டிய சேல்போலுங் கண்களையுடைய உமாதேவி பாகரும் ஆகிய திருவாப்புடையீசரே, இப்பசு வுருவங்கொண்டு இப்பயிரை மேய்ந்தனவைத் தெளிந்தனன். (எ-று)

கயல்பாயவும், பால்பாயவும் மேய, நீர்பாயவும்
உவகைபாயவும் தெளிந்தான் என இயையும்.

ஆப்புடையான் என்பது ஆவைப்புடையானவனுடி என்றும் வினை எச்சப் பொருளில் வந்தது. (௩௨)

அச்செயல்கண் டனையாப்பு டையாருடையான் மகிழ்ந்துவிரைக்
கண்டார்கோன் றன், மெய்க்கொண்டான் புயற்றுணர்ந்தி யமைச்சு
ரிமை யிவற்களிப்ப வென்று மொய்ந்து, விச்சையிற்றொற் பணந்தா
இத் தித்தனையய தொன்றேனு மீந்தோர் மேயன் தன் முச்சுமு
மளிப்பளிக்க வர்த்தினரைப் பெருந்தகுனை வர்த்தி வேந்தே.

(இ-ள்) பசுவடிவங்கொண்டுவந்த அத்திருவாப்புடையீசர், அவ்விடையருடலைவருஷிய சுத்தானது, அவனுள்ளக் குறிப்பைநோக்கி மகிழ்ந்து, அவனுடைய உண்மைச் செயல்களைப், பாண்டியனுக்குவிரைய அறிவித்து, மந்திரித் தொழிலுரிமையை இவனுக்குக், தந்தருளவேண்டுமென்று திருவுளத்துக்கொண்டு, தமது விருப்பத்தின்படியே, பாண்டியனுக்குச் சொப்பனத்தில் கட்டளையிட்டு, அத்தொழிலேக் குக்கவித்தனர். யாவெதாரு அற்பப் பொருளேனும், தமக்கு ஈந்தவர் விரும்பினுல், அவர்கட்கு மூவுலகங்களையும் தந்தளிப்பர். இத்தகைய மிகப்பெரிய கருணைக்கடவுளேயாம், அரசினை இதனை கிடைத்தோய் அக. (எ-று) (௩௩.)



ஆதலினி யாயிரத்தெட் டகமறையோர்க் கித்தலத்து ளமைத்தி யேனுன், மூதிரையா னுவக்குமென வுரோமசன்மர் திரத்திரு வாய் மூடு முன்னர், நீதகவிம் முனியுரைத்த படியெமக்கு னுவகை தரச் செய்ந்நீ யென்றுச், சோதிகொள்வா னகடுகிழித் தொருமொழிவேந் திருசெவியிற் றங்கிற் றன்றே.

(இ-ள்) இவ்வாறிருத்தலால், நீ இத்தலத்தில் ஆயிரத்தெட்டு வீடு கட்டுவித்து, அந்தணர்க்குத் தானஞ்செய்வையேல், திருவாதிரை நக்ஷத்திரத்திற்குரிய திருவாப்புடையீசர் திருவுள்ளமகிழ்வர் என்று உரோமச முனிவர் வேதமுழக்கும் தமது திருவாயை மூடு முன்னரே, குற்றமற்ற இவ்வுரோமசமுனி சொல்லியவாறே, நமக்குத் திருவுள்ளத்தில் சந்தோஷமுண்டாக, நீ செய்வாயென்று, ஒளிபொருந்திய ஆகாயப்பரப்பைக் கிழித்துக் கொண்டு, ஓரசரீரிவாக்கானது, அவ்விராசனது இரண்டு காதுகளிலும், நிரம்பக்கேட்டது, (எ-று). அன்று—ஏ—அசைகள். (௩௪)

சிந்தையிடந் தருங்கமலர் பெருங்களிப்பாற சிவன்கோயிற் சென்றுசூழ்ந்து, வந்துபணிந் தன்னவிதே தனைக்குரவங் கமழ்குழலை வழுத்திமீண்டு, முந்துவசிட் டனையுரோ மசனையுங்கேட் டுரியசுப முகூர்த்தம் வைத்துத், தந்திரநூற் படியிருநான் கடுத்தவா யிரங்கிருகஞ் சமைத்தான் மன்னோ.

(இ-ள்) அவ்வரிச்சந்திரன் தன் மனமும், இடம் போதாததாகும்படி விரிந்த, பெருங்களிப்பினால், அச்சிவாலயத்திற் சென்று, பிரதக்ஷிணஞ்செய்து சந்நிதிமுன் வந்து நமஸ்கரித்து, அன்னவினோத மூர்த்தியையும், குரவங்கமழ் குழலம்மையையும் துதித்து, அகன்று, முதன்மைபெற்ற வசிட்ட முனிவரையும் உரோமச முனிவரையும் வினவித், தக்க சுபமுகூர்த்தம் நிச்சயித்து, சிற்ப சாஸ்திரப்படியே ஆயிரத்தெட்டு வீடுகளைக் கட்டுவித்தனன். (எ-று) மன், ஓ—அசைகள். (௩௫)

இலைமுற்றி சுவைப்பொருளு முரலுலக்கை யில்லுறைக் கிந்தனத்தோ, டலர்தருவெண் சாலிவல்சி தறிக்கினிய காய்வருக்க மறுவைபொற்பூண், குலவியமெண் கலமாதி பாத்திரமா வினமின்ன குறித்து வெவ்வேவ, றுலேவிலகத் தொறுமமைத்துத் தணர்களையினி தொடுமளித்தா னொருசொல் வேந்தன்.

(இ-ள்) சத்தியந்தவறாத அவ்வரிச்சந்திரன், உப்பு முதலாகிய சுவைபுள்ளி வஸ்துக்களும், உரலும் உலக்கையும் குடைகல், கிரிகைக்கல் முதலி

யானைகளும், வீரதும், வெண்ணிறமிக்க சம்பர்செல்லும், அவற்றினரிசியும், பதார்த்தங்களுக்கு இனியதாகிய நாய்வகைகளும், வஸ்திரங்களும், பொன் ஆபரணங்களும், விளக்கேறிய வெண்கல மாதியவற்றின் பாத்திரங்களும் பசுநிரைகளுமாகிய இவைகளையெல்லாம் குறிப்பாக நியமித்துக் கெடுதலில்லாத ஒவ்வொரு வீதிகளிலும், தனித்தனியமைத்துப் பிராம்மணர்கள் கையில் ஜலத்தாட்டினை தத்தஞ்செய்து கொடுத்தார். (எ-று) (௩௮)

இருபிறப்பி னோர்க்கநுளா யிரத்தொடிரு நான்குபங்கு விருப்பங் கொண்டு, மொருபிறப்பு மிலிக்குதவிப் பிரகாரங் கோபுரங்கள் மேயர்ந் த தீர்த்தக், கரையினிநிரு மண்டபஞ்செய் தளவிலணி யாடையொ ளிருகலந் தந்து, புரையறுக்கும் புனிற்றுஆ னைந்நூறு திரிகுலம் [illegible] மந்தான்.

(இ-ள்) பிராமணர்களுக்குக் கொடுத்த ஆயிரத்தெட்டுப் பங்கிலே, இரண்டுபாகத்தை, எப்போதும் ஒரு பிறப்புமில்லாதவராகிய திருவாப்புடையீசருக்குத் தத்தஞ் செய்து, திருக்கோயிற் பிரகாரங்களும், கோபுரங்களும் கட்டுவித்து, மேன்மைபொருந்திய இடப தீர்த்தக்கரையில், சந்நியா மண்டபங்களும் செய்வித்து, அளவில்லாத ஆபரணங்களும், வஸ்திரங்களும் எக்கும் ஒளிபெருக ச்செய்து, குற்றங்களைப் போக்குகின்ற இளங்கன்றுள்ள ஆயிரம் பசுக்களை, [illegible] ரசங்களையுடைய சூலக்குறி பொறித்து விட்டனன், (எ-று) (௩௯)

[illegible] மன்னன் [illegible] புகழுடனே [illegible] [illegible]

(இ-ள்) அதன்பின்னர் திருவாப்புடையீசர் திருவடியையும், குரங்கை முகமுடைய முனிவருடன் அம்பாள் தென்சங்கிலியும் பெறுவதற்குரிய [illegible] வணங்கி விடைபெற்றுக்கொண்டு, வசிட்ட முனிவருடன் அயோத்தியமாநகரையடைந்து, தானவன் யும் பெருமையுடைய அரசனாது சரித்திரத் கொண்ட கொடியயானையை யுடைய அரிச்சந்திரன் அமர்ந்தவனும், பின் நிலைபெற்றுவளர்கின்ற அரசு இயமாகிய நற்றத்தின் [illegible] இராச்சிய பரிபாலனஞ்செய்து சுவர்க்க லோகத்தை யடைந்தனன், (எ-று)



பொற்றகடு நிரைத்தனைய பூக்கொன்றை வனத்தமலன் புகழ்மை கேட்கப், பெற்றிடுநாம் மால்யானும் பவித்திரமா னேனென்று பேசி மோன, முற்றிருந்து சூதபவு ராணிகனை யாப்பனூருடையா னுக க், கற்றமுனிக் கணம்பூசித் தருள்பெற்று னந்தமதிற் கலந்தார் மன் னோ.

(இ-ள்) பொன்மயமான தகடுகளையே நிரை நிரையாக வைத்தாற் போன்ற பூக்களையுடைய கொன்றைவனத்தி லெழுந்தருளி யிருக்கின்ற, மலரகிதராகிய திருவாப்புடையீசரது, சரித்திரங்களைக் கேட்கப்பெற்ற துங்களால், யானும் பரிசுத்தனுபினேன், என்று திருவாய்மலர்ந்து, பின் மௌன நிலையடைந்திருந்த சூதபுராணிகரைத், திருவாப்பனூரில் வீற்றிருந்தருளும் திருவாப்புடையீசராகவே மதித்துச், சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த நைமிசாரணிய முனிவர்கள் பூசைசெய்து, அவரது கிருபையைப்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வை யடைந்தார்கள். (எ-று) மன், ஓ-அசை கள், (௩௪)

நூற் பேறு.

[illegible] இடபபுர மான்மிய மீது பரமசிவ னாலயம்
வீச நதிபுனித மாமிட மேவி வினவுமவர் பான்மனை
நேச முறவுரைசெய் வோர்வினை நீடு செவியினுகர் வோர்வினை
மாசு காழுவர்ப ராபரன் வாச மலரடியுள் வாழ்வரால்.

(இ-ள்) எப்பொருட்கு மிறைவராகிய இடபபுரேசர் வீற்றிருந்தருளும் இடபபுர சரிதமாகிய இதனைச் சிவபெருமானது ஆலயத்திலும், அலைகளை வீசுகின்ற புண்ணியநதிக் கரையிலும், பரிசுத்தமான திருமடமுதலான இடங்களிலும் சேர்ந்து, விருப்பத்துடன் கேட்பவர்களிடத்தில் உள்ளன்புமிகப் போதிப்பவர்களும், நாடோறும் நீண்ட காதாற் கேட்பவர்களும், வினைக்குற்றங்களைப் போக்குவார். மேல் அப்பரமசிவனது வாசனை பொருந்திய திருவடித் தாமரையின் கண் வாழப்பெறுவர். (எ-று) ஆல் அசை ()

வாழ்த்து.

[illegible] மறை யாவர்விளங்கச் சிவசமய மதுவோங்கத் தன் செங்கோ லோங்க, பொய்யாவான் மழைபொழிக மன்னுயிர்க்கின் பம்பொலிக பெரியோர் வாழ்க, மெய்யவர்க் கிருவாப்ப னூருடைய பரமர்திரு மேனி நின்றிந். சைவர்குலம் பெருகவான் [illegible] மன்பர்கு [illegible] பாதே.

(இ-ள்) தெய்வத்தன்மை பொருந்திய பிராமணர்கள் செழிக்க. சைவ சமயத்தையுடைய மனுகுல மன்னனது செங்கோல் விர்த்திக்க. வளங்கள் விர்த்தித்தற் கேதுவாகப் பொழிகின்ற மழை பெய்க. நிலைபெற்ற அன்னாக்களுக் கெல்லாஞ் சுகம் பெருகுக. பெரியோர்கள் நுகருக. சத்தியம் வளர்கின்ற நமது திருவாப்பனூரையுடைய அன்னவிநோத மூர்த்தியின்ற திருமேனியைத் தீண்டியருச்சிக்கும் ஆதிசைவர் குலம் பல்குக. இடபபுரேசர் வீற்றிருக்குந் திருவாலயத்தைப் புதுக்குகின்ற அடியார் கூட்டங்கள் மல்குக. (எ-று) மாதுரு-அசைகள். (சக)

அரிச்சந்திரன் தீர்த்தயாத்திரைச் சருக்கம் முற்றிற்று.

காப்புமுதல் ஆக திருவிருத்தம் ருகரு.

திருவாப்பனூர்ப் புராணம் முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| எ | கஅ | தணணிய | தண்ணிய |
| அ | உங | க்கருவுட் | உருவப் |
| க0 | கக | கொ குர | கொண்ட குர |
| கரு | ங0 | வறிலை | வறிலை, |
| கசு | கஅ | யாபய | யாப்பி |
| „ | கக | ரிட்ப் | ரிடப |
| எச | கசு | மேலும | மேலும் |
| „ | உஅ | சீர்கக | சீர்க்க |
| அக | கஉ | பிராண | பிராமண |
| அங | உஅ | கொள்ளும | கொள்ளும் |
| அரு | எ | ரென்பய | ரென்பெய |
| „ | கரு | தீர்த்ததகின் | தீர்த்தத்தின் |
| க0ச | சு | நலல | நல்ல |
| க0சு | கரு | யடைய | யுடைய. |
| கக0 | கஉ | பூட்டின | பூட்டிந |
| கஉக | அ | சவுந்திரி | சவுந்தரி |
| கஙஉ | உக | றின | றின் |
| சசு0 | உரு | முகஙகளை | முகங்களை |
| கஎசு | உசு | பொருத் | பொறுத் |
| கஅ0 | கரு | [illegible] | புரணி |
| கஅக | உ0 | [illegible] | டப்பு |
| கஅச | ரு | [illegible] | [illegible]ண்டு |
| கஅசு | கஉ | [illegible] | ரிக்கத் |
| கஅஅ | கரு | [illegible] | [illegible]ப்பூ |
| கஅகூ | கஉ | புராயஞ் | புராயஞ் |
| „ | உங | கட்டவிழ் | கட்டவிழ் |
| கசுக | தலைப்பு | அரிசச | அரிச்ச |
| „ | க0 | பன்றை | பன்மை |
| கசுச | ரு | ய[illegible] | யம்மையை |
| கசுசு | உச | கங்கைக[illegible] | கங்கையிலிரு |
| உ00 | உ | பிதிர்ப் | பிதிரர் |
| „ | ஙங | ரின்வரத்து | கின்வரத்து |
| உ0ங | கஎ | பயிர்ச்செ | பயிர்செ |
| உ0ரு | தலைப்பு | சந்தின் | சந்திரன் |
| „ | கரு | களிப்பாற | களிப்பாற் |
| உ0சு | ங | விளங்கினிய | விளங்கிய |
| „ | க0 | புனிற்றுவு | புனிற்றுவீ |
| உ0எ | சு | மலந்து | மலர்ந்து |